தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

வாய்மையே வெல்லும்

TRUTH ALONE TRIUMPHS

23 MAR 1976
MADRAS

தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY DEBATES

பணித்துறை வெளியீடு

OFFICIAL REPORT

செவ்வாய்க்கிழமை 1975 நவம்பர் 4

Tuesday 4th November 1975

தொகுதி LXXV—எண் 1

Volume LXXV—No. 1

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

©
தமிழ் நாடு அரசு
1976

GOVERNMENT OF TAMIL NADU
1976

சட்டமன்றப் பேரவைத் துறை
சென்னை-600009.

Fort St. George, Madras-600009.
Legislative Assembly Department

விலை 50 காசுகள்]
PRICE 50 Paise]

REFERENCE COPY

Tamil Nadu Legislative Assembly Debates.

Fourteenth Session of the Fifth Legislative Assembly under the Constitution of India.

TAMIL NADU LEGISLATURE LIBRARY
24 SEP 1976
MADRAS

4th, 5th, 6th and 7th November 1975.

Volume LXXV (Nos. 1 to 4).

TABLE OF CONTENTS.

Tuesday, 4th November 1975.

REFERENCE COPY

	Pages.
1. Questions and Answers	1—31
2. Calling Attention— Sea erosion in Kanyakumari District	31—34
3. Government Bills—	
(*a*) The Tamil Nadu Hindu Religious and Charitable Endowments (Amendment) Bill, 1975	34
(*b*) The Tamil Nadu Payment of Salaries (Second Amendment) Bill, 1975	34—35
(*c*) The Tamil Nadu Appropriation (No. 4) Bill, 1975	139—140
(*d*) The Tamil Nadu Appropriation (No. 3) Bill, 1975	140
4. Demands for First Supplementary Grants for the year 1975-76 Genera dliscussion	35—123
5. Government Motion— Suspension of Rule 159 (3)	123—125
6. Voting on Demands for Supplementary Grants for the year 1975-76 (First)	125—135
7. Voting on Demands for Excess Expenditure for the year 1969-70	136—139

Tuesday, 4th November 1975—cont.

8. Announcements—	
(a) The Tamil Nadu Appropriation (No. 4) Bill, 1975	139
(*b*) The Tamil Nadu Appropriation (No. 3) Bill, 1975	140
(*c*) Business of the House	141

PAGES

9. Papers laid on the Table 142

Wednesday, 5th November 1975.

1. Questions and Answers 145—181

2. Adjournment Motion—
Misusing of fishermen in Tuticorin coastal area and alleged failure to warn about impending storm 181—188

3. Statement by Minister—
Correction of answer to a supplementary question by the Hindu Religious and Charitable Endowments Minister 189—190

4. Government Bills—
(*a*) The Tamil Nadu Appropriation (No. 4) Bill, 1975 (L.A. Bill No. 54 of 1975) 190
(*b*) The Tamil Nadu Appropriation (No. 3) Bill 1975 (L.A. Bill No. 55 of 1975) 191
(*c*) The Tamil Nadu Handloom Textiles (Production, Distribution and Sale) Bill, 1974 (L.A. Bill No. 19 of 1974) 193—244
(*d*) The Tamil Nadu Occupants of Kudiyiruppu (Conferment of Ownership) Second Amendment Bill, 1974 (L.A. Bill No. 13 of 1974 .. 244—271
(*e*) The Sakthi Pipes Limited (Acquisition of Undertaking) Bill, 1975 (L.A. Bill No. 38 of 1975) 271—279

5. Point of Information—
Installation of portraits of Chief Ministers in the Assembly 191—192

6. Point of Order—
Delay in furnishing statement *re* corrections to answers 192—193

7. Government Motion—
Change in the order of Business of the House ... 244

8. Announcement—
The Sakthi Pipes Limited (Acquisition of Undertaking) Bill, 1975 (L.A. Bill No. 38 of 1975). 271

9. Papers laid on the Table 279—280

PAGES.

Thursday, 6th November 1975.

1. Questions and Answers 283—316

2. Adjournment Motions—

(*a*) Alleged insult committed against an Advocate by Kuzhithurai Police Inspector 316—320

(*b*) Lock-out in Madras Rubber Factory and consequent unemployment of workers 320—324

3. Calling Attention—

(*a*) Pest attack on paddy crops and the resultant loss to agriculturists 324—326

(*b*) Death of three persons when a P.T.C. Bus drove into a hut at West Anna Nagar 326—333

4. Government Motions—

(*a*) Suspension of Rule 23 333

(*b*) Change in the order of Business of the House. 386

5. Government Bills—

(*a*) The Sakthi Pipes Limited (Acquisition of Undertaking) Bill, 1975 (L.A. Bill No. 38 of 1975) 333—385

(*b*) The Southern Structurals Limited (Acquisition of Undertakings) Bill, 1975 (L.A. Bill No. 39 of 1975) 386—388

(*c*) The Lasco Steels Limited (Acquisition of Undertaking) Bill, 1975 (L.A. Bill No. 40 of 1975) 389

(*d*) The Textool Company Limited (Acquisition of Undertaking) Bill, 1975 (L.A. Bill No. 41 of 1975) 390—391

(*e*) The Tamil Nadu Urban Land Tax (Amendment) Bill, 1975 (L.A. Bill No. 51 of 1975 391—419

6. Announcements—

(*a*) The Southern Structurals Limited (Acquisition of Undertaking) Bill, 1975 386

(*b*) The Lasco Steels Limited (Acquisition of Undertaking) Bill, 1975 388

(*c*) The Textool Company Limited (Acquisition of Undertaking) Bill, 1975 390

7. Papers laid on the Table 420

PAGES

Friday, 7th November 1975.

1. Questions and Answers 421—493

2. Announcements—
(*a*) Bills passed in the Legislative Council ... 493
(*b*) The Tamil Nadu District Development Councils (Amendment) Bill, 1975 577
(*c*) The Tamil Nadu Payment of Salaries (Second Amendment) Bill, 1975 583

3. Calling Attention—
(*a*) Provision of medical facilities to arrest the spread of a new kind of eye disease ... 494—497
(*b*) Incidence of Malaria and Precautionary measures 497—500

4. Government Bills—
(*a*) The Tamil Nadu Co-operative Societies (Amendment) Bill, 1974 (L.A. Bill No. 60 of 1974) 501—521
(*b*) The Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Bill, 1975 (L.A. Bill No. 52 of 1975) 521—567
(*c*) The Tamil Nadu General Sales Tax (Third Amendment) Bill, 1975 (L.A. Bill No. 50 of 1975) 568
(*d*) The Tamil Nadu State Wakf Board (Vaildaiton of function of Special Officer) Bill, 1975 (L.A. Bill No. 43 of 1975) 569—573
(*e*) The Tamil Nadu Private Electricity Supply Undertakings (Acquisition) Amendment Bill, 1975 (L.A. Bill No. 42 of 1975) ... 573—577
(*f*) The Tamil Nadu District Development Councils (Amendment) Bill, 1975 (L.A. Bill No. 48 of 1975) 578—583
(*g*) The Tamil Nadu Payment of Salaries (Second Amendment) Bill, 1975 (L.A. Bill No. 53 of 1975) 584—611
(*h*) The Tamil Nadu Legislature (Prevention of Disqualification) Amendment Bill, 1975 (L.A. Bill No. 49 of 1975) 611—617

5. Government Resolution—
Location of Headquarters of the Leather Industries Development Corporation and continuance of Leather Export Promotion Council in Madras .. 617—620

6. Papers laid on the Table 620—631

How to use the Index.

The Index is arranged alphabetically. The Main Headings are printed from the margin and the sub-heading are indented from the main headings.

Under every main heading including various names, entries pertaining to proceedings other than questions are indicated by printing immediately after the subject-matter within brackets, e.g. (M) for Motion, (C. A.) for Calling Attention, (R) for Resolution, (St.) for Statement. etc. An entry without any such indication will mean that it pertains to a question, except in the case of Bills and Financial Business, the entry in which cases will be self-explanatory.

All the Bills are alphabetically arranged under the main heading 'Bill(s)'.

Various bodies like Committees, Councils, Boards, Corporations, etc., are consolidated under the said main headings, i.e., Committee (s)', 'Council (s)', 'Corporation (s)', etc.

Various subjects like Schools, Colleges, Conferences, Ports, Temples and similar other broad subjects are shown in alphabetical order under these very main headings.

All the Papers laid on the Table of the House are indexed only under the main heading "Papers Laid on the Table".

Rulings and Observations from the Chair are indexed under the Main Heading "Chair".

A list of abbreviations used in the Index is given below :—

A.M./Ad. Motion	...	Adjournment Motion.
Ann.		Announcement.
B. O. H.	...	Business of the House.
C. A.	...	Calling Attention to a matter of urgent public importance.
C. A. St	...	Calling Attention Statement
Consid.	...	Consideration stage of a Bill. This stage includes— (i) Motion to refer to Select/Joint Select Committee.

(ii) Amendment to refer to Select/Joint Select Committee.

(iii) Amendment to circulate.

(iv) Motion to consider as reported by Select/Joint Select Committee.

(v) Amendment to recommit to Select/Joint Select Committee, etc.

Consid. Cl.	... Consideration of clauses of a Bill.
D. E. E	... Demands for Excess Expenditure.
Dis. S. D. or D.S.D	... Discussion for Short Duration on an urgent matter of administration.
D. S. G.	... Demands for Supplementary Grants.
G. A.	... Governor's Address.
G. D.	... General Discussion.
H. A. H Dis./H. H. D.	... Half-hour Discussion.
Int.	... Introduction stage of a Bill.
L. A.	... Legislative Assembly.
L. C.	... Legislative Council.
M.	... Motion.
P. M.	... Privilege Motion.
R./Res	... Resolution.
St.	... Statement.

தமிழ் நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும்

தமிழ் நாடு ஆளுநர்

மேதகு திரு. கோதர்தாஸ் காளிதாஸ் ஷா.

அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. **மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி (முதல் அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு** வகிப்பார்: பொதுத் துறை, நிதி, திட்டம், பொது நிர்வாகம், இந்திய சிவில் பணியாளர் தொகுதி (ஐ.சி.எஸ்.) இந்திய ஆட்சிப் பணியாளர் தொகுதி (ஐ.ஏ.எஸ்.) அதிகாரிகள், மாவட்ட வருவாய்த் துறை அதிகாரிகள், காவல் துறை, தேர்தல்கள், மதுவிலக்கு, ஆயத்தீர்வை, பின்தங்கிய வகுப்பினர் நலன்.

2. **மாண்புமிகு டாக்டர் இரா.** நெடுஞ்செழியன் (கல்வி சுற்றுலாத் துறை அமைச்சர்) **கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:** தொழில் நுட்பக் கல்வி உட்பட கல்வி, ஆட்சி மொழி, சட்டமன்றம், சுற்றுலா, சுற்றுலா அபிவிருத்திக் கழகம்.

3. **மாண்புமிகு திரு. க. அன்பழகன்** (மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: பொதுச் சுகாதாரம், மருத்துவம், நகர அமைப்பு, குடிநீர் வாரியம்.

4. **மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் (பொதுப் பணித் துறை** அமைச்சர்) **கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:** பொதுப் பணிகள், சிறு பாசனச் சிறப்புத் திட்டங்கள் உட்பட சிறு பாசனம், நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள்.

5. **மாண்புமிகு திரு. செ. மாதவன்** (வருவாய்த் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: வருவாய்த் துறை, உணவு, வருவாய்த் துறை வாரியம், மாவட்ட வருவாய் நிறுவனங்கள், மாவட்டத் துணை ஆட்சித் தலைவர்கள், பூமிதான் —கிராம தானம் இயக்கங்கள் ஆலைத் துணிகள், ஜவுளி நூல், கைத்தறி, சட்டம், நீதி மன்றங்கள், சிறைச்சாலைகள், பத்திரப், பதிவு, நிலச் சீர்திருத்தங்கள்.

6. மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா (தொழில்-மின் சாரத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : தொழில்கள், மின்சாரம், சுரங்கங்கள், கனிப் பொருள்கள், இரும்பு-உருக்குக் கட்டுப்பாடு, கம்பெனிகள், முகம்மதியர் அறக் கட்டளைகள்.

7. மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் (வேளாண்மைத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப் பார் : வேளாண்மை, உணவு உற்பத்தி, வேளாண்மைப் பொறியியற் பிரிவு, வேளாண்மைப் பொறியியல் சம்பந்தமான பகுதிகள், வட்டாரக் கூட்டுறவுச் சங்கங்கள், இணைப்பு அளவிலான கழகங்கள் உட்பட்ட மாவட்டச் சங்கங்கள்.

8. மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி (கூட்டுறவுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு **வகிப்பார்:** கூட்டுறவு, வேளாண்மை மறு நிதி உதவி வீட்டு வசதி, குடிசை மாற்று வாரியம், இட வசதிக் கட்டுப்பாடு.

9. மாண்புமிகு திரு. க. இராசாராம் (தொழிலாளர் நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு **வகிப்பார்:** தொழிலாளர் நலம், போக்குவரத்து, நாட்டுடமை யாக்கப்பட்ட போக்குவரத்து, மோட்டார் வண்டிகள் வரி, எடைகள் — அளவைகள் குறித்த சட்டம், புள்ளிவிவரம். வேலை வாய்ப்பும் பயிற்சி அளித்தலும், முன்னாள் இராணுவத்தினர்.

10. மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை (சமூக நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: மகளிர்-சிறுவர் நலம் உட்பட சமூக நலம், மீனளம், இரவலர்கள் விடுதி, அனாதை இல்லங்கள், சீர்திருத்தப் பள்ளி களும் கண்காணிப்புப் பணிகளும்.

11. மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் (வணிக வரித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : வணிக வரிகள், சிங்கோனா உட்பட காடுகள், கால்நடை வளர்ப்பு, கடன் கொடுத்தல் குறித்த சட்டம், கிராமவாசிகள் கடன் பட்டிருத்தல், சீட்டுகள் குறித்த சட்டம்.

12. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (உள்ளாட்சித் துறை அமைச்சர்) **கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்** : நகராட்சி, நிர்வாகம், சமுதாய நல வளர்ச்சி,

ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், எழுதுபொருள் — அச்சுத் துறை, அரசு அச்சகம்.

13. மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் (அற நிலையத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: அறக்கட்டளைகள், கதர்-கிராமத் தொழில்கள், கிராமத் தொழில்கள் திட்டம், பால் வழங்குத் துறை, பால்வள முனைப்புத் திட்டங்கள், தமிழ்நாடு பால்வள நிறுவனம், விளம்பரம், செய்தி-மக்கள் தொடர்புத் துறை, படச் சுருள் தொழில் நுட்பம், இல்லனர் அணி சீரணி.

14. மாண்புமிகு திரு. என். இராசாங்கம் (அரிசன நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: அரிசன நலம், வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள், அகதிகள், இடம் பெயர்ந்தவர்கள், பத்திரிகை காகிதக் கட்டுப்பாடு, பயண அனுமதிச் சீட்டுகள், திரைப்படச் சட்டம்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

GOVERNOR OF TAMIL NADU.

His Excellency Thiru KODARDAS KALIDAS SHAH

Members of the Council of Ministers.

1. THE HON. DR. M. KARUNANIDHI: (Chief Minister) in-charge of Pubilc, Finance, Planning, General Administration, matters relating to Indian Civil Service Officers and Indian Administrative Service Officers, District Revenue Officers, Police, Elections, Prohibition, Excise and Backward Classes.

2. THE HON. DR. V. R. NEDUNCHEZHIYAN: (Minister for Education and Tourism) in-charge of Education including Technical Education, Official Language, Legislature, Tourism and Tourist Development Corporation.

3. THE HON. THIRU K. ANBAZHAGAN: (Minister for Health) in-charge of Public Health, Medicine, Town Planning and Water Board.

4. THE HON. THIRU P. U. SHANMUGAM: (Minister for Public Works) in-charge of Public Works, Minor Irrigation including Special Minor Irrigation Programme Works, Highways and Ports

5. THE HON. THIRU S. MADHAVAN: (Minister for Revenue) in-charge of Revenue, Food, Board of Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Bhoodhan and Gramdhan, Textiles, Yarn, Handlooms, Law, Courts and Prisons, Registration and Land Reforms.

6. THE HON. THIRU S. J. SADIQ PASHA: (Minister for Industries) in-charge of Industries, Electricity, Mines and Minerals, Iron and Steel Control, Companies and Waqfs.

7. THE HON. THIRU Si. Pa. ADITANAR: (Minister for Agriculture) in-charge of Agriculture, Food Production, Agricultural Engineering Wing, Agro-Engineering and Services Co-operative Societies at the Block, District and apex level including the Federation.

8. The Hon. Thiru Mannai P. NARAYANASWAMY: (Minister for Co-operation) in-charge of Co-operation, Agricultural Refinance, Housing including Slum Clearance Board and Accommodation Control.

9. The Hon. Thiru K. RAJARAM: (Minister for Labour and Transport) in-charge of Labour, Transport, Nationalised Transport, Motor Vehicles Tax, Legislation on Weights and Measures, Statistics, Employment and Training and Ex-Servicemen.

10. The Hon. Thiru C. V. M. ANNAMALAI: (Minister for Social Welfare) in-charge of Social Welfare including Women's and Children's Welfare, Fisheries, Beggars' Home, Orphanages and Approved Schools and Vigilance Service.

11. The Hon. Thiru O. P. RAMAN: (Minister for Commercial Taxes) in-charge of Commercial Taxes, Forest including Cinchona, Animal Husbandry, Legislation on Money Lending, Rural Indebtedness and Legislation on Chits.

12. The Hon. Thiru S. RAMACHANDRAN: (Minister for Local Administration) in-charge of Municipal Administration, Community Development, Panchayats, Panchayat Unions, Stationery and Printing and Government Press.

13. The Hon. Thiru M. KANNAPPAN: (Minister for Religious Endowments) in-charge of Religious Endowments, Khadi and Village Industries, Rural Industries Project, Milk, Operation Flood Project, Tamil Nadu Dairy Development Corporation, Information and Public Relations, Film Technology, Youth Service Corps and Prosperity Brigade.

14. The Hon. Thiru N. RAJANGAM: (Minister for Harijan Welfare) in-charge of Harijan Welfare, Indian Overseas and Refugees and Evacuees, Newsprint Control, Passports and Cinematograph Act.

தமிழ் நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்

பேரவைத் தலைவர்

மாண்புமிகு புலவர் கா. கோவிந்தன், பி.ஓ.எல்., எம். ஏ.

பேரவைத் துணைத் தலைவர்

திரு. நா. கணபதி, எ.எஸ்.ஸி., பி எல்.

மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

திரு. மா. வே. நாராயணசாமி.

திரு. எ. ஆர். சுப்பையா.

திரு .முனு. ஆதி

திரு. ஜே. ஜேம்ஸ்

திரு. எ. சுப்பிரமணியம்

திரு. வா. மை. அப்துல் ஜப்பார்

சட்டமன்றப் பேரவைச் செயலாளர்

திரு. மா. சண்முகசுப்பிரமணியம், பி.ஏ., பி.எல்.

.. **துணைச் செயலாளர்**

திரு. சி. கு. இராமசாமி, பி.ஏ., பி.எல்.

குழு அலுவலர்

திரு. ப. சுப்பராயன், எம். ஏ.

உதவிச் செயலாளர்கள்

திரு. த. இராதாகிருஷ்ணன்.

திரு. பெஞ்சமின் நெல்சன், பி.ஏ.

திரு. இரா. பாலகுரு, பி.ஏ.

விவாதப் பதிப்பாளர்

திரு. கே. சுந்தரராசன்

.. **எஸ்டேட் அதிகாரி**

திரு. வி. சீதாராமன், பி.காம்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தொகுதிகள் உள்ளிட்ட தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை
உறுப்பினர்களின் (அகர வரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பட்டியல்.

தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1)	தொகுதி. (2)
1 அண்ணாமலை, மாண்புமிகு திரு. சி.வி.எம். (அமைச்சர்).	காஞ்சிபுரம்.
2 அபுசாலி, திரு. எம். ஏ.	புவனகிரி
3 அப்துல் ஜப்பார், திரு. வா. மை	அரவக்குறிச்சி.
4 அரங்கண்ணல், திரு. இராம.	எழும்பூர்.
5 அரங்கநாயகம், திரு. செ.	கோயம்புத்தூர்–மேற்கு.
6 அழகமுத்து, திரு. து. ப. (அரசாங்கத் தலைமைக் கொறடா).	உப்பிலியப்புரம்.
7 அழகர்சாமி, திரு. சோ.	கோவில்பட்டி
8 அழகுத் தேவர், திரு. எஸ்.	சாத்தூர்.
9 அனந்தநாயகி, திருமதி த. ந.	மயிலாப்பூர்.
10 அன்பழகன், மாண்புமிகு திரு. க. (அமைச்சர்).	புரசைவாக்கம்.
11 அன்புச்செழியன், திரு. நீ.	பெரியகுளம்
12 ஆண்டி அம்பலம், திரு. எம்.	மேலூர் வடக்கு.
13 ஆண்டி என்ற குருசாமி, திரு. கு. ..	ஸ்ரீவில்லிபுத்தூர் (செ. வ.)
14 ஆதித்தனார், மாண்புமிகு திரு. சி. பா. (அமைச்சர்).	ஸ்ரீவைகுண்டம்.
15 ஆலடி அருணா, திரு. வி.	ஆலங்குளம்
16 ஆல்டா எம். பௌலர், திருமதி ..	நியமன உறுப்பினர்
17 ஆறுமுகம், திரு அ.	எடப்பாடி
18 ஆறுமுகம், திரு. சி.	மதுராந்தகம்.
19 இரத்தினசபாபதி, திரு. மு.	விளாத்திக்குளம்.
20 இராசகோபால், திரு. க. மு.	உத்திரமேரூர்.
21 இராசகோபால், திரு. வீ.	வந்தவாசி.
22 இராசமாணிக்கம், திரு. அ.	நாகப்பட்டினம்.
23 இராசமாணிக்கம், திரு. கு.	ஆடுதுறை
24 இராசரத்தினம், திரு. டி.	ஸ்ரீபெரும்புதூர்.
25 இராசாராம், மாண்புமிகு திரு. க. .. (அமைச்சர்).	சேலம் 2.
26 இராசு, திரு. ஜே. எஸ்.	பெரம்பலூர் (செ.வ.).
27 இராதாகிருட்டிணன், திரு. எம். எஸ். ..	தண்டராம்பட்டு.
28 இராமச்சந்திரன், திரு. எம். ஜி. ..	பரங்கிமலை.

தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும்.	தொகுதி.
(1)	(2)
29 இராமச்சந்திரன், மாண்புமிகு திரு. ச. (அமைச்சர்).	பண்ருட்டி.
30 இராமநாதன், திரு. சி.	அறந்தாங்கி.
31 இராமலிங்கம், திரு. இரா.	தூத்துக்குடி.
32 இராமலிங்கம், திரு. செ.	கடலாடி (செ.வ.).
33 இராமன், மாண்புமிகு திரு. ஓ. பி. (அமைச்சர்).	மேலூர் தெற்கு (செ.வ.)
34 இராமன், திரு. மு.	கண்டமங்கலம் (செ.வ.).
35 இராஜாங்கம், மாண்புமிகு திரு என். .. (அமைச்சர்).	குறிஞ்சிப்பாடி (செ.வ.).
36 இராஜாப்பிள்ளை, திரு. வீ. கே.	கன்னியாகுமரி.
37 இளங்கோவன், திரு. கோ.	திருவையாறு.
38 இளஞ்செழியன், திரு. வீ. சா.	விராலிமலை.
39 எட்டியப்பன், திரு. பூ.	பெரணமல்லூர்.
40 எட்மண்ட், திரு. க. உரொ.	திருச்செந்தூர்.
41 கணபதி, மாண்புமிகு திரு. என். .. (பேரவைத் துணைத் தலைவர்).	பாபநாசம்.
42 கணபதி, திரு. டி.	நாங்குனேரி.
43 கணேசன், திரு. எல்.	ஒரத்தநாடு.
44 கணேசன், திரு. சி.	குற்றாலம்.
45 கண்ணப்பன், மாண்புமிகு திரு. மு. (அமைச்சர்).	கிணத்துக்கடவு.
46 கண்ணன், திரு. எம். ஆர்.	பேஸின் பிரிட்ஜ்.
47 கதிரவன், திரு. கா. மு.	தென்காசி.
48 கந்தசாமி, திரு. கே.	உசிலம்பட்டி.
49 கந்தசாமி, திரு. கே. பி	சாத்தான்குளம்.
50 கந்தசாமி, திரு. எம்	குளித்தலை.
51 கந்தப்பன், திரு. செ.	திருச்செங்கோடு.
52 கரிவேங்கடம், திரு. மா. வெ.	பாலக்கோடு.
53 கருணாநிதி, மாண்புமிகு டாக்டர் மு. (முதல் அமைச்சர்).	சைதாப்பேட்டை.
54 கருணாநிதி, திரு. தாழை மு.	திருவாரூர் (செ.வ.)
55 கருணைநாதன், திரு. சோ.	கூனூர்.
56 கருப்பையா, திரு. ஆ.	கங்கைகொண்டான் (செ.வ)
57 காசிராமன், திரு. நா.	கும்பகோணம்.

தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1)	தொகுதி. (2)
58 காதர் பாஷா என்ற வெள்ளைச்சாமி, திரு.	முதுகளத்தூர்.
59 காமாட்சி, திரு. கு.	திருவரம்பூர்.
60 கார்த்தீசன், திரு. வீ.	இராதாபுரம்.
61 காவேரிமணியம், திரு. சொ.	திருப்பரங்குன்றம்.
62 காளிமுத்து, திரு. கா.	சிவகாசி.
63 ஒட்டப்பா, திரு. என்.	மாயூரம்.
64 கிருட்டிணன், திரு. நா.	பேரணம்பட்டு (செ. வ.).
65 கிருஷ்ணமூர்த்தி, திரு. வி.	நெல்லிக்குப்பம்.
66 கிருஷ்ணமூர்த்தி, திரு. வ.	திருச்சிராப்பள்ளி-1.
67 கிருஷ்ணன், திரு. கே. ஆர்.	ஊத்தங்கரை.
68 குப்பல் இராமகிருஷ்ணன், திரு. கே. எஸ்.	மதுரை (கிழக்கு).
69 குமாரசாமி, திரு. அ. சே.	திருக்கோயிலூர்.
70 குமாரசாமி, திரு. கே. என்.	பல்லடம்.
71 குருசாமி, திரு. நா. வெ.	ஆண்டிப்பட்டி.
72 கேசவலு, திரு. தே.	கள்ளக்குறிச்சி.
73 கோதண்டராமய்யா, திரு. கே. எஸ். ..	உதனப்பள்ளி.
74 கோபால், திரு. எம்.	குன்னத்தூர் (செ. வ.)
75 கோபால், திரு. கே. பி.	கம்பம்.
76 கோவிந்தசாமி, திரு. வி. செ.	காவேரிப்பட்டினம்.
77 கோவிந்தராசன், திரு. ஆர்.	கடலூர்.
78 கோவிந்தராசன் துரை, திரு.	கந்தர்வகோட்டை
79 கோவிந்தன், மாண்புமிகு புலவர் கா. (பேரவைத் தலைவர்).	செய்யாறு.
80 கோவை செழியன், திரு.	காங்கேயம்.
81 சகாதேவன், திரு. எஸ்.	செஞ்சி.
82 சங்குமுத்து தேவர், திரு. ச.	அம்பாசமுத்திரம்.
83 சதாசிவம், திரு. செ.	ஆண்டிமடம்
84 சண்முகசுந்தரம், திரு. அ. ப.	பொள்ளாச்சி.
85 சண்முகம், மாண்புமிகு திரு. ப. உ. (அமைச்சர்).	திருவண்ணாமலை
86 சண்முகம், திரு. பெரி.	திருவாடானை.
87 சண்முகம், திரு. மு.	விழுப்புரம்.
88 சத்தியமூர்த்தி, திரு. மு.	புதுக்கோட்டை.
89 சத்தியவாணிமுத்து, திருமதி	பெரம்பூர் (செ.வ.).
90 சத்தியேந்திரன், திரு. எம்.எஸ். கே. ..	இராமநாதபுரம்

LEGISLATIVE ... வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும்.	தொகுதி.
(1)	(2)
91 சம்பத், திரு. டி. வி.	செம்பனூர்கோவில்
92 சாதிக் பாட்சா, மாண்புமிகு திரு. எஸ். ஜே. (அமைச்சர்).	உடுமலைப்பேட்டை
93 சாரதி, திரு. மா. பா.	வேலூர்.
94 சிதம்பரம், திரு. சித.	காரைக்குடி.
95 சிவப்பிரகாசம், திரு. தி. சி. ஆ.	சேரன்மகாதேவி
96 சிவபெருமாள், திரு. கோ.	அரியலூர்.
97 சிறைமீட்டான், திரு. தொ. க.	பரமக்குடி (செ.வ.)
98 சீனிவாசன், திரு. பெ.	விருதுநகர்.
99 சீனிவாசன், திரு. தொ. ப.	போளூர்.
100 சின்னசாமி, திரு. அ.	செயங்கொண்டம் (செ.வ.)
101 சின்னசாமி, திரு. ஆர்.	தர்மபுரி.
102 சின்னசாமி திரு. மு.	மொடக்குறிச்சி.
103 சின்னசாமி, திரு. வ.	ஏற்காடு (ஆ. வ.)
104 சின்னராசு, டாக்டர் ச. அ.	ஹரூர் (செ. வ.)
105 சின்னவெள்ளையன், திரு. சி.	சேந்தமங்கலம் (ஆ. வ.)
106 சுந்தரம், திரு. ஒ. என்.	திண்டுக்கல்.
107 சுப்பிரமணியம், திரு. எ.	சிங்காநல்லூர்.
108 சுப்பிரமணியம், திரு. எஸ். கே.	சத்யமங்கலம்.
109 சுப்பிரமணியம், திரு. கே. எம்.	தியாகராயநகர்.
110 சுப்பிரமணியன், திரு. மா.	ஈரோடு.
111 சுப்பிரமணியன், திரு. வீ.	உளுந்தூர்பேட்டை.
112 சுப்பு, திரு. க.	ராஜபாளையம்.
113 சுப்பையா, திரு. ஆ. கு.	கோட்டூர் (செ. வ.)
114 சுப்பையா, திரு. கே. வி.	ஆலங்குடி.
115 சுப்பையா, திரு. ச.	சங்கரன்கோயில் (செ. வ.)
116 சுப்பையா, திரு. எ. ஆர்.	கடயநல்லூர்.
117 சுருளிவேல், திரு. மு.	போதிநாயக்கனூர்
118 சுரேந்திரன், திரு. எம்.	மேட்டூர்.
119 சுவாமிதாஸ், திரு. எ.	பத்மநாபபுரம்.
120 செபமாலை, திரு. கோ.	மங்களூர் (செ. வ.)
121 ஜெயராமன், திரு. சி.	சேலம்-1.
122 செல்லத்துரை, திரு. வீ.	ஓமலூர். (செ. வ.)
123 செல்லையா, திரு. குழ.	பேராவூரணி.

தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும்.	தொகுதி.
(1)	(2)
124 செல்வராஜ், திரு. எம்.	விருத்தாசலம்.
125 சேதுராமன், திரு. சி.	சிவகங்கை.
126 சோனையா, திரு. த.	மானுமதுரை.
127 சோமசுந்தரம், திரு. ந.	வலங்கைமான் (செ. வ.)
128 சௌடி சுந்தரபாரதி, திரு. எஸ். ..	அருப்புக்கோட்டை.
129 சௌந்தரபாண்டியன், திரு. பெ. ..	கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
130 டென்னிஸ், திரு. என்.	கிள்ளியூர்.
131 தங்கமணி, திரு. கே. டி. கே.	மதுரை—மேற்கு.
132 தர்மலிங்கம், மாண்புமிகு திரு. அ. பெ. (அமைச்சர்).	திருச்சிராப்பள்ளி-2.
133 தருமலிங்கம், திரு. ந.	ரிஷிவந்தியம் (செ.வ.)
134 தவமணித்தேவர், திரு. வி.	சேடப்பட்டி.
135 திம்மராயக் கவுண்டர், திரு. டி. சி. ..	நாட்ராம்பள்ளி.
136 தியாகராசன், திரு. அ.	திருமயம்.
137 தியாகராசன், திரு. இ. எஸ்.	திருத்தணி.
138 திருப்பதி, திரு. கு.	மதுரை (சென்ட்ரல்).
139 துரைசாமி திரு. எ. க.	குடியாத்தம்.
140 துரைசாமி, திரு. சு.	திருப்பூர்.
141 துரைமுருகன், திரு.	காட்பாடி.
142 துரைராஜ், திரு. சு. ம.	திருவள்ளூர் (செ.வ.)
143 தூயமணி, திரு. மே. சி.	மேட்டுப்பாளையம்.
144 தேவராசன், திரு. எம்.	உதகமண்டலம்.
145 தேவேந்திரன், திரு. அ.	நன்னிலம் (செ. வ.)
146 தோப்பூர் திருவேங்கடம், திரு.	கணியம்பாடி.
147 நடராசன், திரு. ஈ. எம்.	அந்தியூர்.
148 நடராசன், திரு. எஸ்.	தஞ்சாவூர்.
149 நரசிம்மன், திரு. எ. சி.	ஆரணி.
150 நல்லசாமி, திரு. எஸ்.	கரூர்.
151 நாகராஜன், டாக்டர் க.	வடமதுரை.
152 நாகலிங்கம், திரு. பா.	பொன்னேரி (செ.வ.)
153 நாச்சிமுத்து, திரு. நா.	ஒட்டஞ்சத்திரம்.
154 நாச்சியப்பன், திரு. எ. எம். டி. ..	ஆத்தூர்.
155 நாச்சியப்பன், திரு. ந.	சங்கராபுரம்.
156 நாராயணசாமி, திரு. மா. வே.	திருவொற்றியூர்.

தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும்.	தொகுதி.
(1)	(2)
157 நெடுஞ்செழியன், மாண்புமிகு டாக்டர் இரா. (அமைச்சர்) ..	திருவல்லிக்கேணி.
158 நைனுமலை, திரு. இரா.	ராசிபுரம்.
159 பத்மநாபன், திரு. பொ.	திருநெல்வேலி.
160 பத்மாவதி, திருமதி. வ. கோ.	முகையூர்.
161 பரந்தாமன், திரு. ஆ.	கடம்பத்தூர்.
162 பரமசிவம், திரு. எம்.	தாரமங்கலம்.
163 பலராமன், திரு. என். எஸ்.	அரக்கோணம்.
164 பழனிசாமி, திரு. நா.	பொங்கலூர்.
165 பழனிசாமி, திரு. என். கே.	பெருந்துறை.
166 பழனிசாமி, திரு. மு.	வெள்ளக்கோயில்.
167 பழனிச்சாமி, புலவர் சி.	பழனி (செ.வ.)
168 பழனியப்பன், டாக்டர் ச. மு.	கோபிசெட்டிபாளையம்.
169 பழனியம்மாள், திருமதி வி. ப.	தாராபுரம்.
170 பழனிவேலன், திரு. க.	வரகூர்.
171 பழனிவேலன், திரு. மு.	நாமக்கல்.
172 பழனிவேலு, திரு. பி.	ஆத்தூர்.
173 பழனிவேல் ராஜன், திரு.	தேனி.
174 பன்னீர் செல்வம், திரு. எம்.	ஆம்பூர் (செ. வ.)
175 பாண்டுரங்கம், திரு. சி.	செங்கம் (செ. வ.)
176 பாலகிருட்டிணன், திரு. கு.	மன்னார்குடி.
177 பாலசுந்தரம், திரு. வை.	அச்சரபாக்கம் (செ.வ.).
178 பாலையா, திரு. வ.	கொளச்சல்.
179 பெரியசாமி, திரு. கு.	கொடவாசல்.
180 பெரியசாமி, திரு. தி. ஒ.	அவிநாசி.
181 பெருமாள், திரு. செ.	காட்டுமன்னார்கோயில்.
182 பெருமாள், திரு. வ. ஆர்.	காரியப்பட்டி.
183 பொம்மன், திரு. சூ. அ.	கூடலூர் (செ. வ.)
184 பொன் சொக்கலிங்கம், திரு. பி. ..	சிதம்பரம்.
185 பொன்னப்ப நாடார், திரு. ஆர்.	விளவங்கோடு.
186 பொன்னுமலை, திரு. தி.	பனைமரத்துப்பட்டி.
187 பொன்னுரங்கம், திரு. வ. எம். ..	சோளிங்கபுரம்.
188 மணலி கந்தசாமி, திரு. சி.	திருத்துறைப்பூண்டி.
189 மணியன், திரு. பி. எஸ்.	சோழவந்தான்.

தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும்.	தொகுதி.
(1)	(2)
190 மதியழகன், திரு. கே.ஏ.	ஆயிரம் விளக்கு.
191 மருதாசலம், திரு. என்.	பேரூர் (செ. வ.).
192 மலேக்கண்ணன், திரு. வீ	இளேயாங்குடி.
193 முன்னியப்பன், திரு. சி.	கிருஷ்ணகிரி.
194 மாணிக்கம், திரு. என்.	பென்னகரம்.
195 மாணிக்கவாசகம், திரு. இரா.	தொண்டாமுத்தூர்.
196 மாதவன், மாண்புமிகு திரு. செ. (அமைச்சர்).	திருப்பத்தூர். (இராமனுத புரம் மாவட்டம்),
197 மாரிமுத்து, திரு. ஏ. ஆர்.	பட்டுக்கோட்டை.
198 மாரிமுத்து, திரு. மூ.	தலேவாசல் (செ.வ.)
199 மீனுட்சிசுந்தரம், திரு. மா.	வேதாரண்யம்.
200 முகமது கோதர் முகைதீன், திரு. எஸ். ..	மேலப்பாளேயம்.
201 முத்தமிழ்ச் செல்வன், திரு. வெ. ந. ..	லால்குடி.
202 முத்து, திரு. வ.	சங்கரி (செ. வ.)
203 முத்துசாமி, திரு. ப.	வேடசந்தூர்.
204 முத்துச்செல்வன், திரு. பு. செ. ..	முசிறி.
205 முத்துவேல், திரு. ந.	வானூர் (செ. வ.)
206 முத்தையா, திரு. கே. கே.	கடலூர்.
207 முத்தையா, திரு. எம்.	ஒட்டப்பிடாரம் (செ. வ.)
208 முருகையன், திரு. எஸ்.	கலசப்பாக்கம்.
209 முனியாண்டி, திரு. ஆ.	நிலக்கோட்டை (செ. வ.)
210 முனு ஆதி, திரு. மு.	திருப்போரூர்.
211 முனுசாமி, திரு. ரா. ரா.	மேல்மலேயனூர்.
212 மொய்தீன், திரு. திருப்பூர் ஏ. எம்.	துறைமுகம் (சென்னே நகரம்).
213 மோசஸ், திரு. ம.	நாகர்கோயில்
214 ரங்கனுதன், திரு. கே.	கோயம்புத்தூர் (கிழக்கு)
215 ராமசாமி, திரு. இ.	வால்பாறை.
216 ராமசாமி, திரு. ஜி.	திருப்பத்தூர் (வட ஆர்க் காடு மாவட்டம்).
217 ராமராசன், திரு. வ. க.	பவானிசாகர் (செ. வ.)
218 இராஜா, திரு. ஏ. எம்.	பவானி.
219 ராஜாராம், திரு. ஜி.	திண்டிவனம்.
220 ரெத்தினசாமித் தேவர், திரு. மு. சி. ஆ.	திருமங்கலம்.

தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1)	தொகுதி. (2)
221 லத்தீப், திரு. எம். ஏ.	வாணியம்பாடி.
222 வகாப், திரு. கே. எ.	ராணிப்பேட்டை.
223 வடிவேலு, திரு. சீ. க.	தொட்டியம்.
224 வடிவேல், திரு. எஸ்.	சீர்காழி (செ. வ.)
225 விசுவநாதன், திரு. செ. கோ. ..	செங்கற்பட்டு.
226 வீராசாமி, திரு. நா.	ஆற்காடு.
227 வெங்கடசாமி, திரு. பி.	ஹோசூர்.
228 வெள்ளத்துரை, திரு. அ.	வாசுதேவநல்லூர்.
229 வேதாசலம், திரு. மு.	வண்ணாரப்பேட்டை, (சென்னை நகரம்).
230 வேலப்பன், திரு. சி. வே.	கபிலமலை.
231 வேழவேந்தன், திரு. கா.	கும்மிடிபூண்டி.
232 ஜேம்ஸ், திரு. ஜே.	திருவட்டார்.
233 ஜோதி வெங்கடாசலம், திருமதி. ..	ஸ்ரீரங்கம் (செ. வ.)
234 ஹாண்டே, டாக்டர் எச். வி.	பார்க் டவுன் (சென்னை நகரம்).
235 வெற்றிடம்	வீரபாண்டி.

பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்கள்;—

1 மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி—அமைச்சர்

2 திரு. கோவிந்த் சாமிநாதன்—தலைமை வழக்கறிஞர்.

சட்டமன்ற LEGISLATIVE
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

செவ்வாய்க்கிழமை, 1975 நவம்பர் 4.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்-விடைகள்

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்

சோழன்பேட்டையிலுள்ள கிளை வாய்க்கால்

*** 2 குறுகிய கால வினா—திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாயூரம் ஒன்றியம், சோழன்பேட்டை பஞ்சாயத்துப் பகுதியில் உள்ள மாதுளம் வாய்க்காலின் கிளை வாய்க்காலினை தூர்த்து விடப்பட்டது அரசுக்குத் தெரியுமா?

(இ) ஆம் எனில், அதுபற்றி அரசு மேற்கொண்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) ஆம்.

(இ) கால்வாய் பழைய நிலைமைக்குக் கொண்டுவரப்பட்டு தற்போது நல்ல நிலையில் உள்ளது.

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, சோழன்பேட்டை மாதுளம் வாய்க்காலின் துணை வாய்க்கால் ஏறத்தாழ இரண்டு பர்லாங்கு தூரத்திற்கு ஒரு ஏக்கர் பரப்பளவுக்கு தனிப்பட்ட நபர் ஒருவரால் தூர்க்கப்பட்டு, பாதை போடப்பட்டுவிட்டது. அந்தப் பகுதியில் உள்ள ஏறத்தாழ 250 ஏக்கரா பயிர் செய்யக் கூடிய விவசாயிகள், குத்தகைதாரர்கள், அதனால் பாசனத்திற்கு வசதி இல்லாமல் பூராவும் பாதிக்கப்பட்டிருந்து, இறுதியாக இப்பொழுது, நான்கைந்து நாட்களுக்கு முன்பு அது சரிசெய்யப் பட்டிருக்கிறது என்று அறிகிறேன். அத்தகைய முறையில் ஒரு

இரண்டு பர்லாங்கு தூரத்திற்கு ஓடிக்கொண்டிருந்த வாய்க்காலை, அனுமதியின்றித் தூர்க்கக்கூடிய அளவுக்கு நிலையை உருவாக்கியவர் மீது அரசாங்கம் இதுவரை என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை அறியலாமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு உறுப்பினர் தனிப்பட்டோர் பாதை அமைத்ததாகக் குறிப்பிடுகிறார்கள். ஆனால், அரசுக்குக் கிடைத்திருக்கும் தகவல்படி, ஊராட்சி ஒன்றியம்தான் அந்தப் பணியை மேற்கொண்டது என்பதாகும். வாய்க்கால் இப்பொழுது சீர்செய்யப்பட்டு விட்டதாக அரசுக்குத் தகவல் வந்திருப்பதால், மேற்கொண்டு நடவடிக்கை எதுவும் தேவையில்லை என்று கருதுகிறேன்.

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, இந்த மாதுளம் வாய்க்காலின் சானல் புறம்போக்கு சப்-டிவிஷன் செய்யப்பட்டு, ஆர்.எஸ். 5, 7, 9 என்ற எண்கள் உள்ளன. இது பக்கா அரசாங்க சானல் புறம்போக்கு ஆகும். இதில் ஊராட்சி ஒன்றியத்தின் சார்பாகப் பாதை போடுவதற்கு எந்தத் துறையின் மூலம் அனுமதி வழங்கப்பட்டது என்பது விளங்கவில்லை. வாய்க்காலைத் தூர்த்துப் பாதை போடுவதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தால் அந்த அனுமதி எப்பொழுது வழங்கப்பட்டது என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பாதை போடுவதற்கு எப்பொழுது அனுமதி வழங்கப்பட்டது என்பதற்கான குறிப்பு இல்லை. தனிப்பட்ட நபர் போடவில்லை. ஊராட்சி ஒன்றியம் தான் பாதை அமைத்திருப்பதாக அரசுக்குத் தகவல் வந்திருக்கிறது.

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, தனிப்பட்ட நபர் எனது தொகுதிக்குப் பக்கத்தில் உள்ள குற்றாலத்தைச் சார்ந்த திரு. இராஜகோபால் வாண்டையார் என்பவர் அங்கே அந்த வாய்க்காலைத் தூர்த்துவிட்டதாக அங்கே நடைபெற்ற கருத்தரங்கில் மாவட்ட ஆட்சித் தலைவர் போன்றவர்களுடைய முன்னிலையில் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டு, மாவட்ட வருவாய்த் துறை அதிகாரி அவர்களிடம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் எடுத்துச்சொல்லப்பட்டு,

மகசருடைய பிரதிகளெல்லாம் இங்கே என்னிடத்தில் இருக்கின்றன என்பதைத் தாழ்மையுடன் தெரிவித்துக்கொண்டு அது பற்றி இன்னும் அந்த நபர்மீது நடவடிக்கை எடுக்காதது ஏன் என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், தனிப்பட்டவர் பாதை போட்டதாக மீண்டும், மீண்டும் குறிப்பிடுகிறார்கள். ஆனால், அரசுக்கு வந்த தகவல்—ஊராட்சி ஒன்றியம்தான் பாதை அமைக்க முற்பட்டு, அதன் காரணமாக மண் சரிவு ஏற்பட்டு வாய்க்கால் தூர்ந்துபோய்விட்டதாகச் சொல்லுகிறார்கள். இன்றைக்கு மீண்டும் வாய்க்கால் சரி செய்யப்பட்டுவிட்டது. ஊராட்சி ஒன்றியம் அந்தப் பணியை மேற்கொண்டதன் காரணத்தால் தற்போது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. உறுப்பினர் அவர்களிடம் மேற்கொண்டு ஏதாவது தகவல் இருந்து, அதைத் தருவாரானால், அதுபற்றி விசாரிக்கச் சொல்கிறேன்.

Headmasters of Higher Elementary Schools.

* 166 *Q.*—THIRU K. T. K. TANGAMANI: Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(*a*) whether the Government have passed orders to appoint B.T. teachers as Headmasters in the Higher Elementary Schools with more than 400 students ;

(*b*) if so, number of such absorptions ;

(*c*) is there still such qualified teachers left out ; and

(*d*) steps taken to absorb them ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, (அ) ஆம். 1961 ஆம் ஆண்டு 400-ம் அதற்கு மேலும் மாணவர் எண்ணிக்கையுள்ள உயர் ஆரம்பப் பள்ளிகளில் பி.டி. தலைமையாசிரியர்கள் நியமனம் செய்வதற்கான ஆணையொன்று அரசால் இடப்பட்டது. அவ்வாணை 1966-67-ம் ஆண்டு வரை செயல்படுத்தப்பட்டது. பின்பு 1972-இல் வேலையின்மை நிவாரணத் திட்டத்தின்கீழ் நடுநிலைப் பள்ளிகளுக்கு 900 பி. டி. ஆசிரியர்கள் பதவிகள் தரப்பட்டன.

(இ) & (உ) நடுநிலைப்பள்ளிகளில் ஏற்படுத்தப்பட்ட பி. டி. தலைமை ஆசிரியர் பதவிகளில் உட்கொள்ளப்பட்ட பி. டி. பட்டம் பெற்ற இடைநிலை ஆசிரியர்களின் எண்ணிக்கைபற்றிய விவரம் இல்லை.

(எ) பி. டி. பயிற்சி பெற்றுள்ள ஆசிரியர்களை நடுநிலைப் பள்ளிகளில் தலைமையாசிரியர்களாக பணியினுட் கொள்ளு வதற்கான கருத்துரு ஏதுமில்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி: தலைவர் அவர்களே, 400-க்கும் அதிகமான மாணவர்கள் இருக்கக்கூடிய ஹையர் எலிமென்டரி பள்ளிகளிலெல்லாம் 15 வருஷங்களுக்கு முன்பாகவே பி. டி. ஆசிரியர்களைப் போடவேண்டும் என்று முடிவு செய்யப் பட்டிருக்கிறதே, அதன்படி எத்தனை பேர் போடப்பட்டிருக் கிறார்கள்? வடார்க்காடு மாவட்டத்தில் பல இடங்களில் போடப்படாமல் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. மாவட்ட வாரியாக இது குறித்துச் சொல்ல முடியுமா? அல்லது, அந்தக் கொள்கையில் ஏதாவது மாறுதல் இருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, நானூறும் அதற்கு மேலும் மாணவர் எண்ணிக்கை யுள்ள உயர் துவக்கப் பள்ளிகளில் பி. டி. தலைமையாசிரியர்களை நியமிக்கலாம் என்ற அளவுக்கு ஆணையிடப்பட்டு, ஆண்டுக் காண்டு குறிப்பிட்ட பள்ளிகள்தான் தெரிந்தெடுக்கப்பட்டன. ஆனால், எல்லா உயர்துவக்கப் பள்ளிகளிலும் கட்டாயம் பி. டி. ஆசிரியர்களைத் தலைமையாசிரியாகப் போட வேண்டு மென்று கட்டாயப்படுத்தி உத்தரவு போடவில்லை. ஓராண்டில் 100, அடுத்த ஆண்டில் 50, அடுத்த ஆண்டில் 60 என்று ஆண்டுக் காண்டு எடுத்துக் கொள்ளப்பட்டது. 1972 ஆம் ஆண்டு 900 பி. டி. ஆசிரியர்கள் உயர் துவக்கப் பள்ளிகளில் தலைமை யாசிரியர்களாக நியமிக்கப்பட்டார்கள். 'ஐந்து இலட்சம் பேருக்கு வேலை வாய்ப்புத் திட்டம்' என்பதன்கீழ், 900 பி. டி. ஆசிரியர்களுக்கு வேலை வாய்ப்புத் தரவேண்டும் என்று உயர் துவக்கப் பள்ளித் தலைமையாசிரியர் பதவிக்கு நாம் 900 பேரை நியமித்தோம். அதற்குப் பிறகு அந்தத் திட்டம் நீடிக்கவில்லை. இப்பொழுது இருக்கிற சூழ்நிலையில், குறிப்பிட்ட சில பள்ளிகளில் மட்டும் போடுவதா என்ற நிலைமை வருகிறது.

1975 நவம்பர் 4]

ஏனென்றால், செகண்டரி கிரேடு ஆசிரியர்களுக்கு இருக்கும் ஒரே வொரு வாய்ப்பு இந்தத் தலைமையாசிரியர் பதவியாகத்தான் இருக்கிறது. பி.டி. ஆசிரியரைத் தலைமையாசிரியராகப் போட்டு விட்டால் செகண்டரி கிரேடு ஆசிரியர்களுக்குப் பதவி உயர்வு இல்லாமல் போய்விடும் என்ற குறைபாட்டையும் அவர்கள் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். ஆகையால்தான் அரசாங்கம் ஆராய்ந்து கொண்டிருக்கிறது. ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கை—500 அல்லது 600-க்கு மேற்பட்ட மாணவர்களுக்கு மேலுள்ள பள்ளிகளில் இப்படிச் செய்யலாமா, அல்லது எல்லாப் பள்ளி களிலும் செய்யலாமா என்பதை அரசு ஆராய்ந்து கொண்டிருக் கிறது. செகண்டரி கிரேடு ஆசிரியர்களுக்குப் பதவி உயர்வு கிடைக்காமல் போய்விடும் என்ற குறைபாடு எடுத்துச் சொல்லப் பட்டு வருகிறது. பி.டி. ஆசிரியர்களைத் தலைமையாசிரியராக நியமிக்கும்போது அங்கேயே இருக்கும் செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் தங்களுக்குப் பதவி உயர்வு பாதிக்கப்படுகிறது என்று குறிப்பிட்டார்கள். இதனால் இது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

திரு. தி. பொன்னுமலை: தலைவர் அவர்களே, உயர்துவக்கப் பள்ளிகளில் பி. டி. ஆசிரியர்களைத் தலைமையாசிரியர்களாக நியமிக்கும்போது புதிதாக வருகிறவர்கள் பெண்களாகக்கூட நியமிக்கப்பட்டு விடுகிறார்கள். அதனால், அங்கேயேயிருக்கும் பெண்களுக்கு, பத்து வருஷம், ஐந்து வருஷம் நல்ல சர்வீஸ் ஆனவர்கள் அவர்களுக்குக் கட்டுப்பட்டு நடப்பதில்லை. ஆகவே, சர்வீஸ் ஆன, தரமுள்ள ஆசிரியர்களை நியமிக்க அரசுக்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, செகண்டரி கிரேடிலேயே பி.எ. பி.டி. பெற்ற பல பேர் தகுதியுடையவர்களாக இருக்கிறார்கள். அப்படித் தலைமை யாசிரியர் பதவிக்கு நியமிக்கப்படுகிறபோது, இவர்களுக்குத் தான் முன்னுரிமை தரவேண்டுமென்று நாம் சொல்லியிருக் கிறோம்.

திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, உயர் தொடக்கப் பள்ளிகள், நடுநிலைப் பள்ளிகள் ஆகிய இரண்டு வகைகள் இருந்தாலும், ஒரே முறையில்தான் பயன்பட்டு

வருகின்றன. அமைச்சர் பதிலில்கூட ஒரேபொருளில் தான் பயன்படுத்தினார்கள். ஆகவே, எல்லாப் பள்ளிகளையும் நடுநிலைப் பள்ளிகள் என்று அறிவிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அதுவும் அரசாங்கத்தின் பரிசிலனையில் இருந்து வருகிறது.

திரு. நா. வீராசாமி: தலைவர் அவர்களே, செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் முறையிட்டிருக்கிறார்கள் என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். என்றாலும், கல்வியின் தரம் உயரவேண்டும் என்று நம்முடைய அரசு தீவிரமான நடவடிக்கை எடுக்கும் போது, 400-க்கு மேற்பட்ட மாணவர்கள் உள்ள உயர்துவக்கப் பள்ளிகளில் பி.டி. ஆசிரியர்களைத் தலைமையாசிரியர்களாகப் போட வேண்டுமென்று சொல்லப்படுகிறது. கிராமப் புறங்களில் இன்னும் சில இடங்களில் உயர்நிலைப்பள்ளிகளில்கூட 250 மாணவர்கள்தான் இருக்கிறார்கள். 150, 180 பேர் இருக்கக்கூடிய உயர்துவக்கப் பள்ளிகளிலும் பி.டி. ஆசிரியர்களை, மாணவர் களின் எண்ணிக்கை அடிப்படை இல்லாமல், அந்த உயர்துவக்கப் பள்ளிகளிலும் பி. டி. ஆசிரியரைத் தலைமையாசிரியராகப் போடுவது என்ற கொள்கையை நம்முடைய அரசு பின்பற்றுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர் களே, 400-க்கு மேற்பட்ட மாணவர்கள் எண்ணிக்கையுள்ள உயர்துவக்கப் பள்ளிகள் அனைத்திலும் இப்பொழுது பி. டி. தலைமையாசிரியர்கள் நியமிக்கப்படவில்லை. அந்தக் கோரிக்கையை முழுமையாக நிறைவேற்ற முடியாமலிருக்கும்போது, எல்லாப் பள்ளிகளிலும் ஆரம்பிப்பதென்றால் பெரும் செலவு ஏற்படுகிற தென்பது மட்டுமல்லாமல், முதலில் கூறியபடி, செகண்டரி கிரேடு ஆசிரியர்கள், முதிர்ந்த அனுபவம் பெற்று, பல்லாண்டுகள் பணி யாற்றி, அதைத்தவிர வேறு பதவி உயர்வுக்கு வாய்ப்பு இல்லாமலிருக்கிறார்கள் என்பதையும் மனத்தில்கொண்டு ஆராய வேண்டியவர்களாக இருக்கிறோம். இரண்டையும் ஒருசேர ஆராயும் நிலையில் அரசு இருந்துவருகிறது.

திரு. ஏ. சுப்பிரமணியம்: தலைவரவர்களே, வருங்காலத்திலே பி.டி. தேறி வருகின்றவர்களைப்பற்றி வேறு முடிவெடுப்பதாக இருந்தாலும், ஏற்கனவே தேறி விட்டவர்களையாவது—முழுவதும் அத்தனை பேரையும் அப்சார்ப் செய்கின்ற அளவுக்கு அவர்களை யாவது தலைமை ஆசிரியர்களாகப் போட அரசு முன்வருமா?

1975 நவம்பர் 4]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அவ்வளவு பேரையும் நாம் ஈர்த்துக் கொள்கின்ற திட்டத்தை நிதி நெருக்கடி, வேறு பல சூழ்நிலைகள் காரணமாக நிறைவேற்ற இயலாது. ஆனால் தகுதி பெற்ற ஆசிரியர் பதவிகள் காலியாகும்போது, இப்படி பி.ஏ., பி.டி. படித்த செகண்டரி கிரேட் ஆசிரியர்களுக்குத்தான் முன்னுரிமை தரவேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். உயர்நிலைத் தொடக்கப் பள்ளிகளில் ஏற்கனவே ஒதுக்கப்பட்ட இடங்களில் பி.டி. படித்த செகண்டரி கிரேட் ஆசிரியர்களைத்தான் போட வேண்டுமென்ற தன்மையும் அவர்களுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டுமென்ற தன்மையும் இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தங்கமணி!

THIRU K. T. K. TANGAMANI : The question has been put, Sir.

திரு. த. சோலையா : தலைவரவர்களே, ஒருபுறம் பி.டி. படித்து விட்ட ஆசிரியர்களுக்கு வேலை கிடைக்கவில்லையென்று சொல்கிறார்கள். இன்னொரு புறத்திலே 400-க்கு மேல் மாணவர்கள் இருக்கின்ற பள்ளிகளிலே பி.டி. படித்தவர்களைப் போடவில்லையென்று சொல்கிறார்கள். இப்படி இரு கருத்துக்கள் இருக்கின்றனவே, இதில் எந்தக் கருத்து உண்மை? அப்படி இருந்தால், இரண்டையும் சீர்திருத்தி, சரியான அளவில் ஆட்களைப் போட அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இரண்டு கருத்திலும் உண்மையிருக்கிறது. ஆனால், நிதி நிலையையும் மற்ற வசதிகளையும் நோக்கும்போதும், செகண்டரி கிரேட் ஆசிரியர்களுடைய கோரிக்கையைக் கவனிக்கும்போதும் தான், அவைபற்றி ஆராய வேண்டியவர்களாக இருக்கிறோம்.

[1975 நவம்பர் 4

உயர்நிலைப் பள்ளிகளில் நூல் நிலையங்கள்

* 167 வினா—திரு. வை. பாலசுந்தரம்: மாண்புமிகு கல்வி-சுற்றுலாத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

உயர்நிலைப் பள்ளிகள் ஒவ்வொன்றிலும் நூல் நிலையம் தேவை என்று கட்டாயப்படுத்தும் குறிப்பு ஏதேனும் அரசின் பரிசிலனையில் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இல்லை. எனினும் தற்பொழுதுள்ள உயர்நிலைப் பள்ளிகளில் பெரும் பாலானவற்றுள் ஓரளவுக்கு நூலகப் புத்தகங்கள் உள்ளன.

திரு. வை. பாலசுந்தரம்: தலைவரவர்களே, நம்முடைய அமைச்சர் கூறுகின்றபொழுது, பெரும்பாலான பள்ளிகளில் இந்த நூல் நிலையங்கள் இல்லையென்று குறிப்பிட்டார். ஆகவே, இத் திட்டத்தை விரிவுபடுத்தி, எல்லா உயர்நிலைப் பள்ளிகளிலும் இப்படிப்பட்ட நூல் நிலையங்களை உருவாக்குவதன்மூலம் மாணவர்கள் மத்தியிலே அறிவைப் பெருக்குவதற்கும் அவர்களுடைய தகுதியைப் பெருக்குவதற்கும் வழிவகை ஏற்படும். அதை உத்தேசித்து, அரசு எல்லா உயர்நிலைப் பள்ளிகளிலும் இத் திட்டத்தை விரிவடையச் செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, நான் விடை கூறுகிறபொழுது, 'தற்போதுள்ள உயர்நிலைப் பள்ளிகளில் பெரும்பாலானவற்றுள் ஓரளவுக்கு நூலகப் புத்தகங்கள் உள்ளன' என்று குறிப்பிட்டேன். ஆகவே, 2,782 உயர்நிலைப் பள்ளிகளில் கிட்டத்தட்ட 2,455 உயர்நிலைப் பள்ளிகளில் ஏதேனும் ஓரளவுக்காவது நூலகப் புத்தகங்களிருக்கின்றன. ஆண்டுக்காண்டு நூலகங்களைத் தோற்றுவிக்கவும், நூலகங்களின் தன்மையை விரிவாக்கவும், அவற்றை வளர்ப்பதற்கும் முயற்சிகளை நாம் மேற்கொண்டிருக்கிறோம். 1975-76-வது ஆண்டில் 85 உயர்நிலைப் பள்ளிகளுக்கு ஒவ்வொரு பள்ளிக்கும் ரூ. 1,000 வீதம் புதிய புத்தகங்கள் வழங்குவதற்கான செயற் குறிப்பையும் நாம் வைத்திருக்கிறோம்.

1975 நவம்பர் 4]

திரு. என். டென்னிஸ்: தலைவரவர்களே, முதல் கட்டமாக ஆயிரம் மாணவர்களுக்கு மேலுள்ள உயர்நிலைப் பள்ளிகளில் கம்பல்சரி லைப்ரரிக்கான ஏற்பாடு செய்ய அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, ஆயிரம் மாணவர்களுக்கு மேலுள்ள பள்ளிகளில் எந்த எந்தப் பள்ளிகளில் இல்லை என்பது தெரியவில்லை—முழு விவரம் இல்லை. அப்படிப்பட்ட பள்ளிகளில் லைப்ரரி இருக்க வேண்டுமென்பதுதான் அரசினுடைய கொள்கை. 2,455 உயர்நிலைப் பள்ளிகளில் ஓரளவுக்காவது புத்தகங்கள் இருக்கின்றன. ஆயிரம் மாணவர்களுக்கு மேலுள்ள பள்ளிகளில் உயர்நிலைப் பள்ளிகளில் நூல் நிலையம் அமைக்கப்பட வேண்டுமென்பது, அதுவும் அக மதிப்பீடு திட்டத்தை வைத்திருப்பதன் காரணமாக, நூல் நிலையங்களைச் சிறப்பாக அமைக்க வேண்டுமென்பதுதான் கொள்கை. அப்படிப்பட்ட பள்ளிகளுக்குத்தான் இப்படிப்பட்ட ரூ. 1,000 வழங்குவதும், நூல்களை வழங்குவதுமான முயற்சியிலே ஈடுபட்டிருக்கிறோம்.

திரு. என். மருதாசலம்: தலைவரவர்களே, நகராட்சியிலேயுள்ள பல உயர்நிலைப் பள்ளிகளிலே நூல் நிலையங்கள் இல்லையென்பது அரசுக்குத் தெரியுமா? அப்படி இல்லாத பள்ளிகளில் நூல் நிலையங்களை அமைக்க அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, அதுபற்றிய முழு விவரக் குறிப்பும் இல்லை. ஆனால், எல்லா உயர்நிலைப் பள்ளிகளிலும் இப்பொழுது அக மதிப்பீடு திட்டத்திற்கு நூலகங்கள் இன்றியமையாத தேவை என்பதற்காக, எல்லா உயர்நிலைப் பள்ளிகளிலும் நூல் நிலையங்களை வைக்கப் பள்ளிக் கல்வி இயக்குநர் முயற்சி எடுத்து வருகிறார்.

திரு. வை. பாலசுந்தரம்: தலைவரவர்களே, பெரும்பான்மையான பள்ளிகளில் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன், தந்தை பெரியார், அறிஞர் அண்ணா போன்றவர்கள் எழுதிய புத்தகங்கள் இல்லையென்பதை அரசு அறியுமா? அப்படி இல்லையென்றால், அப் புத்தகங்களை வைக்க அரசு ஆவன செய்ய முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

[1975 நவம்பர் 4

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, அதுபற்றி விவரக் குறிப்புகள் இல்லை. அதற்கென்று தனி குழுக்கள் அமைக்கப்படுகின்றன. அவர்கள் அந்தந்தப் பள்ளிகளில் இருக்கின்ற புத்தகங்களை ஆராய்ந்து, மாணவர்களுடைய அறிவை வளர்ப்பதற்கும், பொது அறிவு, நுண்ணறிவு இவற்றையெல்லாம் வளர்ப்பதற்கும் மாணவர்களுடைய தேவையைக் கண்டறிந்தும் புத்தகங்களை வாங்க ஏற்பாடு செய்கிறார்கள். சில பள்ளி நூலகங்களில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகின்றது போன்ற புத்தகங்களும் இடம் பெற்றிருக்கின்றன.

தொடக்கப் பள்ளிகளில் புத்தகங்கள் வழங்கல்

*168 வினா—**திரு. கா. வேழவேந்தன்:** மாண்புமிகு கல்வி-சுற்றுலாத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பள்ளிக் கல்வி இயக்குநர் மூலமாகத் தொடக்கப் பள்ளிகளுக்கு இன்றியமையாத நூல்களை வாங்கி வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படுகின்றதா ?

(இ) ஆம் எனில், அப்படி வாங்கப்படும் நூல்கள் எந்த அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுகின்றன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) நூல்களைப் படிப்பதில் தொடக்கப் பள்ளி மாணவர்களுக்கு ஆர்வமூட்டுபவையும், அவர்கள் அறிவைப் பெருக்குபவையும் ஆன அம்மாணவர் தரத்துக்கேற்ற நூல்களும், தொடக்கப் பள்ளிகளின் பயிற்சித்தரம் உயரத் தேவையான அகராதி, தேசப்படப் புத்தகம் முதலிய கருவி நூல்களும் இத்திட்டத்தின்கீழ் தேர்ந்தெடுக்கப்பட்டு வாங்கப்படுகின்றன.

திரு. கா. வேழவேந்தன்: தலைவரவர்களே, தொடக்கப் பள்ளி மாணவர்களுடைய தரத்தை உயர்த்துவதற்கென இந்த நூல்கள் ஒவ்வொரு ஆண்டும் எவ்வளவு வாங்கப்படுகின்றன என்ற விவரத்தைத் தர முடியுமா ? அப்படி நூல்களைத் தேர்ந்தெடுக்கிற நேரத்தில் தமிழ் வளர்ச்சிக் கழகம் ஆண்டுக்காண்டு பரிசு தருகிறதே. அந்தப் பரிசைப் பெறுகிற நூல்கள் ஒவ்வொன்றையும் 2,000 பிரதிகள் வாங்கி வைக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

1975 நவம்பர் 4]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, 3-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் கிட்டத்தட்ட ரூ. 4,55,000 மதிப்புடைய நூல்கள் 22,000 துவக்கப் பள்ளிகளுக்கும் 5,000 உயர் துவக்கப் பள்ளிகளுக்கும் வாங்கி வழங்கப்பட்டுள்ளன. 1965-66-ல் ரூ, 2,05,000 மதிப்புள்ள புத்தகங்கள் 11,000 துவக்கப் பள்ளிகளுக்கும் 4.000 உயர் துவக்கப் பள்ளிகளுக்கும் வாங்கி வழங்கப்பட்டுள்ளன. நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 4,59,000 விலை மதிப்புடைய புத்தகங்கள் 10,000 துவக்கப் பள்ளிகளுக்கும் 2.500 உயர் துவக்கப் பள்ளிகளுக்கும் வாங்கி வழங்கப்பட்டுள்ளன. 1974-75-ல் ரூ. 1,00,000 மதிப்புள்ள புத்தகங்கள் பல்வேறு பள்ளிகளுக்கு வாங்கி வழங்கப் பட்டுள்ளன. ஆகவே, ஒவ்வொரு பள்ளிக்கும் கிட்டத்தட்ட ரூ. 100 லிருந்து, ரூ. 150 வரை விலை மதிப்புள்ள புத்தகங்கள் மட்டும்தான் ஆங்காங்கு வழங்கப்படுகின்ற சூழ்நிலை இருந்து வருகிறது.

மேம்பாலங்கள்

* 169 வினா—திரு. த. சோனையா : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரையிலிருந்து விமான நிலையத்துக்கு செல்லும் வழியில் தெற்கு வாசலுக்குப் பக்கத்தில் இருப்புப் பாதையின் குறுக்கே மேம்பாலம் ஒன்று கட்டும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : ஆம்.

திரு. த. சோனையா : தலைவரவர்களே, மதுரையிலிருந்து விமான நிலையத்திற்குச் செல்கின்றபொழுது, மிக அவசரமாக, முக்கியமாக வியாபார பெரியவர்கள் எல்லாம் செல்கிற நேரத்தில் திடீரென்று மதுரை தெற்கு வாசலிலே இருக்கிற இருப்புப் பாதை கேட் சாத்தப்படுகிறது. கேட் திறக்கப்படுவதற்குள் விமானம் போய்விடுகிறது. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதுதான் ஆம் என்று சொல்லி விட்டாரே, மறுபடியும். . .

திரு. த. சோனையா : குறிப்பாக கூட்ஸ் ரெயில் போகும்போது அதிக நேரம் அடைக்கப்படுகிறது. ஆகவே, மிக அவசியம் இது என்று அரசாங்கம் கருதுகிற காரணததாலே, மிக விரைவாக மேம்பாலம் அமைக்க ஏறபாடு செய்யப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, இரயில்வே வாரியத்தின் இசைவுக்காக அனுப்பப்பட்டிருக்கிறது. அது கிடைத்தவுடன் அரசு மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கும்.

* 170 வினா—**திரு. த. சோனையா :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மானாமதுரை இரயில்வே சந்திப்பு அருகில் இருப்புப் பாதையின் குறுக்கே மேம்பாலம் கட்டும் உத்தேசம் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இல்லை.

திரு. த. சோனையா : தலைவரவர்களே, மானாமதுரைக்குச் செல்கிறபொழுது இரயில் பாதையைக் கடந்து செல்ல வேண்டியிருக்கிறது. அந்த ஊருக்குள்ளே ஒரு பஸ் போனால் இன்னொரு பஸ் வர முடியவில்லை. அது மிக நெருக்கடியாக இருக்கிற இடம். அதை உத்தேசித்தாவது அரசு ஊருக்கு வெளியே வருகிற 'பை பாஸ்' ரோட்டிலே மேம்பாலம் கட்டிக் கொடுத்தால் வசதியாக இருக்கும். ஆகவே, மேம்பாலம் கட்டிக் கொடுக்க இனியாவது அரசு முயற்சிக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, மானாமதுரையைச் சுற்றித் தேசிய நெடுஞ்சாலையில் பை பாஸ் ரோடு ஒன்று போடப்பட்டு வருகிறது. அது முடிந்த பிறகு இது தேவையில்லை என்று அரசு கருதுகிறது.

வறட்சி நிவாரணப் பணிகள்

* 171. வினா—**திரு. கே. எ. வகாப் :** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வந்தவாசி ஒன்றியத்தில் வறட்சி நிவாரணத் திட்டத்தின்கீழ் எடுக்கப்பட்ட வேலைகள் என்னென்ன ?

(இ) இவற்றிற்கான மொத்தச் செலவு எவ்வளவு ?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) வந்தவாசி ஊராட்சி ஒன்றியத்தில் 1974–75, 1975–76 ஆண்டுகளில் வறட்சி நிவாரணத் திட்டத்தின்கீழ் கீழ்க்கண்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டன:

1. குடிதண்ணீர் விநியோக வேலைகள்;
2. சிறுபாசன வேலைகள்;
3. சாலை வேலைகள்.

(இ) இந்தப் பணிகளுக்கு ஆன மொத்தச் செலவுத் தொகை ரூ. 3,48,265.

* 172 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளித்தலை வட்டம், வீரியபாளையம் பஞ்சாயத்துப் பகுதிகளில் வறட்சி நிவாரணப் பணி எதுவும் செய்யப்படவில்லை என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், அதற்கு உரிய காரணம் யாது?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) உண்மையில்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

Purchase of Coir fibre from Kerala.

*173 Q.—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Industries and Electricity bepleased to state—

(a) whether it is fact that the Kerala Government have assured this Government to lift the ban imposed by it on the movement of coir fibre to Tamil Nadu; and

(b) if so, the details of the same?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: கேரள மாநிலத்திலிருந்து தேங்காய் மட்டைகள், தென்னை நார் ஆகியவை மாநிலத்துக்கு வெளியே ஏற்றுமதி செய்யப்படுவதையும் போக்குவரத்து செய்யப்படுவதையும் கட்டுப்படுத்தி, 1971 ஆம் ஆண்டு இந்தியப் பாதுகாப்பு விதிகளின்கீழ் "கேரளம் 1974 ஆம் ஆண்டு தேங்காய் மட்டைகள், தென்னை நார் (ஏற்றுமதிக் கட்டுப்பாடு) ஆணை"யையும், "கேரளம் 1975 ஆம் ஆண்டு தேங்காய்

மட்டைகள் தென்னை நார் (போக்குவரத்து செய்யப்படுவதை முறைப்படுத்தல்) ஆணை "யையும் கேரள அரசு பிறப்பித்துள்ளது. இந்த ஆணைகள் பொதுவாகத் தமிழ்நாட்டிலும் குறிப்பாகச் சேலம் மாவட்டத்திலும் கயிற்றுத் தொழிலைப் பாதித்துள்ளது. இதுபற்றி இவ்வரசு கேரள அரசிடமும் இந்திய அரசிடமும் எடுத்துரைத்துள்ளது. கேரளத்திலிருந்து தென்னை நாரினை ஏற்றுமதி செய்தலைக் கட்டுப்படுத்தும் தடை ஆணை தற்காலிகமான கால அளவிற்கு மட்டுமே பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றும், அத்தடை ஆணை இயன்றளவு விரைவில் ரத்து செய்யப்பட்டுவிடும் என்றும் கேரள அரசின் தொழில் அமைச்சர் மறுமொழி அளித்துள்ளார். கேரள அரசு இத்தடை ஆணையை ரத்து செய்யுமென நாம் எதிர்பார்க்கிறோம்.

திரு. என். கே. பழனிசாமி: சார், என்ன காரணத்தால் தடை செய்தார்கள்? கோயம்புத்தூர், சேலம் போன்ற இடங்களில் கயிறு திரிக்கும் தொழிலாளர்கள் ஏராளமாக இருப்பதால் இன்றைய தினம் அவர்களுக்கு வேலையில்லாமல் இருக்கிறது. ஆகவே, சர்க்காரே 'கோவாப்பரேட்டிவ் பேசிஸ்' முறையில் அவர்களிடமிருந்து ப்ரோக்யூர் செய்து சப்ளை செய்ய ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவரவர்களே, இப்பொழுது கடைசியாக உள்ள நிலையைப் பொறுத்தவரையில், கேரளத்தில் கள்ளிக்கோட்டையில் உள்ள மத்திய தென்னை நார் விற்பனைச் சங்கத்திலிருந்து சேலம் மாவட்டம் மத்தியத் தென்னை நார் விற்பனைச் சங்கத்திற்கு வேண்டப்பட்ட அளவுக்கு தென்னை நாரை அளிக்க வேண்டுமென கேரள அரசு ஆணை பிறப்பித்துள்ளதாக கேரளத் தொழில் அமைச்சர் இந்த அரசுக்குத் தெரிவித்துள்ளார். இது இப்பொழுதுள்ள நிலைமை. இந்தப் பிரச்னை வந்தபொழுது மத்திய அரசுக்கும், கேரள அரசுக்கும் கடிதம் எழுதினோம். அதைப் பொறுத்தவரையில் கேரள அரசிடமிருந்து வந்த பதிலில் இது தற்காலிகமான தடை என்று தெரிவித்தார்கள். மத்திய அரசைப் பொறுத்தவரையில் ஹைதராபாத்தில் 18—10—74 ஆம் நாளன்றும், கொச்சியில் 5—3—75 ஆம் நாளன்றும் கயிறு வாரியக் கூட்டங்கள் நடந்தன. அந்தக் கூட்டத்திலேயும் நம்முடைய மாநில அரசின் சார்பில் இணை இயக்குநர் எடுத்துச் சொல்லியிருக்கிறார். ஆண்டு ஒன்றுக்கு

1975 நவம்பர் 4]

20,000 மெட்ரிக் டன் தென்னை நார் தேவைப்படுகிறது. இந்தத் தடை உத்தரவால் இந்தக் கயிற்றுத் தொழில் பாதிக்கப் பட்டிருப்பது உண்மை.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : தலைவரவர்களே, ஆறு மாதங்களுக்கு முன்பு அரசு இதுகுறித்துப் பதில் கூறும்பொழுது தற்காலிகமாகத்தான் தடை விதித்திருப்பதாகக் கூறினார்கள். ஆனால் 6 மாதங்களுக்குப் பிறகும் தடை நீங்கவில்லை. சூரமங்கலம் போன்ற இடங்களில் இருக்கின்ற 30,000 தொழிலாளர்களில் 20,000 தொழிலாளர்களுக்கு மேலாகப் பட்டினி கிடக்கும் நிலையில் இருந்து, கேரள நாட்டிற்குக் குடிபெயர்ந்துவிட்ட நிலைமை அரசுக்குத் தெரியுமா? ஆகவே, பதில் அடி கொடுக்கும் வகையில் இந்த அரசு ஏதேனும் நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறதா? அல்லது இந்தத் தொழிலையும் இந்தத் தொழிலில் ஈடுபட்டிருந்த தொழிலாளர்களையும் காப்பாற்ற நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பதில் அடி கொடுப்பது என்பதை விட்டுவிடுங்கள்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, சேலம் மாவட்டத்திலிருந்து கேரளாவிற்குக் குடி பெயர்ந்ததாகத் தெரியவில்லை. இங்கிருந்து அங்கே போவார்கள் என்று எதிர்பார்க்கவில்லை இப்பொழுதுள்ள நிலைமை, இந்த தென்னை நார், தேங்காய் மட்டைகள் இவற்றைக் கேரளத்திலிருந்து அனுப்புவதற்கான தடையை 'டிபென்ஸ் ஆஃப் இந்தியா ரூல்ஸ்' அதிகாரத்தை வைத்து அவர்கள் செய்திருக்கிறார்கள். அவர்கள் சொல்லும் காரணம், தங்கள் மாநிலத்தில், 'இங்குத் தொழில் பாதிக்கப்படுகிறது; தொழிலாளர்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்று சொல்கிறார்கள். ஆனால் நம்முடைய மாநிலத்தைப் பொறுத்த வரையில் கடந்த 50, 60 ஆண்டுகளாகக் கேரளாவிலிருந்து இந்த தென்னை நார் கொண்டுவரப்பட்டுத் தமிழ்நாட்டில் தொழில் நடத்தப்பட்டு வந்திருக்கிறது. சேலம் மாவட்டம் சூரமங்கலத்திலும், கோயம்புத்தூர் மாவட்டம், ஈரோடு, ஈங்கூரிலும், வடார்க்காடு மாவட்டத்தில் வேலூரிலும், கன்னியாகுமரி மாவட்டத்தில் நாகர்கோவிலிலும், தஞ்சாவூர் மாவட்டத்தில் கும்பகோணத்திலும் இந்தத் தொழில் குடிசைத் தொழிலாக நடைபெற்று வருகின்றது.

இந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரையில் மத்திய அரசினிடமும், கேரள சர்க்காரிடமும் கடிதப்போக்குவரத்து கொண்டோம். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கேரள முதலமைச்சரைக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். இந்தத் தடை தற்காலிகமாகத்தான் இருக்கும், நீங்கி விடும் என்று சொன்னார்கள். ஆனால் இன்னும் நீக்கப்பட்டதாகத் தெரியவில்லை. மத்திய சர்க்காரின் சார்பில் நடைபெற்ற கயிறு போர்டு கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டிருக்கிறது. கடைசியாகக் கிடைத்த தகவலின்படி இப்பொழுது சேலம் மாவட்டத்திற்குக் கள்ளிக்கோட்டையிலிருந்து தென்னை நாரை அனுப்ப ஏற்பாடு செய்திருப்பதாகவும், உத்தரவு பிறப்பித்திருப்பதாகவும் கேரள அரசு தெரிவித்திருக்கிறது.

திரு. எஸ். வடிவேல்: பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு திரு. அப்துல் ஜப்பார் அவர்கள் கேரள அரசுக்குப் பதில் அடி கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். அதைவிட, நம்நாட்டில் இருக்கின்ற பற்றாக்குறையைப் போக்க கடற்கரைப் பிரதேசத்தில் தென்னை வளர்ப்பு இடங்களுக்கு ஊக்கம் அளித்து, உதவி அளித்துப் பற்றாக்குறையைப் போக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: அப்துல் ஜப்பார் மட்டுமல்ல, தமிழ்நாட்டிலிருந்து கேரளத்திற்குத் தேங்காய் மட்டைகள் போக்குவரத்து செய்யப்படுவதைத் தடைசெய்து உடனடியாக ஆணைகள் பிறப்பிக்குமாறு திரு. கே. டி. கோசல்ராம் முதலமைச்சரைக் கேட்டுக்கொண்டுள்ளார். நம்முடைய சில தொழில்களுக்கு அங்கிருந்து வருவதை தடை செய்யும்பொழுது நம் நாட்டில் தடை செய்தால் என்ன என்ற கருத்தில் இவ்வாறு சொல்லப்படுகிறது. இந்திய ஒற்றுமையை அடிப்படையாக வைத்து மத்திய அரசு உடனடியாக இதில் தலையிட்டால் நல்ல தாக இருக்கும். நம்முடைய நாட்டில் சுமார் 20,000, 25,000 தொழி லாளர்கள் பாதிக்கப்படுகிறார்கள். எனவே, இந்திய ஒற்றுமையை அடிப்படையாக வைத்து மத்திய அரசு உடனடியாக நடவடிக்கை எடுத்து இதுபோன்ற தடையை நீக்கினால் நல்லதாக இருக்கும்.

திரு. கே. என். குமாரசாமி: தலைவரைவர்களே, நம்முடைய நாட்டிலே தேங்காய் மட்டையை விறகுக்குப் பதிலாகப் பயன் படுத்துகிறார்கள். இதனால் மூலப்பொருள் பற்றாக்குறை

1975 நவம்பர் 4]

ஏற்படுகிறது. எனவே, அவ்வாறு உபயோகப்படுத்தாமல் இருக்கும் வகையில் அதைத் தடுப்பதற்கான வழி இருந்தால் அவ்வாறு செய்வது சௌகரியமாக இருக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவரவர்களே, இது நாரிலிருந்து கயிறு திரிப்பது. இதில் கொடுத்துள்ள விவரப்படி, இப்பொழுது தமிழ்நாட்டில் 35 தென்னை நார் ஆலைகளும் சேர்ந்து திங்கள் ஒன்றுக்கு 400 டன் நார் மட்டுமே உற்பத்தி செய்ய முடியும் என்று கொடுத்திருக்கிறார்கள். மின்சாரப் பற்றாக்குறை நீங்கும்பொழுது திங்கள் ஒன்றுக்கு 800 டன்கள் உற்பத்தி செய்ய முடியும். அங்கிருந்து தேங்காய் மட்டை நார் வர வேண்டிய நிலை இருக்கிறது.

திரு. த. சோனையா: தலைவரவர்களே, கேரளாவிலிருந்து தென்னை மட்டை நார் இங்கே வராததால் கயிற்றுத் தொழில் பாதிக்கப்படுகிறது என்பதை அரசு ஒத்துக் கொள்கிறது. அதே நேரத்தில் நம் நாட்டில் உற்பத்தியாகும் தேங்காய் வெளிநாட்டிற்கு, வடநாடுகளுக்கு இலட்சோப லட்சம் அளவிற்குப் போகிறது. முன்பு உரித்த தேங்காய்களாகப் போனது, இப்பொழுது உரியாத தேங்காய்களாகப் போகின்றன. எனவே, இனிமேல் உரித்த தேங்காய்களாகத்தான் போக வேண்டுமென்று செய்தால் அதன்மூலம் தொழிலாளர்களை வாழ வைக்க முடியும். இனியாவது அரசாங்கம் செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவரவர்களே, தேங்காயிலிருந்து நார் உரிப்பது ரொம்பக் கஷ்டமான வேலை. மாண்புமிகு உறுப்பினர் கூறுவது நல்ல கருத்து என்பதை ஏற்றுக்கொள்கிறேன்.

Export of onion from Nagapattinam.

* 174 Q.—THIRU B. VENKATASWAMY: Will the Hon. the Minister for Industries and Electricity be pleased to state—

(a) whether onion export from Nagapattinam has been suspended from November, December 1974; and

(b) if so, the reasons therefor?

[1975 நவம்பர் 4

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா: (a) & (b) சிங்கப்பூருக்கும் மலேசியாவுக்கும் செய்யப்படும் வெங்காய ஏற்றுமதி புதுடில்லியிலுள்ள தேசிய வேளாண்மைக் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பின் National Agricultural Co-operative Marketing Federation மூலமாகச் செய்யப்பட வேண்டும் என உடனடியாக முறைப்படுத்தும் வகையில் புதுடில்லியிலுள்ள இந்திய அரசின் வணிக அமைச்சகம் 16—11—1974 நாளிட்ட 40/ITC 74 எண் உள்ள பொது அறிவிப்பின்கீழ் அறிவிப்பு வெளியிட்டது. இவ்வாறு முறைப்படுத்தும் ஆணை நாகப்பட்டினம், சென்னை ஆகிய இடங்களிலுள்ள ஏற்றுமதியாளர்களைப் பாதித்தது; 1974 ஆம் ஆண்டு நவம்பர், டிசம்பர் திங்கள்களில் நாகப்பட்டினம் துறைமுகம்மூலமாக வெங்காய ஏற்றுமதி செய்வது நின்று விட்டது.

THIRU B. VENKATASWAMY : May I know from the Hon. Minister what is the quantum of onion which is expected to be exported to other nations ? Is there any attempt to grow more onion in the State ?

THE HON. THIRU S. J. SADIQ PASHA : I have no particulars about the quantity that is exported from Tamil Nadu to other countries. The export came almost to a dead stop and immediately after the issue of the Public Notice, 20 members who were actually exporters from the Onion Traders' Association, Madras and the Indian Chamber of Commerce and Industry filed a Writ Petition in the High Court at Madras and obtained a Stay Order on 19th December 1974. As a result of the Stay Order, the shipping bills were continued to be passed by the Joint Chief Controller of Imports and Exports, Madras, in the same manner as it was before the canalisation. So, at any stage the order was not allowed to be given effect to.

(முற்பகல் 9-30)

திரு. வா. மை. அப்துல் ஜப்பார்: எந்த ஆண்டும் இல்லாத அளவுக்கு இந்த ஆண்டு ஒரு கிலோ வெங்காயம் இரண்டு ரூபாய் அளவுக்குச் சந்தைகளில் விற்க ஆரம்பித்ததன் காரணமாக கூழுக்கு வெங்காயத்தைத் தொட்டுக்கொண்டு குடிக்கக்கூடிய ஏழைகள் எல்லாம் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். தனக்குப்

1975 நவம்பர் 4]

போகத்தான் தனயனுக்கு என்ற பழமொழிக்கேற்ப, இந்த ஆண்டு வெங்காயத்தை ஏற்றுமதி செய்யாது இருக்க அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: அது மத்திய சர்க்காரைக் கேட்க வேண்டிய கேள்வி. மாண்புமிகு உறுப்பினர் வெங்காயம் அதிகமாகச் சாப்பிடுகிறார் என்று தெரிய வருகிறது.

திருமதி. ஜோதி வெங்கடாசலம்: அயல் நாடுகளில் இருந்து டி-ஹைட்ரேடட் வெங்காயத்தை அனுப்ப வேண்டுமென்று வந்து அதன் பேரில் சவுத் இந்தியா சேம்பர் ஆப் காமர்ஸ் மூலமாக ஏதாவது ரெப்ரசன்டேஷன் வந்ததா?

மாண்புமிகு எஸ். ஜே. சாதிக் பாட்சா: அது பற்றிய தகவல் ஒன்றும் என்னிடத்தில் இல்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி: தெற்கு ஜில்லாக்களில் விவசாயம் செய்யக்கூடிய வெங்காயத்தை வியாபாரிகள் பல வருஷங்களாக சிலோன், சிங்கப்பூர் போன்ற இடங்களுக்கெல்லாம் அனுப்பிக் கொண்டு வந்தார்கள். எனக்குப் பதிலிலிருந்து தெளிவாக விளங்கவில்லை. இப்போது அது நின்று போய்விட்டதா அல்லது தொடர்ந்து ஏற்றுமதி செய்யப்பட்டு வருகிறதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மத்திய சர்க்கார் சொன்னது—வெங்காய ஏற்றுமதி நேஷனல் அக்ரிகல்சுரல் கோவாப்பரேட்டிவ் மார்க்கெட்டிங் பெடரேஷன் மூலமாக அனுப்ப வேண்டுமென்று. அப்படி உத்தரவு வந்தவுடன் ஹைகோர்ட்டில் ஸ்டே வாங்கியிருப்பதால் அந்த உத்தரவு அமலுக்கு வரவில்லை. வெளிநாடுகளுக்கு வெங்காயம் ஏற்றுமதி செய்யப்பட்டுத்தான் வருகிறது.

திரு. கே. என். குமாரசாமி: ஏற்றுமதி செய்யப்படுவது பெரிய வெங்காயமா, சிறிய வெங்காயமா? எது அதிகமாக ஏற்றுமதி செய்யப்படுகிறது?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: ஏற்றுமதி செய்கிற அதிகாரம் மத்திய சர்க்காருக்குத்தான் இருக்கிறது. எந்த வெங்காயம் என்று எனக்குத் தெரியவில்லை.

[1975 நவம்பர் 4

உழவர் பயிற்சி நிலையங்கள்

* 175 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நவீன விவசாயச் சாகுபடி முறைகளைப் பயிற்றுவிக்கும் உழவர் பயிற்சி நிலையங்கள் நமது மாநிலத்தில் எங்கெங்கு உள்ளன?

(இ) அவற்றில் என்னென்ன போதிக்கப்படுகிறது?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: (அ) & (இ) ஒரு விவர அறிக்கை * பேரவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. எஸ். வடிவேல்: நவீன சாகுபடியில் புகையான் என்ற பூச்சியின் காரணமாக மிக மோசமான நிலையில் தஞ்சையில் குறுவை சாகுபடி பாதிக்கப்பட்டிருக்கிறது. இந்த புகையான் பூச்சியைப் போக்க மருந்து கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: புகையானைப் பற்றித் தனியாக ஸ்டேட்மென்ட் வைக்க இருக்கிறேன். அப்போது விவரம் கொடுக்கப்படும். உழவர்கள் பயிற்சி நிலையங்களில் எல்லாப் புது மருந்துகளைப் பற்றியும் கற்றுக் கொடுக்கப்படுகின்றன.

வேளாண் கருவிகளுக்கான உதிர்பாகங்கள்

* 176 வினா—டாக்டர் எச். வி. ஹாண்டே: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேளாண்மைத்துறைக்குச் சொந்தமான போரிங்குழாய், புல்டோசர் டிராக்டர் போன்றவைகளின் உபகரணங்கள் விற்பனையாளர்களிடமிருந்து வாங்கும் முறையினை மாற்றித் தயாரிப்பாளர்களிடம் மட்டுமே வாங்கவேண்டும் என அரசு ஆணை ஏதேனும் பிறப்பித்துள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விபரங்களும், அதற்கான காரணங்களும் யாவை?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

*143-ம் பக்கத்தில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

Grants for Coffee cultivation.

* 177 Q.—THIRU K. S. KOTHANDARAMIAH: Will the Hon. the Minister for Agriculture be pleased to state:

(a) whether there is any proposal under the consideration of the Government to grant subsidy to the ryots who take up the cultivation of coffee in Hosur and Denkanikottah taluks; and

(b) if so, the details thereof?

THE HON. THIRU SI. PA. ADITANAR: (a) No.

(b) Does not arise.

THIRU K. S. KOTHANDARAMIAH: Sir, there is a lot of scope for Coffee cultivation in Denkanikottah taluk. Sometime back, coffee cultivation was carried on there. But due to want of facilities in that area, the ryots are not coming forward to cultivate coffee. May I know from the Hon. Minister for Agriculture, whether such facilities would be given to the ryots to start cultivation of coffee in that area again.

THE HON. THIRU SI. PA. ADITANAR: At the moment, we are engaged in developing coffee plantations in Kolli hills in Salem district and in certain other areas, for repatriates from Ceylon. But the suggestion of the Hon. Member will be looked into.

THIRU B. VENKATASWAMY: Sir, in Bettamugulalam at Denkanikottah taluk, good quality of coffee is grown there. May I know from the Hon. Minister for Agriculture whether he will depute some officers to study the condition there to see that the area is developed and the area is brought under coffee cultivation?

THE HON. THIRU SI. PA. ADITANAR: Sir, the question is about the subsidy. So far as Denkanikottah area is concerned, at the moment there is no proposal. But the suggestion of the hon. Member will be looked into.

[1975 நவம்பர் 4

சென்னை-கோபால்ரெட்டி கண்டிகை பேருந்து வழித்தடம்

*** 178 வினா—திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு தொழிலாளர் நலன்-போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வழித்தடம் எண் 131-ஏ பேருந்துகள் சீராக சென்னையிலிருந்து கோபால்ரெட்டி கண்டிகை வரை ஓட்டப்படவில்லை என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், முறையாக ஓட்டுவதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : (அ) & (இ) எண். 131-ஏ (சென்னை-கரடிப்புத்தூர்) வழித்தடப் பேருந்து 1-2-1975-லிருந்து கோபால்ரெட்டி கண்டிகை வரை இப்போது முறையாக விடப்பட்டு வருகிறது. பாலவாக்கத்திற்கும் கரடிப்புத்தூருக்கும் இடையே உள்ள சாலை இதற்குமுன் பேருந்துப் போக்குவரத்துக்கு ஏற்றதாக இல்லாததால், பாலவாக்கம் வரை மட்டுமே பேருந்து விடப்பட்டது. பின்னர் சாலை பேருந்துப் போக்குவரத்துக்கு ஏற்ற நிலை பெற்றவுடன் 20—12—1974-லிருந்து கரடிப்புத்தூருக்கு மீண்டும் பேருந்து விடப்பட்டது. பின்னர் இவ்வழித்தடம் 1—2—1975-லிருந்து கோபால்ரெட்டி கண்டிகை வரை நீட்டிக்கப்பட்டது.

திரு. கா. வேழவேந்தன் : மேற்கண்ட பேருந்து கோபால்ரெட்டி கண்டிகைக்கு போகிறது என்றாலும் சில நேரத்தில் வசூலை மனத்தில் வைத்து பேருந்தை பாலவாக்கம் கிராமத்திலேயே நிறுத்தி விடுகிறார்கள். தொடர்ந்து அந்தக் கிராமத்திற்குப் பேருந்து செல்ல வேண்டுமென்ற வகையில் சிறப்பு ஆணை பிறப்பிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தற்போது போய்க் கொண்டிருக்கிறது. சில நேரங்களில் போகாமல் இருக்கிறார்கள் என்றால், வசூலை அடிப்படையாக வைத்துப் போகாமல் இருக்கிறார்களா அல்லது பயணிகள் இல்லாமல் போகாமல் இருக்கிறார்களா என்பதுதான் கேள்வி. எல்லாக் கிராமத்திற்கும் எல்லா நேரங்களிலும் போய்க் கொண்டிருக்க முடியாது. இங்கு எதை வைத்துக் கொண்டு போகாமல் இருக்கிறார்கள் என்பதை நான் ஆராய்கிறேன்.

1975 நவம்பர் 4]

சென்னை-சத்தியவேடு பேருந்து வழித்தடம்

* 179 வினா—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு தொழிலாளர் நலன்-போக்குவரத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையிலிருந்து சத்தியவேடு செல்லும் வழித்தடம் எண் 112-ஏ பேருந்துகள் இப்பொழுது கண்ணன்கோட்டை கிராமம் வரை சென்று வருவதில்லை என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், வழக்கம்போல் அவை கண்ணன்கோட்டை செல்ல எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் :

(அ) மற்றும் (இ) சென்னையிலிருந்து சத்தியவேடு செல்லும் பேருந்துகளில் ஒன்று (எண் 112-ஏ) 1—4—1975 முதல் கண்ணன் கோட்டைக்குச் சென்று வருகிறது.

திரு. கா. வேழவேந்தன் : அந்தக் கிராமத்திற்குச் செல்ல இந்த ஒரு பேருந்தைத் தவிர வேறு பேருந்து இல்லை. இந்தப் பேருந்து செல்லுவது அடிக்கடி தடைப்படுகிறது என்ற புகார்கள் வந்து கொண்டிருக்கின்றன. தொடர்ந்து எல்லாத் தடவையும் பேருந்து சென்று வர உரிய நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : சத்தியவேடு வழித்தடத்தில் ஒரு நாளைக்கு 10 தடவை பேருந்து சென்று கொண்டிருக்கிறது. கண்ணன் கோட்டைக்கு மூன்று தடவை—காலை 5½ மணி, 12 மணி, மாலை 5 மணி ஆகிய மூன்று தடவை போய்க் கொண்டிருக்கிறது. இதற்கு முன்னால் கண்ணன் கோட்டைக்குப் பேருந்து போகாத தற்குக் காரணம் அந்த ரோடு சரியாக இல்லாமல் இருந்தது. இப் போது அந்தச் சாலை சரி செய்யப்பட்டு மூன்று தடவை கண்ணன் கோட்டைக்குப் பேருந்து சென்று கொண்டிருக்கிறது ; போக்கு வரத்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

Assistance for fisheries development.

* 180 *Q.*—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Social Welfare be pleased to state—

(*a*) whether any financial assistance has been sought for from the Agricultural Refinance Corporation for fishery development projects in the State; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை: (அ) ஆம்.

(இ) மீனள மேம்பாட்டுத் திட்டங்களை நிறைவேற்றும் பொருட்டு சென்னை செங்கற்பட்டு மாவட்ட மீனவர் கூட்டுறவுச் சங்கத்திற்கு ரூ. 15.775 லட்சமும், திருநெல்வேலி மாவட்ட மீனவர் கூட்டுறவுச் சங்கத்திற்கு ரூ. 58.3275 லட்சமும், பம்பாயிலுள்ள வேளாண்மை மறு நிதியுதவிக் கழகம் கடனுக அளித்தது. மேலும் தமிழ்நாடு மீனள மேம்பாட்டுக் கழகத்திடமிருந்து மீன்பிடிப் படகுகள் பெறுவதற்காக வேளாண்மை மறு நிதியுதவி கழகத்திடமிருந்து ரூ. 204.00 லட்சம் நிதியுதவி கேட்கப் பட்டது. அத்தொகையில் வேளாண்மை மறுநிதி உதவிக் கழகம் இதுவரை ரூ. 99.168 லட்சம் அனுமதி வழங்கியுள்ளது.

திரு. என். கே. பழனிசாமி: மீன் பிடிக்கும் தொழிலை அபி விருத்தி செய்ய (1) ஃபிஷிங் ஹார்பர் (2) டிராலர்ஸ் (3) நைலான் நெட்ஸ் மிகவும் அவசியம். இந்த மூன்றும் நம்முடைய ராஜ்யத்தில் குறைவாக இருக்கின்றன. நைலான் நெட்ஸ் அதிகமாக இல்லாததால் மீனவர்கள் நைலான் நெட்ஸ் வைத்திருப்பவர் களிடம் கொத்தடிமைகளாக இருக்க வேண்டியிருக்கிறது. ஆகவே. அதிகமான டிராலர்ஸ் வாங்க வேண்டும்; ஏழெட்டு ஃபிஷிங் ஹார்பர்கள் அமைக்க வேண்டும். தற்போது இரண்டுக்குத்தான் சாங்ஷன் ஆகி இருக்கிறது. நைலான் நெட்ஸ் அதிகமாக கோவாப்பரேட்டிவ் சொசைடி மூலமாகக் கொடுக்க வேண்டும். இது பற்றி சர்க்காரின் திட்டம் என்ன?

மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை: மீனள மேம் பாட்டுக் கழகத்தைத் தனியாக ஏற்படுத்தி அதன்மூலம் செயல்பட முனைந்திருக்கும் ஒரே காரணம்—நமது நாட்டின் மீன் வளத்தைப் பெருக்குவதற்கும், உறுப்பினர் அவர்கள் கோரியது போல் நீண்ட பெரிய டிராலர்களை வாங்கிக் கொண்டு வந்து ஆழ்கடலில் மீன் களைப் பிடிக்கவும் வகை செய்வதற்கு மட்டுமல்லாமல் மேலும் நிதி ஆதாரத்தை ஏ.ஆர்.சி. மூலம் பெற்று வேண்டிய விசைப் படகு களைத் தருவதன் மூலம் புதிய புரட்சிகரமான மறுமலர்ச்சியை மீன் துறையினருக்கு ஏற்படுத்த வேண்டியது அவசியம் என்பதற் காகத்தான் இந்தக் கழகம் முனைந்திருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

1975 நவம்பர் 4]

திரு. எஸ். வடிவேல் : விசைப் படகுகள் வாங்குவதற்குப் பணம் கட்டினாலும் நம்பர்படி கொடுக்காததால் படகுகள் கிடைப்பதற்குக் காலதாமதமாகிறது. வட்டிக்குப் பணம் வாங்கி கட்டியிருந்தாலும்கூட படகுகள் கிடைப்பதற்குக் காலதாமதமாகிறது. ஆகவே, சீட்டுக் குலுக்கிப் போடாத வகையில், படகுகளைக் கொடுப்பதற்கு அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை : சீட்டுக் குலுக்கல் இல்லாத முறையில் வழங்கப்பட்ட படகுகள் பற்றி இத்துறை மீது உறுப்பினர் அவர்களைப் போன்ற நண்பர்கள் பலர் புகார் கூறியதற்குப் பிறகுதான் சீட்டுக்குலுக்கல் முறை மூலம் அந்தக் குறைபாட்டைப் போக்கவேண்டும் என்று இந்தக் குலுக்கல்முறை நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

திரு. நா. வீராசாமி : படகுகளில் மீன் பிடிக்கப்போகிறவர்களுக்கு சிலநேரங்களில் உயிருக்கே ஆபத்து ஏற்படுகிறது. சமீபத்தில் கூட ஒரு படகில் சென்ற ஏழு மீனவர்கள் ஒன்பது நாட்களாகக் காணவில்லை என்ற செய்தி எல்லாம் வருகிறது. ஆகவே, படகுகள் அளிக்கையில் அவர்கள் பாதுகாப்பாக கரை வந்து சேருவதற்கும், அதேபோல் சீதோஷ்ண நிலை, கடலில் புயல் ஏற்படுமா ஏற்படாதா என்பனபோன்ற அறிவிப்புகளைச் செய்வதற்கும் ஏதாவது முயற்சிகள் மேற்கொள்ளப்படுமா ?

மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை : இது மூலக் கேள்விக்கு சம்பந்தப்பட்டது இல்லை என்றாலும் கூட அதுபற்றிக் கூறுவது பொருத்தமுடையதாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். தூத்துக்குடிப் பகுதியில் இருந்து செல்லப்பட்ட படகு திசை தவறிச் சென்றுவிட்டது என்று துறையினருக்கு அறிவிப்பு வந்தவுடனே மண்டபத்தில் இருந்த நீண்ட ட்ராலர்களை அனுப்பியும், தூத்துக்குடியில் உள்ள ட்ராலர்கள், அதோடு தனியார் துறை மூலம் எடுத்துக்கொண்ட முயற்சிகளும் பயன் அளிக்கவில்லை என்று தெரிந்த பிறகு விமானம் மூலம் எடுத்துக்கொண்ட முயற்சியும் இப்போது கைவிடப்பட்டு விட்டது என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன். இலங்கை அரசுக்கு இதுபற்றி தகவல் அனுப்பி எங்கேயாவது திசை தவறிய படகு ஒதுங்கியிருந்தால் உடனடியாக இந்திய அரசுக்கு அறிவிக்க வேண்டும் என்றும், எனது துறைச் செயலாளருக்குத் தெரிவிக்கப் படவேண்டும் என்றும் கூறப்பட்டிருக்கிறது, மேலும் தேடுகிற முயற்சி தனி விசைப் படகுகள் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

திரு. என். டென்னிஸ்: அமைச்சர் அவர்கள் கூறும்போது இரண்டு இடங்களுக்கு மட்டும்தான் இந்த உதவி கொடுக்கப்பட்டதாகக் கூறினார்கள். மீன்பிடி தொழிலை அபிவிருத்தி செய்வதற்காக வேறு இடங்களுக்கும் நிதி வழங்கப்படுமா?

மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை: தற்போது நெல்லை மாவட்ட சம்மேளனமும், செங்கல்பட்டு சென்னையைச் சேர்ந்த சம்மேளனமும்தான் விண்ணப்பம் போட்டார்கள். அவர்களுக்கு நிதி ஆதாரம் அளிக்கப்பெற்றிருக்கிறது. மேலும் இது போன்ற கூட்டுறவு மீனவ சம்மேளனங்கள் விண்ணப்பித்தால் அவைபற்றி ஆய்வு செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

பெரியார் குடில், பாடலூர்.

* 181 வினா—**புலவர் சி. பழனிசாமி:** மாண்புமிகு சமூகநல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், பாடலூர் என்ற கிராமத்தில் தந்தை பெரியாரின் பெயரில் "பெரியார் குடில்" என்ற அனாதை இல்லம் ஆரம்பிக்கப்பட்டு ஏறத்தாழ மூன்றாண்டுகள் ஆகியும் அதற்கு அங்கீகாரம் அளிக்கப்படாமல் இருப்பது உண்மையா?

(இ) ஆமெனில், அங்கீகாரம் அளிக்க மேற்கொண்ட நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை:

(அ) 12—6—75 நாளிட்ட அரசு ஆணை பலவகை எண். 438-ல் "பெரியார் குடில்" என்ற இல்லத்திற்கு அரசு மானிய உதவிகள் பெற அங்கீகாரம் அளிக்கப்பட்டது.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

புலவர் சி. பழனிசாமி: இந்தக் குடில் நாட்டில் தந்தை பெரியாரின் பகுத்தறிவுக் கொள்கைகளைப் பரப்புவதற்கே ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஆகவே மதங்களைப் பரப்புவதற்காக ஏற்படுத்தப்பட்டுள்ள இராமகிருஷ்ண குடில் போன்றவற்றிற்கு என்னென்ன சலுகைகள் கொடுக்கப்படுகின்றனவோ அந்தச் சலுகைகள் எல்லாம் இந்தக் குடிலுக்கும் வழங்கப்படுமா? குறிப்பாக இந்தக் குடிலுக்கு நிலம் வேண்டும் என்று பல ஆண்டுகளுக்கு

1975 நவம்பர் 4]

முன்பே விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. ஆகவே, இந்தக் குடிலுக்கு அண்மையில் உள்ள அரசுப் புறம்போக்கு நிலத்தை கையகப் படுத்திக் கொடுப்பதற்கு அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை: பெரியார் குடிலுக்கு அங்கீகாரம் அளிக்கப்படாததற்குக் காரணம் என்ன என்று கேட்டிருக்கிறார்கள். இப்போது இடவசதி அளிக்கப்படுமா என்று உறுப்பினர் அவர்கள் கேட்கிறார்கள். பொதுவாக கல்விச் சட்டப்படி இன்றையதினம் அனாதை இல்லங்கள் என்ற பெயரால் நடைபெறுகிற இல்லங்கள் ஒரு ஆண்டு வரை முறையாக நடத்தப் பட்டு கல்வித் துறையைச் சார்ந்த அதிகாரிகளால் பரிந்துரை செய்யப்படுமானால் அரசுத்துறை மூலம் முறையான சலுகைகளை, நிதி ஆதாரங்களைப் பெற இப்போதிருக்கிற கல்விச் சட்டத்தில் வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. அதேபோல் அவர்கள் கோருகிற நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட வருவாய்த் துறை பரிந்துரை செய்தால் அதற்கு ஆவன செய்யப்படும்.

திரு. செ. அரங்கநாயகம்: மூலக் கேள்வியில் அனாதை இல்லம் என்று கூறப்பட்டிருக்கிறது. ஆனால் உறுப்பினர் பழனிசாமி அவர்கள் கேட்டபோது பகுத்தறிவுக் கொள்கைகளைப் பரப்புவதற் காக என்று கேட்டார்கள். பெரியார் குடில் என்ன பணியைச் செய்து கொண்டிருக்கிறது என்பதை அறியலாமா?

மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை: இந்தக் குடிலுக்கு அங்கீகாரம் அளிக்கப்படுவதற்குள்ள பரிந்துரைகளை கல்வித் துறையைச் சார்ந்தவர்கள் அனுப்பியிருக்கிறார்கள். 1976-77-ல் இது முறையாக அங்கீகாரம் பெற இருக்கிறது. அதற்குப் பிறகு தான் அதன் நடைமுறைகளைப்பற்றி உறுப்பினர் அவர்களுக்கு விவரம் அளிக்க முடியும்.

சுகாதார ஊழியர்களுக்கு சைக்கிள் அலவன்ஸ்.

***182 வினா—திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா:

ஊராட்சி மன்றங்கள் பேரூராட்சிகளில் பணியாற்றும் சுகாதார ஊழியர்களுக்கு சைக்கிள் அலவன்ஸ் அளிக்க அரசு உத்தேசித்துள்ளதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: சுகாதார மேஸ்திரி களுக்கும், சுகாதார ஆய்வாளர்களுக்கும் சைக்கிள்

அலவன்ஸ் வழங்கப்பட்டிருக்கிறது. சுகாதார துப்புர வாளர்கள் சில தெருக்களில் மட்டும் பணி புரிவதால் சைக்கிள் அலவன்ஸ் வழங்கப்படவில்லை.

திருமதி த. ந. அனந்தநாயகி : சைக்கிள் இருக்கிறவர்களுக்கு இந்த சைக்கிள் அலவன்ஸ் கொடுக்கப்படுகிறதா ? சைக்கிள் இருந் தாலும் இல்லாவிட்டாலும் எல்லோருக்கும் சைக்கிள் அலவன்ஸ் உண்டா ? சைக்கிள் வாங்க முடியாதவர்களுக்குக் கடன் கொடுத்து சைக்கிள் வாங்கித் தர ஏதாவது வசதி செய்யப்படுகிறதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : சைக்கிளில் போய் மேற்பார்வை செய்கிறவர்களுக்கு இந்த அலவன்ஸ் தரப்படுகிறது. இதற்கும் சைக்கிள் வாங்குவதற்கும் சம்பந்தம் இல்லை.

வந்தவாசி ஒன்றியத்தில் நன்கொடை வசூல்.

** 183 வினு—***திரு. கே. ஏ. வகாப் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) 1974-75-ம் ஆண்டில் வந்தவாசி (வ.ஆ.) ஊராட்சி ஒன்றியம், அதன் ஊராட்சித் தலைவர்களிடமிருந்து நன்கொடைகள் வசூலித்து உள்ளதா ?

(இ) ஆம் எனில், எதற்காக எவ்வளவு தொகை வசூலிக்கப் பட்டது ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆம்.

(இ) குடும்பக் கட்டுப்பாடு இயக்கத்திற்காக, வந்தவாசி ஊராட்சி ஒன்றியத்தினைச் சார்ந்த 58 ஊராட்சித் தலைவர்களிட மிருந்து அவர்கள் அலுவல் பொறுப்பில் (Official capacity) ஊராட்சி ஒன்றுக்கு ரூ. 100 வீதம் மொத்தம் ரூ. 5,800 மாவட்ட ஆட்சியரால் வசூலிக்கப்பட்டது.

அரிசனநலப் பள்ளிகளில் பணியாற்றும் இளநிலை ஆசிரியர்கள்.

** 184 வினு—***திரு. சி. க. வடிவேலு :** மாண்புமிகு அரிசனநல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப் பாரா—

அரிசன நலத்துறை தொடக்கப்பள்ளிகளில் ஹையர்கிரேடு ஆசிரியர்களாகப் பணியாற்றும் செகண்டரி கிரேடு படித்த ஆசிரியர்களுக்கு செகண்டரி கிரேடு பதவிகள் கொடுக்கும் திட்டம் ஏதேனும் ஆய்விலுள்ளதா ?

1975 நவம்பர் 4]

மாண்புமிகு திரு. என். இராசாங்கம்: இத்திட்டம் குறித்து அரிசன நல இயக்குநரின் செயற்குறிப்பு அரசால் ஏற்கப்பெற்று ஆணை ஏற்கனவே வெளியிடப்பட்டது.

இந்த ஆணையின் மூலம் அரிசன நலப் பள்ளிகளில் 229 இளநிலை ஆசிரியர்களின் பணியிடங்கள் முதுநிலை ஆசிரியர் பணியிடங்களாக மாற்றப்பெற்றன. அதன் மூலம் 229 முதுநிலைப் பயிற்சி தேர்வு பெற்று இளநிலைப் பணியிடங்களில் பணிபுரியும் ஆசிரியர்கள் முதுநிலைப் பணியிடத்திற்கான ஊதியம் பெறுவர்.

திரு. சீ. க. வடிவேலு: அவர்கள் சேர்ந்த தேதியிலிருந்து முதுநிலை ஆசிரியர்களுக்கான சம்பளத்தைக் கொடுக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. என். இராசாங்கம்: 229 பேர்கள் முதுநிலை ஆசிரியர்களாக மாற்றப்பட்டிருக்கிறார்கள், அதற்குரிய சம்பளமும் பெற்று வருகிறார்கள்.

திரு. ப. முத்துசாமி: ஹரிஜன நலத் துறை மூலம் நடத்தப் படுகிற பள்ளிகளில் செகன்டரி கிரேட் ஆசிரியர்களாகப் பயிற்சி பெற்றவர்கள் இன்னும் ஹையர் கிரேட் ஆசிரியர்களாகப் பணி புரிந்து கொண்டிருப்பவர்கள் எத்தனை பேர்கள்? அவர்களை செகன்டரி கிரேட் ஆசிரியர்களுக்குள்ள இடத்தில் அமர்த்தி உரிய சம்பளம் கொடுக்க துறையினர் முயற்சி எடுத்துக்கொள்வார்களா?

மாண்புமிகு திரு. என். இராசாங்கம்: என்னிடமுள்ள குறிப் பின்படி 229 இளநிலை ஆசிரியர்களின் பணியிடங்கள் முதுநிலை ஆசிரியர் பணியிடங்களாக மாற்றப்பெற்றன. இதற்கு மேலும் இருந்தால், இன்னும் இருக்கிறார்கள், படிப்படியாக அவர்கள் முதுநிலை ஆசிரியர்களாக மாற்றப்படுவார்கள் என்ற அறிவிப்பு இருந்திருக்கும். ஆகவே இல்லை என்று பொருள்.

திரு. முனு ஆதி: முதுநிலை ஆசிரியர்கள் நிறைந்திருப்பதால் மூன்று ஆண்டுகளுக்குப் பயிற்சிப் பள்ளிகளை நிறுத்திவிடுவது என்று கல்வி அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அமைச்சர் அவர்கள் சொன்னது உண்மைதானா? மூன்று ஆண்டு களுக்கு, அந்தப் பயிற்சிப் பள்ளிகளை நிறுத்திவைப்பது என்று சொல்லியிருக்கிறார்களே, அது உண்மைதானா?

மாண்புமிகு திரு. என். இராசாங்கம்: ஹரிஜன நலத்துறைப் பள்ளிகளில் வேலை செய்கிறவர்களைப் பற்றிய கேள்வி இது. பொதுக் கேள்விக்குத் தனியாகக் கேள்வி போட்டால் கல்வித் துறையிலிருந்து விடைபெற முடியும்.

சோத்துப்பாக்கம் அரிசனக் குடியிருப்பில் நீர்த் தேக்கத் தொட்டி

* 185 வினு—**திரு. வை. பாலசுந்தரம்:** மாண்புமிகு அரிசனநல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப் பாரா—

செங்கற்பட்டு மாவட்டம், அச்சிறுபாக்கம் தொகுதியில் சோத்துப்பாக்கம் அரிசனக் காலனியில் அரிசன நல இலாகாவின் மூலம் நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் குறிப்பு ஏதேனும் அரசின் பரிசிலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. என். இராசாங்கம்: செங்கற்பட்டு மாவட்டம் அச்சிறுபாக்கம் தொகுதியில் சோத்துப்பாக்கம் அரிசனக் காலனியில் ஏற்கனவே உள்ள தரைமட்ட நீர்த் தேக்கத் தொட்டி உபயோகத்திற்கு லாயக்கற்றதாய் இருப்பதால் அங்கே தானே இயங்கும் நீர் அழுத்தத் தொட்டி கட்ட மாவட்ட ஆட்சித் தலைவர் தேவையான நடவடிக்கை எடுத்து வருகிருர்.

திரு. வை. பாலசுந்தரம்: தலைவரவர்களே, அச்சிறுபாக்கத் திலுள்ள சோத்துப்பாக்கத்தில் 5 ஆண்டுகளுக்கு முன்னுலே கட்டப்பட்ட நீர்த்தொட்டி பராமரிப்பு இல்லாத காரணத்தால் உபயோகமற்றது என்று தள்ளப்பட்டு இருக்கிறது. அதேபோல் என்னுடைய தொகுதியில் ஊனமலை, சூணும்பேடு போன்ற இடங் களிலும் இப்படிப்பட்ட நிலை இருக்கிறது. மேலும், தமிழ்நாடு பூராவிலும் இப்படிப்பட்ட சூழ்நிலை இருப்பதால், அப்படிப்பட்ட நீர்த்தொட்டிகளை சரியான வகையில் பராமரிக்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. என். இராசாங்கம்: தலைவரவர்களே, கேள்வி அச்சிறுபாக்கத்திலுள்ள சோத்துப்பாக்கம் அரிசனக் காலனியில் உள்ள நீர்த்தேக்க தொட்டியைப் பற்றியதாகும். பல காலனிகளைப் பற்றிக் கேட்டால் அதற்கான விடை இருக்காது. **தனிக் கேள்வி** போட்டால் விடை கொடுக்கலாம்.

1975 நவம்பர் 4]

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, சோத்துப் பாக்கம் கிராமத்தில் ஏற்கனவே கட்டப்பட்ட தரைமட்ட, நீர்த் தேக்கத் தொட்டி வீணாகப் போனதற்கு என்ன காரணம்?

மாண்புமிகு திரு. என். இராசாங்கம் : தண்ணீர் இல்லை, அவ்வளவு தான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு :ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. கவன ஈர்ப்பு

குமரி மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள கடலரிப்பு குறித்து

THIRU N. DENNIS : Sir, I call the attention of the Hon Minister for Public Works to a matter of urgent public importance, namely, the sea erosion during June 1975 at Enayam, Puthenthurai, Ramanthurai, etc., in Kanyakumari district resulting in loss of properties.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, 24—5—1975 ஆம் நாளன்று கன்னியாகுமரி மாவட்டக் கடற்கரையோரங்களில் கடல் கொந்தளிப்பும், அலை ஏற்றமும் ஏற்பட்டதன் காரணமாக, பெருமளவில் கடலரிப்பு ஏற்பட்டு, கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள பின்வரும் 3 கிராமங்களில் 13 குடிசைகளுக்குச் சேதம் விளைந்தது :

(1) முள்ளூர் துறை	6 குடிசைகள்
(2) இராமன்துறை	4 குடிசைகள்
(3) இணையம்	3 குடிசைகள்
மொத்தம்	13 குடிசைகள்

தோராயமாக மொத்தம் ரூ. 5,000 அளவிற்குச் சேதம் ஏற்பட்டது. ஆனால் அங்கு உயிர் இழப்பு ஏதும் ஏற்படவில்லை.

1974 ஆம் ஆண்டு பருவமழையின்போது, அதாவது 13—9—1974 ஆம் நாளன்று அங்கு கொந்தளிப்பும், அலை ஏற்றமும் ஏற்பட்ட காரணத்தால் பெருமளவில் கடலரிப்பு ஏற்பட்டு, கீழ்க்காணும் 6 கிராமங்களில் 191 குடிசைகளுக்குச் சேதம் ஏற்பட்டது :—

(1) கோதில்பாடு	54 குடிசைகள்
(2) கொளச்சல்	63 குடிசைகள்
(3) மேல்மிடாலம்	26 குடிசைகள்
(4) இணையம்	32 குடிசைகள்
(5) இராமன்துறை	12 குடிசைகள்
(6) முள்ளூர்துறை	4 குடிசைகள்
மொத்தம்	191 குடிசைகள்

1970-72 ஆம் ஆண்டில் மேற்சொன்ன மூன்று இடங்களில் தாற்காலிகப் பாதுகாப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. அரபிக்கடலோரப் பகுதிகளில் அலைகளின் சீற்றத்தை இவை எதிர்த்து நிற்க முடியவில்லை. கன்னியாகுமரி மாவட்டக் கடற்கரையோரப் பகுதிகளில் கடல் அரிப்புப் பிரச்சினை ஒவ்வோராண்டும் தோன்றும் பிரச்சினையாகும். கடல் அரிப்பைத் தடுப்பதற்கு நிலையான பாதுகாப்புப் பணிகளை மேற்கொள்வதே இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்குரிய ஒரே வழியாகும். இதற்காக, கடல் அரிப்பைத் தடுப்பதற்கு அரபிக்கடலின் தமிழ்நாட்டுப் பகுதி நெடுக 14.5 கி. மீட்டர் தொலைவிற்கு நிரந்தரமான தடுப்புச் சுவர் ஒன்றை ரூ. 351 இலட்சம் செலவில் கட்டுவதற்குரிய திட்டம் ஒன்றைக் கட்டிடத் தலைமைப் பொறியாளர் தயாரித்து அத்திட்டத்திற்கு நிதியுதவி கோரி அது இந்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. இச்செயற்குறிப்பை ஆய்வு செய்கையில், விரிவான ஆய்வின் அடிப்படையில் மதிப்பீடுகளைத் தயாரித்து இத்திட்டத்தின் பொருளாதார வாய்ப்புக் கூறுகளையும் தெரிவிக்கு

1975 நவம்பர் 4] [திரு. ப. உ. சண்முகம்]

மாறு மைய நீர்-மின்சக்தி ஆணைக்குழு இந்த அரசைக் கேட்டுக் கொண்டுள்ளது. விரிவான ஆய்வை நடத்துவதற்கும், கடல் அரிப்பைத் தடுப்பதற்கும் நிரந்தரமான திட்டம் ஒன்றைத் தயாரிப்பதற்காக காற்று விச்சு, அலை ஏற்றம், கடற்கரையோரப் பகுதி இடம் பெயர்தல் ஆகிய விவரங்களைச் சேகரிப்பதற்கும், ரூ. 25,000-க்கு மதிப்பீடு ஒன்று 20—10—1975 அன்று தலைமைப் பொறியாளரிடமிருந்து பெறப்பட்டுள்ளது. அது தனியே பரிசிலனையில் உள்ளது.

திரு. என். டென்னிஸ்: தலைவரவர்களே, ஆண்டுதோறும் கன்னியாகுமரி மாவட்டத்தில் கடற்கரை ஓரத்திலே உள்ள கிராமங்கள் கடல் அரிப்பால் பாதிக்கப்படுகின்றன. பல கிராமப் பகுதிகள், பல ஏழை மீனவர்கள், குடிசைகள், அவர்களுடைய கருவிகள் எல்லாம் கடல் அரிப்பால் பாதிக்கப்பட்டு, அவற்றிற்கு இரையாகிக் கொண்டு இருக்கின்றன. மத்திய அரசு இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவிட்டால், மாநில அரசானது அந்தத் திட்டத்தை நிறைவேற்றி, அங்கேயுள்ள மக்கள் கடல் அரிப்பால் ஆண்டுதோறும் பாதிக்கப்படுவதைத் தடுத்து நிறுத்த நடவடிக்கையை மேற்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் நடைபெறுகிற அந்தக் கொடுமையை நானே நேரில் பார்த்தேன். மத்திய அரசாங்கத்தின் உதவி கோரி ரூ. 351 லட்சத்திற்கு திட்டத்தை தயாரித்து அனுப்பினோம். மத்திய அரசாங்கம் அதை மேற்கொண்டு, முழுமையாகப் பரிசீலித்து, டிடெயில்ட் இன்வெஸ்டிகேஷன் செய்து அனுப்ப வேண்டுமென்று கேட்டிருக்கிறது. அதைச் செய்ய இருக்கிறோம்.

ஏன் மாநில அரசே செய்யக் கூடாதா என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. டென்னிஸ் கேட்டார்கள். நிதிப் பற்றுக்குறை காரணமே தவிர மனம் இல்லாமல் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்று காலையில் கூட ஒரு புத்தகத்தைப் படித்துக் கொண்டு இருந்தேன். மத்திய அரசாங்கம் கேரள அரசாங்கத்திற்கு 5.6 கோடி ரூபாய் மானியம் கொடுத்து இருப்பதாக அந்தப் புத்தகத்தில் படித்தேன். கேரளா அரசாங்கத்திற்கு இது

போன்ற பணிகளைச் செய்ய சமீபத்தில் மானியம் கொடுத்த மத்திய அரசு, தமிழ் நாடு அரசாங்கத்திற்கும் கொடுக்க வேண்டு மென்று இரண்டு, மூன்று மாதத்திற்கு முன்னால் நடைபெற்ற மாநாட்டிலேகூட வற்புறுத்திக் கூறியிருக்கிறேன். அதைத் தொடர்ந்து அரசு வற்புறுத்தும். நிதிநிலை பெற்றதற்குப் பிறகு அந்த வேலைகளைக் கவனிக்க முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மத்திய அரசாங்கம் உதவிக்கு வரவேண்டும்; மாண்புமிகு உறுப்பினர் கேட்ட கேள்வியிலிருந்தும், நான் அளித்த பதிலில் இருந்தும், மத்திய அரசாங்கம் உதவி செய்யும் என்ற நம்பிக்கை இருக்கிறது.

(3) அரசினர் சட்ட முன்வடிவுகள்

(அ) தமிழ் நாடு 1975-ம் ஆண்டு, இந்து சமய அறக்கட்டளைகள் (திருத்த) சட்ட முன்வடிவு

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவரவர்களே, தமிழ் நாடு 1975-ம் ஆண்டு, இந்து சமய அறக் கட்டளைகள் (திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவரவர்களே, இச் சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

(ஆ) தமிழ் நாடு 1975-ம் ஆண்டு சம்பளங்கள் வழங்கல் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர் களே, தமிழ் நாடு 1975-ம் ஆண்டு சம்பளங்கள் வழங்கல் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறை வேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

1975 நவம்பர் 4]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இச் சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

(4) 1975-76 ஆம் ஆண்டிற்கான செலவு குறித்த முதல் துணை நிதி அறிக்கை மீது விவாதம்

* **திரு. ஆலடி அருணா:** பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் இந்த மன்றத்தில் கோரப்பட்டிருக்கின்ற துணை மானியக் கோரிக்கை மீது என்னுடைய கருத்துக்களை இந்த மன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு வர ஆசைப்படுகிறேன்.

கடந்த 3 தினங்களாக ஒரு முக்கியமான பிரச்னை மீது பல்வேறு பத்திரிகைகள் பல கருத்துக்களை மக்கள் மத்தியில் பரப்பிக்கொண்டு இருக்கின்றன. 'மத்திய சர்க்கார் இந்த மாநில சர்க்காருக்கு ஒழுங்காக ஒத்துழைப்புக் கொடுக்கவில்லை, வறட்சிக்குப் போதுமான பணம் கொடுக்கவில்லை, மதுவிலக்கால் ஏற்பட்ட இழப்புக்கு ஈடு கொடுக்கவில்லை, எனவே, இந்த மாநில அரசின் பொருளாதாரம் மிகவும் குன்றிக்கிடக்கிறது. இந்த குன்றிக்கிடக்கிற பரிதாப நிலைக்கு மத்திய சர்க்கார்தான் காரணம்' என்ற அடிப்படையில் பத்திரிகைகளில் செய்தி கொடுத்து இருக்கிறார்கள்.

மத்திய சர்க்காரைப் பற்றி அரசாங்கம் தன்னுடைய கருத்தை மாறுபட்ட முறையில் அல்லது எதிர்க்கின்ற அடிப் படையில் சொல்வதை அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தவறாகக் கருதவில்லை. ஆனால், இந்த நேரத்தில் நான் சொல் வதற்கு ஆசைப்படுவது எல்லாம், மத்திய சர்க்கார் மீது குறை சொல்லும் அரசாங்கம் இந்தக் குறை ஏற்படுவதற்கான நியாய மான காரணங்களை, மக்கள் ஆதரிக்கும் வகையில் சொல்வார் களானால், அதைப் பாராட்டக் கடமைப்பட்டு இருக்கிறோம்.

இன்றையதினம் மத்திய சர்க்கார் வறட்சிக்குப் போதுமான பணம் தரவில்லை என்ற குற்றச்சாட்டை நிதிநிலை அறிக்கையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பகிரங்கமாகச் சொல்வதற்கு

தைரியம் இல்லாவிட்டாலும், அதைக் கோடிட்டுக் காட்டும் வகையில் சில வார்த்தைகளில் அதிலே குறிப்பிட்டு இருக்கிறார்கள். மத்திய சர்க்கார் 7½ கோடி தந்து இருக்கிறது, அதற்கு மேல் தரவில்லை, முழுச் சுமையையும் நாங்களே ஏற்றுத் தீரவேண்டிய சங்கடம் ஏற்பட்டது என்ற கருத்தில் குறிப்பிட்டு இருக்கிறார்கள். மத்திய சர்க்காரிடமிருந்து 7½ கோடி பெற்று விட்டு, மேலும் நிதி வேண்டும் என்று மாநில சர்க்கார் கேட்ட நேரத்தில் மத்திய சர்க்கார் நிதி அமைச்சர் சுப்பிரமணியம் அவர்கள், உங்கள் வேலையைப் பார்த்து விட்டு, உங்களுடைய பணிகளைப் பரிசீலித்து விட்டு, உங்களுடைய கணக்குகளைப் பார்த்து விட்டு, உதவி செய்வோம் என்று சொன்னவுடனே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு ஆத்திரம் வந்து விட்டது, ஆவேசம் வந்து விட்டது, என்னிடத்தில் கணக்குக் கேட்பதா, என்னிடத்தில் கணக்குக் கேட்பதற்கு நீ யார், அப்படியானால், நீங்கள் மத்தியில் நிதி அமைச்சராக இருக்கின்ற வரையில் தமிழ் நாடு அரசாங்கம் வறட்சிப் பணிக்காக கையேந்தி பணம் கேட்காது என்று இந்த மன்றத்தில் சூளுரைத்தார்கள்.

நாமும் உடனே சொன்னோம், ஒரு அவசரத் தீர்மானத்தை இந்த மன்றத்தில் கொண்டு வந்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே. சந்தியில் எழுப்பப்பட்ட சங்க நாதத்திற்கு சந்தியிலேயே பதில் சொல்லுங்கள், சட்டமன்றத்திற்குக் கொண்டு வாராதீர்கள், சர்க்காரோடு பிணைக்காதீர்கள், துயர் துடைப்புப் பணி பாதிக்கும், வறட்சிப் பணி பாதிக்கும் என்று சொன்னோம். அப்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள், மத்திய சர்க்காரின் உதவி இல்லாமலேயே, மத்திய சர்க்காரின் துணை இல்லாமலேயே. மத்திய சர்க்காரைக் கெஞ்சிக் கேட்காமலேயே, எங்களுடைய நிதி ஆதாரத்தை வைத்துக் கொண்டு, நாங்கள் பஞ்சப் பணிகளை, துயர் துடைப்புப் பணிகளை தீவிரப் படுத்துவோம், வெற்றிபெறுவோம் என்று இந்த மன்றத்தில் சூளுரைத்தார்கள்.

(முற்பகல் 10.00)

எந்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், எந்த திரு. சுப்பிரமணியம் அவர்கள் மத்திய அரசாங்கத்தில் நிதியமைச்சராக நீடிக்கின்ற வரையில் கையேந்தி பணம் கேட்க

மாட்டேன் என்று சூளுரைத்தார்களோ, வேகமாகச் சொன்னார்களோ, இதே மாமன்றத்தில் எடுத்துரைத்தார்களோ, அதே முதலமைச்சர் அவர்கள் அதே நிதியமைச்சர் அவர்களிடத்தில் அண்மையில் டில்லிக்குச் சென்று, "சரணம் ஐயப்பா, மீண்டும் எனக்குப் பணம் தா" என்று கேட்டிருக்கின்றார்கள். அப்படி அவர் பணம் கேட்டதை நான் தவறு என்று சொல்லவில்லை.

ஆனால், அந்த எண்ணத்தை, அந்த நிலையை அவர் முதலிலேயே எடுத்துக் கொண்டிருந்தால், வறட்சிக்கான நிதியை மாநில அரசு கஜானாவிலிருந்து எடுத்துச் செலவழிக்க வேண்டியிருந்திருக்காது. இந்த மாமன்றத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கின்றார்கள், வறட்சிப் பணிக்கு கோடிக் கணக்கான ரூபாயைக் கொட்டிக் கொடுத்திருக்கிறோம் அல்லவா என்று சொல்லி, சுமார் 59 கோடி ரூபாய் வறட்சிப் பணிகளுக்காகச் செலவு செய்திருப்பதாக இந்த மாமன்றத்திற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தகவல் தந்திருக்கிறார்கள். இது எவ்வளவு தவறான தகவல் என்பதையும், மக்களைத் திசைத்திருப்ப திட்டமிட்டு செய்யும் பிரசாரம் என்பதையும் இந்த மன்றத்துக்கு எடுத்துச் சொல்ல விரும்புகின்றேன்.

ஐம்பத்தொன்பது கோடி ரூபாயும் வறட்சிப் பணிக்காக செலவு செய்யப்படவில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே இந்த அறிக்கையில் சொல்லியிருக்கிறார்கள். சுமார் 30 கோடி ரூபாய் பொதுப்பணித்துறையில், வழக்கமான நீர்ப்பாசனப் பணிகளுக்கு, பாதை அமைப்புக்கு, மராமத்து வேலைகளுக்குச் செலவு செய்திருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். இந்த 30 கோடி ரூபாயையும் சேர்த்து 59 கோடி ரூபாய் செலவு செய்திருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள்.

உண்மையில் இந்த அரசாங்கம் வறட்சிப் பணிகளுக்காக எவ்வளவு செலவு செய்திருக்கிறது என்றால், 1974-75—8.8 கோடி ரூபாய்; 1975-76—15.3 கோடி ரூபாய்.

ஆக 24.1 கோடி ரூபாய் செலவு செய்திருக்கிறார்கள். இந்த 24.1 கோடி ரூபாயிலும் 7.5 கோடி ரூபாய் மத்திய அரசாங்கத்தின் பணம். இந்த 24.1 கோடி ரூபாயில் மக்களிடமிருந்து நிதியாகப்

பெற்றது சுமார் 3 கோடி ரூபாய். ஆக 10.5 கோடி ரூபாய் மத்திய அரசாங்கத்திடமிருந்தும் மக்களிடமிருந்தும் பெற்றது. இதை நீக்கிப் பார்த்தால் இந்த அரசாங்கம் செலவிட்டிருப்பதெல்லாம் 13.6 கோடி ரூபாய்தான். ஆனால் பத்திரிக்கையில் செய்யும் விளம்பரத்தைப் பாருங்கள்! பொது மேடைகளில் செய்யும் பிரசாரத்தைப் பாருங்கள்! 60 கோடி ரூபாய் அளவுக்கு வறட்சி நிவாரணத்துக்காக செலவு செய்துவிட்டோம், பல திட்டங்களை நிறைவேற்றியிருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள்.

இந்த அரசாங்கம் ஒரு தகவலைத் தந்திருக்கின்றது. 60,000 வேலைகள் எடுத்துக் கொள்ளப்பட்டன. அவற்றில் 57,600 வேலைகளை செய்து முடித்துவிட்டோம் என்று தகவல் தந்திருக்கிறார்கள். எவ்வளவு பெரிய தவறான தகவல் பாருங்கள்! இது உண்மைதானா? எடுத்துக்கொள்ளப்பட்ட 60,000 வேலைகளில் 57,600 வேலைகள் முடிக்கப்பட்டிருக்கின்றனவா? நான் அறைகூவல் விட்டு கேட்கின்றேன். ஒரு கமிட்டி போடுங்கள். நீங்கள் பாதி அளவுகூட வேலையையும் முடிக்கவில்லை என்று பகிரங்கமாகக் குற்றம் சாட்ட விரும்புகிறேன். ஆதாரம் இல்லாமல் சொல்லவில்லை. ஆவேசத்தின் அடிப்படையில் சொல்லவில்லை. அரசியல் அழுக்குடன் சொல்லவில்லை. இந்த மாமன்றத்துக்குச் சொல்லிக் கொள்ளுவேன், 1974 ஆம் ஆண்டு வேலையையே இந்த அரசாங்கம் முடிக்கவில்லை. 1974-75-ல் துயர் துடைப்புப் பணிக்காக எடுக்கப்பட்ட வேலையைக்கூட இந்த அரசாங்கம் முடிக்கவில்லை.

உதாரணத்துக்காக இந்த மாமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டுவர ஆசைப்படுகின்றேன். நாங்குனேரி ஊராட்சி ஒன்றியத்திலிருந்து என்னிடம் ஒரு குறிப்பு இருக்கிறது. அதிகார பூர்வமான தகவல். அதில் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

1975 நவம்பர் 4] [திரு. ஆலடி அருணா]

நம்பர் ஃஆப் ஓர்க்ஸ் டேக்கன் அப்—

1974-75	47
முடித்தது	5

மைனர் ஓர்க்ஸ்—

நம்பர் ஆப் ஓர்க்ஸ் டேக்கன் அப்	30
முடித்தது	1

ரோட் ஓர்க்ஸ்—

நம்பர் ஆப் ஓர்க்ஸ் டேக்கன் அப்	12
முடித்தது	3

ஆக, 1974-75-லே 89 வேலைகளை எடுத்து, 9 வேலைகளை மட்டும் தான் ஒன்றியத்திலே முடித்திருக்கிறார்கள். இதில் வேடிக்கை, விபரீதம் என்னவென்றால், ஒதுக்கப்பட்ட பணம் முழுவதையும் செலவு செய்துவிட்டிருக்கிறார்கள். 1974-75-லே இந்த ஒன்றியம் ரூ. 1,18,793 ஒதுக்கியிருந்தது. இந்த ரூ. 1,18,793 ஐயும் செலவு செய்துவிட்டது. ஒதுக்கப்பட்ட பணம் முழுவதையும் செலவிட்டு, 89 வேலைகளில் 9 வேலைகளைத்தான் முடித்திருக்கின்றார்கள். 9 வேலைகளுக்கு இந்தப் பணம் முழுவதையும் செலவு செய்திருக்கிறார்கள். திட்டம் போட்டு செலவு செய்தார்களா, அல்லது சந்திப் பிள்ளையார் கோவில் சுண்டலைப் பங்கு போடுவது போல் விரயம் செய்தார்களா? என்று நம்மால் புரிந்து கொள்ள முடியவில்லை.

மற்றும் நாங்குனேரி ஊராட்சி ஒன்றியம் இந்த ஆண்டு என்ன வேலை செய்தது என்பதையும் இந்த மன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

1975-76 :	டீப்பனிங் ஆப் வெல்ஸ்	..	78 வேலை
	நம்பர் டேக்கன் அப்	..	28 வேலை
	முடித்தது	..	16 வேலை
	பெண்டிங்	..	42 வேலை

மைனர் இர்ரிகேஷன் ஓர்க்ஸ் முடித்தது—24
பெண்டிங்—29

ரோட் ஓர்க்ஸ் இன்னும் 9 வேலைகள் இருக்கின்றன.

இப்படிப்பட்ட நிலைமை நாங்குனேரி ஊராட்சி ஒன்றியத்தில் மட்டுமல்ல. நான் இந்த மாமன்றத்துக்குச் சொல்லிக் கொள்ளுவேன், மதுரை மாவட்டம் டி. கல்லுப்பட்டி ஊராட்சி ஒன்றியத்திலிருந்து கிடைத்திருக்கின்ற தகவல்படி:

1974-75 : மைனர் இர்ரிகேஷன் ஒர்க்ஸ்—

நம்பர் டேக்கன் அப் 94

முடித்தது 7

87 வேலைகள் இன்னும் முடிக்கவில்லை.

சிங்கிங் ஆப் நியூ வெல்ஸ்—16 வேலைகளை எடுத்தார்கள், எதையும் இன்னும் முடிக்கவில்லை.

டீப்பனிங் ஆப் ஓல்டு வெல்ஸ்—107 வேலைகளை எடுத்தார்கள். முடித்த வேலைகள் எதுவுமில்லை. ரோட் ஒர்க்ஸ் 11 எடுத்தார்கள், எதையும் முடிக்கவில்லை. இது 1974-75 ஆம் ஆண்டுக்கான விவரம்.

1975-76 ஆம் ஆண்டை எடுத்துக் கொண்டால் இதைவிடக் கேவலமாக இருக்கும். அதுமட்டுமல்ல, பணம் ஒழுங்காக திட்டமிடப்பட்டு செலவு செய்யப்படவில்லை.

விருதுநகர் ரெவின்யூ டிவிஷனைப் பொறுத்த மட்டில், கடந்த ஆண்டு, அதாவது 1974-75-ல் நான்கு ஊராட்சி ஒன்றியங்கள் சேர்ந்து 8 வேலைகளைத்தான் எடுத்திருக்கிறார்கள். கடந்த ஜூலை 15 ஆம் தேதி அவர்கள் கொடுத்த தகவல்படி, இதில் பாதி வேலையைக்கூட அவர்கள் முடிக்கவில்லை.

இராமநாதபுரம், மண்டபம் ஊராட்சி ஒன்றியத்திலிருந்து கிடைத்திருக்கின்ற ஒரு தகவலைக் குறிப்பிட விரும்புகிறேன். நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு துணை மானியக் கோரிக்கையைத் தந்திருக்கிறார்கள். 1968-69-லே அதிகப் பணம் செலவழித்திருக்கிறார்கள், அதற்கு ஒப்புதல் வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். இது தவிர்க்க இயலாதது. ஒரு திட்டம் போடும்போது, அதிகச் செலவு செய்வது தவிர்க்க முடியாதது தான். 5 கோடி ரூபாய்க்குத் திட்டம் போட்டால் 6 கோடி ரூபாய் செலவாகலாம்.

1975 நவம்பர் 4] [திரு. ஆலடி அருணா]

ஆனால் மண்டபம் ஊராட்சி ஒன்றியத்தில் ஏறத்தாழ நூற்றுக் கணக்கான கிணறுகள் ஊரணிகள் வேலைகளில் எஸ்டிமேட்டை விட ஒரு காசு கூட அதிகம் செலவாகவில்லை. மதிப்பீடு செய்த அளவுக்காவது செலவு செய்தார்களா என்றால், அதுவுமில்லை. ஒன்று, திட்டம் தீட்டியதில் தவறு என்று ஒப்புக்கொள்ள வேண்டும் அல்லது வேலையை முடிக்கவில்லை என்று ஏற்றுக் கொள்ள வேண்டும். மண்டபம் யூனியனில் தந்த தகவல் என்னிடம் அப்படியே இருக்கிறது. ஒரு வேலைக்குக் கூட மதிப் பீட்டிற்கு மேல் ஒரு காசு செலவழிக்கவில்லை. பாதி வேலைக்கு பாதிக்கும் குறைவாகச் செலவு செய்திருக்கிறார்கள். எந்த அளவுக்குப் பஞ்ச நிவாரணப் பணிகளை பொறுப்பற்ற முறையில் செய்திருக்கிறார்கள் என்பதற்காகச் சொல்லுகின்றேன்.

கிழக்கு இராமநாதபுரம் பகுதி பஞ்சத்தால் பாதிக்கப்பட்ட பகுதி. சுமார் 700 போர் வெல்கள் போடப்பட்டன. இவற்றில் 200 கிணறுகளில் தண்ணீர் இல்லை. சில இடங்களில் உப்புத் தண்ணீர். இந்த 200 கிராமங்களுக்கு உடனடியாக குடிநீருக்கு ஏற்பாடு செய்திருக்க வேண்டும். அதற்குத்தான் பஞ்ச நிவாரணப் பணிகள். 59 கோடி ரூபாய் செலவிட்டிருக்கிறோம் என்று சொல்லுகின்ற நேரத்தில், பஞ்சப்பகுதியில், கிராமங் களுக்கு குடிக்கத் தண்ணீர் கொடுக்கவில்லை. குடிநீர் பிரச்னைக்குக் கூடப் பரிகாரம் செய்யவில்லை இந்த அரசாங்கம் என்று குற்றஞ் சாட்ட விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல. தனியார் விவசாயக் கிணறுகளை ஆழப் படுத்துவதற்காகப் பணம் தரப்படுவதாகச் சொல்லப்படுகிறது. அந்தப் பணம் பொதுமக்களுக்கு, விவசாயிகளுக்குக் கிடைத்ததா என்றால்—அதைப் பார்க்கின்றபோது திகில் அடைகின்றோம்— பத்தில் ஒரு பகுதியினருக்குக் கூட அந்தப் பணங்கள் கிடைப்ப தில்லை.

தக்காவிக் கடன் கேட்டு இராமநாதபுரம் மாவட்டத்தில் மனுப் போட்டவர்கள் 18,806 பேர். அதற்கு அவர்கள் தகுதியுள்ள வர்கள். ஆனால் கருணை மிக்க இந்த அரசாங்கம் 2,454 பேருக்குத் தான் கொடுத்தது.

திருச்சி மாவட்டத்தில் 21,631 பேர் கேட்டார்கள். 2,001 பேருக்குத்தான் அரசாங்கம் அந்தக் கடனைக் கொடுத்தது.

புதுக்கோட்டை மாவட்டத்தில் 9,550 பேர் கேட்டார்கள். 1,409 பேருக்குத்தான் அரசாங்கம் கடனைக் கொடுத்தது.

அதேபோன்று திருநெல்வேலி மாவட்டத்தில் 13,000 பேர் கடன் கேட்டதில் 1,500 பேருக்குத்தான் அரசாங்கம் கடனை வழங்கியது.

செங்கற்பட்டு மாவட்டத்தில் 12,249 பேர் கேட்டார்கள். கருணைமிக்க இந்த அரசு 967 பேர்களுக்குக் கொடுத்திருக்கிறது.

ஆக, விவசாயிகளுக்குக்கூட வறட்சி நிவாரண உதவிகளின் கீழ் போதுமான அளவுக்கு நிதி உதவி செய்யவில்லை.

அதுமட்டுமல்ல. மத்திய அரசோடு இந்த அரசுக்கு ஏற்பட்ட மோதுதலால், மத்திய அரசிடம் கையேந்தி பணம் வாங்க மாட்டேன் என்று சொன்னதால், "எங்களிடத்திலே நிதி ஆதாரம் இருக்கிறது; அள்ளி அள்ளிக் கொடுக்கிற மக்கள் இங்கே இருக்கிறார்கள்; மனம் உவந்து கொடுக்கிறார்கள்; இதயசுத்தியோடு கொடுக்கிறார்கள்" என்று கூறியதோடு நிற்காமல் மக்களிடம் பணம் வசூல் செய்ததிலே எவ்வளவு கெடுபிடி செய்தார்கள் தெரியுமா? தாங்கொணாத் துயரத்தைக் கொடுத்தார்கள். அதிகாரம் தவறான முறைகளிலே பயன்படுத்தப்பட்டது.

மாவட்ட ஆட்சித் தலைவர்கள் எல்லாம் ஒவ்வொரு பஸ் முதலாளிக்கும், ஒவ்வொரு கடைக்காரருக்கும், ஒவ்வொரு வியாபாரிக்கும், ஒவ்வொரு தொழிலதிபருக்கும் பகிரங்கமாக காகிதம் எழுதினார்கள். அந்த அளவுக்கு அதிகாரம் தவறாகப் பயன்படுத்தப்பட்டது. ஆனால், வெளியே என்ன சொல்லப் படுகிறது? பகிரங்கமாகச் சொல்லப்படுகிறது. மனம் உவந்து கொடுத்தார்கள்; இசைந்து கொடுத்தார்கள்; இதயசுத்தியோடு கொடுத்தார்கள் என்று. எந்தவிதமான நிர்ப்பந்தமும் இல்லை என்று சொன்னார்கள். எந்தவிதமான கட்டாயமும் இல்லை என்று சொன்னார்கள். எந்தவிதமான கெடுபிடியும் இல்லை என்று சொன்னார்கள். ஆனால் அரசாங்கம் கெடுபிடி செய்து, பகிரங்க மாக காகிதம் எழுதி, ஒவ்வொருவரும் இவ்வளவு கொடுக்க வேண்டுமென்று கட்டாயப்படுத்தி, நிர்ப்பந்தப்படுத்தி, ஒருமுறை

1975 நவம்பர் 4] [திரு. ஆலடி அருணா]

நீங்கள் கொடுத்திருந்தாலும் இப்போது இவ்வளவு தரவேண்டும் என்று நிர்ப்பந்தப்படுத்தி கேட்டிருக்கிறார்கள். இதை நான் ஆதாரத்தோடு நிரூபிக்க முடியும்.

திருச்சி மாவட்ட கலெக்டர் ஒவ்வொரு கடைக்காரருக்கும் கடிதம் எழுதியிருக்கிறார். அந்தக் கடிதத்தின் நகலை சபாநாயகர் அவர்கள் மூலமாக சபைக்குக் கொடுத்துவிடுகிறேன். இதன் மூலம் எந்த அளவுக்கு வறட்சி நிவாரணப் பணிகளின் பெயரால் கெடுபிடி நடந்திருக்கிறது என்பதை இந்த மன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

இந்த நிதிநிலை துணை மானியத்தில் பல நிதி ஆதாரங்களுக்கு உதவி செய்து, நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். கைம்பெண்களுக்கு உதவி, ஊனமுற்றோருக்கு உதவி, அனாதைச் சிறுவர்களுக்கு உதவி என்று பல்வேறு உதவிகளுக்கு இந்த மானியத்தில் நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. இவைகளை அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆதரிக்கிறது, வரவேற்கிறது. இவைகள் நல்ல திட்டங்கள். அவர்களுக்கு வாழ்வளிக்கும் நல்ல திட்டங்கள். இன்னும் சொல்லப்போனால் இப்படிப்பட்ட திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிற நிதி போதாது, அவைகளுக்காக ஒதுக்கப்பட்டிருக்கிற பணம் மிக மிகக் குறைவு. 6 லட்சம், 7 லட்சம், 4 லட்சம் என்றுதான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. 40 வயதிற்கு மேற்பட்ட பெண்களில்—தமிழ் நாட்டில் செம்பாதிக்கு மேல் கைம்பெண்கள் இருக்கிறார்கள். அவர்களுடைய சமூக புனரமைப்புக்கு வழிவகை தேடுகிற இந்த அரசு 7 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்திருப்பதை அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வரவேற்பது மட்டுமல்ல; இதைவிட ஒதுக்கீடு அதிகமாகச் செய்திருக்க வேண்டும் என்ற கருத்தையும் வலியுறுத்துகிறது.

கைம்பெண்களுக்கு ஆதரவளிக்கும் திட்டமானாலும் சரி, கைரிட்சா ஒழிப்புத் திட்டமானாலும் சரி, பிச்சைக்காரர்களுக்கு மறுவாழ்வளிப்பதாக இருந்தாலும் சரி, ஊனமுற்றோர்க்கு உறுதுணை அளிப்பதாக இருந்தாலும் சரி—இவைகளுக்காக ஒதுக்கப்பட்டிருக்கிற பணம் போதாது. இன்னும் அதிகமாக ஒதுக்கியிருக்கலாம். இந்த துணை மானியக் கோரிக்கையில் இவைகளுக்

காக ஒதுக்கப்படுகிற பணம் சில லட்சங்கள்தான். இந்த சில லட்சங்களுக்கு அளிக்கப்படுற விளம்பரங்கள், அரசியல் ஜால வித்தைகள் 'அப்பப்பா!' சொல்லி முடிவதில்லை. அந்த அளவுக்கு விளம்பரம் செய்கிறார்கள்.

ஆயிரம் தையல் மெஷின் கொடுக்கப்பட்டால் அரசாங்கம் லட்சம் ரூபாய்க்கு விளம்பரம் செய்கிறது. பத்திரிகைகளில் பக்கம் பக்கமாக அதுபற்றி விளம்பரம் வருகிறது. சினிமாப் படம் தயாரித்து திரையிடுகிறார்கள். ஒவ்வொரு தியேட்டர் களிலும் அது திரைப்படமாக ஓடுகிறது. ஒவ்வொரு சிறிய காரியத்திற்கும் அரசாங்கம் செய்கிற விளம்பரம் அவ்வளவு அதிகமாக இருக்கிறது.

அரசாங்கம் ஒரு நல்ல காரியம் செய்கிறது, அதை ஒரு விழாவாக எடுப்பதில் தவறில்லை. விழாவுக்கு ஏற்பாடு செய்தால் பத்திரிகை நிருபர்கள் எல்லாம் அங்கே வருகிறார்கள்; பத்திரிகையில் செய்தி போடுகிறார்கள். ஆனால் நிலைமை எப்படி இருக்கிறது? நாளை விழா நடைபெறுகிறது என்றால் இன்றைக்கு அதைப்பற்றி பக்கம் பக்கமாக விளம்பரம் கொடுக்கிறார்கள். கலைஞர் சிரிப்பது போலவும் கைம்பெண் அழுவது போலவும் விளம்பரம் செய்கிறார்கள். அதற்காகப் பல லட்சம் ரூபாய் செலவிடுகிறார்கள். அதனால் அவர்களுக்கு என்ன பயன்! இந்த 7 லட்சம் ரூபாய்க்கு இந்த அளவுக்கு விளம்பரமா? இதை அரசு எண்ணிப் பார்க்கவேண்டும்.

அரசுக்கு நிதிநிலைப் பற்றாக்குறை ஏற்படுகிறது என்றால் அதற்கு என்ன காரணம்? இப்படிப்பட்ட காரியங்களிலே அரசு நடந்துகொள்கிற முறை, அரசாங்கம் கடைப்பிடிக்கிற போக்கு, அரசாங்கத்தின் குறுகிய மனப்பான்மை இவைகள் தான். இந்த அரசின் நிதிநிலைப் பற்றாக்குறைக்குக் காரணம், இந்த அரசின் கஜானா காலியாக இருப்பதற்குக் காரணம், அரசு கடைப்பிடிக்கிற பிற்போக்குக் கொள்கையும், மத்தியரசுடன் தேவையற்ற மோதுதலும்தான் என்று கூறி, அமர்கிறேன். வணக்கம்.

1975 நவம்பர் 4]

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சரவர்கள் இந்த மன்றத்திலே வைத்திருக்கிற துணை மதிப்பீட்டையொட்டி சில கருத்துக்களை எடுத்துக்கூற விரும்புகிறேன்.

இன்றையதினம் ஏறத்தாழ 46 கோடி ரூபாய் அளவுக்கு துணை மதிப்பீடு இங்கே சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. குறிப்பாக இன்றையதினம் அரசாங்கத்தை எடுத்துக்கொண்டால், பல்வேறு திட்டங்களை அமைத்து அதற்கு அதிகப்படியான விளம்பரங்களைச் செய்துகொண்டிருக்கிற ஒரு சூழ்நிலையைப் பார்க்கிறோம். மத்திய அரசாங்கத்தை எடுத்துக் கொண்டாலும் சரி, மாநில அரசாங்கத்தை எடுத்துக் கொண்டாலும் சரி, ஒவ்வொரு திட்டத்திற்கும் அதிகப்படியான விளம்பரங்களைச் செய்து, எந்த அளவு இந்தத் திட்டங்களினால் எல்லாம் நாட்டு மக்களுக்குப் பயன் ஏற்பட வேண்டுமென்று அந்த விளம்பரத்தில் கூறுகிறார்களோ அந்த அளவு பயன் ஏற்படவில்லை என்ற குற்றச்சாட்டைக் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

ஏற்கெனவே மத்திய அரசாங்கம் 20 அம்சத் திட்டம் என்று சொல்லி விளம்பரம் செய்து வருகிறது. அந்த 20 அம்சத் திட்டத்தை இந்த அரசு அநேகமாக நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது என்று கூறி, அதை எதிர்த்துக் கொண்டிருக்கிறது. ஆனால் மத்திய அரசுத் திட்டங்களானாலும் சரி, மாநில அரசுத் திட்டங்களானாலும் சரி எந்த அளவுக்கு இந்த நாட்டில் இருக்கிற ஏழை எளிய மக்களுக்குப் பயன் அளித்திருக்கிறது என்று பார்த்தால் நிச்சயமாக பயனளிக்கவில்லை என்று நான் குற்றஞ்சாட்டுகிறேன்.

இன்றையதினம் இவ்வளவு திட்டங்களைப் போட்டிருந்தாலும், விலைவாசி எந்த அளவுக்கு ஏறி இருக்கிறது என்று பார்த்தால், ஏழை எளிய மக்கள் அன்றாடம் உபயோகிக்கும் அத்தியாவசியப் பண்டங்களை வாங்கக்கூடிய சூழ்நிலையில் இல்லை என்ற குற்றச்சாட்டைக் கூற விரும்புகிறேன்.

அதற்கு உதாரணமாக ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். மிளகாய் கிலோ 20 ரூபாய்க்கு இன்றைக்கு விற்கிறது என்றால் சாதாரண மக்கள் எந்த அளவு பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்

என்பதை நாம் புரிந்துகொள்ளலாம். அதைப்போல ஒவ்வொரு அத்தியாவசியப் பண்டமும் விலை ஏறியிருக்கிறது; மேலும் ஏறிக் கொண்டே போகிறது.

அதுமட்டுமல்ல. தொழில் வாய்ப்பில்லாமல் இளைஞர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். படித்த இளைஞர்களும் பாதிக்கப் பட்டிருக்கிறார்கள்; படிக்காத இளைஞர்களும் பாதிக்கப்பட்டிருக் கிறார்கள். போடுகின்ற திட்டங்களினால் அவர்களுக்கு எந்த விதமான பயனும் கிடைக்கவில்லை என்று நான் இந்த அரசாங்கத்தின்மீது குற்றஞ்சாட்டுகிறேன்.

படித்த இளைஞர்கள் லட்சக்கணக்கில் வேலை தேடித்தரும் நிறுவனத்தில் வேலை தேடி, தங்கள் பெயர்களைப் பதிவு செய்திருக் கிறார்கள். அவர்களுக்கு வேலைவாய்ப்புக் கிடைக்க வழியில்லை. இனிமேல் வேலைவாய்ப்புக் கிடைக்க வழியில்லை என்ற நிராசையால் அவர்கள் மனம் தளர்ந்திருப்பதை நாம் பார்க்கிறோம். அவர்களுக்கு வேலை தேடித்தரும் நிறுவனத்தால் வேலை தேடித் தர முடியவில்லை என்ற குற்றச்சாட்டை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். மொத்தத்தில் அரசாங்கம் போடும் திட்டங் களினால் இந்த நாட்டிலே இருக்கிற ஏழை எளிய மக்களுக்கு எந்தவிதமான பயனும் கிடைக்கவில்லை என்று குற்றஞ்சாட்டு கிறேன்.

அடுத்தபடியாக, தொழிலாளர் நலன்களுக்காக பல்வேறு திட்டங்களை மத்திய அரசும், மாநில அரசும் நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றன என்று கூறுகிறார்கள். அண்மையில் போடப் பட்ட போனஸ் சட்டத்தினால் எந்த அளவு மத்திய அரசு தொழிலாளர்களுக்குப் பாதகம் செய்திருக்கிறது என்பது நமக்குப் புரியும். போனஸ் சட்டத்தினால் தொழிலாளர்கள் எல்லாம் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். நிச்சயமாக இந்த போனஸ் சட்டம் மிகவும் வருந்தத்தக்கதாக இருக்கிறது என்பதை இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

தொழில் அதிபர்கள் எல்லாம் ஏறத்தாழ 20 சதவீதம் போனஸ் கொடுப்பதற்குத் தயாராக இருக்கிற இந்தச் சூழ்நிலையில் மத்திய அரசு நிறைவேற்றியிருக்கிற போனஸ் சட்டத்தினால் அவர்கள் 4 சதவிகிதத்துக்கு மேல் கொடுப்பதற்கில்லை. ஆகவே,

1975 நவம்பர் 4] [திரு. ஜே. ஜேம்ஸ்]

தொழிலாளர்களுக்கு மத்திய அரசாங்கம் ஒரு பெரிய பாதகத்தை ஏற்படுத்தியிருக்கிறது; அதனால் வேலைநிறுத்தங்கள்கூட ஏற்பட்டிருக்கின்றன. உள்ளிருப்பு வேலை நிறுத்தம் ஏற்பட்டிருக்கிறது. அதனால் தொழில் உற்பத்தி பாதிக்கப்படக்கூடிய ஒரு பயங்கர நிலை உருவாகியிருக்கிறது. ஆகவே, இந்த அரசாங்கத்தை நான் கேட்டுக்கொள்கிறேன், இந்த தமிழ்நாட்டில் இருக்கிற தொழிலதிபர்களுக்கு ஒரு ஆணை பிறப்பிக்க வேண்டும் என்று. ஒருவேளை இந்திய அரசு 4 சதவிகிதம்தான் போனஸ் கொடுக்க வேண்டுமென்று அவசரச் சட்டத்தைப் பிரகடனம் செய்திருந்தாலும் அந்தந்த தொழில் நிறுவனங்களுக்கு ஏற்றமாதிரி எந்த அளவுக்கு போனஸ் கொடுக்க முடியுமோ அந்த அளவுக்குக் கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும். தொழிலாளர்களைப் பாதிக்கக்கூடிய அளவுக்குச் சட்டம் இருந்தாலும் இந்த அரசு தொழிலாளர்களைக் காப்பாற்ற முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த நாட்டிலே இருக்கிற பல்வேறு டெக்ஸ்டைல்ஸ் நிறுவனங்களும் இன்று இதே நிலையில்தான் இருக்கின்றன. ஆங்காங்கு வேலைநிறுத்தம் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. இந்தச் சூழ்நிலையில் நிச்சயமாக அரசாங்கம் தொழிலாளிகள் பாதிக்கப் படாமலும், இந்த நாட்டில் உற்பத்தி குறையாமலும் பார்த்துக் கொள்வதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

அடுத்தபடியாக, நமது அரசு நடத்துகின்ற ப்ளாண்டேஷனைப் பற்றி ஒருசில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். மத்திய அரசாங்கம் 4 சதவிகிதம்தான் போனஸ் கொடுக்க வேண்டு மென்று சொன்னாலும், இந்த அரசு நடத்துகின்ற ரப்பர் தோட்டத்தில் அதிக லாபம் இருக்கிற காரணத்தினால் அதிக அளவுக்கு போனஸ் கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும். இது வரை போனஸ் கொடுக்கப்படாத பயங்கரமான சூழ்நிலை அங்கு இருந்து கொண்டிருக்கிறது. இதற்கு முன்பும் பலமுறை வற்புறுத்திக் கூறியிருக்கிறேன்.

இந்த அரசு ரப்பர் தோட்டத்தில் வேலை செய்கிற தொழிலாளர்களுக்கு, தனியார் ரப்பர் தோட்டங்களில் வேலை செய்கிற தொழிலாளர்களைவிட குறைவாகக் கூலி கொடுக்கப் பட்டு வருகிறது. தனியார் தோட்டங்களில் ஏறத்தாழ அன்றாடம் ஒரு தொழிலாளிக்கு ரூ. 8.35 கூலியாகக் கொடுக்கப் பட்டால், அரசாங்க ரப்பர் தோட்டங்களில் வேலை செய்கிறவர் களுக்கு அன்றாடம் ரூ. 5.41 காசுதான் ஊதியமாகக் கொடுக்கப் படுகிறது.

அதுமட்டுமல்ல. எங்கள் பகுதியில் தனியார் சிறு தோட்ட முதலாளிகளும் இருக்கிறார்கள். அவர்கள் தொழிலாளர் களுக்குக் கொடுக்க வேண்டிய நியாயமான ஊதியத்தைக் கூடக் கொடுக்காமல் பயங்கரமான சூழ்நிலையை உருவாக்கிக் கொண் டிருக்கிறார்கள். இந்த அவசரகால நிலையைப் பயன்படுத்தி அரசு தொழிலாளர்களுடைய பிரச்சினைகளைத் தீர்த்து வைக்க தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். உடனடியாக அரசாங்க ரப்பர் தோட்டங்களில் வேலை செய்கிறவர்களுக்கு போனஸ் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

அடுத்தபடியாக, பல்வேறு கல்வி ஸ்தாபனங்களை எடுத்துக் கொண்டால் ஆசிரியர்களுக்கு பாதுகாப்பு இல்லாத சூழ்நிலை தான் இருக்கிறது. அண்மையில்தான் தனியார் கல்வி ஸ்தாபனங் களில் வேலை செய்கிற ஆசிரியர்களுக்குப் பாதுகாப்பு அளிக்க நாம் ஒரு சட்டத்தை நிறைவேற்றினோம் என்றாலும்--அது நாம் எதிர்பார்த்த அளவுக்குப் பயனுடையதாக இல்லை. எனது பகுதியில் ஒரு பள்ளிக்கூடம் இருக்கிறது. குறிப்பாக, மருதன் குடி பள்ளிக்கூடம் சில மாதங்களாகவே மூடப்பட்டிருக் கிறது. அங்குள்ள ஆசிரியர்களுக்கு எந்தவிதமான பாதுகாப்பும் இல்லை. அங்கே இருக்கின்ற 50 ஆசிரியர்கள், ஆயிரம் மாணவர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இப்போதுள்ள அவசரச் சட்டத்தைப் பயன்படுத்தி அந்தப் பள்ளிக்கூடம் சரியான முறையில் நடைபெறுவதற்கு வகை செய்யவேண்டும். அங்குள்ள ஆசிரியர்கள், மாணவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

1975 நவம்பர் 4] [திரு. ஜே. ஜேம்ஸ்]

நிர்வாகத்தில் கோளாறு இருக்கிற பள்ளிக்கூடங்களை அரசே மேற்கொள்ள வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

இன்னும் பொதுச் சுகாதாரத்திற்கு இங்கு மானியம் கோரப் பட்டிருக்கிறது. நமது மாநிலத்தில் பொதுச் சுகாதாரம் சரியான முறையில் கவனிக்கப்படுவதில்லை. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால் எங்கள் மாவட்டத்தில் காலரா நோயினால் 20 பேர்கள் மாண்டிருக்கிறார்கள். இந்த இலாக்கா அங்கே திறம் பட செயல்பட்டிருந்தால், இதுபோல ஒரு மாவட்டத்தில் 20 பேர்கள் இறந்திருக்க வேண்டியதில்லை. கடந்த பல ஆண்டு களாக இதுபோன்ற தொத்து நோய்கள் தீவிரமாகக் கட்டுப் படுத்தப்பட்டு வந்திருந்தும் கூட, எங்கள் பகுதியில் சரியான முறையில் செயல்படாத காரணத்தினால் இவ்வாண்டு எங்கள் மாவட்டத்தில் 20 பேர்கள் மாண்டு விட்டார்கள். இதில் இந்த இலாக்கா சற்று அக்கறை எடுத்துக்கொள்ள வேண்டும். அங்குள்ள அதிகாரிகள் அக்கறை இல்லாமல் இருந்து விட்டார்கள், செய்ய வேண்டிய தடுப்புப் பணிகளை நிச்சயமாகச் செய்யவில்லை என்கிற குற்றச்சாட்டைக் கூறிக்கொள்ள விரும்பு கிறேன்.

அடுத்து, நமது மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் இந்திப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கும், எங்கள் பகுதி தாய்த் தமிழகத்தோடு இணைவதற்குப் போராட்டம் நடத்தியவர் களுக்கும் பென்ஷன் வழங்குவதாகக் கூறினார்கள். ஆனால் எங்கள் பகுதி தாய்த் தமிழகத்தோடு இணைவதற்குப் போராட்டம் நடத்திய பல பேர்களுக்கு இதுவரையிலும் பென்ஷன் வழங்கப் படவில்லை. காரணம் அவர்களுக்கு போதுமான சான்றுகளை அளிக்க வழியில்லை. அவர்கள் ஜெயிலில் இருந்ததற்கான ரெக்கார்டுகள் திருவிதாங்கூர் அரசால் அழிக்கப்பட்டு, நசிந்து போய்விட்டன.

பொறுப்புவாய்ந்த எம்.எல்.ஏ.-க்கள் இன்னார் எங்களுடன் ஜெயிலில் இருந்தார் என்று சர்டிபிகேட் வழங்கினாலே போதும், அந்த சர்டிபிகேட்டை வைத்துக் கொண்டாவது அந்தப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கு பென்ஷன் வழங்க அரசு

முன்வரவேண்டும். அதுபோல அவர்கள் செய்ய எண்ணுதது தான் எனக்கு வருத்தமாக இருக்கிறது. இனிமேலாகிலும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் இதுபோன்ற பொறுப்பான சட்டமன்ற உறுப்பினர் வழங்குகின்ற சான்றுகளை வைத்து அவர்களுக்குப் பென்ஷன் வழங்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக, பொதுப்பணித்துறையைப் பற்றி ஒரு வார்த்தை. முதலமைச்சர் அவர்கள் ஓராண்டுக்கு முன்பாக எங்கள் பகுதியில் ஒரு பாலத்தின் கல்நாட்டுவிழா நடத்தினுர்கள். ஓராண்டுக்குள் அந்தப் பாலத் திறப்பு விழாவையும் தாம் நடத்தி வைக்க வருவதாகச் சொன்னுர்கள். ஆனல் இதுவரை அந்த வேலை தொடங்கப்படவேயில்லை. நாம் இந்தத்துறைக்கு 421 லட்சம் ரூபாய் மானியம் ஒதுக்குகிறோம். இந்தப் பாலத்திற்கு 25 லட்சம் தான் எஸ்டிமேட். இதுவரை இந்த வேலை துவங்கப்படவில்லை. உடனடியாக இந்தப் பணியை நிறைவேற்றித் தருவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னென்றைக் கூற விரும்புகிறேன். திருநெல்வேலி—நாகர் கோவில் ரெயில்பாதை வேலை நடந்து கொண்டிருந்தது. இப்போது திடீரென்று அந்த வேலையை நிறுத்திவிட்டதாக அறிகிறோம். நில ஆர்ஜிதம் செய்யப்பட்டதற்கும் பணம் வழங்கப்படவில்லை. ஏன் அந்த வேலை நிறுத்தப்பட்டது என்பதையும் இந்த அரசு மத்திய அரசாங்கத்தோடு கலந்து பேசி அறிந்து, அந்த வேலையை முடிப்பதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. வா. மை. அப்துல் ஜப்பார் :** மாண்புமிகு சட்டமன்ற அவைத் தலைவர் அவர்களே, இந்தக் கூட்டத் தொடரில் இன்று தான் நான் முதன்முதலாக ஒருசில வார்த்தைகளைப் பேச முற்பட்டு நிற்கிறேன்.

கடந்த ஆண்டு இதே நேரத்தில் ஒரு கடுமையான வறட்சி நிலையில் தமிழகம் சிக்கியிருந்தது. எங்கு பார்த்தாலும் உணவுப் பஞ்சம், தண்ணீர் பஞ்சம் தாண்டவம் ஆடிய கோர நிலையைக்

கண்டோம். ஓராண்டு காலத்திற்குள்ளாக, நிலைமை இத்தனை தூரம் மாறி—இறைவன் அருளால் எங்கும் நீர்வளம் பெருகி, பசுமைக் காட்சி ஏற்பட்டதைக் காண்கிறோம். மக்களின் கொடுந்துயரை நீக்கிய எல்லாம் வல்ல இறைவனுக்கு இந்த நேரத்தில் நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்படி ஒரு நூறு ஆண்டு காலத்தில் ஏற்படாத வறட்சி நாட்டில் ஏற்பட்டதை மக்கள் உணரக் கூட முடியாத வகையில் இந்த அரசு எடுத்துக்கொண்ட பலதரப்பட்ட நடவடிக்கைகளை உணர்ந்து—உண்மையில் எந்த மனித உள்ளம் உடையவர்களும் —இந்த அரசைப் பாராட்டாமல் இருக்க முடியாது. காரணம், பத்திரிகைகள் எல்லாம் சென்ற ஆண்டு ஏற்பட்ட கோர வறட்சியைப் பற்றி பலவாக வருணித்தன. இதுபோல கடந்த நூறு ஆண்டுகளில் ஏற்பட்டதே இல்லை என்று குறிப்பிட்டன. அப்படிப்பட்ட கடுமையான வறட்சியை, பஞ்சத்தைக் கூட மக்கள் உணர முடியாத அளவுக்கு இந்த அரசு திறமையாக பல நடவடிக்கைகளை மேற்கொண்டதற்கு நான் உளமாரப் பாராட்டுகிறேன்.

அடுத்தபடியாக, கடந்த சட்டமன்றக் கூட்டத்திற்கும், இந்தக் கூட்டத்திற்குமிடையே நமது மரியாதைக்குரிய முதல்வர் அவர்கள் ஒரு புரட்சிகரமான திட்டத்தைக் கொண்டுவந்திருப்பதை நான் பாராட்டாமல் இருக்கமுடியாது.

எங்களால் மிகவும் போற்றப்பெறுகிற நபிகள்நாயகம் அவர்கள் தம்முடைய சீர்திருத்தங்களுக்குள் முதன்மையானதாக—விதவைகள்—கைம்பெண்கள் இவர்களுடைய அவல வாழ்வை நீக்கும் பணியை சிறப்பானதாகச் சொல்லியிருக்கிறார்கள்.

"அபலை இளம்விதவைகளை மணமுடித்து வாழ்வளிப்பவர்கள் மறுமை நாளில் என்னுடன் நெருக்கமாக இருப்பார்கள்" என்று மூஹம்மது நபி சொல்லியுள்ளார்கள். அந்தச் சமயத்தைச் சேர்ந்த நாங்களே அந்த உன்னதமான உபதேசத்தை சில சந்தர்ப்பங்களில் மறந்து நிற்கக் கூடிய நிலைமையில், நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் அவர்களுடைய நல்வாழ்வுக்கான மறுவாழ்வளிக்கும் பணியினை மேற்கொண்டிருப்பதைக் கண்டு தமிழகம் மாத்திரம் அல்ல, இந்திய திருக்கண்டத்தில்

உள்ளவர்கள் மாத்திரம் அல்ல, அகில உலகத்தில் உள்ளவர்களும் பாராட்டுவார்கள் என்பதை, முஸ்லிம் என்ற முறையில் நான் என்னுடைய பாராட்டுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, ஒருசில குறைகளைச் சொல்லித்தான் ஆகவேண்டும். தஞ்சை மாவட்ட விவசாயிகளின் நிலைமை பரிதாபகரமான தாகும். நல்ல மகசூல் இவ்வாண்டு கிடைத்திருக்கிறது. என்னைப் போன்ற வணிகர்கள் பாதிக்கப்பட்டிருக்கிற காரணத்தினால் சொல்கிறேன். அவர்கள் தங்களுக்குக் கிடைத்த நல்ல மகசூலை வைத்துக்கொண்டு தங்களுக்கு வேண்டிய பண்டங்களைக் கூட, துணிமணிகளைக் கூட வாங்க முடியாத அவல நிலையில் இருக்கிறார்கள். காரணம், அரசாங்கத்திற்கு மாத்திரம்தான் அவர்கள் தங்கள் விளைபொருளை விற்க முடியும் என்ற நிலை இருக்கிறது.

(முற்பகல் 10.30)

விவசாயிகளிடத்தில் தேங்கி உள்ள விவசாயப் பொருள்களை அரசாங்கம் வாங்கிக் கொள்ள வேண்டும். 58 கே. ஜி. என்று நினைக்கிறேன். அதை 63 ஆகக் கொடுங்கள் என்று கேட்டிருப்பதாகத் தகவல் எனக்குக் கிடைத்திருக்கிறது. விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே விவசாயிகளிடத்தில் உள்ள உபரி நெல்லை உடனடியாகக் கொள்முதல் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அரசாங்கம்தான் வாங்கித் தீர வேண்டும் என்றால் அதில் ஆட்சேபம் இல்லை. எதையும் உடனடியாகச் செய்யுங்கள். விவசாயியின் கைக்குப் பணம் கிடைக்க ஏற்பாடு செய்யுங்கள். அவர்களுடைய தேவைகள் ஓராண்டு காலமாக காத்து நிற்கின்றன. அத்தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் ஏதாவது உடனடியாகச் செய்யுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, என்னுடைய தொகுதிக்கு வருகிறேன். பாம்பிக்குளம் ஆழியாறு திட்டத்தில் விஸ்தரிப்பு செய்யப்பட வேண்டுமென்பது 25 ஆண்டுகளாக வைக்கப்பட்டுள்ள கோரிக்கை. விஸ்தரிப்பு செய்யப்படுமானால் வெள்ளக்கோயில் தொகுதிக்கு பலன் ஏற்படும். அப்படி வெள்ளக்கோயில் தொகுதிக்கு பலன் ஏற்பட்டால் அரவக்குரிச்சிக்கு ஒரு பங்காவது தரவேண்டும் என்ற வகையில் அமைச்சரவையைச் சேர்ந்த ஒரு சிலரால் எனது தொகுதிக்கு வாக்கு அளிக்கப்

1975 நவம்பர் 4] [திரு. வா. மை. அப்துல் ஜப்பார்]

பட்டிருக்கிறது என்பதை மறுக்க முடியாது. ஆனல், இன்றைக்கு வெள்ளக்கோயில் திட்டங்கள் அரவக்குரிச்சிக்கு விஸ்தரிக்கப்பட்டிருக்கின்றனவா என்றால் இல்லை. அரவக்குரிச்சி தொகுதி புறக்கணிக்கப்படுகிறது.

எங்கள் தொகுதியின் சார்பாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்தில் எடுத்துச்சொல்லும்போதெல்லாம் திருவாரூர் தெற்கு தெருவிற்குக் கூட நீங்கள் தண்ணீர் கேட்டால் என்னல் கொடுக்க முடியுமா என்று ஏளனமாகப் பேசுகிறார்கள். ஆனல் ஒட்டிய வயிருடன், பசி, பட்டினியுடன் இருக்கிற எங்கள் தொகுதி மக்களின் கோரிக்கையை தயவு செய்து யோசித்துப் பாருங்கள். ஏற்கனவே வசதி படைத்த முறையில் இருக்கின்ற விவசாயிகளுக்கு நீங்கள் மேலும், மேலும் வசதிகளைச் செய்து தருகிறீர்களே, மானம்பார்த்த பூமிகளை வைத்துக்கொண்டு சமாளிக்க முடியாமல் இருக்கின்ற விவசாயிகளுக்கு, கோமணத்துடன் மட்டும் வாழக்கூடிய எங்கள் பகுதி விவசாயிகளுக்கு சிறிதாவது தண்ணீர் கேட்டால் எங்களைப் பார்த்து ஏளனம் செய்யாதீர்கள் என்று மன வருத்தத்தோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, என்ன ஏளனம்? யார் செய்தார் என்பதை விளக்க வேண்டுகிறேன்.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார்: தலைவரவர்களே, ஏளனம் முக்கியம் அல்ல. எனது கோரிக்கைதான் முக்கியம். அதாவது, முதலமைச்சரிடத்தில் எனது தொகுதி மக்கள் அணுகிக் கேட்டபோது ஏதாவது ஒரு எல்லைக்கோடு இருந்தாக வேண்டும். எல்லைக்கோடு தேவை. இல்லாவிட்டால் திருவாரூர் தெற்குத் தெரு வரை வந்து நிற்காதா என்று கூடச் சொன்னதாகக் கேள்விப்பட்டேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: எந்த ஒரு திட்டமானலும் அதற்கு ஒரு ஆயக்கட்டு நியமிக்கப்படுகிறது. அந்த ஆயக்கட்டும் சில கோரிக்கைகளின் பேரில் மீண்டும் பரிசீலிக்கப் பட்டு விரிவுபடுத்தப்படுகிறது. பிறகும் ஒவ்வொருவரும் ஏதாவது கோரிக்கை எழுப்பிக் கொண்டே போனல் கடைசியில் திருவாரூர் வரை கோரிக்கை எழுப்பலாம். அது நிறைவேற்றப்

பட இயலாத காரியம் என்று கூறினேன். ஏளனம் செய்ய வில்லை. ஏளனம் செய்ததாக ஓர் உண்மைக்கு மாறான கருத்தை நண்பர் அவர்கள் கூறியமைக்காக மிகவும் வருந்து கிறேன்.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார்: கனம் முதலமைச்சர் அவர்களின் விளக்கத்தை ஏற்றுக்கொள்கிறேன். குறை சொல்ல வேண்டும் என்பதற்காகக் கூறவில்லை. என்னுடைய நிலையை எடுத்துச் சொல்வதற்காக—எங்கள் பரிதாபகரமான நிலையை விளக்கிச் சொல்ல வேண்டுமென்பதற்காகச் சொன்னேன்.

இதிலே உண்மை நிலைமை என்னவென்றால், அதாவது, எதற்கும் ஒரு எல்லை வகுக்க வேண்டும். அந்த எல்லை, இத்தனை ஆண்டு காலமாக பாசன வசதி இல்லாமல் இருக்கக் கூடிய அரவக்குரிச்சி தொகுதிக்கு விஸ்தரிக்கப்பட வேண்டும் என்பது அந்தத் தொகுதி மக்களின் கோரிக்கை. இதை ஒரு ஆறுதல் பரிசாகவாவது அளிக்க வேண்டும். பள்ளிக்கூடத்தில் போட்டியில் ஓட முடியாத பையனைக் கூட கொஞ்ச தூரம் தள்ளி நிற்கவைத்து அவனுக்கு ஏதாவது ஆறுதல் பரிசு தருவது போல, ஒரு 5 ஆயிரம் ஏக்கருக்காவது பாசன வசதி ஏற்படுத்தித் தாருங்கள்.

முதலில், இந்தத் திட்டம் 90 ஆயிரம் ஏக்கருக்குத்தான் இருந்தது. அதை 1 லட்சத்து 20 ஆயிரம் ஏக்கருக்கு விரிவு படுத்தி இருக்கிறார்கள். இப்படியெல்லாம் விரிவுபடுத்தியும் கூட திட்டத்தின் பலன் முழுவதும் கோவை மாவட்டத்தில் தான் இருக்கிறதே தவிர எனது தொகுதிக்கு வரவில்லை. வேறு ஏதாவது ஒரு திட்டத்தின் மூலம் என் தொகுதி மக்களுக்கு ஒரு நல்ல பலன் கிடைக்க வழி உண்டா என்றால், இல்லை. காரணம் வேறு நீர் வசதி இல்லை. அப்படி ஒரு நல்ல திட்டம் கிடைக்கு மானால் என் தொகுதி மக்களுக்கு அது ஒரு பெரிய ஆறுதலாக இருக்கும் என்று கூற விரும்புகிறேன்.

1975 நவம்பர் 4] [திரு. வா. மை. அப்துல் ஜப்பார்]

ஆகவே, தயவுகூர்ந்து ஒரு 5 ஆயிரம் ஏக்கருக்காவது பாசன வசதி ஏற்படும் வகையில் உதவ வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். முதலமைச்சர் அவர்கள் இதில் பரிவு காட்ட வேண்டும் என்றும் பிடிவாதம் வேண்டாம் என்றும் வணக்கத்துடன் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நொய்யலாறு திட்டம். இது ஒரு ஒப்புக் கொள்ளப்பட்ட திட்டம். இத் திட்டத்திற்கு அடிக்கல் கூட இதுவரை நாட்டப்பட்டிருக்க வேண்டும். தாமதத்திற்குக் காரணம், நமது மாநிலத்திற்கும், கர்நாடக மாநிலத்திற்கும் காவிரி நீர் சம்பந்தமாக இன்னும் ஒப்பந்தம் ஏற்படாத சூழ்நிலையில் இது தொக்கி நிற்கிறது என்பதை உணர முடிகிறது. இருந்தபோதிலும் கூட இந்த நொய்யலாறு திட்டத்தில் விசாரணை—இன்வஸ்டிகேஷன்—எல்லாம் முடிக்கப்பட்ட சூழ் நிலையில் பொறியாளர்களிடம் காத்துக் கொண்டிருக்கிறது. ஆகவே, இந்தத் திட்டத்தையாவது உடனடியாக நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கனம் முதலமைச்சர் அவர்களுக்கு இன்னொரு விஷயத்தையும் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். எந்த ஒரு மனிதனுக்கும் கடைசி நேரத்தில் இறந்து போவதற்கு முன்னால் ஒரு ஆசை இருக்கும். அந்த ஆசையை இறுதி ஆசை என்று சொல்வார்கள். அந்த ஆசையை வெளியிட்டால் சுற்றத்தார்கள் எல்லாம் அந்த ஆசையை நிறைவேற்றி வைப்பதற்கு முயற்சி செய்து எப்படியும் அந்த ஆசையை நிறைவேற்றுவார்கள். அதைப்போன்ற இறுதி ஆசை என்னுடைய இந்த ஆசை என்று முதலமைச்சருக்குப் பணிவோடு சொல்லிக்கொள்ள—உண்மையாகவே அப்படிச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். வேதனையோடு அப்படிச் சொல்லிக்கொள்கிறேன். என்னுடைய இறுதி ஆசையாக நொய்யலாறு திட்டத்தை நிறைவேற்றியே தீர வேண்டும் என்பது என் தொகுதி மக்கள் சார்பாக என்னுடைய ஆசை. இத் திட்டத்தை நிறைவேற்றி என்னுடைய தொகுதி மக்கள் வாழ வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதைத் தவிர வற்புறுத்துவதற்கு எனக்கு வேறெதுவும் இல்லை. எனது ஆரம்ப காலக் கோரிக்கையும், இறுதி கோரிக்கையும் இதுவாகவே இருக்கிறது. எனவே, முதலமைச்சர் அவர்கள்

இதில் மனம் இரங்கி, இத்திட்டத்தை நிறைவேற்றித் தருவார்கள் என்ற நம்பிக்கையோடு என் உரையை முடித்துக் கொள் கிறேன்.

*THIRU K. M. SUBRAMANIAM : Hon. Speaker, Sir, at the outset, I have to congratulate the Government on certain points. Although, I belong to the Opposition group, I believe in congratulating the Government wherever congratulations are due and criticise wherever criticisms are necessary.

Sir, so far as water-supply position in Madras City is concerned, I think, fairly well it was solved and citizens' thanks are due to the Government.

Similarly, so far as rationing is concerned, good attempt has been made.

The sale of open developed plots has been pending for many, many years. Now that has been done.

Now, Sir, coming to other points, the city dwellers are the worst sufferers in the whole State in the matter of price increase. For example, those who belong to the middle class income group and lower middle class income group, they have to pay a sum of Rs. 270 or Rs. 300 for a bag of 70 kgs. of rice. That is the present position of rice in the City of Madras. For a man earning Rs. 500 or 500 to 750—that is an average income of middle class man—he has to spend a sum of Rs. 250 to Rs. 300 for the purchase of rice every month.

The milk price has shot up. Except what is supplied by the Government, the prices of milk sold by private people have gone up. Not only there is increase in price of milk, but also there is adulteration and pure milk is not available. So much so, a man getting Rs. 600 or Rs. 700, has to spend the whole amount on rice, milk and rent. Unfortunately, this Government has not realised this.

Housing is the most essential thing so far as middle class group is concerned. We see there has been horrible increase in the property tax. So much so, the entire burden or a major part of the burden is shifted to the tenants to compensate the property tax. What I say is this. In spite of the small mercies the

people had from the Government, they have a very difficult time because of the rise in prices of essential commodities. Particularly, the prices of essential commodities which are in daily want like rice, milk, edible oils, chillies like that have not gone down. If at all it has gone down in certain places, it is very negligible. So much so, the worst sufferers due to rise in prices of essential commodities are the lower middle classes and upper middle classes, who have been using these items.

The prices of certain brands of cigarettes have gone down. That is not what we want.

The prices of certain varieties of soaps have gone down. That is not what we want.

We want price reduction in essential commodities, which are in daily use, which are essentially needed by the middle and lower middle class people.

Sir, coming to the most important point, there is horrible adulteration of foodstuffs in this State and particularly in the City of Madras. I am still to see inspecting officers going about and collecting samples to see whether they are adulterated. Without any prejudice or party feeling, we have really to admit that the adulteration is really horrible. There are hundreds of milk shops in streets and in all these shops we find not milk mixed with water but water mixed with milk but still no action has been taken against the owners of these shops.

Coming to the other problem of Housing, although the Government are spending money on the Housing Board and they have converted loans into grants, what has happened ? If any allottee does not pay rent for three months, the bill collector of the Slum Clearance Board comes and locks his flat. It is not as if he does not want to pay rent. The fact is that many of the allottees are casual labourers and they often find it very difficult to pay rent according to the rules. When they can afford to pay it, they pay it. When they are out of work, what can they do ? Many of them are gardeners and they are not able to get regular and permanent jobs. Some of them are masons who do not get work regularly. But the officials without giving any notice lock the flats and they have to stand out.

Then, another important point is that the Slum Clearance Board has not handed over roads and other properties to the Corporation and so much so, we find that in many places roads are not repaired and there is no water supply.

Also, there are no public conveniences with water supply. I am only referring to all these things so that they will rectify them. I have not done so with the idea of criticising the Government as such.

Now, coming to the cost of living of the Madras citizen, it is supposed to be the highest particularly compared to the cost of living in Calcutta. People say that the cost of living here is costlier than in Bombay. The reason is obvious. There is no control on anything and the Government have not enforced it. The cost of tiffin in hotels has gone up. The price of coffee has gone up. The cost of transport has gone up. The only thing which has not gone up is the publicity in the press. Everything else has gone up.

Sir, I am glad that the Government have allotted Rs. 1 crore for handloom goods. But has it really helped the handloom weavers ? In spite of the financial assistance given to the handloom weavers for the Deepavali season, the purchase of handloom goods is very poor in the City of Madras. Why ? It is not due to the high price but it is due to the fact that the purchasing power of the people is limited and they have to spend their money on other essential items and they have no money to buy cloth. In spite of the fact that 25 per cent rebate is given to handloom goods, their sale has not increased. The same is the case with the mill goods. If anybody goes to the bazaar, he will find that people are not buying mill goods also. They are diverting their money for more essential things.

Then, coming to the Urban Land Tax, the Government are going to bring forward a Bill shortly. Not satisfied with the urban land, the Government are going to the suburban land which has not been developed. Now people want to run away from cities and build their houses in the suburbs like Chromepet which cannot be considered as an urban area. Now the property tax has been increased three or four times. Most of the Government servants have built their houses there and now it is proposed to levy urban land tax on those houses also.

1975 நவம்பர் 4] [Thiru K. M. Subramaniam]

I thought that the Government would realise the difficulties of the people of the Madras City and come to their rescue. Instead of that, the Government are driving them further and further to a point where they cannot construct houses. Now a house-owner has to pay property tax besides income-tax. Now comes this urban land tax. If a person wants to construct a house in places like St. Thomos Mount, he will also have to pay urban land tax. Also even in the case of a small house in Madras City the repair charge or maintenance cost is high and so the owner may try to sell it away and build it in a place where he will have no trouble whatsoever.

Another important thing is that I thought that the Supplementary Grant would come down and there would be a general reduction in the prices of cement, steel and other materials which are necessary for construction of houses, etc. Instead, the grant has gone up and the prices of essential articles have gone up. Now the Government want Rs. 67 crores and we do not grudge it buy my fear is whether they will properly utilise it. In the City of Madras except in the main roads, we find dirt, dust, garbages, unrepaired roads, water-stagnated streets, etc. If these things are attended to immediately, 50 per cent of the medical bills of the people would be reduced. Of course, we have got an excellent Special Officer but the administration is the same. So much so, in spite of the money being spent for the last 18 years, there is no significant improvement. We see the same bad roads, the same unhealthy place, etc. Now the Government seek a of Rs. 67 crores and I am sure it will get through in this House. When it goes through, I hope Government will see that it is properly administered and that at least 50 per cent of the extra money reaches the people. Thank you very much.

* திரு. இராம அரங்கண்ணல்: தலைவரவர்களே, நண்பர் சுப்பிரமணியம் அவர்கள்—நான் இந்த சுப்பிரமணியத்தைத்தான் குறிப்பிடுகிறேன்—இந்த அரசு செய்திருக்கின்ற ஒரு பெரிய காரியத்தைப் பாராட்டுவார்கள் என்று எதிர்பார்த்தேன். நம்முடைய அரசுக்கு இருக்கின்ற நிதி நிலைமைபற்றி நாம் அனைவரும் நன்றாக அறிவோம். நிதி நிலைமை என்று சொல்லும் நேரத்தில் ஏதோ டெல்லியிலே உள்ள சர்க்கார் ஆகாயத்திலிருந்து எல்லாப் பணத்தையும் வசூலிப்பதைப் போலவும்,

அங்கிருந்து மாநிலங்களுக்குப் பிச்சை போடுவதைப் போலவும் ஒரு கருத்தை வைத்துக்கொண்டு விஷயம் தெரிந்தவர்கள் கூடப் பேசுகிறார்கள். மேலேயிருக்கின்ற மத்திய சர்க்காருக்கு வரி என்றால், நாம் எல்லாம் கொடுக்கின்ற வரிப்பணத்தை வைத்துக் கொண்டுதான் அவர்களும் நிர்வாகச் செலவுகளை நடத்துகிறார்கள்.

சுமார் 6,000 கோடி ரூபாய்க்கு பட்ஜெட் போடுமளவிற்கு மத்திய சர்க்கார் வளர்ந்திருக்கிறதென்றால் அது இந்தியா விலிருக்கின்ற ஒவ்வொரு குடிமகனும் செலுத்துகின்ற வரியால் என்று எல்லோருக்கும் தெரியும். என்றாலும் மாநிலங்கள் நிதி போதவில்லை, நிதி உதவி வேண்டுமென்று கேட்கின்ற நேரத்தில் அங்கே மத்திய சர்க்காரிலே பொறுப்பிலே இருப்பவர்கள், ஏதோ அவர்கள் கையிலேதான் எல்லாம் இருக்கின்றன என்று கருதிக்கொண்டு, நான் நினைத்தால் கொடுப்பேன், நான் விரும்பினால் கொடுப்பேன், நான் கணக்கு கேட்டால் நீ கொடுக்க வேண்டுமென்று சொல்வது சரியல்ல. மத்திய சர்க்கார் கணக்கு கேட்பதற்கென்று ஒரு அருமையான அமைப்பை வைத் திருக்கிறது, நம்முடைய அரசியலமைப்பிலேயே இருக்கிறது. ஆடிட்டர் ஜெனரல், அக்கவுண்டண்ட் ஜெனரல் என்று இருக்கிறார்கள். இப்படி மாநில அரசு செய்யும் செலவுகளைப்பற்றி கணக்குக் கேட்டும் வகையில் மத்திய சர்க்கார் இருக்கிறது. எந்தக் காரியத்தையும், மாநில அரசோ அல்லது மாநில அரசு நிறுவனங்களோ அவர்கள் இஷ்டப்படி செலவு செய்ய முடியாது. செய்த செலவிற்கு கணக்கு கேட்கும் தன்மையும், அதற்கான தணிக்கை முறைகளும் நம்முடைய இந்திய அரசியலமைப்பிலே வகுக்கப்பட்டிருக்கிறது.

அதேபோல, ஒரு நிதியமைச்சரின் உரிமைகள் அல்லது அவரது அதிகாரங்கள் என்ன என்பதும் வகுக்கப்பட்டிருக் கின்றன. ஆனால் நாம் பெற்றிருக்கின்ற மத்திய நிதியமைச்சர் அவர்கள் ஏதோ எல்லாம் இவர் கையில் இருப்பதைப் போல, இருக்கிற இடம் வசதியான இடம் என்ற தன்மையில் இங்கே வந்து கணக்குக் காட்டினாலொழியப் பணம் தரமாட்டேன் என்று பேசுகிறார்கள்.

1975 நவம்பர் 4] [திரு. இராம. அரங்கண்ணல்]

அதற்குச் சுயமரியாதையுள்ள முதலமைச்சர் அந்தப் பதிலைச் சொல்லாமல் இருக்க முடியாது. இவர் நிதியமைச்சர், இவர் தகவல்களைக் கேட்டுப் பெற வேண்டுமானுல் எவ்வளவோ அதிகாரிகள் இருக்கிறார்கள், அவர்களிடம் கேட்டுப் பெறலாம். ஆனுல் அவர் பொதுமேடையிலே வந்து, ஏதோ இவர் ஒருவர்தான் இந்தியாவையே பராமரிப்பதற்காக ஆண்டவனுல் அனுப்பப்பட்ட அசகாய சூரர் போல நினைத்துக்கொண்டு, பணத்தை என்ன செய்தீர்கள் என்று கணக்குக் கேட்டால் கொடுக்க வேண்டுமென்று சர்வாதிகாரத் தொனியில் பேசினுல் அதற்குச் சரியான அடி கொடுக்க வேண்டுமென்ற கொள்கையை உடைய திராவிட முன்னேற்றக் கழகம் பதில் சொல்லாமலிருக்க முடியாது. அந்தப் பதிலைத்தான் இங்கே சட்டமன்றத்திலே சொன்னுர்கள், மேடையிலே அல்ல.

நம்முடைய சுப்பிரமணியம் அவர்கள் மறந்துவிட்டார்கள் என்று சொல்வதற்கு காரணம், ஒரு அருமையான காரியத்தை நம்முடைய அரசு செய்திருக்கிறது. இங்கே பேசினுர்கள், இதற்கு 6 இலட்சம், அதற்கு 6 இலட்சம், இதுதான் சாதனையா என்று பேசினுர்கள், சினிமாப்படமா என்று பேசினுர்கள். குடிசை மாற்று வாரியம், அதற்காக நம்முடைய அரசாங்கம் அளித்திருக்கின்ற பணம் 17 கோடி ரூபாய். நிலத்தின் மதிப்பைச் சேர்க்கவில்லை. நிலத்தின் மதிப்பையும் சேர்த்தால் 17-ம், 3-ம் ஆக மொத்தம் 20 கோடி ரூபாய் ஆகும். இந்த 17 கோடி ரூபாயை இந்தத் திட்டத்திற்கு மாநில அரசு தந்தது என்றுல் பாதித் தொகையை கிராண்ட் ஆகவும், பாதித் தொகையைக் கடனுகவும் வழங்கி வந்தது. ஆனுல் இன்றையதினம் அப்படிக் கொடுக்கப்படும் கடன்களைத் திருப்பிச் செலுத்துவதற்குரிய சூழ்நிலை இல்லை என்பதால் அந்த 17 கோடி ரூபாயையும் மானிய மாக வழங்குவது என்று மாநில அரசு முடிவெடுத்திருக்கிறது என்றுல் அது சாதாரண முடிவா?

இன்றைக்குள்ள நிதிநிலைமையில் ஏழை எளியவர்களுக்கு என்னென்ன முடியுமோ அவைகளை யெல்லாம் செய்ய வேண்டு மென்ற அந்தத் திட்டத்தின் காரணமாக 17 கோடி ரூபாயை நம்முடைய மாநில அரசு, 1 கோடி அல்ல 17 கோடி ரூபாயை — சற்றேக்குறைய கணக்குப் பார்த்தால் ஒரு ஆண்டுக்கு மத்திய சர்க்காரிலே வைத்திருக்கிறதே 'ஹாட்கோ' நிறுவனம், அந்த

நிறுவனத்திற்கு வழங்குகிறது கிட்டத்தட்ட 18 கோடி ரூபாய், எல்லா மாநிலங்களுக்கும் அங்கே வழங்குவது 18 கோடி ரூபாய் மத்திய அரசு — ஆனால் நம்முடைய சர்க்காரைப் பொறுத்த வரையில் 3, 4 ஆண்டுகளில் 17 கோடி ரூபாயைச் செலவழிக்கத் தந்தது. அந்தத் தொகையும் மானியமாகவே இனிமேல் வழங்கப் படும், திருப்பிச் செலுத்த வேண்டியதில்லை என்று செய்திருப்பது பெரிய அருமையான காரியம் என்பதைக் குறிப்பிட்டுச் சொல்ல ஆசைப்படுகிறேன். அங்கே மானியமாகத் தந்து விட்டார்களே . . .

திரு. கே. எம். சுப்பிரமணியம் : 'ரெண்ட்' குறையுமா ?

திரு. இராம. அரங்கண்ணல் : அதைக் கேட்பார்கள் என்று தெரியும். மானியமாகக் கொடுத்து விட்டார்களே, அடுத்த பிரச்னை என்ன ? அரசியல் என்பதற்காகப் பேச வேண்டியதுதான். ஆனால் பிரச்னைகளின் நியாயத்தைப் பார்த்து, நல்லது நடக் கிறதா என்று பார்த்து சில காரியங்களில் பாராட்டும் தன்மை ஏற்பட்டால்தான் இந்தச் சமுதாயத்தை எதிர்காலத்தில் காப் பாற்ற முடியும். ஏதோ அரசியல் கட்சி இருக்கிறது என்பதால் குறை சொல்ல வேண்டுமென்பதற்காகக் குறைகளைச் சொல்லி விட்டால் நாளையதினம் சமுதாயச் சீர்திருத்தத்தைச் செய்ய வேண்டிய இடத்திற்கு வந்தால் பல பிரச்னைகளை அனுபவிக்க வேண்டி நேரிடும்.

மானியமாக அரசு கொடுத்து விட்டது, பிறகு அதற்கு ஏன் வாடகை வாங்க வேண்டும், இது சுப்பிரமணியத்தின் கேள்வி. அந்த வாடகையை வாங்காமல் விட்டுவிட்டால் என்ன என்ற கருத்தில் கேட்கிறார்கள். இப்பொழுது மீனவர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கிறோம் வெளியூர்களில். அதேபோல ஆதித் திராவிட மக்களுக்கும் நம் அரசாங்கம் வீடுகள் கட்டிக்கொடுக் கிறது. ஆனால் அவைகளுக்கெல்லாம் வாடகை வாங்குவதில்லை. இனமாகக் கட்டித் தருகிறோம். என்ன காரணம்? நகரத்திற்கு என்று சில பிரச்னைகள் உண்டு என்பதை மறந்துவிடக் கூடாது. கிராமங்களுக்கு என்று சில பிரச்னைகள் உண்டு. கிராமத்திலே ஏராளமான நிலம் இருக்கிறது. ஆனால் நகரத்தில் உள்ள பெரிய பிரச்னையே நிலமில்லாத சூழ்நிலையாகும். இருக்கின்ற நிலப் பரப்பிலே மத்திய தர மக்களுக்கும் வீடுகள் கட்டிக் கொடுக்க

1975 நவம்பர் 4] [திரு. இராம. அரங்கண்ணல்]

வேண்டுமென்ற சூழ்நிலையிருக்கிறது. அந்தச் சூழ்நிலையில் வாடகை வாங்கிக்கொள்வதில் பார்த்தால் இன்றைக்கு எவ்வளவு வாடகை? 10 ரூபாய், விளக்கு வசதியோடு இருந்தால் 12½ ரூபாய், தண்ணீர் வசதியும் இருந்தால் 15 ரூபாய் என்று இன்றையதினம் வாடகை நிர்ணயம் செய்து வாங்குகிறோம்.

ஆனால் வாங்க வேண்டிய வாடகை என்ன? கடன் பாதி, மானியம் பாதி என்று மாநில அரசு வழங்கிய நேரத்தில் நாம் வாங்க வேண்டிய அந்த வாடகைத் தொகை கிட்டத்தட்ட 56 ரூபாய் என்று கணக்கிடப்பட்டது. ஒரு குடியிருப்பு கட்ட 9,000 ரூபாய் என்று கணக்கிட்டால், 4,500 ரூபாய் ஆகிய பாதி கடனுக்குப் பார்த்தால் 56 ரூபாய் வாங்க வேண்டியதாயிருக்கிறது, ஆனால் 15 ரூபாய்தான் வாங்குகிறோம். மீதம் 41 ரூபாய், 42 ரூபாயை அரசாங்கமே சரிசெய்து கொண்டிருந்தது. ஆனால் இன்றையதினம் முழுவதும் மானியம். கிட்டத்தட்ட ஒரு குடியிருப்புக்கு 11,000 ரூபாய் ஆகிறது என்றால் மாதம் 90 ரூபாய் வாங்க வேண்டும் கணக்குப்படி. ஆனால் நாம் வாங்குவது எவ்வளவு? 10, 15 ரூபாய். 15 ரூபாய் என்றே வைத்துக் கொள்வோம் எல்லா வசதிகளும் உட்பட. ஆக மீதம் 75 ரூபாயை குடிசையிலே வாழும் ஒவ்வொரு குடிமகனுக்கும் சகாயமாக மாதந்தோறும் இந்த அரசு வழங்கி இருக்கிறது என்பதை மறந்துவிடக் கூடாது. அப்படியானால் பூராத் தொகையையும் கொடுத்து விட்டால் என்ன, 15 ரூபாயை ஏன் வாங்க வேண்டுமென்று. . . .

திருமதி த. ந. அனந்தநாயகி: குடிசை மாற்று வாரியத்தில் இருக்கிற எல்லாக் குடிமக்களுக்கும் 15 ரூபாய்க்குக் கொடுக்கிறோம் என்று சொல்வது சரியல்ல. காரணம், இன்றைக்கு குடிசை மாற்றுவாரிய வீட்டில் குடியிருக்கும் சிலர் வேலைக்குப் போகிறார்கள் என்றால் எச்.ஆர்.ஏ. பணத்தையும், 10 சதவிகிதத்தையும் இன்றைக்கு குடிசை மாற்று வாரியம் கேட்கிறதா இல்லையா என்பதைத் தலைவரவர்கள் விளக்குவார்களா?

திரு. இராம. அரங்கண்ணல்: தங்கைக்குப் பல விஷயங்கள் தெரிந்திருந்தாலும் என்னுடைய வாயிலிருந்து பதில்வர வேண்டுமென்று விரும்புகிறார்கள் போல் இருக்கிறது. எச். ஆர். ஏ.

திரு. கே. டி. கே. தங்கமணி: சார், உறுப்பினர்களைப்பற்றிச் சொல்லும்பொழுது உறுப்பினரின் பெயரைச் சொல்லலாம் என்று தான் அறிந்திருக்கிறேன். தங்கை என்றும், தம்பி என்றும் சொல்லலாமா?

(முற்பகல் 11.00)

திரு. இராம. அரங்கண்ணல்: நான் சொல்ல வந்தது, எல்லோருக்கும் எச்.ஆர்.ஏ. ப்ளஸ் 10 சதவிகிதம் என்று சொன்னார்கள். வீட்டு வாடகைப்படி என்று கொடுக்கப்படுவது அரசாங்கத்திலே பணியாற்றுகிறவர்களுக்கு மட்டும் ரூ. 18 ரூ. 20 என்று கொடுக்கப்படுகிறது. அதற்கு மேற்பட்டு 10 சதவிகிதம் சேர்த்து வாடகையாகக் கொடுக்க வேண்டுமென்று அரசாங்கம் முடிவு எடுத்திருந்தது. அதற்குக் காரணம்—கே.எம்.எஸ். அவர்கள் பேசுகிற நேரத்திலே சொன்னார்கள்—ஏழை எளியவர்கள் இருக்கிறார்கள், வசதியுள்ளவர்கள் இருக்கிறார்கள். அப்படி ஏழைகளில் மிகவும் பிற்பட்டவர்கள் 10 சதவிகிதம் கொடுப்பவர்கள் எவ்வளவு பேர் இருக்கிறார்கள் என்று கணக்கெடுத்துப் பார்த்தால் 2 சதவிகிதம் கூட வரவில்லை. அரசாங்க உத்தியோகத்திலே இருக்கிறவர்கள் ஏற்கனவே குடிசைகளில் இருந்து வாழ்க்கை நடத்தியவர்கள் அதிகமாக வாடகை தர முடியவில்லை என்றார்கள். இவ்வாறு 500, 600 பேர் கூட மொத்தம் தேறவில்லை. ஆனாலும் பெருமைக்குரிய முதலமைச்சர் அவர்கள்—முன்பு ஒரு காலம் இருந்தது, சொன்னாலும் கேட்க மாட்டோம் என்ற காலம். அவர்கள் அரசாங்கத்தில் பணிபுரிகிற சிப்பந்திகள் சொன்ன காரணத்தாலோ அதையும் கூட நீக்கி பழைய வாடகையே வாங்கலாம் என்று உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள். நான் ஏற்கனவே குறிப்பிட்டது போல் ஒவ்வொரு குடியிருப்புக்கும் 90 ரூ. வாங்க வேண்டிய நிலையில் 15 ரூபாய்தான் வாங்கிறோம். ஏன்?

17 கோடி ரூபாய் போட்டுக் கட்டியிருப்பதில் 1971-72-ல் நமக்கு வாடகையாக வந்தது 13 லட்சம் ரூபாய்; இந்த ஆண்டு 1974-75-ல் 21 லட்சம் ரூபாய்தான் வாடகையாக வந்தது. இதை ஏன் வாங்க விரும்புகிறோம்? குடியிருப்புதாரர்கள் வாடகை தாரர்கள் என்று அழைக்கப்படுவதில்லை; லைசென்ஸ்தாரர்கள் என்றுதான் அழைக்கப்படுகிறார்கள். உனக்கே வீடு என்று சொல்லிவிட்டால் அவர்கள் அதை மற்றவர்களுக்கு விற்க

ஆரம்பித்து விடுவார்கள். குறிப்பிட்ட கால வரம்புக்கு சென்னை மாநகரத்தைப் பொறுத்தவரை ஒரு கட்டுப்பாடு இருக்க வேண்டும். நான் பம்பாயில் பார்த்தேன். பத்தாண்டுகளுக்கு முன்பு வீட்டு வசதி வாரியத்தால் சில வீடுகள் கட்டப்பட்டன பம்பாயில். அவற்றை எல்லாம் இன்று பார்த்தால் மாடிக் குடிசைகள் என்று சொல்லத்தக்க அளவுக்குக் கெட்டுப் போய்க் கிடக்கின்றன.

ஆகவே, வீடுகளைக் கட்டிவிட்ட பிறகு அவற்றைப் பராமரிக்க, வெள்ளை அடித்தல், உள்ளே குழாயில் தண்ணீர் வருவதைச் சீர் படுத்தல் போன்ற பராமரிப்புச் செலவுகளுக்காக ஆண்டு ஒன்றுக்கு கிட்டத்தட்ட 15 லட்சம் ரூபாய் செலவாகிறது. அந்தச் செலவுகளுக்காகவும் ஒரு கட்டுப்பாடு ஒழுங்கு 1,202 ஸ்லம்கள் சீரமைக்கப்பட்ட பகுதிகளிலும் இருக்க வேண்டுமென்பதற்காக வுந்தான் லைசென்ஸ் தொகையாக 15 ரூபாய் வாங்கப்படுகிறது.

(பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

ஒரு கருத்தை திரு. கே. எம். எஸ். அவர்கள் சொன்னார்கள். என்னுடைய தொகுதியில் குடியிருக்கும் சட்டமன்ற உறுப்பினர்—டாக்டர் ஹாண்டே என்று நினைக்கிறேன்—பேசியதாகக் கேள்விப்பட்டேன். 'குடிசை மாற்று வாரியம் திடீரென்று வீடுகளை எல்லாம் பூட்டி விடுகிறது; அங்கிருக்கும் மக்கள் எல்லாம் வெளியிலே நின்று கஷ்டப்படுகிறார்கள்' என்று சொன்னார்கள். நான் கொடுங்கோலனும் அல்ல; கொடுங்கோன்மையுடன் ஆட்சியும் நடந்து கொண்டிருக்கவில்லை.

தாண்டவராயன் பிள்ளை சத்திரத்தில்—அதைத்தான் குறிப்பிட்டார்கள் என்று கருதுகிறேன்—1,302 குடியிருப்புகள் இருக்கின்றன. இதிலே ஜனவரி முதல் அக்டோபர் மாதம் வரை எவ்வளவு குடியிருப்புகள் வாரியத்தால் மூடப்பட்டன, தெரியுமா ? 16 குடியிருப்புகள். ஏன் ? இரண்டாயிரம் ரூபாய்க்கு விற்றார்கள், ஆயிரம் ரூபாய்க்கு விற்றார்கள், 50 ரூபாய்க்கு விற்றார்கள்; தம்பி, தங்கை, அண்ணன் என்று பொய் சொல்லிக்கொண்டு மேல் வாடகைக்கு விட்டார்கள் என்ற காரணத்தால். அந்தப் 16 குடியிருப்புகளில் மேல் வாடகைக்கு விட்டதற்காக, ரூ. 50 முதல் 110 வரை வாடகை பெற்றதற்காக மூடப்பட்ட வீடுகள் 11; வெளியாருக்கு விற்றதற்காக மூடப்

பட்ட விடுகள் 4; ஒரே ஒரு கேஸ் மட்டும் வாடகை கொடுக்காத தற்காக மூடப்பட்டது. அதுவும் காலையில் மூடப்பட்டு மாலையில் திறந்துவிடப்பட்டது. கிட்டத்தட்ட ஓராண்டுக் காலத்தில் 16 கேஸ்கள் தான் இப்படி வந்திருக்கின்றன.

மற்றப் பகுதிகளை எடுத்துப் பார்த்தாலும் மொத்தக் குடியிருப்புகள் 24,000 இருக்கின்றன. ஓராண்டுக் காலத்தில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வாரியத்தின் வசமாக்கப்பட்ட குடியிருப்புகள் 928. மேல் வாடகைக்காக நடவடிக்கை எடுக்கப் பட்ட குடியிருப்புகள் 441; விற்ற காரணத்திற்காக நடவடிக்கை எடுத்தது 433. இதிலே விற்ற காரணத்திற்காக நடவடிக்கை எடுக்கப்பட்ட குடியிருப்புகளைப் பொறுத்தவரை நாங்கள் கடுமை யாக இருக்கிறோம். அதை கே. எம். எஸ். அவர்கள் அங்கிகரிப் பார்கள் என்றே நினைக்கிறேன். ஏனென்றால் அவர்கள் விஷயம் தெரிந்தவர்கள்; ஆனால் சொல்லமாட்டார் — கட்சி என்ற காரணத்தால். மேல் வாடகைக்காக விடப்பட்ட குடியிருப்புகளில் 325 வீடுகள் திறந்து விடப்பட்டிருக்கின்றன.

குடிசை மாற்று வாரியம் உலகத்திற்கே வழி காட்டுகின்ற அளவுக்கு, நம்முடைய அரசாங்கத்திற்குப் பெருமை சேர்க்கும் அளவுக்கு ஏழை எளியோருக்கு வீடுகள் தரவேண்டும்; அவர்களை நல்ல நிலைமையில் வைக்க வேண்டுமென்ற நல்ல நோக்கத்திற்காகப் பணி புரிந்து வருகிற காரணத்தால் சென்னையில் இருக்கும் 1,202 ஸ்லம்களையும் சீர்திருத்த 10, 12 ஆண்டுக் காலம் ஆகும் என்ற நிலையில் நம்முடைய அரசாங்கம் எவ்வளவு சிரத்தை இதிலே காட்டுகிறது என்பதை யாரும் மறந்துவிடக் கூடாது.

நம்முடைய அரசு 17 கோடி ரூபாய் கொடுத்திருப்பது மட்டு மல்ல; ஆண்டுக்கு 3½ கோடி ரூபாய் மானியமாகத் தருவது என்பது மட்டுமல்ல; நகரத்திலே போடப்பட்டிருக்கும் அர்பன் லாண்ட் டாக்சிலிருந்து கணிசமான தொகையைக் குடிசை மாற்று வாரியத்திற்கு ஒதுக்க முன்வந்திருக்கிறது. இதற்காக அரசாங்கத்தையும், நிதித்துறையைச் சார்ந்தவர்களையும் நாம் நிச்சயமாகப் பாராட்டாமல் இருக்க முடியாது.

மத்திய தர மக்களைப்பற்றி திரு. கே. எம். எஸ். அவர்கள் சொன்னார்கள். சென்னை மாநகரப் பிரச்சினையில் நம்முடைய அரசாங்கம் அணுகுகிற அளவுக்கு இந்தியாவில் இருக்கும் எந்த அரசாங்கமும் நகரப் பிரச்சினைகளை அணுகவில்லை என்பதை முதலில் உணர்ந்தாக வேண்டும். சென்னை மாநகரத்தில் குடிசை வாழ் மக்கள் பிரச்சினைக்கு அடுத்ததாக மத்திய தர மக்கள் பிரச்சினை வருகிறது. மத்திய தர மக்களுக்காக இருக்கும் விடுகள் 1,60,000 ஆகும். ஆனால் இருக்கின்ற மக்கள் தொகை 28 லட்சம். குறைந்த பட்சத் தேவை நாலைந்து லட்சம் விடுகள். தற்போது எந்த வீட்டிலும் குடித்தனம் இல்லாமல் இருக்காது. அழகான மைலாப்பூராக இருந்தாலும், பழங்கால ஜார்ஜ் டவுனாக இருந்தாலும் ஒவ்வொரு வீட்டிலும் நாலைந்து குடித்தனக்காரர்கள். நகரம் கெடக் காரணம் — வாடகைக்கு விடுகிறவர்கள் ஒரு விட்டில் ஆறு குடித்தனம் இருக்கிறது என்று சொன்னால் தேவையான அளவுக்கு கக்கூஸ் வசதி, குளிக்கும் அறை வசதி செய்வதில்லை. ஆறு குடித்தனக்காரர்கள் என்ன செய்வார்கள்? குழந்தைகளை வெளியிலே விடுகிறார்கள். சில பேர் மூலையில் அசுத்தம் செய்கிறார்கள். இதனால் நகரத்தில் அசுத்தம் அதிகமாகி வருகிறது. குடித்தனக்காரர்கள் பிரச்சினையைத் தீர்க்க. . .

Thiru K. M. SUBRAMANIAM: Is Mr. Arangannal aware of the fact that in two ground plots, particularly in the City of Madras, 12 flats are being constructed with the approval of the Corporation of Madras and with a 30' road width, with the result the drainage is not able to draw the drainage water from these households? Is Mr. Arangannal aware of the fact that this situation had been created by the Corporatoin itself?

திரு. இராம. அரங்கண்ணல்: அங்கேயே இருந்தவர்கள் அவர்கள். அவர்களே அதற்கெல்லாம் வழி வகுத்திருக்க வேண்டும். இந்தப் பிரச்னை கார்ப்பரேஷனில் இன்று தனியதிகாரி கவனத்திலிருக்கிறது.

தற்போது கார்ப்பரேஷன் ஆக்ட், டவுன் பிளானிங் ஆக்ட் திருத்தப்பட வேண்டுமென்ற கோரிக்கை இருக்கிறது. தற்போது அனுமதியில்லாமல் வீடு கட்டினால் கோர்ட்டில் 10 ரூபாய் பைன்

போடுகிறார்கள். அதையெல்லாம் திருத்த வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. எம்.எம்.டி.ஏ. ஏற்பட்டிருப்பதன் காரணமே இந்த கன்ஜஷனைக் குறைக்க வேண்டுமென்பதற்காகத்தான். பத்தாண்டுகளுக்குப் பிறகு நகரம் வளருமானால் என்ன செய்ய வேண்டுமென்பதைத் திட்டவட்டமாகச் செய்ய அந்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

மத்திய தர வர்க்கம், ஏழைகளுக்கு இடைப்பட்ட எகனாமிகலி வீக்கர் செக்ஷனுக்கு வீட்டு வசதி வாரியத்தின் சார்பில் குடிசை மாற்று வாரியத்தின் பக்கத்திலே—100 ரூ., 110 ரூ. வாடகை கொடுக்கக் கூடியவர்களுக்கு வீடு கட்டும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டு மூவாயிரம் வீடுகள் கட்டத் திட்டம் போடப்பட்டிருக்கிறது. இந்த ஒருங்கிணைந்த காரியங்களை எல்லாம் நாம் செய்யப் போதிய நிதி ஆதாரம் இல்லை என்று சொன்னால் நம்முடைய அரசு போதிய அளவு மானியமாக வழங்க முன்வந்திருப்பது சிறப்பான அம்சம்.

திரு. கே. எம். எஸ். அவர்கள் சொன்னார்கள். மைலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர் அவர்களும் அடிக்கடி சொல்லுவார்கள். அவர்கள் சொல்ல வேண்டிய இடத்தில் சொல்லி, ஆறாயிரம் கோடி ரூபாய்க்கு பட்ஜட் போடுகிற அரசைப் பார்த்து ஆயிரம் கோடி ரூபாயாவது இந்தத் திட்டத்திற்காக இந்தியா முழுமைக்கும் ஒதுக்கச் சொல்லி அதிலே 100 கோடி ரூபாயாவது நம்முடைய மாநிலத்திற்கு வாங்கிக் கொண்டு வந்து கொடுப்பார்களானால் நிச்சயமாக எல்லாக் காரியங்களையும் முடித்து விட்டு ஆனந்தமாக சென்னை மாநகரம் இருக்கிறது என்று சொல்ல முடியும். நம்முடைய மாநிலத்திலிருந்து மத்திய அரசுக்கு நாம் வரியாகப் பெருந்தொகை செலுத்துகிறோம்; அதைப் பெற்றுத் தர வழி செய்ய வேண்டுமென்று கூறி முடித்துக் கொள்கிறேன்.

* திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவை முன் வந்திருக்கும் இந்தத் துணை மானியக் கோரிக்கைகள் மீது நான் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். நல்ல அம்சங்கள் கொண்ட இந்தத் துணை மானியக் கோரிக்கையை யாருமே, உண்மையாக இந்த நாட்டின் மீது பற்றுள்ளவர்கள் வரவேற்காமல் இருக்க முடியாது என்பதை நான் முதலிலே சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

1975 நவம்பர் 4] [திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி]

குறிப்பாக, கடந்த காலத்தில் கடும் வறட்சி ஏற்பட்டு, பிறகு நல்ல மழைபெய்து, இப்போது நல்லதொரு சூழ்நிலையைச் சந்தித்துக் கொண்டிருக்கிறோம். கடும் வறட்சி ஏற்பட்டபோது நமது அரசு எப்படி நடந்து கொண்டது என்பதை நாம் நினைத்துப் பார்க்காமல் இருந்திட முடியாது. என்னைப் பொறுத்து—குறிப்பாக இராமநாதபுரம் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் அங்குள்ள மக்கள் வறட்சிக் காலத்தில்—அன்றாடம் தேவைக்குள்ள உணவுப் பொருள்களை வாங்குவதற்கு முடியாமல் இருந்ததால்—வறட்சிப் பணிகள் மூலம் கிடைத்த பணத்தைக் கொண்டு அன்றாடம் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளக்கூடிய ஒரு வாய்ப்பு இருந்தது.

முன்பு அங்குள்ள மக்கள் அன்றாடம் தேவைக்குள்ள உணவுப் பொருள்களை வாங்குவதற்கு முடியாமல் தவித்துக் கொண்டிருந்த காட்சியையும், வறட்சிப் பணிகள் நடந்துகொண்டிருந்தபோது இருந்த நிலையையும், வறட்சிப் பணிகள் மூலம் கிடைத்துக் கொண்டிருந்த வருவாயைக் கொண்டு தங்களுக்கு வேண்டிய அன்றாடத் தேவைகளைப் பெற்றுக் கொண்டிருந்த நிலையையும் பார்க்கும்போது நிச்சயமாக வறட்சிப் பணிகளைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

மேலும், பிற்பட்டோர், வாழ்க்கையில் நலிந்தவர்கள், ஊனமுற்றவர்கள், கைவிடப்பட்டவர்கள் இவர்களுக்காக நம் அரசு தொடர்ந்து வேண்டிய உதவிகளை, பணிகளைச் செய்து வருவதை நான் திரும்பத் திரும்ப எடுத்துச் சொல்ல வேண்டிய அவசியமில்லை என்று கருதுகிறேன். ஒட்டுமொத்தமாகப் பார்த்தால் நம் அரசு பிற்பட்டோருக்காக எவ்வளவு காரியங்களைச் செய்ய முடியுமோ அதைச் செய்ய வேண்டும் என்ற நோக்கத்தில் காரியங்கள் செய்து வருவதைக் காண்கிறோம். அதேபோல் வாழ்க்கையில் நலிந்தவர்கள், ஊனமுற்றோர், கைவிடப்பட்டவர்கள் இவர்களுக்காக என்னென்ன செய்ய முடியுமோ அவற்றை அரசாங்கம் செய்து வருவதையும் காண்கிறோம். அவற்றையெல்லாம் பார்க்கும்போது நாம் இந்தத் துணை மானியக் கோரிக்கைகளை வரவேற்காமல் இருக்க முடியாது.

[திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி] [1975 நவம்பர் 4

குறிப்பாக, நம் அரசு சந்திக்க வேண்டிய அல்லது சந்தித்துக் கொண்டிருக்கிற ஒன்று அல்லது இரண்டு முக்கியமான விஷயங்களை இந்த நேரத்தில் அரசுக்கு நினைவுபடுத்த வேண்டியது அவசியம் என்று நான் கருதுகிறேன்.

மழை நன்றாகப் பெய்திருக்கிறது. வேண்டிய அளவிற்கு நமக்கு நெல் அறுவடையாகிக் கொண்டிருக்கிறது என்ற நிலைமையில் நாம் இப்போது இருக்கிறோம். அப்படி இருந்தபோதிலும்கூட உணவு தானியங்களைப் பொறுத்தவரையில் நமது தமிழகத்தில் எல்லா இடங்களிலும் ஒரே விலையில் கிடைக்கிறதா என்று பார்த்தால் நாம் நமது உணவுக் கொள்கையில் ஒரே சீரான கொள்கையைக் கடைப்பிடித்துக் கொண்டிருக்கிறோமா அதன் மூலம் நாட்டு மக்களுக்கு நல்ல ஒரு வசதி ஏற்பட்டிருக்கிறதா என்பதை நினைத்துப் பார்க்கும்போது அதில் கொஞ்சம் தீவிரமாகக் கவனம் செலுத்த வேண்டிய நிலை இருக்கிறது என்று நான் இந்த நேரத்தில் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

எல்லோருக்கும் தெரியும். இராமநாதபுரம் மாவட்டம் என்பது ஒரு பின்தங்கிய பகுதி என்பது எல்லோருக்கும் தெரியும். அங்கு நெல் விளைச்சல் மிக மிகக் குறைவு. அங்குள்ள மக்களின் தேவையைப் பூர்த்தி செய்யுமளவிற்கு நெல் விளைச்சல் அங்கு இல்லை. அங்கு பெரிய தொழிற்சாலைகள் இருக்கின்றனவா என்றால் அதுவும் இல்லை.

அங்குள்ள மக்கள் வேலை செய்து வருவாய் பெறக்கூடிய அளவிற்குத் தொழிற்சாலைகள் இருக்கின்றனவா என்றால் அதுவும் மிகக் குறைவு. அங்குள்ள மக்கள் விவசாயத்தின் மூலம் வருவாய் ஈட்ட வேண்டுமென்றால் அதற்கும் வாய்ப்புகள் குறைவு. அன்றாடம் வாழ்க்கைக்குத் தேவைப்படுகிற அளவிற்கு மக்களுக்கு ஊதியம் கிடைக்கிறதா என்றால் அது மிக மிகக் குறைவு. ஆக, அங்குள்ள மக்கள் ஒரு படி அரிசி ஆறு ரூபாய் கொடுத்து வாங்க வேண்டிய நிலைமை இன்றும் இருந்து கொண்டிருக்கிறது. பக்கத்திலுள்ள மதுரை மாவட்டத்திற்குச் சென்றால் அங்கு நான்கு ரூபாய்க்கு அரிசி வாங்கலாம். கொஞ்சம் தள்ளி தஞ்சாவூருக்குப் போனால் ரூபாய் மூன்று அல்லது ரூபாய் இரண்டுக்கு ஒரு படி அரிசி வாங்கலாம். வட ஆற்காடு மாவட்டத்தை எடுத்துக் கொண்டால் அங்கு ஒரு விலை.

1975 நவம்பர் 4 [திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி]

ஆக, ஒவ்வொரு மாவட்டத்திலும் தனித்தனியாக ஒவ்வொரு விலை இருக்கின்றது. இராமநாதபுரம் மாவட்ட மக்கள் இந்தக் கொள்கை மூலம் அதிகமாகப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த நிலையை நாம் ஏன் வைத்துக் கொண்டிருக்க வேண்டும் என்பது எனக்குப் புரியவில்லை. தொடர்ந்து பல மாதங்களாகவே இந்த நிலை நீடித்துக் கொண்டிருக்கிறது. இந்த முறையை மாற்றியமைக்க, நமக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய இந்தக் கஷ்டங்களையெல்லாம் நிவர்த்தி செய்ய ஏதாவது ஏற்பாடுகளை நமது அரசு எடுத்துக் கொண்டிருக்கிறதா என்று பார்த்தால் என்னைப் பொறுத்தவரையில் அந்த மாதிரி நடவடிக்கைகள் இருப்பதாகத் தெரியவில்லை. நமக்கு ஒரு சீரான உணவுக் கொள்கை இருக்க வேண்டும். எந்த மாவட்டத்திற்குப் போனாலும் சரி படி அரிசி மூன்று அல்லது நான்கு ரூபாய் என்றிருந்தால்தான் எல்லா மாவட்டத்திலும் ஓரளவிற்கு நமக்கு அரிசி ஒரே விலையில் நிச்சயமாகக் கிடைக்கும் என்ற நிலை ஏற்படும். அதற்கு வேண்டிய முயற்சிகளை எடுத்துக்கொள்ள வேண்டிய ஒரு அவசர நிலை இப்போது ஏற்பட்டிருக்கிறது என்பதை நான் சொல்லித்தான் ஆக வேண்டியிருக்கிறது. அதில் அரசு கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நம் நாட்டில் உள்ள முக்கியமான பிரச்னை அடல்ட்ரேஷன். முன்பே அங்கே இங்கே என்று ஏதோ ஓரளவு கலப்படம் இருக்கிறது என்று கேள்விப்படுவோம். சமீப காலத்தில் வர, வர கலப்படம் என்பது நம் நாட்டு பொருளாதாரத்தை மட்டுமல்ல, மக்களின் வாழ்க்கையைப் பாதிக்கக்கூடிய அளவில் இருக்கிறது என்பதை நினைத்துப் பார்க்க வேண்டும்.

சமீப காலத்தில் பேப்பர் வாயிலாக அறிந்தோம். விருதுநகரில் உள்ள கலப்படத் தொழிற்சாலையைப் பற்றியெல்லாம் அறிந்தோம். கலப்படம் செய்வதால் மக்களுக்கு எந்தளவிற்கு சுகாதாரக் கேடு விளைகிறது என்பதைப் பற்றிச் சிந்திக்காமல், ஈவு இரக்கம் இல்லாமல் அப்படி கலப்படம் செய்து, ஒரு பெரிய தொழிற்சாலை போன்ற அளவில் கலப்படம் செய்ய வேண்டிய நிலையில் அவர்கள் இருந்து கொண்டிருக்கிறார்கள் என்றால் அதைத் தடுக்க வேண்டிய ஒரு முயற்சியில் நம் அரசு என்ன செய்திருக்கிறது என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டிய நிலையில் இருக்கிறோம்.

[திரு. சௌடி. எஸ். சுந்தரபாரதி] [1975 நவம்பர் 4

சென்ற சில நாட்களுக்கு முன்னால் அங்கு சில நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. விருதுநகரில் மட்டும்தான் இத்தகைய நிலை இருக்கிறது என்று சொல்லவில்லை. வேறு இடங்களிலும் இருக்கலாம். என் பக்கத்து ஊர், அந்த ஊர் வழியாக பலமுறை செல்ல வேண்டியிருப்பதால் சொல்கிறேன்.

(பேரவைத் தலைவர் தலைமை)

ரப்பர் காய் என்று சொல்கிறார்கள். ரோட்டில் போனால் இரண்டு பக்கமும் மலைபோல் காட்சியளிக்கக்கூடிய அளவில் அந்த ரப்பர் காய்கள் இருக்கும். அது எதற்காக இருக்கிறது என்று நமக்குத் தெரியாது. இந்தக் காயிலிருந்து ஒரு எண்ணெய் எடுக்கப்படுவதாகவும், அதைக் கொண்டு நல்லெண்ணெய் மட்டும் அல்ல வேறு எந்த எண்ணெய்யாக இருந்தாலும் உட்கொள்ளும் எல்லா எண்ணெய்களிலும் கலப்படம் செய்கிறார்கள். அரிசியில் கலப்படம் செய்கிறார்கள். எல்லாவற்றிலும் கலப்படம் செய்யும் ஒரு நிலை அங்கு ஏற்பட்டிருக்கிறது. இத்தகைய ஒரு நிலை நம் நாட்டில் வளராது தடுக்கக்கூடியவிதத்தில் காரியங்கள் செய்யப்படுகின்றனவா என்றால் மக்கள் மனதில் அந்த நம்பிக்கை ஏற்படவில்லை. இதைத் தீவிரமாகச் செய்ய வேண்டும். அப்படிச் செய்தால்தான் நாட்டு மக்களின் உயிரைப் பாதுகாத்து, சுகாதாரக் கேடுகள் ஏற்படாத முறையில் நாம் நம்மைப் பாதுகாத்துக் கொள்ளமுடியும். ஆக, இந்த இரண்டு முக்கிய பிரச்னைகளையும் மற்ற விஷயங்களை நல்லமுறையில் சந்தித்துக் கொண்டிருக்கும் அரசு இவற்றையும் நல்லமுறையில் கண்காணித்துச் செயல்பட வேண்டும் என்று கேட்டுக் கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. ப. முத்துசாமி: தலைவரவர்களே, இந்தத் துணை மானியக் கோரிக்கையை ஆதரித்து என்னுடைய கருத்துக்களை இங்கே கூற விரும்புகிறேன்.

குறிப்பாக, கடந்த ஓராண்டுக் காலத்தில் அரசாங்கத்தின் கையில் கிடைத்து இருக்கும் வருமானம், அதிலே இந்த அரசாங்கம் செய்து இருக்கின்ற நற்பணிகள் இவைகளையெல்லாம் கருத்தில் கொண்டு பார்க்கிற நோக்கில் நிச்சயமாக இந்தத் துணை மானியக் கோரிக்கையை எதிர் வரிசையில் இருக்கின்றவர்களும் மனதார வரவேற்பார்கள், பாராட்டுவார்கள் என்பதை நான் முதலிலே சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

1975 நவம்பர் 4] [திரு. ப. முத்துசாமி]

ஏற்கனவே மதுவிலக்கால் ஏற்படும் இழப்பு. அதே போல் குதிரைப் பந்தய ஒழிப்பால் ஏற்பட்ட இழப்பு, அதே போல் பரிசுச் சீட்டு நடத்துவதை நிறுத்தியதால் ஏற்பட இருக்கும் இழப்பு—இந்த நிதி ஆதாரங்கள் அரசாங்கத்தின் கையிலிருந்து போய்விட்ட பின்னும், மிகப் பெரிய வறட்சியை, வரலாறு காணாத வறட்சி என்று சொல்கிற அளவுக்கு மிகப் பெரிய வறட்சியை, இந்த அரசாங்கம் சந்திக்க நேரிட்ட நிலைமை, இந்த வறட்சிப் பணிகளுக்கு இந்த அரசு எடுத்துக் கொண்ட முயற்சிகள் ஆகியவற்றை நிச்சயமாக நடுநிலையில் உள்ளவர்கள் பாராட்டாமல் இருக்க முடியாது என்பதை நான் முதலில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அது மாத்திரமல்லாமல், இந்த அரசாங்கம் செய்கிற எந்தக் காரியமாக இருந்தாலும், அந்தக் காரியங்கள், அந்தத் திட்டங்கள் எல்லாம், சமுதாயத்தில் சாதாரண நிலையில் இருக்கின்ற, உழைக்கின்ற, கஷ்டப்படுகின்ற, சமுதாயத்தில் கீழ் மட்டத்தில் இருக்கின்ற மக்களுக்கு உதவி செய்யும் திட்டங்களாகவே இருந்து வருகின்றன என்பதை இங்கேயுள்ள பலரும் குறிப்பிட்டுக் கூறியிருக்கிறார்கள்.

அது கண்ணொளி வழங்கும் திட்டமாக இருந்தாலும் சரி, பிச்சைக்காரர் மறுவாழ்வுத் திட்டமாக இருந்தாலும் சரி, ஊனமுற்றோர் மறுவாழ்வுத் திட்டமாக இருந்தாலும் சரி, விதவைகளைக் காக்கும் திட்டமாக இருந்தாலும் சரி, அப்படிப் பட்ட திட்டங்களெல்லாம் சமுதாயத்தில் நலிந்து இருக்கும் மக்களுக்கு, யாருமே காப்பாற்ற முடியாத நிலையில் அனாதைகளைப் போல் சமுதாயத்தின் ஓரத்தில் நசுங்கி வாழ்ந்து கொண்டு இருக்கும் மக்களுக்கு பாதுகாப்புத் திட்டமாகத்தான் இருக்கிறது என்கிற அடிப்படையில் இந்த மன்றத்திலுள்ளவர்கள் வரவேற்கவும், பாராட்டவும், போற்றவும் முற்பட்டு இருக்கிறார்கள் என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இங்கே எதிர்வரிசையில் இருப்பவர்கள் பேசும்போது, இந்தத் திட்டங்களை எதிர்ப்பதற்குப் பயந்து, மற்ற வகைகளில் விளம்பரம் செய்வதைக் குறைக்க வேண்டுமென்ற முறையில் பேசினார்கள். நான் மிகவும் உறுதியோடும், பணிவோடும் கேட்டுக் கொள்வதெல்லாம், இப்படிப்பட்ட நல்ல காரியங்களுக்கு வசதி

படைத்தவர்கள், பெரிய பெரிய ஆலை அதிபர்கள் அல்லது ஓரளவிற்கு மற்றவர்களுக்கு உதவி செய்யக்கூடிய நிலையில் இருப்பவர்களிடமிருந்து பணம் பெற்று, இப்படிப்பட்ட திட்டங்களுக்கு உதவி செய்வதில் தவறில்லை என்று நான் கருதுகிறேன்.

அது மாத்திரமல்ல, இந்தத் திட்டத்திற்கு இந்த அரசு எடுத்துக் கொண்டு இருக்கும் முயற்சிக்கு உதவியாக, மத்திய அரசாங்கத்திடமிருந்து இப்படிப்பட்ட சமுதாய நலத் திட்டங்களுக்கு உதவி செய்வதன் மூலம் இன்னும் பல லட்சக்கணக்கான பேர், ஆயிரக்கணக்கான பேர் இந்தத் திட்டத்தில் சேர்க்கப்பட்டு, அவர்களுக்கும் உதவி செய்ய முடியும், அப்படிப்பட்ட நல்ல காரியங்களுக்கு, மத்திய அரசு உதவி செய்ய முன் வரவேண்டுமென்று கேட்கிற நேரத்தில், நீங்களும் ஒத்துழைப்புத் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இங்கே வறட்சி நிவாரணப் பணியை, அவரவர்களுக்கு ஏற்பட்ட கண்ணோட்டத்தில் பலர் பேசினார்கள். இந்த வறட்சி நிவாரணப் பணி ஆரம்பிக்கிற நேரத்தில், இங்கே போன தொடர்க் கூட்டத்தில் கூட அது பற்றி எடுத்துச் சொல்லப் பட்டது. நான் ஊராட்சி ஒன்றியத்தின் தலைவனாக இருக்கிறேன் என்ற முறையில் இந்த வறட்சி நிவாரணத் திட்டங்கள் எந்த முறையில் சிறப்பாக நடைபெற்றன என்பதைச் சொல்வதற்கு விரும்புகிறேன். ஏனெனில் இந்த வறட்சி நிவாரணப் பணித் திட்டம்—சென்ற தடவை நடந்தது போல் இல்லாமல் மிக ஆரஅமர யோசித்து, அதே சமயத்தில் துரிதமாக கஷ்டப்படுகிற மக்களுக்கு வேலையில்லாமல் திண்டாடுகிற மக்களுக்கு, வேலை தரவேண்டுமென்ற அடிப்படையில் தீட்டப்பட்டது. வேலை ஆரம்பிக்கும் நேரத்தில் கூட அதிகமாக உழைக்கும் மக்களுக்கு நேரடியாக அந்தப் பணம் போய்ச் சேர வேண்டுமென்று சொல்லப்பட்டது. வெறும் பொருள்கள் வாங்கி, சிமெண்ட் போன்ற பொருள்கள் வாங்கி, கட்டிடங்கள் கட்டி அதன் காரணமாக அதிகமான தொகை உழைக்கும் மக்களுக்குப் போய் சேராமல் இருக்கக் கூடாது என்பதற்காக, இந்தத் திட்டத்தின் கீழ் உழைக்கும் மக்கள் நேரடியாகப் பயன் பெற வேண்டுமென்று குறிப்பிட்டார்கள்.

அதிகமாகப் பழைய ரோடுகளை மண் வெட்டி சரி செய்தால் போதும் என்ற நிலையெல்லாம் கடந்து, செய்யப்படும் வேலைகள் நீண்ட நாட்களுக்குப் பயன்பெறும் வகையில் இருக்க வேண்டுமென்ற அடிப்படையில் அதிகமான வேலைகளைக் குடிநீர்ப் பிரச்னையைத் தீர்ப்பதற்காகக் கிணறுகள் ஆழப்படுத்துதல், கிணறுகள் இல்லாத இடங்களில் அப்படிப்பட்ட கிணறுகளை வெட்டித் தருதல், ஆகியவற்றிற்கு முதலிடம் கொடுக்கப்பட்டது. குளங்கள் தூர் எடுக்கப்பட்டன. வாய்க்கால்கள் தூர் எடுக்கப் பட்டன. இப்படிப்பட்ட பணிகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. வீணாக இந்தப் பணத்தைச் செலவு செய்யவில்லை. ஊராட்சிகளில் நேரடியாக இந்த வேலைகள் நடைபெற்றதைப் பார்த்தவர்கள் இவ்வாறு சொல்ல மாட்டார்கள்.

ஒவ்வொரு வேலைக்கும் நெம்பர் போட்டு, எந்தெந்த வேலைகள் நடைபெறுகின்றன, எந்த வேலை எந்த நிலையில் இருக்கிறது, எப்போது துவங்கப்பட்டது, எப்போது முடிவடையும் என்ற முறையில் ஒரு ரிஜிஸ்டரில் இவையெல்லாம் பதியப்பட்டு ஒரு புதிய முறையில் வேலைகள் நடைபெறுவது கண்காணிக்கப்பட்டு வந்தது. ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் எத்தனை வேலை கொடுக்கப்பட்டது. எத்தனை வேலைகள் எடுக்கப்பட்டன, எந்த வேலை எந்த நிலையில் இருக்கிறது, அது ஆரம்பிக்கப்பட்ட தேதி, முடிவடையும் தேதி என்று பட்டியல் தயாரித்து வைத்து அதைக் கண்காணித்து வந்தோம். ஆகவே, இப்படிச் செய்ததால் எங்கேயும் வேலை சரியாக நடைபெறாமலும் இல்லை, பணமும் வீணாகச் செலவழிக்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொண்டு, அரசாங்கமும் இந்தப் புதிய முறையில் இதைச் செய்து இருக்கிறது என்றும் தெரிவித்துக்கொள்கிறேன்.

என்னுடைய ஊராட்சி ஒன்றியத்தில் சுமார் 300-க்கும் மேற்பட்ட வேலைகள் முடிக்கப்பட்டிருக்கின்றன. மொத்தம் ரூ. 12,25,000 ஒதுக்கப்பட்டிருக்கிறது. எந்த வேலையும் முடிக்கப் பெறாத நிலையில் இருக்கிறது என்று சொல்ல முடியாது. புதிய கிணறுகள் தோண்டுவதில் மட்டும் இன்னும் கொஞ்சம் ஆழப்படுத்த வேண்டிய நிலை இருக்கிறது. மற்றபடி எடுத்த வேலை முடிக்கப்படாமல் இல்லை என்று சொல்லிக் கொள்கிறேன். சில இடங்களில் குறைகள் இருக்கலாம். அதற்காக எல்லாவற்றையும் குறை சொல்வது பொருத்தம் அல்ல.

அரசாங்கம் மட்டும் சரியான நேரத்தில் வேலைவாய்ப்புத் திட்டம் கொடுக்காமல் இருந்து இருந்தால் சாதாரண மக்கள் பலபேர் தமிழ்நாட்டில் பட்டினிச் சாவிற்கு ஆளாகியிருப்பார்கள். இதை நல்லமுறையில் சமாளித்ததற்காக எதிர் வரிசையில் உள்ளவர்கள் இந்த அரசாங்கத்தைப் பாராட்ட, பெருமையாகப் பேசாவிட்டாலும், நேர்மையுள்ளவர்கள், நல்லவர்கள், பாராட்டுகிற அளவுக்கு இருக்கிறது. அரசியல்வாதிகளே நேரடியாக வந்து பார்த்து, மத்தியில் இருக்கிறவர்களே வந்து பார்த்துவிட்டு, பரவாயில்லை, நல்ல முறையில் நடக்கிறது என்று நேரடியாக சர்ட்டிபிகேட் கொடுக்கும் அளவுக்கு இந்த அரசாங்கம் காரியம் செய்து இருக்கிறது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, அதிகமாக விவசாயிகளைப் பொறுத்தவரையில் இந்த ஆண்டு வறட்சி ஏற்பட்டதால், கடன் வசூலை ஒத்தி வைத்து இருக்கிறோம். இப்போது புதிதாக அந்த வகையில் ஒரு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. 1—10—75 தேதிக்குப் பிறகு அந்தக் கடனை வசூலிக்கலாம் என்று போட்டு இருக்கிறார்கள். அதிலே ஒன்று குறிப்பிட்டு இருக்கிறார்கள், வறட்சி ஏற்பட்ட பகுதியாக இருந்தால், வறட்சிக்குப் பிறகு ஏற்பட்ட ஒரு விளைச்சலுக்குப் பின்னாலே அதை வசூலிக்கலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். என்னுடைய வேண்டுகோள் என்னவென்றால், சில இடங்களில், இவ்வளவு மழை எல்லா இடங்களிலும் பெய்தும் கூட, மழை இன்மையால் பாதிக்கப்பட்டு இருக்கிறது என்று குறிப்பிட விரும்புகிறேன். வேடசந்தூர், பழனி தாலுக்காகளில் இன்னும் அதிகமான அளவுக்குப் பாதிப்பு இருக்கிறது. 110 அடி ஆழம் உள்ள கிணறுகளில் கூட தண்ணீர் இல்லை.

ஆகவே, அப்படிப்பட்ட பகுதிகளில் வேளாண்மை இதுவரையில் வைக்கவில்லை. அப்படிப்பட்ட பகுதிகளில் விவசாயக் கடனை வசூலிப்பது சாத்தியமல்ல. அதுவும் சென்ற ஆண்டு கடனையும் சேர்த்து வசூலித்தால் விவசாயிகள் மிகவும் பாதிக்கப்படுவார்கள். ஆகவே, இதைப் பரிசீலித்து, மாவட்ட வாரியாக எந்தெந்த தாலுக்காவில் இப்படிப்பட்ட நிலைமை இருக்கிறது என்பதைக் கவனத்தில் கொண்டு, ஒத்தி வைத்து இருக்கும் கடனை வசூலிக்காமல் இருக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் குடவனாறு திட்டம் நிறைவேற்றப் பட்டு இருக்கிறது என்பதைப் பெருமையாகச் சொல்ல முடியும். பழனி மலைச் சாரலில் பாலாறு—பொரந்தலாறு திட்டம் நிறைவேற்றப்பட இருக்கிறது. அதற்காக நான் இந்த அரசுக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன். குடவனாறு திட்டத்தில் கிட்டத்தட்ட—நான் பஞ்சாயத்துத் தலைவராக இருக்கும் பகுதியில்—500 வீடுகள் தண்ணீருக்குள் மூழ்க இருக்கிறது. அப்படிப்பட்டவர்களுக்கு நிலம் இழந்த அவர்களுக்கு, இன்னும் நஷ்ட ஈடு கொடுக்கப்படாமல் இருக்கிறது. இன்னும் 10–15 நாட்களில் அங்கே தண்ணீர் தேக்க இருப்பதாகச் சொல்கிறார்கள். அப்படியிருக்கும்போது இன்னும் அவர்களுக்கு நஷ்ட ஈடு தாராமல் இருப்பதால் அவர்கள் மிகவும் கஷ்டத்தில் இருக்கிறார்கள். ஆகவே, உடனடியாக நஷ்ட ஈடு தருவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயிகளைப் பொறுத்தவரையில், கடந்த காலத்தில் 'பான்ட் ஸ்கீம்" குட்டைத் திட்டம் பெரும் உதவிகரமாக இருந்தது. ஒவ்வொரு பகுதியிலும் இப்படி ஏற்படுத்தியதால் கிணறுகளுக்கு நல்ல விதத்தில் தண்ணீர் வந்தது. அதனால் பல விவசாயிகள் பயன் அடைந்தனர். இந்த ஆண்டு ஒரு புது ஆணை போட்டு இருக்கிறார்கள். அந்த பான்ட் ஸ்கீம் சிறப்பாக அமையவில்லை, ஆகவே, அது தேவையற்றது என்று புதிதாக ஆணை போட்டு இருக்கிறார்கள். குட்டை திட்டத்தைப் பொறுத்தவரையில், அது விவசாயிகளுக்கு நல்ல முறையில் உதவிகரமாக இருந்ததால் அந்தத் திட்டத்தை தொடர்ந்து செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-30)

இன்னொன்று, எங்களுடைய மாவட்டத்தில் நீண்ட நெடுநாளாக இருந்து வருகின்ற பிரச்னை. தேனி பகுதியில் வெங்கடாசலபுரம் கால்வாய் திட்டத்தை நிறைவேற்றித் தர வேண்டுமென்று 1948-லிருந்து, காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலிருந்து அந்தப் பகுதி மக்கள் அமைச்சர்களைக் கேட்டுப் பார்த்தார்கள். அந்த மக்களின் கோரிக்கை நியாயமானதாகும். அந்தப் பகுதி மக்கள் அந்தத் திட்டத்தைத்தான் நம்பியிருக்கிறார்கள். சென்ற தடவை நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எங்கள்

மாவட்டத்திற்கு வருகை தந்தபோது, சட்டமன்ற உறுப்பினர் திரு. பழனிவேல் ராஜன் எல்லோரும் சேர்ந்து இந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டோம். இதுவரையில் அந்தத் திட்டம் சேர்க்கப்படவில்லை. இந்தத் துணை மானிய கோரிக்கையிலும் அதுபற்றி குறிப்பிடப்படவில்லை. அந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டால், ஏராளமான ஏக்கர் நிலங்கள் சாகுபடியாகும். அந்தப் பகுதி மக்களின் பாராட்டுதல்களும் அரசாங்கத்திற்குக் கிடைக்கும்.

இப்படி அந்தப் பகுதி மக்கள் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்ற திட்டத்தை, துணை மானியத்தில் சேர்த்து நிறைவேற்ற அறிவிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

ஏற்கனவே குறிப்பிட்டது போல், மழை இல்லாத அந்தப் பகுதியில் கடனை வசூலிக்கின்ற கெடுவை நீட்டிக்க வேண்டுமென்று கேட்டு முடிக்கிறேன்.

THIRU B. VENKATASWAMY: Mr. Deputy Speaker, Sir, in support of the cut motions given by me already to the First Supplementary Statement of Expenditure for the year 1975–76. I want to offer a few remarks.

At present emergency exists in the nation. We are seeing that everywhere people are talking about emergency. But what has happened now ?

For example, prices are shooting up. I do not know what are the measures adopted by the Government to bring down the prices. As my hon. Friend stated earlier, chillies rate is Rs. 22 per k.g. and onion is selling at Rs. 2 per k.g. They are all common man's food articles and every day people want it. I do not know what prevented the Government from taking the necessary steps to arrest the prices of essential commodities going up, especially when the Emergency exists.

I can say boldly that Emergency is to suppress the Opposition Parties only. They should not talk about all these things, that is, they should not say that the prices of essential commodities have shot up. If they do that, they will be put inside. But what is actually happening ? The Government are misusing the powers.

1975 நவம்பர் 4] [Thiru B. Venkataswamy]

It is purely a dictatorial attitude that the Government of India is adopting. In spite of promulgation of Emergency what are the concrete steps taken by the Government of India or the Government of Tamil Nadu to arrest the soaring prices, to create employment opportunities. Unemployment is the great problem facing the nation both among the educated and the uneducated people.

Regarding other national assets, viz., production of electricity, water distribution and other things, no proper steps have been taken so far by the Government of India. Recently, our State Government have enhanced the electricity rate by 4 paise per unit for agricultural consumption. It is really very unlawful and it is also unbearable by the agriculturists.

For example, when the rate was increased even by half a paisa last time, there was a lot of protest. There was representation from the agricultural community and there were some deaths also at that time. But after the promulgation of Emergency, the Government, adopting their dictatorial attitude, have enhanced the rate by 4 paise. The agriculturists are not in a position to increase the price of their produce. If they so protest, the Government may put them inside the jail. People are having this fear.

Emergency is being utilised for adopting dictatorial attitudes. So, this electricity rate should be reduced because agricultural people are suffering very much. The agricultural community, 80 per cent of the population, is suffering a lot. At the same time they are not in a position to add even Rs. 5 or 10 to the price of paddy per quintal, whereas in the industrial sector, if the electricity rate is increased even by one paisa, they will add it to their cost of production and increase the price of the commodity.

Actually people are suffering a lot. So, I request the Hon. Chief Minister to consider this aspect, especially this 4 paise increase in the electricity tariff to agriculturists and reduce the same. Only 25 per cent of the total electricity produced is consumed by agriculturists and 75 per cent by the industrialists. They can increase one paisa in the industrial sector and thereby they can definitely make 80 per cent of the population feel very happy. At the same time they can add this to their profit and people also will be happy. So, I request this Government to

examine this matter very carefully and see that the increase in the rate by 4 paise is reduced to the original rate of 12 paise or so per unit.

Then, Sir, coming to procurement policy, the procurement rates are very low. We are repeatedly asking the Government to increase the procurement rates. The representatives of the Agriculturists' Association from Coimbatore have met the Hon. Minister Thiru Madhavan. He was reported to have told that he could not increase the rate of paddy per quintal beyond the rates already fixed inclusive of incentive of Rs. 10. He frankly refused to increase the rate per quintal because it was the policy adopted by the Government of India. What kind of policy is this ? I do not know. There is no other go for agriculturists and the agricultural community cannot do any other job, but they will have to stick on to agriculture. They cannot fix their produce price, but only the Government are fixing the same. This is very unlawful and this should be changed and the procurement rates should also be enhanced.

Regarding collection of loans, the Government are going to relax it for some time to come, but after January, they are going to have a collection campaign. I request the Government to adopt a go-slow policy in certain areas like Ramanathapuram and Dharmapuri districts. Wherever there is failure of crops, it should be taken into consideration and the Government should see that harassment to agriculturists is avoided because they are suffering from chronic drought conditions.

Regarding drought relief in the State, our Government have done well within the available resources. But actually, this is not at all sufficient. In certain villages people are not in a position to get even drinking water supply. The Centre has also rejected to give further money for drought relief. It is really a very sorry state of affairs in the State. When the people are suffering from drought, the Centre is not coming forward to provide them even with drinking water. This kind of attitude should not be there in the nation, especially when people are suffering after 20 years of independence for want of drinking water.

1975 நவம்பர் 4] [Thiru B. Venkataswamy]

It is really very bad and we must see that a crash programme is evolved in this regard. Just as the Government have taken bold steps to electrify all the villages in the nook and corner, in the same way the drinking water problem also will have to be tackled by implementing a crash programme. We must fix a time-limit and within that period we must see that all the villages in the nook and corner are supplied with protected drinking water.

The Government were telling that they were helping the weaker sections. They will have to make all kinds of arrangements and see that money is made available to the poorer classes of the society. I have given a cut motion also in this regard that mini banks should be opened in all Panchayat Headquarters. Then only money will be available to the small ryots and they can also improve their economic prosperity.

Regarding rural roads, the Government have proposed to lay rural roads---all-proof roads—in all places having 1,500 population. I came to understand that in so many areas the roads have yet to be laid. For example, in my area, Anchetty to Urigam road, Anchetty to Natarampalli road, Javalagiri to Shoolakunta road, etc., have not been included in the programme of rural roads. So, I request the Hon. Minister to do this not only in my area but also in the entire State wherever there is a population of 1,500 people. Wherever there is a population of 1,500 people, the rural roads scheme should be implemented properly and immediately.

Coming to other points, I would like to say that anicuts have to be constructed in Doddahalla and Kalavarapalli. The work should be taken up immediately and employment opportunities to the local people should be given and also production of foodgrains should be increased.

Regarding the industrial complex at Hosur, I would like to suggest a few things here. I am thankful to the Government for sanctioning an industrial complex in Hosur. At the same time, we must also safeguard the interest of the local people. Industrialists are coming there to start industries and they are acquiring private lands. I came to understand that the Government is going to fix only Rs. 2,000 per acre. If you want to purchase

lands for private purpose from private ryots or local people, the cost per acre is Rs. 10,000. The Government's fixing at Rs 2,000 per acre is a sorry state of affairs. I have represented this matter to the Hon. Minister and he has also agreed to look into the matter. The people in that area are very poor. They have no other opportunity except to work as cooly. There are about 90 acres of garden lands. I request the Hon. Minister to eliminate this part of land because good vegetables and food crops are produced there. In Munandapalli and Juguvadi, there are about 90 acres of lands. These can be eliminated and dry lands can be acquired. There is a tendency on the part of the industrialists to give employment to outsiders. People from outside are appointed in the industrial complex. I request the Government to see that preference is given to the people of these areas. I request the Government to impose certain restrictions on them and adopt the principle of providing employment opportunities only to the sons of the soil. Then only it will enable our people to get employment.

Then coming to other points, I would like to say that there is a great demand for a College in Hosur area. Since I entered as M.L.A—for the past 9 years—I am requesting the Hon. Chief Minister and the Education Minister to start a College. Now the industrial complex has come and the industrialists are asking for a college there to educate their children. Most of the industrialists coming there ask us: 'Is there any College?'. Because every industrialist is interested in educating their children. I, therefore, request the Hon. Chief Minister and the Education Minister to start a College at Hosur.

Thank you, Sir.

* திரு. சோ. அழகர்சாமி: தலைவரவர்களே, நம் முன்னால் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிற துணை மதிப்பீட்டின் மீது எங்கள் கட்சியின் சார்பில் கொடுத்திருக்கிற வெட்டுப் பிரேரணைகளை ஆதரித்து சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

குறிப்பாக, வறட்சி நிவாரணப் பணிகள் சம்பந்தமாக இரண்டு கோடியே 30 லட்சம் ரூபாய் கூடுதலாகக் கேட்கப்பட்டிருக்கிறது. அதோடு அது சம்பந்தப்பட்ட சிவில் சப்ளைஸ் சம்பந்தமாக 73,000 ரூபாய் அதிகமாகக் கேட்கப்பட்டிருக்கிறது. இந்த

1975 நவம்பர் 4] [திரு. சோ. அழகர்சாமி]

இரண்டும் ஒன்றோடொன்று இணைந்திருக்கின்றன. ஏனென்றால் வறட்சி நிவாரணத்தின் ஒரு பகுதியாகத்தான் சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் மூலம் நியாய விலையில் உணவுப்பொருள் தரப்படுகிறது.

ஆனால், வறட்சி நிவாரணப் பணிகள் சம்பந்தமாக நம்முடைய முதலமைச்சருக்கும் மத்தியிலே இருக்கிற நிதி அமைச்சர் சுப்பிரமணியத்திற்கும் சொந்தத் தகராறு ஏற்பட்டது மாதிரியான கருத்து மோதுதல் ஏற்பட்டுவிட்டது. அதனால் மத்திய அரசிடம் நிதி உதவி கேட்க மாட்டேன் என்று சொல்லி, வறட்சி நிவாரணப் பணிகளுக்காகத் தமிழ்நாட்டிலே நிதி வசூல் செய்தார்கள். அப்படி வசூல் செய்தது 3 கோடி ரூபாய் என்று சொல்கிறார்கள். அது எப்படி வந்தது என்று யாருக்கும் சரியாகத் தெரியாது. கட்டாயப்படுத்தி வசூல் செய்தார்கள். வசூல் செய்ததற்கு ரசீது கிடையாது. பல இடங்களிலே ஆசிரியர்களிடம் கூட வசூல் செய்தார்கள், அதற்கு இதுவரையில் ரசீது கொடுக்கவில்லை என்று சொல்லி தகராறுகள் எல்லாம் இன்னும் நடந்து கொண்டிருக்கின்றன.

அது மட்டுமல்ல. சீனி, அரிசி, கோதுமை, எடுக்கச் செல்லும் வியாபாரிகளிடம்—அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட வியாபாரிகள் அவர்கள் — 500 ரூபாய் கொடு, 1,000 ரூபாய் கொடு என்று வசூல் செய்திருக்கிறார்கள். இதை நாங்கள் எப்படி ஈடு கட்டுவது என்று அவர்கள் கேட்டால் அதிக விலைக்கு சீனி, அரிசி, கோதுமை போன்ற உணவுப் பொருட்களை விற்றுக்கொள்ளுங்கள், சீனியை இங்கேயே அதிக விலைக்குக் கொடுத்துவிட்டுப் போங்கள் என்று சொல்கிறார்கள். அதனால் பாதிக்கப்பட்டது ஏழை எளிய மக்கள்தான்.

இப்போது கூட சரியான முறையில் கோதுமை, அரிசி, சீனி விநியோகம் கிராமப்புறங்களிலே கிடையாது. கிராமப்புறங்களில் வாரம் ஒரு கிலோ அரிசி கொடுக்கிறார்கள். ஒரு குடும்பத்தில் ஐந்து பேர் இருந்தாலும் சரி, பத்து பேர் இருந்தாலும் சரி வாரம் ஒரு கிலோ அரிசிதான் கொடுக்கிறார்கள். சில இடங்களில் அரிசியைக் கண்ணால் கூடக் காண முடியாது. கோதுமை 4 கிலோ, ஐந்து கிலோ கொடுக்கிறார்கள். அதுவும் விலை அதிகம் தான். கிலோ ரூ. 1.40-க்குக் கொடுக்கப்படுவதாகச் சொல்கிறார்கள். ஆனால் எல்லா ஊர்களிலும் ரூ. 1.60, 1.70-க்குத்தான் கொடுக்கிறார்கள்;

பில் மட்டும் 1.40 என்று போடுகிறார்கள். கூட்டுறவு சங்கமாக இருந்தாலும் சரி, வேறு தனியார் அமைப்புகளாக இருந்தாலும் சரி ஒரு கிலோவின் பேரில் 10 பைசா, 20 பைசா அதிகம் வைத்துத் தான் கொடுக்கிறார்கள். வாங்குவோர் இப்படி ஏன் போடுகிறீர்கள் என்று கேட்டால் நாங்கள் அதிகமாகப் பணம் அங்கே கொடுக்கிறோம் என்று சொல்கிறார்கள். அப்படிச் சொல்லி, கொள்ளை அடிக்கிறார்கள்.

இந்தமாதிரிதான் சீனியிலும் கொள்ளையடிக்கிறார்கள். வறட்சி நிவாரணப் பணிக்கு என்று பணத்தை வாங்கிவிட்டு, அதற்குப் பதிலாக 4 மூட்டை சீனியை எடுத்துக் கொண்டு போய், அதிக விலைக்கு விற்றுக் கொள்ளுங்கள் என்று சொல்கிறார்கள். இந்தமாதிரிதான் எல்லா வகையிலும் வசூல் செய்யப் பட்டிருக்கிறது. இதுபற்றி எவ்வளவுதான் சொன்னாலும், சண்டை போட்டாலும் யாரும் கவனிப்பதில்லை. சீனி தரமுடியாது, கோதுமை இல்லை, அரிசி இல்லை என்று சொல்லக்கூடிய நிலைதான் இருந்து கொண்டிருக்கிறது. எத்தனை புகார் கொடுத்தாலும், பெட்டிஷன் போட்டாலும் ஒன்றும் பயனளிக்கவில்லை.

இதை ஒழுங்காக நிர்வகிக்க மக்கள் கமிட்டி போட வேண்டுமென்று சொன்னோம்; கேட்கவில்லை. வறட்சி நிவாரணப் பணிகளின் மூலம் பயனடைந்தவர்கள் இன்றைக்கு கான்ட்ராக்ட்காரர்கள்தான், ஒதுக்கப்பட்ட பணத்தில் இன்றைக்கு பாதிக்கு மேல் அவர்கள் பையில்தான் இருக்கிறது. சரியான கண்காணிப்பு இல்லாததால் எடுத்துக் கொள்ளப்பட்ட வேலை எந்த இடத்திலும் பூராவாக முடிக்கப்படவில்லை.

ஆனால் ஒதுக்கப்பட்ட பணம் பூராவும் செலவழிக்கப் பட்டிருக்கிறது. கண்மாய்கள் சரியானபடி தூர் வாரப்படவில்லை; கரை கட்டப்படவில்லை. கண்மாய்களின் கரை பழுதுபடாமல் இருக்க, கரை சீரமைக்கப்பட்டு, ரிவிட்மெண்ட் போடப்பட வேண்டுமென்று சொன்னோம். எந்த இடத்திலும் ரிவிட்மெண்ட் போடவில்லை. இப்படிப் பல்வேறு வகைகளில் செலவழிக்கப்பட்ட பணத்தில் பாதிக்குமேல் கன்ட்ராக்டர்களுக்குத்தான் போயிருக்கிறது. அதைக் கண்காணிப்பதற்குத்தான் எங்கள் கட்சியில் சொன்னோம்; சர்வ கட்சி கமிட்டி போட வேண்டுமென்று சொன்னோம். வறட்சி நிவாரணப் பணிகளைக் கண்காணிக்கவும்,

1975 நவம்பர் 4] [திரு. சோ. அழகர்சாமி]

சிவில் சப்ளைஸ் விநியோகத்தைக் கண்காணிக்கவும் மக்கள் கமிட்டி போட வேண்டுமென்று சொன்னேம். ஆனல் அரசாங்கம் அதற்கு எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை.

சரியான முறையில் கண்காணிப்பு இல்லாததால் கூட்டுறவுச் சங்கங்களிலே கூட கிலோவுக்கு 25 பைசா அதிகமாக வைத்து விற்கும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அதுபற்றி எத்தனை புகார் கொடுக்கிறோம், இந்த நிதி கொடுக்கிறோம், அதைச் சரிக்கட்ட வைத்து விற்கிறீர்கள் என்று கேட்டால் அந்த நிதி கொடுக்கிறோம், இந்த நிதி கொடுக்கிறோம், அதைச் சரிக்கட்ட இப்படி விலையை வைத்திருக்கிறோம் என்று சொல்கிறார்கள். மத்திய சர்க்காரோடு ஏற்பட்ட மோதுதல் காரணமாக, அவர்கள் கொடுக்கும் பணத்தை வாங்க மாட்டேன் என்று சொன்னதன் காரணமாக இப்படிப்பட்ட அவல நிலைகள் எல்லாம் இன்றைக்கு ஏற்பட்டிருக்கின்றன. வறட்சிப் பணிகளுக்கு என்று இங்கே கெடுபிடி செய்து வசூல் செய்ததால் இத்தகைய கோளாறுகள் நடைபெற்றிருக்கின்றன.

கைத்தறித் துறையை எடுத்துக் கொண்டால் 1.30 கோடி ரூபாய் அதிகம் கேட்டிருக்கிறார்கள். ரிபேட்டுக்காக இந்தப் பணம் கேட்டிருக்கிறார்கள். இந்த ரிபேட் ஒரு குறிப்பிட்ட காலத்தில்தான் கொடுக்கிறார்கள். வருஷம் பூராவும் கொடுப்பதில்லை. அதனல் ரிபேட் கொடுக்காத காலத்தில் துணிகள் விற்காமல் தேங்கிக் கிடக்கின்றன. துணி தேக்கத்தினல் உற்பத்தி குறைக்கப்படுகிறது. தொழிலாளர்களுக்கு கூலி குறைகிறது; வேலை கிடைப்பதில்லை. அதனல் இத் தொழிலிலே ஈடுபட்டிருக்கிற 30 லட்சம் மக்களுக்கு அரை வயிற்றுக் கஞ்சி கூட கிடைக்க வழியில்லை. ஆகவே, உற்பத்தியாகும் துணி பூராவையும் அரசாங்கமே கொள்முதல் செய்ய வேண்டும். வருஷம் பூராவும் ரிபேட் கொடுக்க வேண்டும். இதுபற்றி எங்கள் கட்சித் தலைவர் வெட்டுப் பிரேரணை கூடக் கொடுத்திருக்கிறார். அதையெல்லாம் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, சமூக நலத் திட்டம் இருக்கிறது. முதியோர் பென்ஷன் இருக்கிறது. அதற்கு ஒரு குறிப்பிட்ட தொகைதான் ஒதுக்கப்படுகிறது. ஒரு தாலுகாவிற்கு இவ்வளவு தொகை என்று ஒதுக்கிவிடுகிறார்கள். அதைக்கொண்டு

100 பேர்களுக்குத்தான் கொடுக்க முடிந்தால், மீதமுள்ளவர்களுக்குக் கொடுப்பதில்லை; அதற்குப் பணம் இல்லை. தகுதியுடைய வேறு எத்தனை பேர் இருந்தாலும் அவர்களுக்குக் கிடையாது. இந்த 100 பேரில் யாராவது ஒன்றிரண்டு பேர் செத்தால்தான் அடுத்த ஒன்றிரண்டு பேர்களுக்குக் கிடைக்கும்.

45 வயதிற்கு மேற்பட்ட விதவைகளுக்கு 20 ரூபாய் முதியோர் பென்ஷன் என்று சொல்லப்படுகிறது. ஆனால் எல்லோருக்கும் கொடுக்கப்படுகிறதா என்றால் இல்லை. குறிப்பிட்ட தொகையை வைத்து, எத்தனை பேருக்கு முடியுமோ அத்தனை பேருக்குத்தான் கொடுக்கிறார்கள். அதற்கு மேற்பட்டவர்களுக்குக் கொடுப்பதில்லை; கொடுக்க வேண்டுமென்றால் ஏற்கெனவே வாங்குபவர்களில் யாராவது செத்தால்தான். 45 வயதுக்கு மேற்பட்ட கைம்பெண்களுக்கு உதவித் தொகை வழங்குவது என்றால் இருக்கின்ற எல்லோருக்கும் வழங்க வேண்டும். முதியோர்களுக்கு 20 ரூபாய் பென்ஷன் என்றால் தகுதி படைதத எல்லோருக்கும் கொடுக்க வேண்டும். போன வருஷம் கூட, ஒரு கோடி ரூபாய்தான் எல்லோருக்கும் கொடுப்பதால் கூடுதலாகச் செலவாகும் என்றால் எல்லோருக்கும் கொடுக்கப்படும் என்று முதலமைச்சரவர்கள் சொன்னார்கள். ஆனால் இதுவரையில் அதுபற்றி எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. தகுதியுள்ள எல்லோருக்கும் உதவித் தொகை வழங்க இனியாவது நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அடுத்தபடியாக, புதிய தொழில் பற்றிச் சொல்ல வேண்டும். சர்க்கரை ஆலைகளைப் பொறுத்தமட்டில் ஏற்கெனவே இருக்கின்றவைகளை மூடிவிடும் சூழ்நிலை இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது. கரும்பின் விலை நிர்ணயம் செய்யும் கொள்கையினால் இன்றைக்கு இந்த நிலை ஏற்பட்டிருக்கிறது. வட மாநிலங்களிலே கரும்புக்கு 140 ரூபாய், 150 ரூபாய் என்று டன்னுக்குக் கிடைக்கும்போது இங்கே 85 ரூபாய் தான். அதனால் இந்த வருஷம் கரும்பு உற்பத்தி செய்ய யாரும் முன்வரவில்லை. அதனால் கரும்பாலைகள் மூடப்படக் கூடிய சூழ்நிலை இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது. அதனால் தொழிலாளர்களுக்கு வேலையில்லாத நிலையெல்லாம் ஏற்படும். ஆக, இந்தத் தொழிலே ஸ்தம்பிக்கக்கூடிய ஒரு பயங்கரமான நிலைமை இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது.

1975 நவம்பர் 4] [திரு. சோ. அழகர்சாமி]

இதுபற்றி அமைச்சர் மாதவன் அவர்களிடம் எடுத்துக் கூறினேம். அவர் மத்திய அரசின் சர்க்கரை விலை நிர்ணயக் கொள்கைதான் இதற்குக் காரணம் என்று சொன்னார். ஆனால் இதே விலை நிர்ணயம் செய்திருக்கிற பக்கத்து மாநிலத்திலே கரும்புக்கு 140 ரூபாய் கொடுக்கிறார்கள். அதேமாதிரியாக இங்கேயும் கொடுத்தால் சர்க்கரை ஆலைகளுக்கு நஷ்டம் வந்து விடாது. அவர்கள் கோடி, கோடியாக கொள்ளை லாபம் அடைந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அவர்களுக்கு நஷ்டம் வராது. கரும்புக்கு அதிக விலை கொடுக்க வேண்டுமென்று கேட்டும், கொடுக்காததால் யாரும் இந்த வருஷம் கரும்பு உற்பத்தி செய்ய முன்வராத நிலைமை இன்றைக்கு இருக்கிறது. இதன் விளைவு, விவசாயிகள் தங்கள் நிலங்களில் பூராவும் கரும்பு போடாமல் கடைசியில் சர்க்கரை ஆலைகளை மூட வேண்டிய நிலை ஏற்படும். இப்படிப்பட்ட நிலையில் புதிதாக ஒரு கரும்பு ஆலையையும் ஆரம்பிக்கப் போகிறீர்கள். எனவே, கரும்பு உற்பத்தி செய்கின்ற விவசாயிகளுக்கு வேறு மாநிலத்தில் கொடுக்கப்படுவது போல நியாயமான விலை கிடைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

எங்கள் பகுதியில் 'கேர்' ஸ்தாபனத்திற்கு ரூ. 5 லட்சத்தில் கோடவுன் கட்டப்படுவதாகத் தெரிகிறது. இது எதற்காக? கேர் ஸ்தாபனத்திடமிருந்து எதற்காக வாங்க வேண்டும்? சி.ஐ.ஏ. ஒற்றர்களின் ஸ்தாபனத்தை வைத்துக் கொண்டு உளவு செய்கிற அமெரிக்காவிடமிருந்து ஏன் பிச்சைக் காசைப் பெற வேண்டும்? இது அவசியம் இல்லை. நமக்கான உணவை நாமே உற்பத்தி செய்து கொள்ளக் கூடிய திறமை நமக்கு இல்லையா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அமெரிக்காவிலிருந்து எந்த எய்டும் வாங்குவதில்லை என்று இந்திய அரசு தீர்மானித்திருக்கிறதா?

திரு. சோ. அழகர்சாமி: இந்திய அரசு தீர்மானிக்கிறதோ, இல்லையோ, நாம் தீர்மானிப்போம். உணவு கொடுக்கிறோம் என்று சொல்லிக் கொண்டு அமெரிக்கா சி. ஐ. ஏ. ஸ்தாபனத்தை வைத்துக் கொண்டு உள்நாட்டு விவகாரத்தில் தலையிட்டு நாட்டை சீர்குலைவு அடையச் செய்ய முயற்சிக்கிறது. அதற்காக உணவைக் கொடுத்து ஏமாற்றப் பார்க்கிறார்கள். அந்தப் பிச்சை

உணவு நமக்குத் தேவை இல்லை. நம் நாட்டு மக்களுக்கு உணவு கொடுக்கக் கூடிய சக்தி நமக்கு இருக்கிறது. 'கேர்' ஸ்தாபனத்தின் உதவி நமக்குத் தேவை இல்லை.

திரு. எம். ஏ. லத்தீப்: ரஷ்யா அமெரிக்காவிடமிருந்து உதவி பெற்றுக் கொண்டிருக்கிறது என்பதையும் ரஷ்யா அமெரிக்காவிடமிருந்து உணவை இறக்குமதி செய்கிறது என்பதையும் உறுப்பினர் அவர்கள் அறிவார்களா?

திரு. சோ. அழகர்சாமி: ரஷ்யா ஒன்றும் ஓசிக்கு வாங்கவில்லை. என்ன விலையோ அதை விட அதிகமாகக் கொடுத்துத்தான் வாங்குகிறார்கள். பிச்சை தேவை இல்லை என்பதைத் தான் எடுத்துச் சொன்னேன். எனவே, கேர் ஸ்தாபனத்திற்கு கோடவுன் தேவை இல்லை என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, கூட்டுறவு வங்கிக்கு அதிகமாகப் பணம் கொடுத்து இருக்கிறீர்கள். ஆனால் சின்னச் சின்ன விவசாயிகளுக்கு உதவி கிடைக்கிறதா என்றால் இல்லை. ஓவர் டியூ இருக்கிறது, பாக்கி இருக்கிறது என்று காரணம் காட்டி கடன் கிடையாது என்று சொல்லி விடுகிறார்கள். முன்பு வாங்கிய கடனை ஒழுங்காகக் கட்டியவனுக்குக்கூட கடன் கிடைப்பதில்லை. யாரோ பாக்கி வைக்க, கிடைக்க வேண்டியவர்களுக்குக் கூட கடன் கிடைப்பதில்லை. இவைகளை எல்லாம் சீராக்க ஏற்பாடு செய்ய வேண்டும். அதேபோல, இந்த எல். டி. பேங்க் சரிவர விவசாயிகளுக்கு உதவி செய்யக்கூடிய முறையில் செயல்படவில்லை. இதையும் சீர்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வறட்சி சம்பந்தப்பட்ட வரையில் ஆளுங்கட்சி அங்கத்தினர் அவர்களே சொன்னார்கள், — எங்கள் பகுதியைப் பொறுத்த வரையில் வறட்சி இன்னும் நீங்கவில்லை. பல பகுதிகளில் மழை பெய்த போதிலும் எங்கள் பகுதிகளில் மழை இல்லை. இப்படி இருக்கும்போது கொடுத்த கடனை வசூல் செய்ய ஆரம்பித்து விட்டார்கள். இப்படிச் செய்வது அப்பகுதி விவசாயிகளை உயிரோடு கொல்வதற்குச் சமமாகும். இதைப் பரிசீலனை செய்து கடன்களைத் திரும்ப வசூல் செய்வதை இரண்டு வருஷம் தள்ளி வைக்க நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

1975 நவம்பர் 4] [திரு. சோ. அழகர்சாமி]

சிவில் சப்ளைஸ் இலாக்காவைப் பொறுத்தவரையில் அரசாங்கம் நியமித்த விலைக்கு — கோதுமை ரூ. 1.40 என்றால் 1.40-க்கே விற்க வேண்டும். அரிசி ரூ. 1.70 அல்லது ரூ. 1.80 என்றால் — அந்த விலைக்கே விற்க வேண்டும்—அதற்கு மேல் விற்கக் கூடாது— இத்தகைய நடைமுறையை அமுலுக்குக் கொண்டு வர வேண்டுமென்று வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

ரெயில்வே பாசுக்கு ரூ. 3,42,000 ஒதுக்கி இருக்கிறீர்கள்— ஆனால் இதில் கூப்பன் அச்சடிப்பதற்கு மாத்திரமே ரூ. 93 ஆயிரம் என்று போட்டிருக்கிறது. அச்சடிப்பதற்கு இவ்வளவு தொகையா என்பதைப் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கோயம்புத்தூரில் ஒரு ஆலோசனை கமிட்டி போட்டிருக்கிறார்கள்—இதில் திரு. மருதாசலம், திரு. ஏ. சுப்பிரமணியம் போன்றவர்கள் எல்லாம் போடப்படவில்லை. ஆலோசனை கமிட்டியில் ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்கள் மாத்திரம் போடப்படுவது என்றால் அது சரியல்ல. எதிர்க் கட்சிகளைச் சேர்ந்தவர்களும் போடப்பட்டிருக்க வேண்டுமென்று கூறிக்கொள்கிறேன்.

போக்குவரத்துத் தொழில் வளர்ச்சிக் கழகத்திற்கு ஒரு கோடி ரூபாய்க்கு மேலாக செலவழிக்கத் திட்டமிட்டிருக்கிறது. இவை சீராக நடைபெற வேண்டும். தீபாவளிக்கு முதல் நாள் இரவு 9 மணிக்கு பஸ் ஏறினேன். மறுநாளுக்கு மறு நாள் 12 மணிக்குத் தான் ஊர் போய்ச் சேர முடிந்தது. போகிற வழியில் பஸ் பழுதடைந்து வொர்க்ஷாப்புக்கு கொண்டு போகப்பட்டது. மறு பஸ்ஸில் ஏறினால் மறுநாள் 12 மணிக்குத் தான் எட்டையாபுரம் போய்ச் சேர முடிந்தது. ஸ்டேட் டிரான்ஸ்போர்ட் சீரான முறையில் நடைபெற வேண்டும். ஒரு பத்து பஸ் விடுகிறோம் என்றாலும் அந்த பத்து பஸ்களும் ஒழுங்காக செயல்பட வேண்டும். குறித்த நேரத்தில் பஸ் புறப்பட்டு குறித்த நேரத்தில் குறித்த இடத்திற்குப் போய்ச் சேர வேண்டும். நாங்கள் 6 மணிக்கு ரிசர்வேஷன் செய்யப் போனோம். பஸ் வருகிறது, வருகிறது என்றார்கள். முதலில் 7 மணிக்கு என்று. பிறகு போன் செய்தார்கள். பஸ் டெப்போவிலிருந்து வரவில்லை. பிறகு 9 மணி என்றார்கள். எங்களால் சாப்பாட்டுக்குக் கூட

போக முடியவில்லை. கடைசியாக பஸ் 10 மணிக்கு வந்தது. இத்தகைய குறைகள் போக்கப்பட்டு சீரான முறையில். இந்த இலாக்கா செயல்பட வேண்டும்.

46 கோடி ரூபாய்க்கு பற்றுக்குறை பட்ஜெட் போட்டிருக்கிறீர்கள். இது சம்பந்தமாக எழுதிய மக்கள் குரல் பத்திரிகையை பறிமுதல் பண்ணி இருக்கிறார்கள். இந்த முறையில் சென்சார் போய்க் கொண்டிருக்கிறது. முரசொலி பத்திரிகையையும் மற்ற தனியார் பத்திரிகைகளையும் பறிமுதல் பண்ணி இருக்கிறார்களா என்றால் இல்லை. இது சரியல்ல என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, வாட்டர் போர்டில் சுமார் 300 பேர்கள் திடீர் என்று வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். 5 வருஷம், 6 வருஷம் வேலை செய்தவர்களைக் கூட வேலை நீக்கம் செய்தால் அவர்கள் வேறு வேலைக்கு எங்கே போவது? இப்படிச் செய்வது சரியல்ல என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அரசாங்க அலுவல்களில் இரகசியக் குறிப்பு முறை மீண்டும் கொண்டு வரப்படுவதற்கான திட்டங்கள் இருப்பதாகத் தெரிகிறது. 50 வயதுக்கு மேற்பட்டவர்களை தேவையற்றவர்களை வீட்டுக்கு அனுப்பி விடுகிறார்கள். அதைத் தவறு என்று சொல்ல முடியாது. இந்த ரகசியக் குறிப்பேட்டு முறை கொண்டு வரப்பட்டால் மேலதிகாரிகள், தங்களுக்குப் பிடிக்காத சின்ன வயதுக்காரர்களைக்கூட இரகசியக் குறிப்பேட்டு முறையின் மூலம் வீட்டுக்கு அனுப்புகின்ற நிலை ஏற்படும். இதனால் பலர் பாதிக்கப் படக் கூடிய நிலை ஏற்படும். ஆகவே, இதை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கல்வி சம்பந்தப்பட்ட வரையில் கல்விக்காக ஒதுக்கப்படும் பணம் கல்விக்காகவே செலவழிக்கப்பட வேண்டும். மற்ற விஷயங்களுக்குச் செலவழிக்காதீர்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்.

எமெர்ஜன்சிக்குப் பிறகு மாணவர் ஹாஸ்டல்களில் வசதிகள் குறைந்து கொண்டு வருகின்றன என்று மாணவர்கள் சொல்கிறார்கள். இப்படி குறை கூறிய ஒரு மாணவனை போலீஸ் ஸ்டேஷனுக்குக் கொண்டு போய் கொஞ்ச நேரம் வைத்துக் கொண்டு பிறகு விட்டு விட்டார்கள் என்று ஹரிஜன மாணவர் ஒருவர் சொன்னார். ஹாஸ்டல்களில் வசதிகள் குறைந்து கொண்டு

வருகின்றன. ஒரு இட்டலி குறைக்கப்பட்டது; மோர் குறைந்து விட்டது, என்று மாணவர்கள் சொல்கிறார்கள். திருமதி இந்திரா காந்தி அவர்கள், மாணவர்களுக்கு அதிகமான வசதிகள் செய்து தர வேண்டும் என்று கூறி இருக்கின்ற நிலையில் மாணவர்களுக்கு இருக்கின்ற வசதிகளையும் குறைக்காமல் அதிக வசதிகளைச் செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கல்வியைப் பொறுத்தவரையில் இன்னொரு விஷயம். ரூ. 9 ஆயிரம் கோடி ஒதுக்கி இருக்கிறீர்கள். இந்த ஆண்டு 31 லட்சம் அதிகம் செலவழிக்கப் போகிறீர்கள்.

செலக்ஷன் கமிட்டியைப் பொறுத்தவரையில், எம்.பி.பி.எஸ்., எம்.டி., ஆகிய சீட்களுக்கு செலக்ஷன் செய்யும் முறையில் மாற்றம் தேவை. செலக்ஷன் கமிட்டியே தேவை இல்லை. பின் தங்கிய மாணவர்களுக்கும் ஷெட்யூல்ட் வகுப்பினருக்கும் ஒதுக்கீடு செய்கிறோம். மாணவர்களின் மார்க்குகளை மூன்று பிரிவுகளாகப் பிரிக்க வேண்டும். பி.யு.சி.-யில் வாங்கிய மார்க், எஸ் எஸ்.எல்.-சியில் வாங்கிய மார்க்; 9-வது வகுப்பில் வாங்கிய மார்க். இந்த அடிப்படையில் செலக்ஷன் செய்யலாம். கேரளாவில் இந்த முறையில் தான் எடுக்கிறார்கள். ஷெட்யூல்ட் வகுப்பினருக்கும் மற்ற ஜாதியினருக்கும் இந்த முறையில் தகுந்த அலாட்மெண்ட்கள் செய்து செலக்ஷன் செய்யலாம். தற்போதுள்ள மார்க்குகள் போடுகின்ற முறை சரியான நடைமுறை அல்ல. பி.யு.சி.-யில் நல்ல மார்க் வாங்கிய ஒருவனுக்கு செலக்ஷனில் 4 மார்க்குகள் போடுகிறார்கள். இன்னொருவனுக்கு 40 மார்க்குகள் போடுகிறார்கள் என்பது அனுபவத்தில் இருக்கிறது. இந்த முறையை மாற்றி இந்த விஷயத்திலாவது கேரளாவைப் பின்பற்றுவது நல்லதாக இருக்கும் என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

கடைசியாக, நான் கேட்டுக்கொள்வதெல்லாம், வறட்சி சம்பந்தப்பட்டவரையில் எங்கள் பகுதி விவசாயிகள் அதிகமாகப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களிடமிருந்து கடனை வசூலிப்பதைத் தள்ளிப் போட வேண்டும். அக்டோபரிலிருந்தே வசூலிப்பது என்பது அவர்களை உயிரோடு குழி தோண்டிப் புதைப்பதற்கும் சமம் ஆகும். கடன்களை இரண்டு வருடங்களுக்குத் தள்ளிப்போட நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று

[திரு. சோ. அழகர்சாமி]

கேட்டுக்கொள்கிறேன். இதற்கு உடனடியாக முயற்சி எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

* **திரு. ஆ. கு. சுப்பையா**: மதிப்பிற்குரிய உதவித் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்துள்ள துணை மதிப்பீட்டு அறிக்கை மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்வதற்கு விரும்புகிறேன்.

இன்றையதினம் தமிழகம் சரித்திரம் காணாத வறட்சியைக் கண்டிருக்கிறது. இந்த வறட்சி மிகவும் சாமர்த்தியமாக சமாளிக்கப்பட்டிருக்கிறது. இந்த வறட்சியின் மூலம் பெரிய நெருக்கடிகளைத் தமிழக அரசு சமாளிக்க வேண்டுமென்று சிலர் எதிர்பார்த்தார்கள். அவர்கள் எல்லாம் ஏமாந்து போகக் கூடிய அளவுக்கு சர்க்கார் தன்னுடைய திறமையினால் பிரச்சினையைச் சமாளித்து இருக்கிறது என்பதை நான் சொல்வதற்கு முன் வருகிறேன்.

இந்த வறட்சியைச் சமாளிப்பதற்கு மத்திய அரசு போதுமான உதவியைக் கொடுக்கவில்லை என்பது நாடறிந்த உண்மை. ஏழு கோடி ரூபாய் கொடுத்திருக்கிறார்கள். இந்த ஏழு கோடியில் 70 சத விகிதம் கடனாகவும் 30 சத விகிதம் மானியமாகவும் கொடுத்திருக்கிறார்கள். இதில் பாரபட்சம் காட்டப்பட்டிருக்கிறது என்பதைத் தமிழக மக்கள் சார்பாகச் சுட்டிக்காட்டாமல் இருக்க

(நண்பகல் 12-00)

முடியாது. இந்த வறட்சி ஏற்பட்ட பிரதேசங்களில் நிலச் சொந்தக்காரர் வாங்கியுள்ள கடன்கள் தள்ளி வைக்கப்பட்டிருக்கின்றன. நிலவரி ரத்து செய்யப்பட்டிருக்கிறது. பல்வேறுவகையான உதவிகள் அவர்களுக்குச் செய்யப்பட்டிருக்கின்றன. ஆனால் குத்தகை விவசாயிகளுக்கு, குத்தகையைத் தள்ளுபடி செய்ய வகை செய்யப்படவில்லை. இதன் காரணமாக நிலக் குத்தகைதாரர்களின் மீது வழக்குகள் தொடரப்பட்டு, இவர்களை எல்லாம் நிலத்தில் இருந்து வெளியேற்றக்கூடிய அபாயம் இருக்கிறது.

1975 நவம்பர் 4] [திரு. ஆ. கு. சுப்பையா]

இதை முதலமைச்சர் அவர்கள் கவனித்து, நில குத்தகைதாரர்களுக்கும் பாதுகாப்பு அளிக்க ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தாழ்த்தப்பட்டவர்களுக்கும், மீனவர்களுக்கும், போற்றத்தக்க வகையில் இந்த அரசு வீடுகள் கட்டிக்கொடுத்து வருகிறது. பல நூற்றுண்டு காலமாக குடிசைகளிலேயே வாழ்ந்து வந்தவர்களுக்கு இது மிகவும் அவசியமான திட்டமாகும். இது பிற மாநிலத்தில் உள்ளவர்களாலும் பாராட்டப்பெறுகின்ற திட்டமாகும். இம்மாதிரியாகவே கிராமத்தில் உள்ள சவரத் தொழிலாளர்கள், சலவைத் தொழிலாளர்கள் — ஒவ்வொரு ஊரிலும் இருந்து சமூகத் தொழில்களைச் செய்து வருகிறார்கள் — ஆகியோருக்கும் வீடுகளைக் கட்டிக் கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தாழ்த்தப்பட்டவர்களுக்கும், மீனவர்களுக்கும் குடியிருப்பு மனை வழங்க — நில ஆர்ஜிதம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுகிறது. தாழ்த்தப்பட்டவர்களுக்கு நில ஆர்ஜிதம் செய்வதில் பல ஆண்டுகள் தாமதமாகிறது. சட்ட நுணுக்கங்கள் காரணமாக பல இடையூறுகள் ஏற்படுகின்றன. இந்த அவசரகாலச் சட்டத்தைப் பயன்படுத்திக் கொண்டாவது ஊரின் ஓரங்களிலேயே, தெருக்களிலேயே நில ஆர்ஜிதம் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் இன்றையதினம் கேட்பாரற்றுக் கிடந்த கைம்பெண்களுக்கு அரசு கொண்டுவந்திருப்பது சிறந்த திட்டமாகும். இந்தத் திட்டம் நாட்டில் பெரும்பாலானவர்களால் பாராட்டப்பெறுகிறது. இதன்படி 45 வயதிற்கு மேற்பட்ட கைம்பெண்களுக்கு மாதம் 20 ரூபாய் உதவிப் பணம் கொடுக்க இருக்கிறார்கள். என்றாலும், அவர்கள் இந்த மனுக்களை ரெவின்யூ இலக்காவில் கொடுக்கிறார்கள். ரெவின்யூ இலாக்கா இதை மிகவும் தாமதமாகவே பரிசீலிக்கிறது. இதை வேகமாகச் செயல்படுத்த வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பதில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு உபகாரச் சம்பளம் வழங்க அவர்களது பெற்றோர்களின் வருமான வரம்பு 2,500-இல் இருந்து 3,000 ஆக உயர்த்தப்பட்டு நடைமுறையில் இருந்து கொண்டிருக்கிறது. இன்றைய நிலைமையில் இது மிகமிகக் குறைவானது.

உதாரணமாக எடுத்துக்கொண்டால், விவசாயத் தொழிலாளி அன்றாடம் தஞ்சை மாவட்டத்தில், அவனும் அவன் மனைவியுமாகச் சேர்ந்து ஒரு நாளைக்கு 10 ரூபாய் கூலி வாங்குவான். இந்த அடிப்படையில் வருட வருமானம் ரூ. 3,200க்கு வருகிறது.

இன்னும் தோட்டி தொழில் செய்பவர்களை எடுத்துக் கொண்டாலும் வருட வருமானம் ரூ. 3,600-க்குப் போகும்.

ஆகவே, இதைப் பரிசீலனை செய்து வருமான வரம்பை ரூ. 5,000ஆக உயர்த்த வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து தொழில்துறையை எடுத்துக்கொண்டால் தஞ்சை மாவட்டத்தில் அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலை ஒன்று புதியதாகத் தொடங்கப்பட்டு வருகிறது. அதில் நூற்றுக்கணக்கானவர்கள் வேலை வாய்ப்பைப் பெற முடியும். விவசாயிகளுக்கு இது மிகப் பெரிய உதவியாக இருக்கும். இதுபோலவே வேதாரண்யம் பகுதியில் — உப்பளப் பகுதியில் — உப்பைக் கொண்டு ஒரு பெரிய தொழிலை ஆரம்பிக்கலாம் என்று நிபுணர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதையும் முதலமைச்சர் ஆராய்ந்து, அம்மாதிரி ஆரம்பித்தால் பத்தாயிரம் பேர்களுக்கு வேலைவாய்ப்புக் கிடைக்கும்.

இப்போது தஞ்சை மாவட்டத்தில் உணவு தானியக் கொள்முதல் நடைபெறுகின்றது. அன்றாடம் ஆயிரக்கணக்கான லாரிகளை அமர்த்தி நெல்லை அனுப்பி வருகிறார்கள். ஒரு நாளைக்கு ஒரு கோடிக்கு மேல் லாரிக்கு ரூ. 190, ரூ. 200 என்று வாடகையே கொடுக்கப்படுகிறது. அரசாங்கம் ஆரம்பித்திருக்கிற லாரி போக்கு வரத்துக் கழகத்தின் மூலம் அதிகமான லாரிகளை வாங்கி, இந்த உணவுப் பொருள் ஏற்றுமதிக்கு அந்த லாரிகளைப் பயன்படுத்தினால் நிறைய லாபம் கிடைக்கும் சந்தர்ப்பம் இருக்கிறது. ஆகவே, போக்குவரத்துக் கழகத்தில் அதிகமான லாரிகளை வாங்கி, உணவு ஏற்றுமதிக்கு அவற்றைப் பயன்படுத்தவேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

1975 நவம்பர் 4] [திரு. ஆ. கு. சுப்பையா]

திருத்துறைப்பூண்டி தொகுதியில் முன்னாள் உறுப்பினராக இருந்த தர்மலிங்கம் காலத்திலும், பின்னர் மணலி கந்தசாமி காலத்திலும் இருந்து எடையூர் கிராமத்தில் பத்தாயிரம் ஏக்கரா நிலம் வடிகால் வசதி இல்லாமல் இருக்கிறது. வடிகால் வசதியை ஏற்படுத்திக் கொடுத்தால் அந்த நிலத்தைப் பயன்படுத்திக் கொள்ள முடியும் என்று சொல்லப்பட்டு வருகிறது. அதற்கு மதிப்பீடு எல்லாம் தயார் செய்யப்பட்டிருக்கிறது. என்றாலும் அரசாங்கம் அதற்கு அனுமதி வழங்காமல் இருக்கிறது. பத்தாண்டு காலமாக நிறைவேற்றப்படாமல் இருக்கிற திருத்துறைப்பூண்டி தாலுக்காவிலுள்ள கிளேதாங்கி வடிகால் திட்டத்தை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதனால் பத்தாயிரம் ஏக்கரா சாகுபடிக்கு வரும், உணவு உற்பத்தி பெருகும், அரசாங்கத்திற்கு லாபம் என்று சொல்லி, முதல் துணை மதிப்பீட்டை ஆதரித்து அமர்கிறேன். வணக்கம்.

திருமதி சத்தியவாணிமுத்து : மதிப்பிற்குரிய துணைத் தலைவர் அவர்களே, இந்தத் துணைமானியக் கோரிக்கையை நான் முற்றிலும் வரவேற்பதற்கில்லை.

தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எந்தெந்த வகையில் பூரணமான மேம்பாட்டுத் திட்டங்களைத் தீட்டவேண்டுமோ அவற்றை எல்லாம் செய்ய இந்த அரசாங்கம் தவறிவிட்டது. இவர்கள் மற்றவரைக் குற்றம் சொல்ல நினைக்கிறார்களே தவிர தாங்கள் செய்கின்ற காரியங்கள் சரியா, தவறா என்பதை நினைத்துப் பார்த்து, இதய பூர்வமான நன்மைகளைத் தாழ்த்தப்பட்ட மக்களுக்குச் செய்ய இந்த அரசு பின்வாங்குகிறது என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

சாதிகளை ஒழிக்க வேண்டுமென்று மத்திய அரசுக்கு ஆர்டிகிள் 17-ஐ திருத்த வேண்டுமென்ற கோரிக்கையை இந்த அரசு அனுப்பியிருப்பதாகச் சொல்கிறார்கள். ஆனால், இந்த ஆட்சியிலே சாதி எந்தெந்த வகையில் தலைவிரித்தாடுகிறது, அரசாங்க நியமனங்கள், கல்லூரி அட்மிஷன்கள் ஆகியவற்றில் எல்லாம் சாதிகள் எப்படி எப்படிக் குறிக்கப்பட்டிருக்கின்றன என்பதைச் சுட்டிக்காட்டுவதன் மூலம் — உண்மையிலேயே சாதிகளை ஒழிக்க இந்த அரசு பணியாற்றுகிறதா என்பதை எண்ணிப்பார்க்க வேண்டுமென்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். இவற்றைப் பற்றி நான் விரிவாகப்

பேசுவதானால் நேரம் இடம் தராது — தாங்களும் தரமாட்டீர்கள் என்பதற்காக நான் வேகம் வேகமாகச் சில குறிப்புகளைச் சொல்கிறேன்.

சாதிகள் இல்லை யென்று சொல்கிறோம். மத்திய அரசிடம் அரசியலமைப்புச் சட்டத்தைத் திருத்த வேண்டுமென்று சொல்கிறோம் — ஆனால் இங்கே மருத்துவ நிலையங்களின் அட்மிஷன் — நுழைவு பாரங்களை எடுத்துப் பாருங்கள்—அவற்றில் எல்லாம் சாதிகள் உபயோகப்படுத்தப்படுகிறது. பெயர் கேட்கப்படுகிறது. வயது கேட்கப்படுகிறது, ஆணா, பெண்ணா விளக்கம் கேட்கப்படுகிறது. இவை எல்லாம் ஒத்துக்கொள்ளப்பட வேண்டியவைகள் — ஆனால் என்ன சாதி, இந்துவா, முஸ்லிமா, இந்தியன் கிறிஸ்தியனா, காஸ்ட் என்ன என்றும் கேட்கப்படுகிறது. அரசாங்க மருத்துவ மனை மாத்திரம் அல்ல — நகராட்சி மருத்துவ மனையிலும் கூட, காஸ்ட் என்ன என்று கேட்கிறார்கள். இந்த அரசு சாதியின் அடிப்படையில்தான் அவர்களுக்கு மருத்துவம் அளிக்கிறார்களா? சாதி அல்லாத முறையில் பிணி ஒழிப்புப் பணிகளைக் கூட நடத்த முடியாதா? அந்த நமூனாக்களை வேண்டுமானால் நான் முதலமைச்சர் அவர்களுக்கே கொடுக்கிறேன். ஒரு நமூனா கே.எம்.ஸி. யைச் சேர்ந்தது. இன்னொன்று அண்ணா நகரிலே இருக்கிற அண்ணா மருத்துவ மனையிலே இருப்பது; இன்னொன்று கார்ப்பரேஷன் மருத்துவ மனையிலே இருப்பது. அதிலே கேட்டிருப்பது இந்துவா, முஸ்லிமா, இந்தியனா, கிறிஸ்துவனா — அதர் கம்யூனிட்டீஸா என்பதாகும். அதாவது ரேஸ் கேட்டிருக்கிறார்கள். அதே போல் காஸ்ட் கேட்டிருக்கிறார்கள். இது அவசியமா?

திரு. இராம அரங்கண்ணல்: தலைவரவர்களே, பொதுவாக மதங்கள் குறிப்பிடப்பட்டிருக்கின்றனவா அல்லது ஜாதிகள் குறிப்பிடப்பட்டிருக்கின்றனவா?

திருமதி சத்தியவாணி முத்து: ஏஜ் கேட்கிறார்கள், நேம் கேட்கிறார்கள், ரெசிடன்ஸ் கேட்கிறார்கள், டிசீஸ் கேட்கிறார்கள்— கேட்டிருக்கிறார்கள். ஆனால், காஸ்ட் என்று என் ஒரு குறி போட்டிருக்கிறார்கள். என்ன ஜாதி என்று ஏன் கேட்டிருக்கிறார்கள். அதே போல் ரேஸ் கேட்டிருக்கிறார்கள். சீரியல் நெம்பர், செக்ஸ், ஏஜ், பிறகு டிசீஸ்: அதர் ரேசஸ் என்பது இந்துவா, முஸ்லிமா, இந்தியனா, கிறிஸ்துவனா என்பதற்குப் பிறகு வருகிறது. அதர் கம்யூனிட்டீஸ் என்று கேட்கிறார்கள் . . .

1975 நவம்பர் 4]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அப்படிக் கேட்பதற்குக் காரணம், சில நேரங்களில் மருத்துவ மனையிலே யாராவது இறந்து விட்டால் அவர்களுடைய சவங்களை யாரும் கேட்டுப் பெற முடியாத சூழ்நிலை ஏற்படுமானால், அவர்களை எந்த முறையிலே அடக்கம் செய்வது என்பதற்காகத்தான் அவைகள் கேட்கப்படு கின்றன. இறந்தவன் முஸ்லிமா, கிறித்தவனா, இந்துவா என்பதை யறிந்து, அதற்கு அசோசியேஷன் வைத்திருக்கிறார்கள், அப்படி ஆதரவற்று இறந்தவர்களை எடுத்துப் புதைக்க அசோசியேஷன் வைத்திருக்கிறார்கள். அவர்கள் இவர்களை எடுத்துப் புதைக்கத் தான் இது கேட்கப்படுகிறது.

திருமதி சத்தியவாணி முத்து : பெரும்பாலான பெயர்களிலே ஜாதி—மதம் தெரிகிறது. இந்துவா, முஸ்லிமா, கிறித்துவனா என்பது பெயரிலேயே தெரிகிறது. ஆயிரத்திலே ஒருவருடைய பெயர்தான் அதனைச் சொல்லாது. அந்த ஆயிரத்திலே ஒன்றைத் தெரிந்துகொள்வதற்காக அன்றாட சீட்டிலே என்ன ஜாதி? இந்துவா, கிறித்துவனா, முஸ்லிமா என்று கேட்பது அர்த்த மற்றது. எனவே, இது முறையாக திருத்தப்படவேண்டும். சொல்லுகின்ற குற்றச்சாட்டுகளை நியாயமான முறையிலே திருத்திக்கொள்ள வேண்டுமே தவிர, பதில் சொல்லிவிட்டுப் போவது . . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: உதாரணமாக, நம்முடைய காதர் பாட்சா என்ற வெள்ளைச்சாமி—இருக்கிறார். அவர் இந்து மதத்தைச் சேர்ந்தவர். அவர் மருத்துவ மனையிலே சேருவதாக இருந்தால், முஸ்லிமா, இந்துவா என்று கேட்டுத் தானே தெரிந்து கொள்ள முடியும்.

திருமதி சத்தியவாணி முத்து : தெரிந்தவர்களைக் கேட்டுக் கொள்ளலாம். தெரியாதவர்களைப் பற்றி நாம் அக்கறைப்படத் தேவையில்லை. சம்பிரதாயப்படி அரசுக்கு என்ன கொள்கையோ அந்தச் சம்பிரதாயத்தின்படி அடக்கம் செய்யலாம். ஆனால் . . .

திரு. ஏ. சுப்பிரமணியம் : தலைவரவர்களே, முதலமைச்சரவர்கள் பதில் சொல்லும்போது அடக்கம் செய்வதற்கு ஜாதி, மதம் தெரிய வேண்டுமென்று சொன்னார்கள். ஜாதி பாகுபாடு ஒழிய வேண்டுமென்று சொன்னால், நமது எண்ணத்திலிருந்து அது போக வேண்டும். அவன் பிறந்ததிலிருந்து, இடுகாட்டுக்குப் போகிற வரையிலே ஜாதி என்ன என்று அந்த எண்ணத்திலேயே இருந்தால். . .

[1975 நவம்பர் 6

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இதை நம்முடைய ஆளுங் கட்சி உறுப்பினரவர்கள், இந்தியாவை ஆளும் கட்சிக்கு எடுத்துச் சொல்லி, அவைகளை எல்லாம் ஒழிப்பதற்குத் தைரியமாக முன்வருவார்களானால் அதைப் பாராட்ட நாங்கள் கடமைப்பட்டிருக்கிறோம்.

திரு. ஏ. சுப்பிரமணியம்: இங்கே நடப்பதற்கு அங்கே போக வேண்டாம்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அரசியல் சட்டத்தில் நமக்கு அந்த அதிகாரம் கிடையாது.

திருமதி சத்தியவாணிமுத்து: கலப்புத் திருமணம் செய்து கொள்வதை நாம் பாராட்டுகிறோம், வரவேற்கின்றோம், தங்கப் பதக்கத்தை அரசாங்கம் தருகிறது. ஆனால் இன்றைக்கு நடைபெறுகிற கலப்புத் திருமணங்கள், அவர்கள் வாழ வழியாக இருக்கும் என்று செய்து வைக்கப்பட்டாலும், பொறுப்பிலே இருப்பவர்கள், ஆளுகிற கட்சியிலே இருக்கிற மற்ற சாதிக்காரர்கள், திருமணம் செய்து கொண்டவர்களைப் போய் மிரட்டுவதும் பெண்களை ஜெயிலன்லிலே சேர்த்துவிடுவேன் என்று சொல்வதும், பிறகு அவர்களைக் கூப்பிட்டு அதிகப்படியான பணம் தருகிறோம் பிரிந்து போங்கள் என்று சொல்கின்ற நிலையும், கலப்பு மணமக்களுக்கு மிரட்டல்கள் கொடுப்பதும் இம்மாதிரி நடப்பதாக என்னிடத்திலே பல புகார்கள் வருகின்றன.

எனவே, அரசே, ஆட்சியிலே, பொறுப்பிலே இருப்பவர்களே இப்படி ஈடுபடுவார்களேயானால் எப்படி கலப்புத் திருமணத்தை ஊக்கப்படுத்துவதாக ஆகும்? அரசுப் பொறுப்பிலே இருக்கக் கூடியவர்கள் பாராட்டக்கூடிய கலப்புத் திருமணங்கள் வேறு, அவைதான் பாராட்டத்தக்கவை, பொறுப்பிலே இல்லாத வேறு பலர் செய்து வைக்கின்ற கலப்புத் திருமணங்கள் பாராட்டப்படக் கூடியவை அல்ல; அல்லது இந்த அரசும் ஆளுகிற கட்சியும் விரும்புகிற சில சமுதாய மக்கள் கலப்பு மணம் செய்து கொண்டால் பாராட்டுகிறார்கள். இந்த அரசுக்கோ, அல்லது ஆளுகிற கட்சிக்கோ எதிர்ப்பு தெரிவித்து கலப்பு மணம் செய்து கொண்டவர்களுக்கு எந்த அளவுக்குத் துன்பம் தர வேண்டுமோ அந்த அளவுக்கு ஆளுகிற கட்சிக்காரர்கள் துன்பம் தருகிறார்கள். இதைவிட வெட்கக் கேடான செய்தி வேறு எதுவுமே இருக்க

1975 நவம்பர் 4] [திருமதி சத்தியவாணிமுத்து]

முடியாது. எனவே, அப்படிப்பட்ட தவறான காரியத்திலே இந்த அரசு ஈடுபடுவதை நிறுத்திக்கொள்ள வேண்டுமென்று நான் மிகவும் விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக, இன்னொன்று. நிலம் கொடுப்பதில் திருச்சியிலே இருக்கிற Scheduled Castes and Scheduled Tribes Cultural Association. அவர்கள் 1970 ஆம் ஆண்டிலே—எல்லோரும் அரசாங்க ஊழியர்கள்—இடம் கேட்டார்கள். அந்த இடத்தில் நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டிருக்கிறது. டி.டி. பாஸாகியிருக்கிறது ரூ. 80,000 பணம் கட்டியிருக்கிறார்கள். ஆனால், இன்றைக்கு அவர்களுக்கு அந்த இடத்தைத் தர மறுத்துவிட்டு, யாரோ அதிகாரிக்குச் சொந்தமானவர் என்று வேறு யாரோ ஒருவர் அதிக விலை கொடுப்பவருக்கு அதைத் தரப்போவதாகப் புகார் இருக்கிறது. ரூ. 80,000-ஐ வாங்கிக் கொண்டு, டி.டி.யும் பாஸ் ஆனபிறகு, அரசாங்கம் கட்டுகிற வீடுகளுக்கு அனுமதி கொடுக்க மறுப்பது அந்த மக்களுக்குச் செய்கிற மிகப் பெரிய துரோகம் ஆகும். Scheduled Castes and Scheduled Tribes Cultural Association. அதற்கு அளிக்க மறுப்பது சரியல்ல.

இரண்டு தினங்களுக்கு முன்னால் மாண்புமிகு முதலமைச்சரவர்கள் மீது ஒரு உரிமைப் பிரச்னை கொண்டு வந்து பேசினேன். அதை அவர்கள் இல்லையென்று சொன்னார்கள். இந்த மன்றத்திலே அவர்கள் பெரும்பான்மையாக இருக்கிற காரணத்தினால் இல்லையென்று வாதிட்டாலும் உண்மை நிலையை மக்கள் தெரிந்துகொண்டார்கள். நெற்றிக் கண்ணைக் காட்டினாலும் குற்றம் குற்றமே என்று வாதிடுகிற அளவுக்கு எனக்கு இதிலே பூரணமான ஆதாரம் இருக்கிறது. எனவே, அவற்றை மக்கள் மத்தியில் வைக்கத் தயாராக இருக்கிறேன்.

அதே நேரத்தில் அவர்களுக்கு உண்மையிலே நல்லெண்ணம் இருந்தால், தாழ்த்தப்பட்ட கிறித்துவ சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்ற எண்ணமிருந்தால் ரிசர்வேஷன் கொடுக்கப்பட வேண்டிய அந்தக் கட்டத்தில், தாழ்த்தப்பட்ட இந்துக்கள் பட்டியலிலே, தாழ்த்தப்பட்ட கிறித்துவர்களையும் சேர்த்துக்கொள்ள

வேண்டுமென்று மத்திய அரசாங்கத்திற்கு இந்த மாமன்றத்திலே ஒரு தீர்மானம் போட்டு அனுப்புவார்களானால் அதை நிச்சயமாக நான் வரவேற்பேன்.

மாநில அரசு பொருளாதார அடிப்படையிலே கொடுக்கின்ற சலுகைகள்---தீட்டுகின்ற திட்டங்கள் தொன்று தொட்டு கொடுக்கப்பட்டு வருகின்றன. வேலை வாய்ப்பிலே இன்றைக்கு 31 சதவிகிதம் பாக்வார்ட் அடிப்படையிலே தரவேண்டுமென்பது 1973–74 ஆம் ஆண்டு ஜி. ஓ. விலே இருக்கிறது. ஜெனரேஷன், 1974 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட ஜி. ஓ. எம் எஸ். 9 மூலமாகக் கிடைத்திருக்கிறது. இங்கே நான் சொல்வதற்கு ஆதரவு இல்லையென்றாலும். (குறுக்கீடு) எதற்கு அதிகமாக ஆளுங் கட்சியிலே குறுக்கிடுகிறார்கள்? மக்கள் மத்தியிலே உண்மை நிலை தெரிந்திருக்கிறது.

குறிப்பாக, தாழ்த்தப்பட்ட கிறித்தவர்கள் மத்தியிலே இது பெரும் ஆத்திரத்தை ஏற்படுத்தியிருக்கிறது. ஆளுகிற கட்சியிலேயிருக்கிற சில தாழ்த்தப்பட்ட கிறித்தவர்கள் சில சலுகைகளைப் பெறுவதற்காக, தாழ்த்தப்பட்ட கிறித்தவர்களைக் காட்டி, அவர்களைப் பற்றி பெரிதாகப் பேசலாமே தவிர, ஒவ்வொரு தாழ்த்தப்பட்ட மகனும் கிறித்தவனும் இதை நினைத்து, நினைத்து, நம்மை எப்படி இந்த அரசு ஏமாற்றுகிறது, நம்மை எப்படி காட்டி இந்த அரசு இலாபம் பெறுகிறது என்பதை உணர்ந்து தான் இருக்கிறான். இன்றைக்கு அவர்கள் மௌனியாக இருக்கலாம்; பேச முடியாதவர்களாக இருக்கலாம். ஆனால், காலம் பதில் சொல்லும். அந்தப் பெரும் வாய்ப்பினை நானே ஏற்படுத்தித் தரத் தயாராக இருக்கிறேன் என்பதையும் நான் இந்த நேரத்திலே கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த அரசால் ஏழை மக்களுக்கு நிவாரணங்கள் செய்ய பல திட்டங்கள் தீட்டப்படுகின்றன, விரும்பிக் கேட்காதவர் களுக்கெல்லாம் கூட அள்ளிக் கொடுப்பதாகப் படம் காட்டப் படுகிறது. மனிதன் இடுகின்ற மலத்தை, கக்கூஸ் அள்ளுகின்ற முறையை அடியோடு அந்த முறையையே மாற்ற வேண்டுமென்று ரூ. 16 இலட்சத்தில் திட்டம் தீட்டி மூன்று ஆண்டுகளுக்கு மேலாகிறது. அரசின் சுகாதார இலாகாவும் சமூக நலத் துறையும் இரண்டும் சேர்ந்து திட்டம் தீட்டியிருக்கிறது.

1975 நவம்பர் 4] [திருமதி சத்தியவாணிமுத்து]

அதற்கு முழுத் தொகையையும், இந்த ஏழைகளுக்கு நன்மை செய்கிற அரசாங்கம், குறிப்பாக தாழ்த்தப்பட்ட மக்களுக்கு நன்மை செய்கிற அரசாங்கம் ஒதுக்கி, இந்தத் திட்டத்தை எடுத்துக்கொண்டு ரூ. 16 இலட்சத்தை ஒதுக்கி, அடியோடு இப்பொழுதிருக்கிற முறையை ஒழிக்கக் கூடாதா?

இன்றைக்கு அவசர காலச் சட்டத்தை வைத்து எத்தனையோ காரியங்களைச் செய்ய நினைக்கிறீர்கள். தாழ்த்தப்பட்ட மக்களுக்கு நாங்கள்தான் செய்கிறோம் என்று சொல்கிறீர்கள். கேட்பாரற்ற விதவைகளுக்கு நாங்கள்தான் என்கிறீர்கள். கை, கால் ஊனமுற்றவர்களுக்கு நாங்கள்தான் என்கிறீர்கள். அதைப் போல் தொழு நோய்ப் பிச்சைக்காரர்களுக்கு நாங்கள் தான் என்கிறீர்கள். ஆனால், நாம் இடுகிற மலத்தை அள்ளுகிற, மனிதன் இடுகிற மலத்தை மனிதன் தலையிலே சுமந்து செல்கிறான், அதனைத் தடுக்க, மனிதனை மனிதனாக மதிக்க வெறும் ரூ. 16 இலட்சம் தான் தேவை. மனது வைத்தால் உங்களால் செய்ய முடியாதா? ஆனால் உங்களுக்கு மனமில்லாத காரணம் தானே—அவனை மேலும் மேலும், தாழ்வுபடுத்தி, தாழ்வுபடுத்தி, கேவலமாகக் காட்டி, அதைச் சொல்லி, சொல்லி, ஆட்சி பீடத்திற்கு மறுபடியும் வரவேண்டுமென்று தான் தாழ்த்தப்பட்ட மக்களை இப்படிப்பட்ட இடத்திலே வைத்திருக்கிறீர்களே தவிர, உண்மையாக உங்கள் மத்தியிலே அவர்கள் மேம்பாட்டுக்கான எண்ணமில்லை.

தாழ்த்தப்பட்ட மக்களுக்குச் செய்கிறோம், ஏழைகளுக்குச் செய்கிறோம் என்று திசை திருப்புகிறீர்கள்.

இங்கே கூட மாண்புமிகு உறுப்பினர் குடிசை மாற்று வாரியத் தலைவரும், ஏனைய உறுப்பினர்களும் பேசும்பொழுது குடிசை மாற்று வாரியத்தைப் பற்றிப் பெரிதுபடுத்திப் பேசுகிறார்கள். இல்லை என்று சொல்லவில்லை, அது பெரிய திட்டம்தான், கோடானுகோடி ரூபாயில் போடுகிற திட்டம் தான். ஆனால் நான் கேட்பது, திராவிட முன்னேற்றக் கழகம்தான் இதைக் கொண்டு வந்ததா? இதற்கு முன்னால் இந்தத் திட்டம் இருந்ததா, இல்லையா? என்னுடைய கேள்வியெல்லாம் இதுதான். நீங்கள் விளம்பரம் கொடுப்பதிலே கெட்டிக்காரர்கள்தான், அதை இல்லை என்று சொல்லவில்லை. அளவிற்கு மிஞ்சிய அளவில்

விளம்பரப்படுத்துவதால் கெட்ட பெயர்தான் ஏற்படும். ஏன் இவ்வளவு விளம்பரப்படுத்துகிறீர்கள்? தாழ்த்தப்பட்ட மக்களுக்காகச் செய்கிறோம், அரிசனங்களுக்காக வீட்டு வசதி வாரியம் என்று ஒவ்வொரு பத்திரிகையிலேயும் பார்த்தால் ஒரு நாள் பத்திரிகைக்கே எத்தனையோ இலட்சம் செலவிடுவார்கள் போலிருக்கிறது. நீங்கள் இப்படி விளம்பரப்படுத்தவில்லை என்றால் மக்கள் கூர்ந்து கவனிக்க மாட்டார்கள். ஆனால் நீங்கள் இப்படிச் செய்வதால் மக்கள் கூர்ந்து கவனித்த பிறகு, ஒன்றுமேயில்லை என்று நினைத்துவிட்ட பிறகு மக்களின் எதிர்ப்பு தான் அதிகரிக்கிறது. இவ்வளவு விளம்பரப்படுத்துகிறீர்களே தவிர, உள்ளே ஒன்றுமே இல்லை. அரிசனங்களுக்கு வீடுகள் என்று எடுத்துக் கொண்டால் டிசம்பர் வந்தால்தான் 30,000. இதுவரை எத்தனை வீடுகள் என்றால், இங்கே 20, அங்கே 10, அங்கே 100, இங்கே 50 என்று ஒவ்வொரு முறையும் நாளேடுகளிலே, ஆங்கில ஏடுகளிலும் சரி, தமிழ் ஏடுகளிலும் சரி, வருகின்ற ஒவ்வொரு விளம்பரத்திற்குமே 10,000 ரூபாயோ, 15,000 ரூபாயோ 5 இலட்சம் ரூபாயோ, ஆகும் போலிருக்கிறது. ஆனால் கட்டும் வீடுகள் எத்தனை? ஒவ்வொரு முறையும் 100 வீடுகள் என்று திறந்திருக்கிறார்கள். அதற்குப் பெரிய விளம்பரம். இப்படி நீங்கள் செய்யும் விளம்பரத்தால்தான் கெட்ட பெயர் ஏற்படுகிறது. நீங்கள் செய்வது கொஞ்சம், ஆனால் அதற்கான விளம்பரம் அதிகம்.

குடிசை மாற்று வாரியத்தைப் பற்றி எடுத்துக்கொண்டால் இன்றையதினம் தாண்டவராயன் சத்திரத்தைப் பற்றிச் சொன்னார்கள். அதைப்போல என்னுடைய தொகுதியில், வியாசர்பாடியில், குடிசை மாற்று வாரியத் திட்டத்தில், காங்கிரஸ்காரர்கள் ஆட்சிக் காலத்தில்—1957 ஆம் ஆண்டிலே—நான் எதிர்க்கட்சி உறுப்பினராக இருந்த நேரத்தில் என்னுடைய தொகுதியில் க்ரேநகர் பள்ளம், மல்லிகைப் பூச் சேரி ஆகிய இடங்களில் மாடி வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டன. இன்றைய தினம் குடிசை மாற்று வாரியம் என்ற பெயரில். . .

திரு. இராம. அரங்கண்ணல்: பாயின்ட் ஆஃப் ஆர்டர் சார். தலைவாவர்களே, அம்மையார் அவர்கள் மனத்திலே கை வைத்துப் பேச வேண்டும். காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் வியாசர்பாடியில் கட்டப்பட்ட வீடுகள் எத்தனை? உருவாக்கப்பட்ட சேரிகள்

என்று சொல்ல மாட்டேன், குடிசைவாழ் பகுதிகள் எத்தனை? மல்லிகைப் பூச்சேரியில் அன்றைக்கு உருவாக்கப்பட்டது எத்தனை? இன்றைக்கு எத்தனை கட்டப்பட்டிருக்கிறது என்பதை மனத்தில் கை வைத்துச் சொல்லுங்கள்.

திருமதி த. ந. அனந்தநாயகி: பாயின்ட் ஆஃப் ஆர்டர் சார். வியாசர்பாடியில் குடிசை மாற்று வாரியத்தின் சார்பில் மக்களுக்குப் பல மாடிக் கட்டிடங்கள் கட்டினார்கள். ஆனால் ஒவ்வொரு விழாவிலும் நீங்கள் என்ன சொல்கிறீர்கள்? இந்த பல மாடிக் கட்டிடங்கள் என்பது உங்கள் புத்திக்குத்தான் உதித்தது மாதிரி சொல்கிறீர்கள். பல தீப்பிடிக்காத வீடுகள் கட்டுகிறோம் என்று சொல்லி, கன்றுக்குட்டி கூட உள்ளே நுழைய முடியாதபடி வீடுகளைக் கட்டி, அதற்குப் பிறகுதான் பல மாடிக் கட்டிடங்களுக்கு வந்தீர்கள். ஆனால் முதலிலேயே கட்டியது மாதிரி சொன்னது உண்டா இல்லையா?

திரு. இராம. அரங்கண்ணல்: ஒரு விளக்கம் சொல்ல விரும்புகிறேன். அவர்கள் கட்டிய மாடி வீடுகள் ஃபோர்ஷோர் எஸ்டேட்டில் யாருக்குப் போயிற்று என்று தெரியும். (குறுக்கீடு) வியாசர்பாடியில் யாருக்குப் போயிற்று என்று தெரியும்.

திருமதி சத்தியவாணிமுத்து: வியாசர்பாடியில் கட்டப்பட்ட வீடுகள் அரிசனங்களுக்கு மட்டும்தானா? இப்பொழுது எல்லா ஜனங்களும் இருக்கிறார்கள். திட்டத்தைக் கொண்டு வந்த அவர்கள் அதிகம் விளம்பரம் பண்ணாமல் இருந்திருக்கலாம். நானே எதிர்க்கட்சி உறுப்பினராக இருந்தபொழுது என்னுடைய வியாசர்பாடித் தொகுதியிலே க்ரே நகர் பள்ளம், மல்லிகைப் பூச்சேரி, வாழைப்பூ சேரி போன்ற இடங்களில் மாடி வீடுகள் கட்ட வேண்டுமென்று நானே சட்டசபையில் பேசியிருக்கிறேன். அது ரெக்கார்டில் இருக்கிறது. பெயரை மாற்றியிருக்கலாம். பெயர் மாற்றுவதிலே நீங்கள் கில்லாடிகள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அந்த வார்த்தையை நீங்கள் திரும்பப் பெறுங்கள்.

திருமதி சத்தியவாணிமுத்து: நான் திரும்பப் பெற்றுக் கொள்கிறேன். அவசரப்பட்டுச் சொல்லிவிட்டேன். பெயர் வைப்பதிலே கெட்டிக்காரர்கள்தான். குடிசை மாற்று வாரியம்

என்று அவர்கள் வைத்த புதுப் பெயர். மாடிக் கட்டிடம் கட்டுவது என்பது பழைய திட்டம். ஒருவேளை அப்பொழுது இங்கொரு திட்டம், அங்கொரு திட்டமாக இருந்திருக்கலாம். இப்பொழுது ஏராளமாக இருக்கலாம். அது உங்களுடைய திறமையைப் பொறுத்தது.

அரிசனங்களுக்குத் திட்டங்கள் செய்கிறோம் என்று சொல்கிறீர்கள். நான் சொல்ல விரும்புவது, அரிசனங்கள் மீது மற்றவர்கள் வெறுப்பு கொள்கிறார்கள். "ஆ, இந்த அரசு அரிசனங்களுக்கு இதைச் செய்கிறது" என்று எப்பொழுது பார்த்தாலும் பத்திரிகைகளிலே போட்டிருப்பதைப் பார்த்தால் அரிசனங்களுக்கு நிறைய இந்த அரசு செய்கிறது என்று நினைத்துக்கொள்கிறார்கள். ஆனால் உள்ளே போய்ப் பார்த்தால் தான் ஒன்றுமே இல்லை, யாருக்கோ போகிறது. ஆகவே நான் சொல்வது, இந்த ஆட்சியின் மீது மக்களுக்கு நம்பிக்கை வர வேண்டுமானால் தயவு செய்து அளவுக்கு மிஞ்சிய விளம்பரத்தைச் செய்யாதீர்கள், எந்தக் காரியத்தைச் செய்கிறோமோ அதோடு நிறுத்திக் கொள்ளுங்கள். அளவுக்கு மீறி விளம்பரம் செய்வதால் பல பேருடைய கவனம் ஈர்க்கப்படுகிறது. உடனே துருவித் துருவிப் பார்க்கிறார்கள், எவ்வளவு, என்ன திட்டம், அரிசனங்களுக்கு வீடு எத்தனை என்று பார்க்கிறார்கள். இந்தந்த வீடு யார் யாருக்கு, இந்தந்த வீடு யார் யாருக்கு என்று உள்ளே போய்ப் பார்த்த பிறகுதான் நமக்கு ஒன்றுமில்லை, வேறு யாருக்கோ என்று அறிந்துகொள்கிறார்கள்.

ஒரு வருஷத்திற்கு 50,000 வீடுகள், இரண்டு வருஷத்திற்கு 1 இலட்சம் வீடுகள் என்று சொல்லிக்கொண்டிருக்கிறீர்கள். இதை எப்பொழுதிலிருந்து சொல்கிறீர்கள் என்றால், நான் பதவியை விட்டுப் போன நேரத்திலிருந்து ஒரு இலட்சம் வீடுகள், ஒரு இலட்சம் வீடுகள், ஒரு லட்சம் வீடுகள் என்று சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள். ஒரு வருஷத்திற்கு 50,000 வீடுகள் என்று சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள். நான் போய் 1½ வருஷம் ஆகிறது. எத்தனை வீடுகள் கட்டியிருக்கிறீர்கள்? வானத்திலே எத்தனை நட்சத்திரங்கள் இருக்கின்றன தெரியுமா, கோடானு கோடி நட்சத்திரங்கள் என்று சொல்லிவிட்டு அதைச் சரிபார்க்க வேண்டுமென்றால் நீயே எண்ணிக்கொள் என்று

1975 நவம்பர் 4] [திருமதி சத்தியவாணிமுத்து]

சொல்வதுமாதிரி இருக்கிறது. 1 இலட்சம் விடுகள், 50,000 வீடுகள் என்று சொல்கிறீர்கள், எங்கே என்று கேட்டால் நீங்களே எண்ணிக்கொள்ளுங்கள் என்பதுபோல் செய்கிறீர்கள். பத்திரிகைகளிலே பணத்தைக் கொடுத்து விளம்பரப் படுத்துகிறீர்கள். மாடி விடு கட்டி உபகாரம் செய்கிறோம் என்றும், நிலமில்லாத ஏழைகளுக்கு . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சீக்கிரம் முடியுங்கள்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: நிறைய டைம் இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டைம் கிடையாது. முதலமைச்சர் பேசி முடிக்க வேண்டும், பிறகு கில்லட்டின் முடிக்க வேண்டுமல்லவா? சீக்கிரம் முடியுங்கள்.

திருமதி சத்தியவாணிமுத்து: எனவே, தாழ்த்தப்பட்ட மக்களுக்காக உண்மையிலேயே இந்த அரசு நல்ல காரியங்கள் செய்வதாக இருந்தால் நானே பல திட்டங்கள் அமைச்சராக இருக்கும்பொழுது கொடுத்திருக்கிறேன். அதிகாரிகள் மீது குறை சொன்னேன் என்றால், இன்றைக்கு மத்திய அரசு எடுத்திருக்கும் முனைப்பான திட்டம் என்ன? தாழ்த்தப்பட்ட மக்களுக்குத் துரோகம் செய்கிற, தாழ்த்தப்பட்ட மக்களுக்குப் போடும் திட்டங்களைச் செயல்படுத்தாமல் இருக்கிற அதிகாரிகள் யாரானாலும் அவர்கள்மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று தாழ்த்தப்பட்ட மேல் ஜாதியினர் நடத்திய மாநாட்டில் பிரதமர் இந்திராகாந்தி அம்மையார் அவர்கள் கடுமையாகப் பேசியிருக்கிறார்கள். ஆனால் இன்றையதினம் இங்கே நடைபெற்றிருப்பது என்ன? சில அதிகாரிகள் மீது குறைகளைச் சொன்னேன். நீங்கள் மெஜாரிட்டியாக இருக்கிறீர்கள். எனக்கு வாய்ப்பு அதிகம் இல்லாமல் இருக்கலாம். ஆனால் நீங்கள் அவர்கள்மீது என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறீர்கள்? திசை திருப்பும் முறையிலே முதலமைச்சரவர்கள், தாழ்த்தப்பட்ட மக்களின் பிரச்னைகளைத் தீர்த்து விட்டேன், தீர்த்து விட்டேன் என்று சொல்லிக் கொண்டே போகிறார்கள்.

அன்றைக்குக் கூட கேட்டேன், பார்லிமெண்டரி கமிட்டி போட வேண்டுமென்று ஓம் மேத்தா அவர்கள் சொன்னார்கள், ஆனால் முதலமைச்சரவர்கள் ஏற்கனவே போட்டு விட்டோம்

என்று சொன்னார் என்று நான் சொன்னேன். உடனே முதலமைச்சரவர்கள், நான் அப்படிச் சொல்லவில்லை, எனக்கு இன்னும் கடிதம் வரவில்லை, பிறகு நான் பார்க்கிறேன் என்றுதான் சொன்னேன் என்று சொன்னார்கள். ஆனால் பத்திரிகையிலே என்ன வந்திருக்கிறதென்றால், There is already a State-level Committee in our State என்று முதலமைச்சர் சொன்னதாகப் பத்திரிகையில் வந்திருக்கிறது. இங்கிருப்பது அட்வைசரி கமிட்டி, ஆனால் அவர்கள் சொல்வது பார்லிமெண்டரி கமிட்டி.

தாழ்த்தப்பட்ட மக்கள் என்றாலே முதலமைச்சரவர்களுக்கு ஒரு அலர்ஜி. அந்த அலர்ஜி வேண்டாம். தாழ்த்தப்பட்ட மக்களின் பிரச்னைகளை முறையாகச் செய்யுங்கள், உண்மையாகச் செய்யுங்கள், திசை திருப்பாதீர்கள். வேறு யார் மீதும் பழியைப் போடாதீர்கள். அவர்களுக்கு எந்த வகையிலே நல்ல காரியத்தைச் செய்ய வேண்டுமோ அதைச் செய்யுங்கள், திசை திருப்பும் காரியத்தைச் செய்ய வேண்டாமென்று கேட்டுக் கொண்டு, அமர்கிறேன்.

—

***மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, காந்தியடிகள் அரிசனங்களுக்கு என்ன செய்தார் என்ற கேள்வியை சென்ற ஆண்டு எழுப்பிய சத்தியவாணிமுத்து அம்மையார் அவர்கள், இன்றைக்கு காங்கிரஸ் அரிசனங்களுக்கு நன்மைச் செய்திருக்கிறது என்கின்ற சில புள்ளிவிவரங்களை யெல்லாம் இங்கே எடுத்துச் சொன்னார்கள். இப்பொழுதாவது காந்தியடிகள் அரிசனங்களுக்குச் செய்ததை அவர்கள் ஒத்துக் கொண்டதற்காக நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி சத்தியவாணிமுத்து: தலைவரவர்களே. . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, அவர்கள் பேசும்பொழுது நான் குறுக்கிடவில்லை.

டாக்டர் எச். வி. ஹாண்டே: பாயின்ட் ஆஃப் ஆர்டர் சார். எப்பொழுதும் முதலமைச்சரவர்கள் யாராவது எழுந்து பேசும் நேரத்தில் வாய்ப்பளிப்பார்கள். ஆனால் இப்பொழுது ஏதோ கோபத்தில் வாய்ப்பளிக்கமாட்டேன் என்று சொல்வது பொருத்தமாக இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

1975 நவம்பர் 4]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அதற்கென்று முறை இல்லையா? நான் எழுந்து பேச ஆரம்பித்தவுடனே அவர்கள் பேச ஆரம்பித்தால் என்ன செய்வது? சில மரபுகள், சில பண்பாடுகள் இருக்கின்றன, அவற்றைக் கடைப்பிடிக்க வேண்டும். சில முறைகள் இருக்கின்றன.

"விளம்பரம் செய்து கொள்கிறார்கள், விளம்பரம் செய்து கொள்கிறார்கள்" என்று அந்த விளம்பரத்தின் காரணமாக ஏற்பட்ட விழி எரிச்சல் தாங்க முடியாமல் சில கருத்துக்களை இங்கே சொல்லியிருக்கிறார்கள், துணை மதிப்பீடு பற்றி விவாதிக்கும்பொழுது எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அவர்களுக்கு எல்லாம் தெரிவித்துக்கொள்வேன், அரசு செய்யும் காரியங்கள் தொடர்ந்து விளம்பரம் செய்யப்படும். அவசர காலச் சட்டத்திற்குப் பிறகு இன்றைக்கு வாரம் இரண்டு விளம்பரங்களாவது மத்திய அரசினிடமிருந்து வந்து கொண்டிருக்கின்றன. 100 நாள் சாதனைகள், 30 நாள் சாதனைகள், 20 நாள் சாதனைகள், 10 நாள் சாதனைகள் என்றெல்லாம் தனித்தனி புத்தகங்களுக்காக பல இலட்சக்கணக்கான ரூபாய்க் கணக்கிலே செலவிடப்பட்டு வருகின்றன.

(பிற்பகல் 12.30)

சென்னை மாநகரம் போன்ற பெரிய நகரங்கள், கிராமப் பகுதிகளில் எல்லாம், பிரதமர் அவர்கள் நாட்டின் வளம் எப்படியெல்லாம் ஓங்கிட வேண்டும், நாட்டில் கடமை எப்படியெல்லாம் காப்பாற்றப்பட வேண்டும், கட்டுப்பாடு எப்படியெல்லாம் காப்பாற்றப்பட வேண்டுமென்பதற்காக சொன்னவைகள் எல்லாம் பெரிய பெரிய பானர்களாக எழுதி வைக்கப்பட்டு, அவை எல்லாம் நாட்டிலே விளம்பரங்களாகச் செய்யப்படுகின்றன. 100 நாள் சாதனைகள், திட்டங்கள் என்று ஏடுகளில் ஒரு பக்கம், இரண்டு பக்கம் விளம்பரங்களாக வந்து கொண்டிருக்கின்றன. ஆகவே, இந்த அரசு விளம்பரம் செய்கிறது என்று யாராவது குற்றம் சாட்டுவார்களேயானால் நான் அவர்களுக்குச் சொல்லுகிறேன்--தொடர்ந்து இந்த அரசு தான் செய்யும் காரியங்களுக்காக விளம்பரங்களைச் செய்து கொண்டே இருக்கும். இது மற்றவர்களுக்கு எவ்வளவு வயிற்றெரிச்சலைத் தந்தாலும் அது பற்றி அரசு நிச்சயமாகக் கவலைப்படாது.

செய்த காரியங்களை, செய்த சாதனைகளைத்தான் நாம் சொல்லுகிறோம். நாம் செய்யாதவைகளைச் சொல்லவில்லை. இல்லாதவைகளைச் சொல்லவில்லை. இந்த அரசின் சார்பில் செய்யப்படுகிற காரியங்களை மக்களுக்கு எடுத்து உணர்த்துவதன் மூலம் மக்கள் அந்தத் திட்டத்தின்பால் கவரப்பட வேண்டும்; அந்தத் திட்டம் மேலும் நல்ல முறையிலே வளருவதற்கு அவர்கள் உதவிகரமாக இருக்க வேண்டுமென்ற நிலைமையிலேதான் விளம்பரங்கள் செய்யப்படுகின்றன.

திருமதி த. ந. அனந்தநாயகி: ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் சார். 'வயிற்றெரிச்சல்' என்று சொல்லுவது பார்லிமென்டரி வார்த்தைதானா? அது மரியாதைக்குரிய வார்த்தைதானா? கனம் சபாநாயகர் அவர்கள் சொல்ல வேண்டும்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: நான் அம்மையார் போன்றவர்களுக்கு மரியாதையைக் கற்றுக் கொடுக்கக் கூடியவன். அவர்கள் இதில் மரியாதையைப் பற்றிச் சந்தேகப்பட வேண்டிய அவசியம் இல்லை.

துணை மானியக் கோரிக்கையிலே சுமார் 45 கோடி ரூபாய்க்கு இந்த மன்றத்தின் ஒப்புதல் கேட்டு, அதிலே 10 கோடி ரூபாய் எதிர்பாராதச் செலவுகளுக்காக என்ற வகையில் ஒதுக்கப்படுவது போக 35.55 கோடிக்கான விவரங்கள் இந்த மதிப்பீட்டு அறிக்கையிலே விரிவாக எடுத்து வைக்கப்பட்டு, அதற்குரிய மானிய ஒதுக்கீடுகளிலும் விளக்கமாகச் சொல்லப்பட்டிருக்கின்றன.

இந்த 35 கோடிக்கான செலவுகளைப் பார்த்தால் இதிலே மிக முக்கியமாக வறட்சியின் காரணமாய் பஞ்சாயத்துக்களில் இருந்து இவ்வாண்டு வசூலிக்கப்படக் கூடிய லோகல் செஸ், லோகல் சர்சார்ஜ் ஆகியவைகள் வறட்சியின் காரணமாகத் தள்ளுபடி செய்தது. பஞ்சாயத்து நிதியைப் பெரிதும் பாதித்தது என்பதை அடிப்படையாகக் கொண்டு அந்தப் பஞ்சாயத்துக்களுக்கு 6 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்திருக்கிறோம்.

வறட்சிக் காலத்திலே ஏற்கனவே திட்டத்திலே ஒதுக்கப்பட்ட தொகைக்கு மேல் அதிகமான செலவுக்கு 2 கோடியே 13 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம்.

1975 நவம்பர் 4] [டாக்டர் மு. கருணாநிதி]

வறட்சியை ஒட்டி, ஏழை விவசாயிகளுக்கு ஏற்கனவே தரப்பட்டு, இடையிலே தரப்படாமல் ரத்து செய்யப்பட்ட ஒரு திட்டம் தக்காவிக் கடன் வழங்குகிற திட்டம். அதிலும் வறட்சியை ஒட்டி ஏழை விவசாயிகளுக்காக 3 கோடி ரூபாய் வழங்கியிருக்கிறோம்.

அரிசன விட்டு வசதி வாரியத்தில் வேலைத் திட்டங்களைத் துரிதப்படுத்தி டிசம்பர் மாத இறுதிக்குள் 30,000 வீடுகள் கட்டி முடிக்க மொத்தமாக 30,000 வீடுகள் கட்ட 13 கோடி ரூபாய்க்குத் திட்டமிடப்பட்டிருக்கிறது என்றாலும் மேலும் ஆகிவிடும் என்று ஒதுக்கீடு 8.25 கோடி ரூபாய் அரிசன வீட்டு வசதி வாரியத்திற்காக ஒதுக்கியிருக்கிறோம்.

தேங்கிக் கிடக்கும் கைத்தறித் துணிகளை வாங்கி வழங்க துணை மானியத்தில் 1.5 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம். பத்து சதவிகிதம் ரிபேட்டை 20 சதவிகிதமாக உயர்த்த கூடுதலான நிதி ஒதுக்கீடு ஒரு கோடி ரூபாய் வரையில் தரலாம் என்று திட்டமிட்டோம்; எழுபது லட்சம் ரூபாய் வரை அதற்கு நாம் ஒதுக்கியிருக்கிறோம்.

கூட்டுறவு நூற்பாலைகளில் பங்குத் தொகையை அதிகப்படுத்திய செலவுக்கு 87 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

1975-76-ம் நிதியாண்டுத் திட்டத்தில் குடிசை மாற்று வாரியத்திற்கு ஒதுக்கப்பட்ட 1.70 கோடி ரூபாய்க்கு மேல் துணை மானியத்தில் அதிக ஒதுக்கீடு 1.75 கோடி ரூபாய்.

ஏற்கனவே, குடிசை மாற்று வாரியத்திற்குக் கொடுக்கப்பட்ட கடனை மானியமாக மாற்றிய வகையில் இந்தத் துணை மதிப்பீட்டில் மட்டும் 62 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

தமிழ்நாட்டில் போக்குவரத்து நிதிக் கழகத்தின் முதலீட்டுக்காக ஒரு கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

சமூக நலத் திட்டங்களுக்குக் கூடுதல் நிதி ஒதுக்கீடு 1.23 கோடி ரூபாய்.

தஞ்சையில் அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலை நிறுவ 15 லட்சம் ரூபாய் நிதி.

கூட்டுறவுத் துறைக்கு 20 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. மேற்கு தொடர்ச்சிமலை மேம்பாட்டுத் திட்டத்திற்கு 22 லட்சம் ரூபாய்.

பூம்புகாரில் மீனவர்களுக்கு வீடு கட்ட நிதி 65 லட்சம் ரூபாய்.

மீனவர்களுக்கு வீடு கட்டும் திட்டத்திற்காக மேலும் நிதி ஒதுக்கீடு 80 லட்சம் ரூபாய்.

சென்னை நகர குடிதண்ணீர்த் திட்டத்திற்காக 126 லட்சம் ரூபாய்.

மதுரை மாநகராட்சிக்கு அரசு நிதி 12 லட்சம் ரூபாய்.

அகதிகள் மறுவாழ்வுக்கு 33 லட்சம் ரூபாய்.

இப்படி, மிக முக்கியமான பணிகளுக்காக, வறட்சிக் காலத்தில் பாதிக்கப்பட்ட ஏழைய எளிய விவசாயிகளுக்காக, மக்கள் நலத் திட்டங்களுக்காக, தாழ்த்தப்பட்டவர்களுக்கு மிக முக்கியமாகத் தேவைப்படுகிற உறையுள் அமைத்துத் தருகிற பணி பல ஆண்டுக் காலமாக நினைத்துக் கூடப் பார்க்கப்படாமல் இருந்து, கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு இதற்கான திட்டம் தீட்டப்பட்டு, வீட்டு வசதி வாரியம் அரிசனங்களுக்காகத் தனியாக அமைக்கப் பட்டு, அந்த நல்ல காரியத்திற்காக எல்லாம் தொகை ஒதுக்கப் பட்டிருக்கிறது.

இதிலே, நம்முடைய நண்பர் ஆலடி அருணா பேசுகிற நேரத்தில் "நீங்கள் மத்திய நிதியமைச்சரிடத்தில், பணத்திற்கு கணக்குக் கேட்ட காரணத்தால் நிதி தேவையில்லை என்று கூறிவிட்டு, மறுபடியும் 'சாமியே சரணம் ஐயப்பா' என்று அவர்களிடம் சென்று மண்டியிட்டு பணம் கேட்கிறீர்களே நியாயமா?" என்று கேட்டார்கள்.

இதே மன்றத்தில் அப்படி ஒரு அறிவிப்பை நான் வெளியிட்ட போது மன்றத்திலே உள்ள அனைத்துக் கட்சித் தலைவர்களும் பேசுகின்ற நேரத்தில் 'அறவே நாம் வறட்சி நிவாரண நிதி தேவை யில்லை என்று கூறிவிடக் கூடாது; நம்முடைய மாநிலத்தின் தேவையை உத்தேசித்து முதலமைச்சர் தன்னுடைய கருத்தை மாற்றிக் கொண்டு வறட்சி நிவாரண நிதியை கேட்கவேண்டும்' என்ற கருத்தை வலியுறுத்திச் சொன்னார்கள். நான் அப்போதும் மத்திய அரசு தருகின்ற வறட்சி நிவாரணத் தொகையைத் திட்டத் தொகைகளில் கழித்துக் கொள்ளக் கூடாது. அப்படித் திட்டத் தொகையில் கழித்துக் கொண்டால் வறட்சி நிவாரணப் பணி என்ற பெயரால் திட்டங்கள் நிறைவேற முடியாத ஒரு இக்கட்டான நிலை இந்த அரசுக்கு ஏற்பட்டு விடும். ஆகவே, திட்டத் தொகையில்

கழித்துக் கொள்ளாமல் கொடுத்தால் நாங்கள் வாங்கிக் கொள்கிறோம்", என்று சொன்னேன். அதைத்தான் இன்றளவும் வலியுறுத்தி வருகிறேன். அண்மையில் டெல்லியில் பிரதமரைச் சந்தித்த போதும் இதைத்தான் சொன்னேன். சென்னைக்கு வந்த போதும் பிரதமரிடத்தில் இதைத்தான் சொன்னேன். நிதியமைச்சரைச் சந்தித்த போதும் இதைத்தான் சொன்னேன். திட்டத் தொகையில் கழித்துக் கொள்ளாமல் நீங்கள் வறட்சி நிவாரணப் பணிகளுக்குத் தொகை தரவேண்டுமென்று கேட்டேன். ஆனால் அண்மையில் அவர்கள் அப்படி எதுவும் வறட்சி நிவாரணத்திற்குத் தர இயலாது என்று கூறிவிட்டார்கள்.

கொடுத்த தொகை 7 கோடி ரூபாய். இந்த 7 கோடி ரூபாயிலே, அடிக்கடி நான் சுட்டிக்காட்டியது போல் 70 சதவிகிதம் கடன்; 30 சதவிகிதம் தான் மானியம் ஆகும். நமக்கு வறட்சிப் பணிகளுக்காக ஆகியிருக்கும் மொத்தச் செலவு 58.8 கோடி ரூபாய் ஆகும். இதிலே 1974-75-ல் திட்டத்திற்கு அப்பாற்பட்ட சிறப்புச் செலவாக 8.8 கோடி ரூபாய்; திட்டச் செலவாக 10 கோடி ரூபாய். ஆக 18.8 கோடி ரூபாய் 1974-75-ல் செலவழிக்கப்பட்டது.

1975-76-ல் பணிகளுக்காக 15.8 கோடி ரூபாய்; தக்காவிக் கடனுக்காக 3 கோடி ரூபாய்; டீசல் சப்சிடி—இயந்திரங்களுக்காக மானியமாக உதவி 1.2 கோடி ரூபாய். ஆக, 28.8 கோடி ரூபாய் 1974 முதல் 1975-76 வரை திட்டத்திற்கு அப்பாற்பட்ட செலவாக ஆகியிருக்கிறது. திட்டச் செலவாக 1975-76-ல் 20 கோடி ரூபாய். ஆக மொத்தம் 30 கோடி. இரண்டையும் கூட்டினால் 58.8 கோடி ரூபாய் ஆகும்.

இந்த 58.8 கோடி ரூபாய் அல்லாமல்தான் வறட்சி காரணமாக பஞ்சாயத்து ஒன்றியங்களுக்கு, அவர்கள் சில வரிகளை வசூலிக்க வேண்டாம்; செஸ்களை வசூலிக்க வேண்டாம் என்று நாம் கூறியதற்கேற்ப அவர்களுடைய இழப்பை ஈடுகட்ட இவைகளுக்கு மேலாக 6 கோடி ரூபாய் பஞ்சாயத்துக்களுக்காக, பஞ்சாயத்து யூனியன்களுக்காக இந்த அரசு ஒதுக்கியிருப்பதை மறந்துவிடக் கூடாது.

நில வரி வஜா, கடன் ஒத்தி வைப்பு ஆகிய வகையில் 10 கோடி ரூபாய் மேலும் இந்த அரசுக்குச் செலவாகியிருக்கிறது. நகரங்களில் குடிதண்ணீர் வசதித் திட்டங்களை ஏற்பாடு செய்து தர சுமார் 3 கோடி ரூபாய் செலவாகியிருக்கிறது. நீங்கள் திட்டச் செலவுகளைத்தானே செய்தீர்கள் 30 கோடி ரூபாயில் என்ற வாதத்தை நண்பர் அருணா அவர்கள் இங்கே எழுப்பினார்கள்.

[டாக்டர் மு. கருணாநிதி] [1975 நவம்பர் 4

திட்டச் செலவு என்றாலும்கூட திட்டமிடப்பட்ட இனங்களில் இருந்து திசை திருப்பிவிடப்பட்டு, வறட்சியால் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு அந்தச் செலவுகள் செய்யப்பட்டிருக்கின்றன. இது ஒரு கட்டம்.

அடுத்த கட்டம், திட்டச் செலவு என்றால் அதற்கென்று ஒரு காலவரையறை வகுத்து, இப்போது தொடங்கி இப்போது முடிக்க வேண்டுமென்று இருக்கும். ஆனால் அப்படிப்பட்ட காலவரையறை வைக்காமல் இந்த வறட்சிக் காலத்திலேயே, இந்தத் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட பணம் எல்லாம் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்குச் செலவழிக்கப்பட வேண்டுமென்று விரைவுபடுத்தி நாம் செலவு செய்திருக்கிறோம். இந்த முறையில்தான் திட்ட ஒதுக்கீட்டில் இருந்து 1974-75-ல் 10 கோடி ரூபாயும், 1975-76-ல் 20 கோடி ரூபாயும் நாம் வறட்சிப் பணிகளுக்காகச் செலவிட்டிருக்கிறோம்.

இந்தச் செலவினங்களை எல்லாம் நாம் சுட்டிக்காட்டித்தான் நம்முடைய நிதிநிலையை உணர்ந்து மத்திய அரசு உதவிட வேண்டுமென்று கேட்டோம். வறட்சிப் பணிகளுக்காக மாத்திரமல்ல. மதுவிலக்கின் காரணமாக இந்தியாவிலே பெரும் இழப்பிற்கு ஆளாகியிருக்கிற மாநிலங்கள் இரண்டு. ஒன்று குஜராத், மற்றொன்று நமது தமிழ்நாடு மாநிலம். இந்த மாநிலங்களுக்கு பிரதமர் அண்மையில் அறிவித்த 12 அம்சத் திட்டத்தோடு இன்னொரு அம்சத்தையும் சேர்த்து மதுவிலக்கை நடைமுறைப் படுத்துகிற மாநில அரசுகளுக்கு நஷ்டயீடு தரப்படும் என்று வகுப்பார்களேயானால் மற்ற மாநிலங்களையும் அது ஊக்கப் படுத்துவதாக அமையும் என்று நான் கேட்டுக்கொண்டேன்.

அதுபற்றி ஒரு அமைச்சரவைக் கூட்டம் டெல்லியில் நடைபெற இருக்கிறது என்று அறிந்தவுடன் டெலக்ஸ் மூலமாக பிரதமர் அவர்களை நான் கேட்டுக்கொண்டேன். தொடர்ந்து கடிதம் அனுப்பினேன். ஆனால் வந்திருக்கிற செய்தி மதுவிலக்கிற்காக நஷ்டயீடு எதுவும், அதை அமல்படுத்துகிற மாநிலங்களுக்குத் தருவதற்கில்லை என்ற அளவிலே செய்தி வந்திருக்கிறது நமக்கு. அது மிக மிக வருந்தத்தக்க செய்தியாகும். ஏறத்தாழ 58 அல்லது 59 கோடி ரூபாய் மதுவிலக்கு காரணமாக நாம் இழப்புக்கு ஆளானோம். குதிரைப் பந்தயத்தை ஒழித்ததன் மூலமாகவும், பரிசுச் சீட்டை நாம் அறவே நிறுத்தியதன் மூலமும் ஓர் ஐந்து கோடி ரூபாய் அளவிற்கு நாம் இழப்பிற்கு ஆளாகியிருக்கிறோம்.

1975 நவம்பர் 4] [டாக்டர் மு. கருணாநிதி]

ஆகவேதான், இப்படிப்பட்ட நல்ல காரியங்களுக்கு, காந்தி அடிகளுடைய கொள்கைகளைப் பின்பற்றி நடத்துகிற இந்த அரசுக்கு உற்சாகம் அளிக்கிற வகையில் மத்திய அரசு நிதி உதவி தரவேண்டும் என்று நாம் கேட்டோம். இப்படிக் கேட்பது, அருணா அவர்களுடைய மொழிப்படி, 'சாமியே சரணம் ஐயப்பா' என்றிருக்கலாம். நினைத்ததுதான் நினைத்தார், தமிழ் நாட்டுக் கடவுளை நினைக்கக் கூடாதா? இப்போதெல்லாம் அருணா அவர்கள் மலையாளக் கடவுளைத்தான் நினைக்கிறார். திருத்தணியில் இருக்கிற முருகனைப் பற்றி நினைக்கக் கூடாதா?

திரு. கே. டி. கே. தங்கமணி: இந்த பரிசுச் சீட்டு ஒழிப்பதைப் பற்றிச் சொன்னார்கள். சென்ற சட்டமன்றக் கூட்டத்தில் அந்த மாதிரி பரிசுச்சீட்டு ஒழிப்பைப் பற்றி எந்தவிதமான அறிவிப்பும் இல்லை. அப்படியிருக்கிறபோது இப்போது இடைக்காலத்தில் பரிசுச் சீட்டுகளை ஒழித்தார்கள். அந்தமாதிரி பரிசுச்சீட்டு அப்படி அவர்களுக்கு என்ன பாதகமான ஒரு விஷயம்? பரிசுச் சீட்டு மற்ற மாநிலங்களில் எல்லாம் நடந்து வருகிறது. அந்தப் பரிசுச் சீட்டால் ஏற்படும் அபாயம் என்ன? ஏற்கனவே நமக்கு பரிசுச் சீட்டு சம்பந்தமாக, இந்தப் பரிசுச் சீட்டில் இருந்து கிடைக்கக்கூடிய பணம் எப்படி எப்படியெல்லாம் செலவழிக்கப் படுகிறது என்று இந்த மன்றத்தில் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

The decision was unilateral. We would like to know the basis of the decision regarding 'parisu seetu'.

DR. H. V. HANDE: In addition to what the hon. Member Thiru K. T. K. Tangamani has said, let me stress one point. Yesterday I remember to have read in some paper, that as a result of the steps taken by this Government, the financial position of the State is not very sound. As a result of the steps taken to abolis hthe sale of raffle tickets, intrduction of prohibition, etc., the Government is losing a lot of income. May I knw whether the Government had thought of any alternative steps to make good the financial loss or there is basis for the fear expressed in the papers that the position, the financial position of the State is not sound. Will the Hon. Chief Minister take the House into confidence and give a proper clarification regarding this point.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: பத்திரிகைகள் விரும்புவதைப் போல் அவ்வளவு மோசமான நிலையில் தமிழ் நாட்டின் நிதி நிலை இல்லை. ஆனால் நிதிப் பற்றுக்குறை இருக்கிறது. நிதிப் பற்றுக்குறை என்பதற்கும் பயங்கரமான நிதி நெருக்கடி என்பதற்கும் பெருத்த வேறுபாடு இருக்கிறது. நமது இந்த நிதிப் பற்றுக் குறையைச் சரிக்கட்டுவதற்கு நம்முடைய திட்டங்கள், வளர்ச்சித் திட்டங்கள் இவை எல்லாம், ஒழுங்குற நடைபெறுவதற்கு, தீவிரமாக நடைபெறுவதற்கு, இன்னும் சொல்லப்போனால் பிரதமர் அவர்கள் அறிவித்திருக்கிற இருபது அம்சத் திட்டத்தை மேலும் முனைப்பாக நாம் தமிழகத்தில் நிறைவேற்றுவதற்கு பணம் தேவை என்று கூறுகிறோம். அதற்கு வேறு எந்த ஆதாரங்களை கையாளப் போகிறீர்கள் என்று நண்பர் ஹாண்டே அவர்கள் கேட்டார்கள். இப்போதைய இந்தப் பற்றுக்குறையைச் சரிக்கட்ட நிச்சயமாக வரி போடுகின்ற உத்தேசம் இந்த அரசுக்கு இல்லை என்பதை மாத்திரம் நான் இந்த நேரத்தில் நண்பர் ஹாண்டே அவர்களுக்கு எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்றால் தேர்தலை எதிர்பார்க்கும் நேரத்தில் இப்படி ஏதாவது முதல் அமைச்சர் அவர்கள் சிக்கிக்கொள்ள மாட்டாரா என்று நினைத்து நண்பர் ஹாண்டே அவர்கள், ஏதாவது வரிகளைப் போடுவார்களா என்று மறைமுகமாகக் கேட்டிருக்கிறார்கள் என்று நினைக்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி: நாளை அர்பன் லான்ட் டாக்ஸ் வரப்போகிறது. ஆளை கொல்லு கொல்லு என்று கொல்லப் போகிறீர்கள். வரி போடாதது மாதிரிச் சொல்கிறீர்கள். வரி போட நாளைக்கு பில் வரப் போகிறது.

டாக்டர் எச். வி. ஹாண்டே: தலைவர் அவர்களே, இப்போதைய நிலைமையைச் சரிக்கட்ட வரி போடுவதாக உத்தேசம் இல்லை என்று முதல் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். பிறகு என்ன செய்யப் போகிறார்களோ? வரி போட மாட்டேன் என்று சொன்னதற்காக, அந்த வார்த்தையை அவர்கள் காப்பாற்றிக் கொண்டால் அவர்களுக்கு தாங்க்ஸ்.

(திரு. எஸ். வடிவேல் எழுந்தார்.)

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: திருமதி அனந்தநாயகி அவர்கள் சொன்னார்கள். அவர்களுக்குப் பதில் சொல்லிவிடுகிறேன். அதற்குப் பதில் சொன்ன பிறகு நீங்கள் சொல்லுங்கள்.

1975 நவம்பர் 4] [டாக்டர் மு. கருணாநிதி]

திருமதி அனந்தநாயகி அவர்கள் சொன்னார்கள், "நாளையதினம் அர்பன் லாண்ட் டாக்ஸ் பில் வரப்போகிறது. ஆளைக் கொல்லு கொல்லு என்று கொல்லப்போகிறீர்கள்" என்று சொன்னார்கள். இப்படி பணக்காரர்களுக்காக, முற்போக்குக் கட்சியைச் சார்ந்த அம்மையார் அவர்கள் இந்த அளவிற்கு அவர்கள் துன்பத்தையும் துயரத்தையும் தெரிவித்துக் கொண்டதற்காக என் நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி : நாளையதினம் நான் கூறுகிறேன், யார் பாதிக்கப்பட இருக்கிறார்கள் என்று.

திரு. எஸ். வடிவேல் : தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள், 30,000 வீடுகள் கட்டிக் கொடுக்க போவதாக, துணை மானிய அறிக்கையில் சொன்னார்கள். . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விவாதத்தை நாம் ஒரு மணிக்குள் முடித்து விடவேண்டும்.

திரு. எஸ். வடிவேல் : சொல்லி முடித்துவிடுகிறேன். சீக்கிரமாகச் சொல்லிவிடுகிறேன். கடந்த ஐந்தாண்டுக் காலமாக— ஐந்து ஆண்டுகள் முடியப் போகின்றன—என் தொகுதியில் ஒரு வீடு கூட கட்டவில்லை. முதல் அமைச்சர் அவர்கள் முதல் பட்ஜெட்டுக்குப் பதில் அளிக்கும்போது சொன்னார்கள். திரு. வடிவேல், திட்டங்களை எழுதிக் கொடுங்கள் என்று சொன்னார்கள். முதல் அமைச்சர் அவர்களிடமும் கொடுத்தாகி விட்டது. ஹரிஜன நலத்துறைக்கும் எழுதிக் கொடுத்தாகி விட்டது. ஒரு வீடு கூட கட்டவில்லை. என் தொகுதி பாராமுகமாக இருக்கிறது. அதற்கு ஏதாவது பதில். . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : கம்யூனிஸ்ட் கட்சி என்பதற்காக கட்டப்படாமல் இல்லை. தஞ்சை மாவட்டத்திற்கு திரு. வடிவேல் அவர்கள் சென்று பார்ப்பார்களேயானால் கம்யூனிஸ்ட் விவசாயத் தொழிலாளர்கள், பலபேர்கள் குடியிருக்கிற வீடுகள் ஹரிஜன வீட்டுவசதி வாரியத்தினால் கட்டித் தரப்பட்ட வீடுகள். அவர்களது தொகுதியைப் பொறுத்தவரையில், முதல் கட்டமாகக் கட்டப்படும் 30,000 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டவுடன் அடுத்த, கட்டத்தில்தான் அவர்களது தொகுதியை

இணைத்துக் கொள்ளமுடியும் என்பதை நான் திரு. வடிவேல் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி: பரிசுச் சீட்டுப் பற்றி கேட்டேனே?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: பரிசுச்சீட்டுப் பற்றி ஏற்கனவே நம் ஹாண்டே அவர்கள் சுதந்திராக் கட்சியில் இருந்த போதே அதை ஒழித்துவிட வேண்டும் என்று சொன்னார்கள். நாள் அதிகமானாலும் கூட டாக்டர் ஹாண்டே அவர்கள் சொன்ன சில நல்ல நியாயங்களை உணர்ந்து மேலும் அதற்கு முத்தாய்ப்பு வைப்பதுபோல் திரு. ஜெயப்பிரகாஷ் நாராயண் அவர்களும் கேட்டுக் கொண்டதின் காரணமாக—குஜராத்தில் இந்த மூன்று தீமைகள் இல்லை என்று சொன்னார்கள். அங்கே மது இல்லை, மது விலக்குத் திட்டம் இருக்கிறது. குதிரைப் பந்தயம் இல்லை. பரிசுச் சீட்டும் இல்லை. அதேபோல் அந்த மூன்று தீமைகளையும் இங்கே ஒழித்து விடவேண்டும் என்று இராஜாஜி நினைவாலயத்தைத் திறந்து வைக்க வந்த திரு. ஜெயப்பிரகாஷ் நாராயண் அவர்கள் கேட்டுக் கொண்டார்கள். உங்களுக்கெல்லாம் தெரியும். நல்ல காரியங்களை யார் கேட்டுக் கொண்டாலும் உடனடியாக அதே மேடையில் ஏற்றுக்கொண்டு அறிவிப்பது இந்த அரசாங்கத்திற்கு வழக்கம் என்பதை மாண்புமிகு கே. டி. கே. தங்கமணி அவர்கள் உணருவார்கள். அந்த வகையில் தான் அதை உடனடியாக அறிவித்து விட்டு இன்று செயல்படுத்துகிறோம்.

DR. H. V. HANDE : The Hon. Chief Minister said that he had paid heed to my advice. But I may point out to him that he had paid heed to my advice too late in the day.

திரு. ஏ. சுப்பிரமணியம்: பாயின்ட் ஆப் ஆர்டர். முதல் அமைச்சர் அவர்கள். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது கேள்வி நேரமா என்ன?

திரு. ஏ. சுப்பிரமணியம்: முதல் அமைச்சர் அவர்கள் டாக்டர் ஹாண்டே அவர்கள் சுதந்திராக் கட்சியில் இருந்தபோது விடுத்த வேண்டுகோளை அவர்கள் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் சேர்ந்த பிறகு ஏற்றுக் கொள்கிறார்கள். அப்போது அவர்கள் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் சேர்ந்ததை முதல் அமைச்சர் அவர்கள் வரவேற்கிறார்களா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: நீங்கள் வரவேற்காமல் இருக்கலாம், நான் வரவேற்கிறேன். டாக்டர் ஹாண்டே அவர்கள் சுதந்திராக் கட்சியில் இருந்தபோது அவர் விடுத்த வேண்டுகோளை

1975 நவம்பர் 4] [டாக்டர் மு. கருணாநிதி]

இப்போது என் நிறைவேற்றுகிறேன் என்றால் அவர் தலைவர் இராஜாஜிக்கு நினைவாலயம் திறக்கிற நேரத்தில் அதை திரு. ஜெயப்பிரகாஷ் நாராயண் அவர்கள் ஞாபகப்படுத்தினார். நம் ஹாண்டேயின் தலைவர், உண்மையான தலைவர் இராஜாஜிதான் இன்றைக்கும். அந்த இராஜாஜி அவர்களுடைய நினைவாலயம் திறந்து வைக்கப்படும் நேரத்தில் ஹாண்டே அவர்கள் சொன்னதை ஞாபகத்தில் வைத்துக்கொண்டு, ஜெயப்பிரகாஷ் நாராயண் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க அந்த உறுதி மொழியை அளித்து பரிசுச் சீட்டு அகற்றப்பட்டது.

அடுத்து நண்பர் ஜேம்ஸ் அவர்கள் நேசமணி பாலம் இன்னும் கட்டி முடிவடையவில்லை என்ற குறைபாட்டைச் சொன்னார்கள். அந்தப் பாலத்திற்கான அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றபோதே யாருடைய வேண்டுகோளும் இல்லாமல் நம்முடைய பொன்னப்ப நாடார், ஜேம்ஸ், மற்றவர்களையும் வைத்துக்கொண்டு நான்தான் சொன்னேன், இந்தப் பாலத்திற்கு நேசமணியின் பெயர் வைக்கப் படும் என்று. அதற்கு நன்றி எல்லாம் கூட தெரிவித்துக்கொண் டார்கள். அந்த வேலை இன்னும் முடிவடையாமல் இருக்கக் காரணம் நாம் தந்த மதிப்பீட்டின்படி டெண்டர் யாரும் கோர வில்லை. அதன் காரணமாக தாமதமாயிற்று. இப்போது அந்த வேலைக்கு மறுபடியும் டெண்டர் விட வேண்டிய நிலை ஏற்பட்டு இப்போது வேலைகள் தொடங்குகிற தருவாயில் இருக்கின்றன என்பதை நண்பர் ஜேம்ஸ் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஜேம்ஸ் அவர்கள் இன்னொரு குறைபாட்டைப் பற்றியும் சொன்னார்கள். கன்னியாகுமரி மாவட்டத்தில் எல்லைப் போராட்டத்தில் கலந்து கொண்டதற்காக பலருக்கு அந்த ஓய்வூதியம் தரப்படவில்லை, மாகாந்திர மானியம் தரப்படவில்லை என்று சொன்னார்கள். எல்லைப் போராட்டத்தில் கலந்து கொண்ட 51 பேர்கள் இப்போது ஓய்வூதியம் பெறுகிறார்கள். அரசாங்கப் பரிசீலனையில் உள்ள மனுக்களின் எண்ணிக்கை 56. அந்தப் பரிசீலனை முடிவுற்றதும் அவர்களுக்கும் வழங்கப்படும்.

இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் கலந்து கொண்டவர்களுக்காக கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் 28 பேர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. இரண்டு பேர்கள் மனுக்கள் அரசாங்கப் பரிசீலனையில் இருக்கின்றன. தியாகிகள் பென்ஷன் 37 பேர்களுக்கு கன்னியாகுமரி மாவட்டத்தில் வழங்கப்படுகிறது.

இதிலே 6 பேர் இறந்து விட்டார்கள், இப்போது பென்ஷன் 31 பேர் தான் பெற்றுக்கொண்டு இருக்கிறார்கள். மேலும், இறந்த இரண்டு தியாகிகளின் மனைவிகளுக்கு தியாகிகள் பென்ஷன் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் கலந்து கொண்டவர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்படுவதன் விவரம் தேவையானால் மொத்தம் 1,376 பேர்களுக்கு இதுவரையில் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் கலந்து கொண்டு சிறை சென்றவர்களுக்கு ஓய்வூதியம் தரப்பட்டு இருக்கிறது என்பதனையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்ள பெரிதும் கடமைப்பட்டு இருக்கிறேன்.

நம்முடைய நண்பர் அரவக்குறிச்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. ஜப்பார் அவர்கள் ஏதோ அவர்கள் தொகுதி கேட்பாராற்றுப் போய்விட்டது என்று எல்லாம் சொன்னார்கள். சொல்லிக் கொண்டே வந்தவர் நொய்யல் திட்டம் பற்றியும் அவரே சொல்லி, அதற்கு இந்த அரசு ஏற்கனவே ஒப்புதல் வழங்கியிருப்பதையும் குறிப்பிட்டார். அவரே பேசும்போது சொன்னார், இதிலே இருக்கும் இடைஞ்சல் என்ன என்ன என்றும். கருநாடக மாநிலத்தோடு காவேரி பற்றியப் பிரச்னை இன்னும் தீராமல் இருக்கிற காரணத்தில் உள்ள இடர்ப்பாடுகளை அவரே விளக்கினார். நான் உறுதியாகச் சொல்கிறேன். இந்த இடர்ப்பாடுகள் நீங்கிய பிறகு நிச்சயமாக நொய்யல் திட்டம் மேற்கொள்ளப்படும் என்பதை நான் அவர்களுக்கு உறுதியாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நம்முடைய நண்பர் முத்துசாமி அவர்கள் பேசும்போது பெரியகுளம் அருகில் கம்பம் பள்ளத்தாக்கில் வெங்கடாஜலபுரம் கால்வாய் திட்டத்தை எடுத்துக்கொள்ள வேண்டுமென்ற கருத்தை வலியுறுத்தினார்கள். இந்தக் கால்வாய்த் திட்டத்திற்கு பி. டி. ராஜன் அவர்கள் நீண்ட காலமாக கோரிக்கை எழுப்பி வந்தார்கள். இப்போது தொகுதி சட்டமன்ற உறுப்பினரும், தொகுதி மக்களும் அந்தக் கோரிக்கையை தொடர்ந்து எழுப்பி வருகிறார்கள். அவர்களுடைய நீண்ட நாளைய கோரிக்கை வெற்றி பெற்றது என்பதற்கு அடையாளமாக ஏறத்தாழ ஆயிரம் ஏக்கர் புதிய பாசனத்திற்கு வரக்கூடிய அந்தத் திட்டத்திற்கு 35 லட்சம் ரூபாய் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டு அதைத் தொடங்கி வைப்பதற்கு இந்த அரசு இரண்டு நாளைக்கு முன்பு அனுமதி வழங்கியிருக்கிறது என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

1975 நவம்பர் 4] [டாக்டர் மு. கருணாநிதி]

அந்தத் திட்டத்தை நீண்ட காலமாகக் கோரி வந்த பி. டி. ராஜன் அவர்கள் பெயரால் 'பி. டி. ராஜன் வாய்க்கால் திட்டம்' என்று அழைக்கப்படும் என்பதையும் நான் இங்கே கூறிக்கொள்கிறேன்.

போனஸ் பற்றியும், அதனால் இன்று இடர்ப்பாட்டிற்கு ஆளாகி இருக்கின்ற தொழிலாளர்கள் பற்றியும் நம்முடைய ஜேம்ஸ் அவர்களும், மற்றவர்களும் இங்கே சுட்டிக் காட்டினார்கள். நம்முடைய அரசைப் பொறுத்தவரையில், தொழிலாளர்கள் நன்மையில் எவ்வளவு அக்கறை கொண்டு இருக்கிறது என்பதையும் சில ஆலைகள் மூடப்பட்டோ அல்லது வேலை நிறுத்தத்தால் பாதிக்கப்பட்டோ தொழிலாளர்கள் கஷ்டப்படும் நேரத்தில் இந்தியாவிலேயே இந்த அரசு ஒன்றுதான் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு நிவாரண நிதியை லட்சக் கணக்கில் வழங்கிய அரசு என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அண்ணா அவர்களுடைய காலத்தில் கோவை மில் தொழிலாளர்களுக்கு 1 லட்சத்திற்கு மேற்பட்ட தொகையை அவர்களுடைய நிவாரணத்திற்கு வழங்கினார்கள்.

அண்ணா அவர்களுக்குப் பிறகு இந்த அரசு கிட்டத்தட்ட ஐந்து லட்ச ரூபாய் கோவையிலுள்ள ஆலைத் தொழிலாளர்களின் நிவாரணத்திற்காக—வேலை நிறுத்தத்தின்போதும், கதவடைப்பின் போதும்—வழங்கியிருப்பதை யாரும் மறந்துவிட முடியாது.

அண்மையில் கூட நம்முடைய சுப்பிரமணியம் மற்றும், ஆளும் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் எல்லாம் நான் கோவை சென்ற போது என்னிடத்தில் 'மது நூற்பாலை' என்ற நூற்பாலை மூடப்படுகின்ற நிலையில் இருப்பதை எடுத்துச் சொன்னார்கள். அங்கே இருக்கும் 400 தொழிலாளர்கள் தீபாவளி நேரத்தில்கூட தங்களுடைய வீடுகளில் மகிழ்ச்சியாக இருக்க முடியவில்லை என்று சொன்னார்கள். அதையெல்லாம் கேட்டுக்கொண்டு நான் சென்னைக்கு வந்த பிறகு 80,000 ரூபாயை ஆள் ஒன்றுக்கு ரூ. 200 வீதம் தீபாவளி நேரத்தில் கடனாக வழங்க இந்த அரசாங்கத்தின் சார்பில் உத்தரவிடப்பட்டிருக்கிறது. அந்தத் தொழிலாளர்களுக்கு ரூ. 80,000 வழங்கப்பட்டு இருக்கிறது என்பதையும் நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஏ. சுப்பிரமணியம்: தலைவரவர்களே, பாயின்ட் ஆஃப் ஆர்டர். இந்த ரூ. 80,000 வழங்கப்பட்டதை நான் வரவேற்கிறேன். அதே நேரத்தில் ஏறத்தாழ 2½ லட்சம் ரூபாய் மதிப்புள்ள நூலை

அரசாங்கத்தின் பேரில் ரூமில் போட்டு, சீல் வைத்து, அதை அந்த மானேஜ்மெண்டார் பிளட்ஜ் செய்து, அடமானம் வைத்த பிறகு தான் அந்தப் பணம் கொடுக்கப்பட்டு இருக்கிறது. மேலும் அந்த நூலை அவர்களே விற்று அந்தப் பணத்தை அரசாங்கத்திற்கு கட்டவேண்டுமென்ற நிபந்தனை பேரில்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லிக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: கடனைக் கொடுக்கும் போது பெரிய முதலாளிகளிடத்தில் இந்தப் பிடிப்புகூட வைத்துக் கொள்ளாமல் எப்படித்தான் கொடுப்பது? அந்த முதலாளி அந்தத் தொழிலாளர்களுக்கு இதைத் தரவேண்டும். அப்படியிருக்கும் போது ஆற்றில் போட்டாலும் அளந்து போடு என்று சொல்வார்கள். அதனால்தான் அளந்து போடப்பட்டு இருக்கிறது.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த அரசைப் பொறுத்தவரையில் போனஸ் சம்பந்தமாக தொழிலாளர்களுக்கு எல்லாம் செய்து கொண்டு இருக்கிறது என்று சொன்னார்கள். இப்போதெல்லாம் பல முதலாளிகள் இரண்டு கணக்குகள் வைத்து இருப்பதன் காரணமாக பாலன்ஸ் ஷீட்டில் நஷ்டத்தில் ஓடுவதாகக் கணக்குக் காட்டுகிறார்கள். ஆகவே தான் இந்த 4½ சதவிகிதம் போனஸ் தான் அவர்கள் கொடுக்க முடியும் என்று தருகிறார்கள். இதற்கெல்லாம் காரணம் அவர்களுடைய கணக்குகள் நேர்மையாக கொடுக்காதது தான். அவர்களுடைய கணக்குகளைப் பரிசீலனை செய்து அதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென்று இந்த அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன். அதை அரசாங்கம் ஆராய வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: 'இந்த போனஸ் பிரச்னை அவசரச் சட்டத்தால், நெருக்கடி நிலையால் நமக்குக் கிடைத்த ஒரு நல்ல பரிசு. ஜனநாயகத்திற்குக் கிடைத்த அடி' என்று திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் சொன்னார்கள். மிகப் பொருத்தமான வார்த்தைகள். அதிலே நண்பர் ஜேம்ஸ் அவர்கள் சொல்லிய பிரச்னை இருக்குமானால் அரசு ஆராய்ந்து தகுந்த நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, 'தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இந்த அரசு என்ன செய்தது, என்ன செய்தது? என்ற கேள்வியை அடிக்கடி இங்கே கேட்டுக்கொண்டு இருக்கிறார்கள். அதிலும் குறிப்பாக திருமதி சத்தியவாணிமுத்து அவர்கள் இந்தக் கேள்வியை ஒவ்வொரு

1975 நவம்பர் 4] [டாக்டர் மு. கருணாநிதி]

உரை நிகழ்த்துகிற நேரத்திலும் கேட்டுக்கொண்டு இருக்கிறார்கள். 1972-73-ஆம் ஆண்டில் தாழ்த்தப்பட்ட மக்களுக்காக செய்யப்பட்ட மொத்த செலவு ரூ. 7.59 கோடி; 1973-74-ல் 10.15 கோடி ரூபாய்; 1974-75-ல் 12.89 கோடி ரூபாய்; 1975-76-க்கு 18.88 கோடி ரூபாய் தாழ்த்தப்பட்ட மக்களுக்காக இந்த அரசு செலவு செய்தது.

இதிலே 1972-73-ல் 7 கோடியே 59 லட்சம் ரூபாய் செலவழித்தோம் என்றால் மத்திய அரசின் உதவி 39 லட்சம் ரூபாய்.

1973-74-ல் 10 கோடியே 15 லட்சம் செலவழித்தோம் என்றால் மத்திய அரசின் உதவி ரூ. 66 லட்சம்.

1974-75-ல் 12 கோடியே 89 லட்சம் செலவழித்தோம் என்றால் மத்திய அரசின் உதவி 52 லட்சம்.

1975-76-க்கு 18 கோடியே 88 லட்சம் என்றால் மத்திய அரசின் உதவி ரூ. 50 லட்சம்.

ஏதோ தாழ்த்தப்பட்டவர்களை மறந்து விட்டு, பிற்படுத்தப்பட்ட மக்களுக்குத்தான் அள்ளி அள்ளிக் கொடுக்கிறது இந்த அரசு என்ற குற்றச்சாட்டிற்கு நான் சொல்ல விரும்புவது எல்லாம் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு 1972-73-ல் ரூ. 4.97 கோடி; 1973-74-ல் 5.37 கோடி ரூபாய்; 1974-75-ல் 5.68 கோடி ரூபாய்; 1975-76-ல் 5.81 கோடி ரூபாய் என்ற வகையிலே தான் நாம் உதவிகளைச் செய்து வருகிறோம்.

இந்தத் துணை மதிப்பீட்டின் 6-வது பக்கத்திலே, நான் இந்த மன்றத்திலே இந்த அறிக்கை வைக்கும்போது, குறிப்பிட்டது, "தாழ்த்தப்பட்ட இந்துக்களுக்கு தற்போது வழங்கப்பட்டுவரும் எல்லாச் சலுகைகளையும் (எல்லாச் சலுகைகளையும் என்றால், ஏற்கனவே வழங்கப்பட்டு வருகிற சலுகைகளையும் சேர்த்து மீதமுள்ள எல்லாச் சலுகைகளும்) கிறித்துவ மதத்திற்கு ஏற்கனவே மாறியுள்ள தாழ்த்தப்பட்டவர்களுக்கும் நீட்டிப்பதென அரசு முடிவு செய்துள்ளது.

கல்வி நிலையங்களில் சேர்த்துக்கொள்ளுதல், அரசுப் பணிகளில் இட ஒதுக்கீடு ஆகியவற்றைப் பொறுத்தவரையில் கிறித்துவ மதத்திற்கு மாறிய தாழ்த்தப்பட்டவர்கள், பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு இணையாகக் கருதப்படுவர். அவர்களுடைய சந்ததியினர் அந்தச் சலுகைகளுக்கு அருகதையற்றவர்கள்

என்று இதுவரை இருந்து வந்த நிலைமையை மாற்றி, அவர்களுடைய சந்ததிகளும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினராகக் கருதப் படுவர் என்று முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்தச் சலுகைக்காகத் தேவைப்படும் நிதி இதுவரையில் அரிசன நல மானியத்தில் ஒதுக்கியுள்ள தொகைக்குக் கூடுதலாக மேலும் ஒதுக்கப்படும்" என்ற கருத்தை நான் இந்த மன்றத்தில் தெரிவித்திருக்கிறேன்.

அதன்படி இந்தக் கருத்தின் அடிப்படையில் சொல்லவேண்டுமானால் கல்வி நிலையங்களில் ஒதுக்கப்படும் சலுகைகளும், அரசுத் துறையிலே வேலை வாய்ப்புத் தருவதும் ஒரு தலைமுறையினருக்கு மட்டுமே தரப்பட்டு இருந்தது. 1974-ம் ஆண்டு ஆணையின்படி, அதாவது இந்த இரண்டு சலுகைகளும் கிறித்துவ மதத்தில் சேர்ந்த தாழ்த்தப்பட்டவர்களுக்கு, அவர்களை பிற்படுத்தப்பட்டவர்கள் என்று கருதி பிற்படுத்தப்பட்டவர்களுக்கு ஒதுக்கப்பட்ட 31 சதவிகிதத்தில் சேர்த்து அளிக்கப்பட்டது. ஆனால் 1975-ம் ஆண்டு அரசு ஆணையின்படி இந்த இரண்டு சலுகைகளும் எல்லா தலைமுறைகளுக்கும் அவர்களுக்கு பிற்படுத்தப்பட்டவர்களுக்கு உள்ள விகிதாசாரத்தில் தரப்படுகிறது. 1974-ஆம் ஆண்டு அரசாணையில் As regards the other concessions, they are eligible irrespective of generations.
என்று இருக்கிறது. குடியிருப்புக்கு நிலம் தருதல், விவசாயிகளுக்கு நிலம் கொடுத்தல், குடியிருப்புகளுக்குப் பாதை அமைத்தல், குடியிருப்புகளுக்கு மின்சாரம் வழங்குதல் ஆகியவை மாத்திரம் தான் இருந்தன. ஏனைய பொருளாதார சலுகைகள் தர முடியவில்லை. காரணம், அந்தச் சலுகைகள் மத்திய அரசு திட்டத்தின் கீழ் Centrally assisted schemes செயல்பட்டு வந்தன.

ஆனால் 1975-ம் ஆண்டு அரசு ஆணையின்படி அந்தச் சலுகைகளையும் கிறித்துவ மதத்திற்கு மாறியுள்ள தாழ்த்தப்பட்டவர்களுக்குத் தருவது என்று முடிவு செய்யப்பட்டுள்ளது. அதற்குரிய நிதியை மாநில அரசே அளிக்கும் என்று முடிவு செய்யப் பட்டுள்ளது. 1975-ம் ஆண்டு அரசாணையின்படி கிடைக்கும் புதிய சலுகைகள் :—

1. Special coaching schemes for I.A.S. and I.P.S. examinations.
2. Construction and allotment of houses.
3. Financial assistance for Milk Supply Co-operative Societies
4. Financial assistance by way of loan and subsidy to purchase agricultural implements, plough bulls, sinking of irrigation wells

1975 நவம்பர் 4] [டாக்டர் மு. கருணாநிதி]

5. Assistance for cottage industries like basket-making, hand-pounding of rice, etc.

6. Subsidy to technically trained personnel.

7. Petty trade loans.

என்று இந்த 7 சலுகைகளும் எல்லா அரிசனங்களுக்கும் தரப்படுவது போல் கிறித்துவ மதத்திற்கு மாறியுள்ள அரிசனங்களுக்கும் தருவது என்று இப்போது அறிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, ஏதோ நாங்கள் எல்லாம் தவறாகச் சொல்கிறோம், அம்மையார் அவர்கள் தான் உண்மையாகப் பேசுகிறார்கள், என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். இது தான் உண்மையான விவரம் . . .

(பிற்பகல் 1-00)

5. அரசினர் தீர்மானம்

விதி 159 (3)-ஐத் தளர்த்தல்

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, சட்டப் பேரவை விதி 159 (3)-ஐ தளர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, எவ்வளவு பெரிய தவறான விஷயத்தை இந்த அவையில் சொல்லியிருக்கிறார்கள் என்பதற்காக . . .

THIRUMATHI T. N. ANANDANAYAKI: When you are relaxing the rule, we could have been allowed some more time. Just at the time of guillotoning, you are extending the time.

THIRU K. T. K. TANGAMANI: This rule 159(3) has a salutary purpose.

1 மணியிலிருந்து 1½ மணிக்குள்ளாக இந்த துணை மானியக் கோரிக்கைகள் ஓட்டுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட வேண்டுமென்பது விதி. அந்த விதியை ரிலாக்ஸ் செய்வது சரியாகத் தோன்றவில்லை. பட்ஜெட் சம்பந்தமாக, பட்ஜெட்டை சமர்ப்பிக்க

ஒரு நாளை நிச்சயம் செய்கின்றோம். அந்த தேதியை கவர்னர் நிச்சயம் செய்கிறார். அப்படி நிர்ணயிக்கப்பட்ட தேதியை மாற்றுவது இல்லை. பட்ஜெட் சம்பந்தமாக இருக்கின்ற விதியை தளர்த்துவது சரியாகத் தெரியவில்லை. சபை அங்கீகரிக்கிறது என்று சொல்லி, அடிப்படை விதியை தளர்த்துகின்ற நிலை ஏற்படுகின்றது என்றால், பட்ஜெட்டின் சாங்க்டிடி—புனிதத் தன்மை—போய்விடும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

Dr. H V. HANDE: Mr. Speaker, Sir, the universal principle of natural justice is, what is sauce for the goose is sauce for the gander. In fact, we, the members, would have liked to have a little more time. But this rule is being relaxed at this particular point of time. This rule could have been relaxed a little earlier. Because of the majority, you can relax the rule at any time and the Leader of the House can bring in a motion. Many of us wanted to speak for some more time and our speeches were curtailed. We have not been given enough time, we have not been given enough opportunities because it is to be guillotined.

Now at this point of time the motion has been brought and the relevant rule has been relaxed. Thirumathi Sathyavanimuthu wanted to intervene when the Hon. Chief Minister was speaking. Then she was told to keep quiet and sit down pointing out the guillotine rule. I am not saying that the guillotine rule should not be relaxed. But it is being done suddenly at the last moment. When the hon. Member wanted to speak, guillotine rule was pointed out. When the Hon. Chief Minister wanted to continue his reply, guillotine rule was relaxed. I would like to know whether it is proper or not. I am putting a poser. Whatever you say, whatever the House decides, we are here to abide by it.

இது நியாயமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, ஏற்கனவே இப்படி விதியைத் தளர்த்துவது மரபாக இரண்டொரு முறை ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. இருந்தாலும் பரவாயில்லை. உறுப்பினர்கள் எழுப்பிய சில பிரச்னைகளுக்கு பதில் சொல்ல விரும்பினேன். எதிர்க்கட்சிக்காரர்களே விளக்கம் வேண்டாம் என்று சொல்லும்போது, இதோடு என் பேச்சை நிறுத்தி விடுகிறேன்.

1975 நவம்பர் 4]

டாக்டர் எச். வி. ஹாண்டே : தலைவரவர்களே, இன்னும் பேச வேண்டும், நிறைய பேசவேண்டும் என்று தான் விரும்புகிறோம். ஆனால் நாங்கள் கேட்கும்போது அவகாசம் கொடுக்கப்படுவதில்லை.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, இனிமேல் அவையில் இதுபோன்று மற்ற விஷயங்களிலும் ஸ்ட்ரிக்டாக இருக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இத்துடன் விவாதம் முடிவுற்றது. அடுத்து மானியக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு நடைபெறும்.

(6) 1975-76 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவு குறித்த துணை நிதிக் கோரிக்கைகள் (முதல்) மீது வாக்கெடுப்பு

ஏ. வருவாய்க் கணக்கில் செலவு

நிதிக் கோரிக்கை எண் 4—பொது விற்பனை வரிகளும், ஏனைய வரிகளும், தீர்வைகளும்—நிர்வாகம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—

"நிதிக் கோரிக்கை எண் 4—பொது விற்பனை வரிகளும், ஏனைய வரிகளும், தீர்வைகளும்—நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 14,65,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

நிதிக் கோரிக்கை எண் 7—மாநில சட்டமன்றம்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—

"நிதிக் கோரிக்கை எண் 7—மாநிலச் சட்ட மன்றம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 6,72,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு கோரிய தொகை வழங்கப்பட்டது.

நிதிக் கோரிக்கை எண் 11—மாவட்ட நிர்வாகம்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—

"நிதிக் கோரிக்கை எண் 11—மாவட்ட நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 11,72,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

நிதிக் கோரிக்கை எண் 12—1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிர்வாகம்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—

"நிதிக் கோரிக்கை எண் 12—1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் "சட்ட நிர்வாகம்" என்ற தலைப்பின்கீழ் ரூ. 3,00,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

நிதிக் கோரிக்கை எண் 14—சிறைச் சாலைகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—

"நிதிக் கோரிக்கை எண் 14—சிறைச் சாலைகள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 4,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

நிதிக் கோரிக்கை எண் 15—காவல் துறை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—

"நிதிக் கோரிக்கை எண் 15—காவல் துறை என்ற தலைப்பின் கீழ் ரூ. 5,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

1975 நவம்பர் 4]

நிதிக் கோரிக்கை எண் 17—கல்வி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி— "நிதிக் கோரிக்கை எண் 17—கல்வி என்ற தலைப்பின்கீழ் ரூ. 9,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

நிதிக் கோரிக்கை எண் 18—மருத்துவம்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி— "நிதிக் கோரிக்கை எண் 18—மருத்துவம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 2,91,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

நிதிக் கோரிக்கை எண் 19—பொதுச் சுகாதாரம்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி— "நிதிக் கோரிக்கை எண் 19—பொது சுகாதாரம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 12,02,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

நிதிக் கோரிக்கை எண் 20—வேளாண்மை

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி— "நிதிக் கோரிக்கை எண் 20—வேளாண்மை என்ற தலைப்பின் கீழ் ரூ. 29,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

நிதிக் கோரிக்கை எண் 23—கூட்டுறவு

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி— "நிதிக் கோரிக்கை எண் 23—கூட்டுறவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 9,00,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

நிதிக் கோரிக்கை எண் 24—தொழில்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி— "நிதிக் கோரிக்கை எண் 24—தொழில்கள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 82,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

நிதிக் கோரிக்கை எண் 26—கைத்தறியும், துணித் தொழிலும்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி— "நிதிக் கோரிக்கை எண் 26—கைத்தறியும், துணித் தொழிலும் என்ற தலைப்பின்கீழ் ரூ. 70,00,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

நிதிக் கோரிக்கை எண் 27—கதர்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி— "நிதிக் கோரிக்கை எண் 27—கதர் என்ற தலைப்பின்கீழ் ரூ. 3,50,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

"நிதிக் கோரிக்கை எண் 28—சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் முதலியன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னுள்ள கேள்வி—"நிதிக் கோரிக்கை எண் 28—சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் முதலியன என்ற தலைப்பின்கீழ் ரூ. 6,00,00,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

நிதிக் கோரிக்கை எண் 30—சமூக நலன்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னுள்ள கேள்வி—"நிதிக் கோரிக்கை எண் 30—சமூக நலன் என்ற தலைப்பின்கீழ் ரூ. 1,23,28,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

நிதிக் கோரிக்கை எண் 31—பழங்குடி மக்கள், அரிசனங்கள் முதலியோர் நலன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னுள்ள கேள்வி—"நிதிக் கோரிக்கை எண் 31—பழங்குடி மக்கள், அரிசனங்கள் முதலியோர் நலன் என்ற தலைப்பின்கீழ் ரூ. 7,25,02,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

நிதிக் கோரிக்கை எண் 32—பின்தங்கிய வகுப்பினர் நலன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னுள்ள கேள்வி—"நிதிக் கோரிக்கை எண் 32—பின்தங்கிய வகுப்பினர் நலன் என்ற தலைப்பின்கீழ் ரூ. 1,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

நிதிக் கோரிக்கை எண் 33—வீட்டு வசதி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன்னுள்ள கேள்வி—"நிதிக் கோரிக்கை எண் 33—வீட்டு வசதி என்ற தலைப்பின்கீழ் ரூ. 3,75,86,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

நிதிக் கோரிக்கை எண் 34—நகர்ப்புற வளர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன்னுள்ள கேள்வி—"நிதிக் கோரிக்கை எண் 34—நகர்ப்புற வளர்ச்சி என்ற தலைப்பின்கீழ் ரூ. 2,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

நிதிக் கோரிக்கை எண் 35—உணவுப் பொருள் வழங்கல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன்னுள்ள கேள்வி—"நிதிக் கோரிக்கை எண் 35—உணவுப் பொருள் வழங்கல் என்ற தலைப்பின் கீழ் ரூ. 73,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

நிதிக் கோரிக்கை எண் 36—பாசனம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன்னுள்ள கேள்வி—"நிதிக் கோரிக்கை எண் 36—பாசனம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 2,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

நிதிக்கோரிக்கை எண் 38—பொதுப் பணிகள்—பணியாளரும், கருவிகளும், இயந்திர சாதனங்களும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன்னுள்ள கேள்வி—

"நிதிக் கோரிக்கை எண் 38—பொதுப்பணிகள்—பணியாளரும், கருவிகளும், இயந்திர சாதனங்களும் என்ற தலைப்பின் கீழ் ரூ. 18,60,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

நிதிக் கோரிக்கை எண் 39—சாலைகளும், பாலங்களும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன்னுள்ள கேள்வி—

"நிதிக் கோரிக்கை எண் 39—சாலைகளும், பாலங்களும் என்ற தலைப்பின்கீழ் ரூ. 1,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

நிதிக் கோரிக்கை எண் 41—இயற்கையின் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன்னுள்ள கேள்வி—

"நிதிக் கோரிக்கை எண் 41—இயற்கையின் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு என்ற தலைப்பின் கீழ் ரூ. 2,13,61,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

நிதிக் கோரிக்கை எண் 42—ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுகால நன்மைகளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன்னுள்ள கேள்வி—

"நிதிக் கோரிக்கை எண் 42—ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வு கால நன்மைகளும் என்ற தலைப்பின் கீழ் ரூ. 3,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறை வேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

நிதிக் கோரிக்கை எண் 44—எழுதுபொருள் அச்சுத்துறை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன்னுள்ள கேள்வி—"நிதிக் கோரிக்கை எண் 44—எழுதுபொருள் அச்சுத் துறை என்ற தலைப்பின்கீழ் ரூ. 71,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறை வேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

நிதிக் கோரிக்கை எண் 45—காட்டு வளத் துறை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன்னுள்ள கேள்வி—"நிதிக் கோரிக்கை எண் 45—காட்டு வளத்துறை என்ற தலைப்பின்கீழ் ரூ. 3,45,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறை வேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

1975 நவம்பர் 4]

பி. வருவாய்க் கணக்கின்கீழ் வராத மூலதனச் செலவு.

" நிதிக் கோரிக்கை எண் 48—பொதுச் சுகாதாரம், துப்புரவு, நீர் வழங்கல் குறித்த மூலதனச் செலவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னுள்ள கேள்வி—

நிதிக் கோரிக்கை எண் 48—பொதுச் சுகாதாரம், துப்புரவு, நீர் வழங்கல் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 19,33,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறை வேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

நிதிக் கோரிக்கை எண் 50—தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—" நிதிக் கோரிக்கை எண் 50—தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 18,30,000-க்கு மேற் படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்"

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறை வேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

நிதிக் கோரிக்கை எண் 51—பாசனம் குறித்த மூலதனச் செலவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னுள்ள கேள்வி—

" நிதிக் கோரிக்கை எண் 51—பாசனம் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 3,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறை வேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

நிதிக் கோரிக்கை எண் 52—பொதுப் பணித் துறை—கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—

"நிதிக் கோரிக்கை எண் 52—பொதுப் பணித் துறை—கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 4,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

நிதிக் கோரிக்கை எண் 53—சாலைகள்—பாலங்கள் குறித்த மூலதனச் செலவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—

"நிதிக் கோரிக்கை எண் 53—சாலைகள்—பாலங்கள் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 53,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

நிதிக் கோரிக்கை எண் 54—சாலைப் போக்குவரத்துப் பணிகள் குறித்த மூலதனச் செலவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—

"நிதிக் கோரிக்கை எண் 54—சாலைப் போக்குவரத்துப் பணிகள் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 1,30,00,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

நிதிக் கோரிக்கை எண் 55—காட்டுவள மூலதனச் செலவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—

"நிதிக் கோரிக்கை எண் 55—காட்டுவள மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 26,01,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

1975 நவம்பர் 4]

நிதிக் கோரிக்கை எண் 56—பல்வகை மூலதனச் செலவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி— "நிதிக் கோரிக்கை எண் 56—பல்வகை மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 3,22,41,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

சி. கடன்கள், முன்பணங்கள் வழங்குதலும் கடனைத் திருப்பிக் கொடுத்தலும்.

நிதிக் கோரிக்கை எண் 57—மாநில அரசு வழங்கும் கடன்களும், முன்பணங்களும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி— "நிதிக் கோரிக்கை எண் 57—மாநில அரசு வழங்கும் கடன்களும், முன் பணங்களும் என்ற தலைப்பின் கீழ் ரூ. 8,41,70,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

டி. எதிர்பாராச் செலவு நிதிக்கு நிதி ஒதுக்கம்.

நிதிக் கோரிக்கை எண் 58—எதிர்பாரா செலவு நிதிக்கு நிதி ஒதுக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி— "நிதிக் கோரிக்கை எண் 58—எதிர்பாராச் செலவு நிதிக்கு நிதி ஒதுக்கம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 10,00,00,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

(7) 1969-70 ஆம் ஆண்டில் மிகைச் செலவிற்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: "அடுத்து, 1969-70-ஆம் ஆண்டில் மிகைச் செலவிற்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு".

நிதிக் கோரிக்கை எண் 1—நிலவரித் துறை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—"நிதிக் கோரிக்கை எண் 1—நிலவரித் துறை என்ற தலைப்பின்கீழ் ரூ. 21,490-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

நிதிக் கோரிக்கை எண் 2—மோட்டார் வண்டி சட்டங்கள் நிர்வாகம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—"நிதிக் கோரிக்கை எண் 2—மோட்டார் வண்டி சட்டங்கள்—நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 1,54,293-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

நிதிக் கோரிக்கை எண் 6—மாநில சட்ட மன்றம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—"நிதிக் கோரிக்கை எண் 6—மாநில சட்ட மன்றம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 3,628-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

நிதிக் கோரிக்கை எண் 7—தேர்தல்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—"நிதிக் கோரிக்கை எண் 7—தேர்தல்கள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 57,569-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

...நிதிக் கோரிக்கை எண் 9—மாவட்ட நிர்வாகம், பல்வகை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—"நிதிக் கோரிக்கை எண் 9—மாவட்ட நிர்வாகம், பல்வகை என்ற தலைப்பின்கீழ் ரூ. 86,455-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

நிதிக் கோரிக்கை எண் 11—சிறைச்சாலைகள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—"நிதிக் கோரிக்கை எண் 11—சிறைச்சாலைகள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 6,63,354-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

நிதிக் கோரிக்கை எண் 14—மருத்துவம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—"நிதிக் கோரிக்கை எண் 14—மருத்துவம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 65,50,818-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

நிதிக் கோரிக்கை எண் 23—சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் முதலியன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—"நிதிக் கோரிக்கை எண் 23—சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் முதலியன என்ற தலைப்பின் கீழ் ரூ. 3,68,062-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

நிதிக் கோரிக்கை எண் 26—பாசனம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி— "நிதிக் கோரிக்கை எண் 26—பாசனம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 54,13,495-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறை வேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

நிதிக் கோரிக்கை எண் 27—பொதுப் பணிகள்—பணிகள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி— "நிதிக் கோரிக்கை எண் 27—பொதுப் பணிகள்—பணிகள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 1,75,13,997-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறை வேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

நிதிக் கோரிக்கை எண் 29—பொதுப் பணிகள்—உதவி மானியம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி— "நிதிக் கோரிக்கை எண் 29—பொதுப் பணிகள்—உதவி மானியம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 6,17,325-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறை வேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

நிதிக் கோரிக்கை எண் 30—சாலைப் போக்குவரத்துப் பணிகள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி— "நிதிக் கோரிக்கை எண் 30—சாலைப் போக்குவரத்துப் பணிகள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 33,624-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறை வேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

நிதிக் கோரிக்கை எண் 33—பல்வகை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—
"நிதிக் கோரிக்கை எண் 33—பல்வகை என்ற தலைப்பின்கீழ் ரூ. 6,93,744-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

நிதிக் கோரிக்கை எண் 38—பொதுச் சுகாதாரம் குறித்த மூலதனச் செலவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—
"நிதிக் கோரிக்கை எண் 38—பொதுச் சுகாதாரம் குறித்த மூல தனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 10,11,660-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

(8) அறிவிப்பு

(அ) தமிழ்நாடு, 1975 ஆம் ஆண்டு, நிதி ஒதுக்க (எண் 4) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு, 1975 ஆம் ஆண்டு, நிதி ஒதுக்க (எண் 4) சட்ட முன்வடிவை இப்பேரவையில் அறிமுகம் செய்வதற்கும் ஆய்வுக்கு எடுத்துக்கொள்வதற்கும் ஆளுநர் அவர்கள் தமது இசைவினைத் தெரிவித்துள்ளார்கள்.

(3) அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(இ) தமிழ்நாடு, 1975 ஆம் ஆண்டு, நிதி ஒதுக்க (எண் 4) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, தமிழ்நாடு, 1975 ஆம் ஆண்டு, நிதி ஒதுக்க (எண் 4) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகப்படுத்த நான் அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, இச்சட்ட முன்வடிவை நான் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகப் படுத்தப்பட்டிருக்கிறது.

(8) அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) தமிழ்நாடு, 1975 ஆம் ஆண்டு, நிதி ஒதுக்க (எண் 3) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு, 1975 ஆம் ஆண்டு, நிதி ஒதுக்க (எண் 3) சட்ட முன்வடிவை இப்பேரவையில் அறிமுகம் செய்வதற்கும் ஆய்வுக்கு எடுத்துக்கொள்வதற்கும் ஆளுநர் அவர்கள் தமது இசைவினைத் தெரிவித்துள்ளார்கள்.

(3) அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(ஈ) தமிழ்நாடு, 1975 ஆம் ஆண்டு, நிதி ஒதுக்க (எண் 3) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, தமிழ்நாடு, 1975 ஆம் ஆண்டு, நிதி ஒதுக்க (எண் 3) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகப்படுத்த நான் அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, இச்சட்ட முன்வடிவை நான் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகப் படுத்தப்பட்டிருக்கிறது.

(8) அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(இ) பேரவை அலுவல் குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இன்று (4—11—1975) கூடிய அலுவல் ஆய்வுக் குழு எடுத்த முடிவின்படி பேரவையின் நடப்புக் கூட்டத் தொடரின் திருத்திய விபரம்:—

5—11—1975 புதன்கிழமை	1. நிதி ஒதுக்க சட்ட முன்வடிவுகளை ஆய்வு செய்தலும் நிறைவேற்றுதலும். 2. அரசினர் சட்ட முன்வடிவுகள்.
6—11—1975 வியாழக்கிழமை 7—11—1975 வெள்ளிக்கிழமை	அரசினர் சட்ட முன்வடிவுகள்.
8—11—1975 சனிக்கிழமை	தனியார் அலுவல்கள்.
9—11—1975 ஞாயிற்றுக்கிழமை	விடுமுறை.
10—11—1975 திங்கட்கிழமை 11—11—1975 செவ்வாய்க்கிழமை 12—11—1975 புதன்கிழமை	தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1975-76 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின் மீதும், 1974-75 ஆம் ஆண்டுக்கான துணை நிதிநிலை அறிக்கையின் மீதும் விவாதம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று நாளைக் காலை 9 மணி அளவில் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-19 மணிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

9. பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A. *Statutory Rules and Orders.*

205. Notification issued in G.O. Ms. No. 1501, Home, dated the 21st August 1975 in regard to an amendment to the Tamil Nadu Cinemas (Regulation) Rules, 1957. [Laid on the table of the House under section 10 (3) of the Tamil Nadu Cinemas (Regulation) Act, 1955 (Tamil Nadu Act IX of 1955).]

206. Notification issued in G.O. Ms. No. 117, Prohibition and Excise, dated the 15th April 1975 in regard to an amendment to the Tamil Nadu Denatured Spirit, Mythl Alcohol and Varnish (French Polish) Rules, 1959. [Laid on the table of the House under section 54 (3) of the Tamil Nadu Prohibition Act, 1937 (Tamil Nadu Act X of 1937).]

207. Notification issued in G.O. Ms. No. 658, Home, dated the 18th April 1975 in regard to certain amendments to the Tamil Nadu Motor Vehicles Rules, 1940. [Laid on the table of the House under section 133 (3) of the Motor Vehicles Act, 1939 (Central Act IV of 1939).]

B. *Reports, Notifications and Other Papers.*

113. Notification issued in G.O. Ms. No. 1195, Labour and Employment, dated the 27th November 1975 in regard to certain amendments to the Tamil Nadu Factories Rules, 1950.

TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு

[20-ம் பக்கத்திலுள்ள வெள்ளிக்குறியிட்ட (*) வினா 175-க்கான விடையைக் காண்க.]

தமிழ்நாட்டில் ஏழு இடங்களில் உழவர் பயிற்சி நிலையங்கள் இயங்கி வருகின்றன. அவையாவன :—

(1) கோயமுத்தூர்.

(2) மதுரை.

(3) ராணிப்பேட்டை.

(4) திண்டிவனம்.

(5) ஆடுதுறை.

(6) பாளையங்கோட்டை.

(7) லால்குடி.

கோயமுத்தூர், மதுரை உழவர் பயிற்சி நிலையங்கள், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் கீழும், ஏனைய ஐந்தும் தமிழ்நாட்டு வேளாண்மைத் துறையின் கீழும் இயங்கி வருகின்றன.

இந்நிலையங்களில் முன்னேற்ற விவசாய முறைகளைப் பற்றி பயிற்சி அளிக்கப்படுகிறது. மேலும், பொறுக்கு விதைகள், இரசாயன உரங்கள், பயிர் பாதுகாப்பு முறைகள் ஆகியவைகளின் சிறப்பினையும், கையாளும் திறனையும் பற்றி போதிக்கப்படுகிறது. ஒவ்வொரு மாவட்டத்திலும் உழவர் விவாதக்குழு அமைப்பாளர்களுக்கும், அங்கத்தினர்களுக்கும் பயிற்சி தரப்பட்டுள்ளதால், அவர்கள் முன்னேற்ற சாகுபடி முறைகளைக் கையாளுவதோடு, கிராமத்தில் மற்ற விவசாயிகளும் அம்முறைகளைக் கையாளுவதற்கு அனுசரணையாக இயங்குகிறார்கள்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS